உ

வந்தே மாதரம்

பெண்ணின் பெருமை

அல்லது

வாழ்க்கைத் துணை

“நவசக்தி” ஆசிரியர்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

யாத்தது

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை

1927

உரிமை
பதிவு செய்யப்பட்டது

விலை ரூ. 2

முன்னுரை

உலகம் பெண் ஆண் என்னும் இருபாலாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. இரண்டுஞ் சேர்ந்த ஒன்றே உலகம் என்பது. இவ்விரண்டும் ஒன்றி இயங்கினாலன்றி உலகம் நல்வழியில் நடைபெறாது.

பெண் தாயாகலான், பெண்ணலன் பெரிதும் ஓம்பப் பெறல்வேண்டும். பெண்ணலன் ஓம்பப்படா விடத்தில் வேறு எவ்வித நலனும் நிலவல் அரிது. ஒரு நாட்டு நலன் அந்நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறது.

இந்நாளில் பெண்ணுலகில் பலதிறக் குறைபாடுகள் தோன்றியிருக்கின்றன. அவைகளுள் இரண்டு சிறப்பாகக் குறிக்கத்தக்கன. ஒன்று சிறிதும் நாகரிகமின்றிச் சில விடங்களில் பெண் இருளில் மூழ்கிக்கிடப்பது; மற்றொன்று "பழுத்த நாகரிகம்" என்னும் பேய்க்குச் சில விடங்களில் பெண் இரையாகி வாழ்வையே குலைத்துக்கொள்வது. இருசாராரும் ஒழுங்குபட்டுப் பெண்ணாய் உலகிற்குப் பயன்படல்வேண்டும்.

நமது நாட்டில் இடைக்காலத்தில் ஏற்பட்ட கட்டுப்பாடுகள் பெண்ணுலகின் பெருமைக்கே கேடு சூழ்ந்தன. அக்கட்டுப்பாடுகள் பெண்மக்களைக் கல்லாய் மண்ணாய் நடைப்பிணமாய்ச் செய்துவிட்டன. மேல்நாட்

டில் இத்தகைக் கொடுங்கட்டுப்பாடுகள் இல்லையேனும், ஆண்டுப் "பழுத்த நாகரிகம்" என்னும் அலகை பெண்மையின் இறைமையைக் கவர்ந்து நிற்கிறது. அந்நாட்டுப் பெண்ணறிஞர் பலர் தாய்மைப்பேற்றை இழிவெனக்கருதி வாழ்தல் கண்கூடு. தாய்மை நிலவா விடத்தில் இறைமை எங்ஙனம் நிலவும்? இப் "பழுத்த நாகரிகம்" உலகை வளர்க்குமா? தேய்க்குமா?

இக்காலத்தில் பெண்மைக்கணுள்ள தாய்மையையும், தாய்மைக்கணுள்ள இறைமையையும் மக்கள் வாழ்வில் உணரத்தக்க துறைகள் காணப்பெறல்வேண்டும். அத்துறைகள் காண உலகில் முயற்சி துவங்கப்பட்டிருக்கிறது.

மேல் நாட்டறிஞர் சிலர் பெண்மையைப்பற்றியும் தாய்மையைப்பற்றியும் அரிய நூல் பல எழுதி வருகிறார். அந்நூல்களின் உட்கிடக்கை பெரிதும் நமது நாட்டுப் பழைய அகப்பொருள் நூல்களின் உட்கிடக்கைக்கு அரண்செய்தல் கண்டு யான் கழிபேருவகை எய்தல் உண்டு. நன்மக்கள் எவராயினும், அவர் யாண்டு உறையினும், அவர் அறிவில் ஒரே கருத்து அரும்பல் இயல்பு.

நமது நாட்டுப்பழமை இப்பொழுது மேல்நாட்டில் புதுமையாக உருக்கொள்கிறது. பழமை புதுமையுருத் தாங்கல் இயல்பு. பழமைக்கும் புதுமைக்கும் பொருளில் வேற்றுமையில்லை; தோற்றத்திலேயே வேற்றுமை

புண்டு. பொருண் முதன்மைக்கு எப்பொழுதும் அழி வில்லை என்னும் நியாயம் ஈண்டுக்கருதற்பாலது. "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே-பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்றார் வாதவூரடிகளும்.

நமது நாட்டுப்பழமை என்னும் உயிர் தற்கால மேல்நாட்டுப் புதுமை என்னும் உடல் தாங்கும் முறையில் தமிழ்மொழியில் நூல் பல யாத்தல் காலத்துக்கியைந்த தொண்டாகும். அத்தகை நூல்களின் இன்றியமையாமையைச் சொல்லவும் வேண்டுமோ?

பெண் பெருமை பேசும் பன்னூல் இதுபோழ்து வெளிவரல் மிக அவசியம். நந்தமிழ் நாட்டில் பெண்ணைப்பற்றிய சில நூல்கள் வெளிவந்துலவுகின்றன. அவைகளுள் பெரும்பான்மையன இடைக்காலத்தில் தோன்றிய அடக்கு முறை நூல்களின் எதிரொலிகளாக விளங்குகின்றன. சில நூல்கள் காமவெறி யூட்டக் கூடிய முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. இவையல்லாத நூல்கள் எழுதிய அன்பர்கட்கு எனது வணக்கம் உரியதாக.

பழமையும் புதுமையும் விரவ, ஒல்லும்வகை முயன்று, "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை" என்னும் இந்நூல் எழுதலானேன். இந்நூல், பெண்மை தாய்மை இறைமை என்னும் முப்பொருளை முதலாக உடையது. இம்மூன்றும் முறையே நூலின் உடல் உள்

ளம் உயிராக அமைந்திருக்கின்றன. இம்மூன்று முதலினின்றுங் கிளம்பிய கவடுகளும் கோடுகளும் நூலின் பிற உறுப்புக்களென்க.

பெண் பிறவியின் விழுமிய நோக்கம், அன்பால் ஒருவனை மணந்து, ஒழுங்குபட்ட இல்லறம் நடாத்துவதில் நிறைவேறுமென்பது நூலின் திரண்ட பொருள். இயற்கை வாழ்வினின்றும் வழுவிச் செயற்கைப்பாழில் விழுவதால் விளையுங் கேடுகள் இந்நூற்கண் விளக்கமாக ஓதப்பட்டிருக்கின்றன. அறம் அன்பு அருள் முதலியவற்றிற்குப் பெண் உறையுள் என்பது இந்நூலில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஒருத்தி ஒருவனுடனும் ஒருவன் ஒருத்தியுடனும் வாழும் உயரிய ஒழுக்க மணம் இந்நூலில் யாண்டுங் கமழ்ந்துகொண்டிருக்கும்.

இந்நூலின் உள்ளக்கிடக்கையை யுணர விரும்புவோர் நூலை முற்றும் படித்துப் பார்ப்பாராக. ஆங்காங்கே சில பொருள் கண்டு நூலைப்பற்றி ஒருவித முடிந்த கருத்துக்கோடலாகாது. ஓரிடத்தில் ஓர் ஐயப்பொருள் காட்சியளிக்கும். அவ்வைய நீக்கப்பொருள் மற்றோரிடத்தில் மிளிரும். ஆகவே நூலை முற்றும் வாசிக்குமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைவாழ்வு, செயற்கைத் தாழ்வு, உடலோம்பல், மலச்சிக்கல், கூடா வொழுக்கத்தால் விளையுங் கேடுகள் போன்ற பொருள்கள் நூலின் ஊடே ஊடே சில விடங்

களில் பெய்யப்பட்டிருக்கின்றன. அவை "கூறியது கூறும்" நோக்குடன் பெய்யப்பட்டனவல்ல என்பதையும், அவை அநுவாதம் என்னும் நியாயம் பற்றிப் பெய்யப்பட்டனவென்பதையுந் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பொருள் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு குறிப்புடன் ஒவ்வொரு வித விளக்கம் முதலியன பெற்றிருத்தல் நூற்கண் காணலாம். ஒரே பொருள் இடத்துக்கேற்ற விளக்கமும், தெளிவும், முறையும், இயைபும், சுருக்கமும், பெருக்கமும் பெறும் வழியில் பல விடங்களில் பொறிக்கப்படல் ஒருவித நூன்மரபு. எல்லார்க்கும் பயன்படு முறையில் நூல் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

பெண் பெருமை பெறின் நாடும் பெருமை பெறும் என்னுங் கருத்துக்கொண்டு சிறியேனால் எழுதப்பெற்ற இந்நூற்கண் குற்றங் குறைகளுளவேல், அவைகளை அறிஞர்கள் பொறுத்தருள்வார்களாக.

சென்னை,
25—6—27.

திரு. வி. கலியாணசுந்தரன்.

பொருள் அடக்கம்

பக்கம்

௧. பெண் ஆண் ௧—௧௫

உலகம் பெண் ஆண் வடிவம் - தாவரங்கட்கு உயிருண்மை - உள்ளது போகாது இல்லது வாராது - முழுமுதற்பொருள் வடிவம் - கடவுள் தாயும் தந்தையும் - தண்மை வெம்மை - தண்மை பெண்; வெம்மை ஆண் - சந்திரகலை சூரியகலை.

௨. பெண்ணின் முதன்மை ௧௪—௫௪

பெண்மை இயல்பும் பொருளும் - பெண்மை அமைதி இன்பம் அழகு - பெண்பிறவிநோக்கம் - தாய்மைத் தொண்டு-பெண்மைக் குணம் ஆண்மைக்குணம்-அகமே புறம் - பெண்ணீர்மை இறைமை - கலைமகள் திருமகள் பரை - கடவுள் பெண்மை-முதல் தோற்றம் பெண்மை.

௩. பெண்ணுரிமை ௫௫—௮௰

உரிமை இயல்பு - பெண்ணுரிமை - கீழ்நாட்டுமேல் நாட்டுப்பெண்மக்கள் - வேதகாலத்துப் பெண்மக்கள் நிலையும் பழந்தமிழ்நாட்டுப் பெண்மக்கள் நிலையும் - இடைக்காலத்தில் பெண்மக்களுரிமை கெட்டவிதம் - பெண்கல்வி - பெண் மூளை ஆண் மூளை - கட்டுப்பாடுகளின் கொடுமை - உரிமையுங்கடமையும் - பெண் ஆணுக்குள்ள தொடர்பு

௪. பெண் வளர்ப்பு ௮௧—௧௪௫

இயற்கையின் நோக்கம் - நற்பிள்ளைப்பேறுந் தாய் தந்தையரும் - பெண்பிள்ளைப்பேறு - நல்லிணக்கம் - குழந்தை வளர்ப்பு - பெண் ஆண் உணர்வு - உயிர் நிலை நுட்பம் - உயிர் நிலைக்கும் உடல் வளத்துக்குமுள்ள இயைபு - கல்வியும் கற்பும் - கற்பு ஒழுக்கம் உடல் நலன் - பெண் ஆண் நட்பு - உடலோம்பு முறைகள் - உடை நகை முதலியன - அழகு.

௫. இறைவழி ௧௪௬—௧௬௦

பெண் பாதியும் ஆண் பாதியும் ஒன்றல் - பிரவர்த்தி நிவர்த்தி மார்க்க விளக்கம் - கடவுளன்பு எது? - கடவுள் நோக்க நிறைவேற்றம் இல்லறத்திலிருத்தல் - உயிர்கள் உடல் தாங்கும் வழி - உடற் கூற்றின் அமைப்பு - பெண் ஆண் சேர்க்கை.

௬. இயற்கை அறம் ௧௬௧—௨௬௫

இறைவழி இயற்கைவழி - நீத்தல் நுட்பம் - புறவுலக அரசும் இல்வாழ்வும் - அறத்தின் இயல்பு - இயற்கையும் மக்களும் - அமைப்பின் நோக்கம் - செயற்கை வினைகள் - (வேசையர் கூட்டம்; காமுகர் ஈட்டம்; நோய்க்குழு; முஷ்டிமைதுனம்; மருந்துண்ணல்; புலனடக்கம்; வாளாகிடத்தல்) நீத்தல் அல்லது துறவு - கருத்து வேற்றுமைக்கு மதிப்பு - திருவள்ளுவர் உள்

ளக் கிடக்கை - காட்டுக்குச் செல்லல் - மனத்தின் கண் மாசிலனாதல் - அதற்கு வழி இல்லறம் - அன்பு வளர் முறை - திருக்குறள் அதிகார அமைப்பு - பெண்ணைசை வெறுத்தலுக்கும் பெண்ணை வெறுத்தலுக்கு முள்ள வேற்றுமை - அந்தண நிலை - திருவள்ளுவரும் பெண் வழிச்சேறலும் - ஆச்சிரமநோக்கம் - சந்நியாசம் - தவம்- போலித்துறவும் உண்மைத்துறவும் - புத்தர் பெருமான் - கிறிஸ்து மணிமேகலை - பிற்கால சந்நியாசம் - "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" - உண்மை வேதாந்தம் - வெறுத்தல்வேறு துறத்தல்வேறு - ஞானிகள் - பட்டினத்தார் - இல்லறம் - அறம் ஒன்றே - துறவறமென்பது தனித்ததொன்றன்று - சுந்தரமூர்த்தி சுவாமிகள் - மகாத்மாகாந்தி - தாகூர்.

எ. திருமணம் உசகூ—கூ0கூ

மக்கள் கூடி வாழும் இயல்பினர் - திருமணப் பொருள் - அன்புக்கட்டு - போலி மணங்கள் - திருமண வகை - எட்டு மணம் - களவுமணச்சிறப்பு - களவு மணத்தின் பின்னிலை - திருமணவயது - நமது நாட்டுக் குரியது - எழுவகைப் பருவம் - அரிவையர் இன்பம் - மறுமணம் - கொழுநன் இயல்பு - பொருந்திய நாயகனைத்தேடலும் தேடும் பொறுப்பும் - பொருந்தாமணங்கள் - பொருத்தங்கள் - நீறுபூத்த நெருப்புகள் - திருமணத்துக்குரியராகாதவர் - சிற்பநூல் - ஹிந்துமதக் கட்டுப்பாடுகள்.

இப்பொழுது நமது நாட்டில் ஒரு பேரறிஞர் தோன்றித் தாவர உலகை நன்கு ஆய்ந்து இக்கால முறையில் பல திற உண்மைகளை வெளியிட்டு வருகிறார். அவரை இன்னாரென யான் குறிப்பிட வேண்டுவதில்லை. அவர் வங்காளமளித்த பேரறிஞர் ஜெகதீச சந்திரபோஸ் என்று ஆராய்ச்சிக்காரர் பலர்க்குந் தெரியும். அன்னார் தாவர ஆராய்ச்சியில் தமது பெரும் பொழுது போக்கி எத்துணை எத்துணை நுட்பங்களை உலகிற்கு உதவி வருகிறார்! அவ்வறிஞர் தாவரங்கட்கு உயிர் உண்மையையும், அவைகளுள் பெண் ஆண் வேற்றுமை உண்மையையும் எவருங்கண்டு மகிழுமாறு கருவித் துணைகொண்டு உறுதிப்படுத்தியது உலகறிந்த தொன்று. அவரல்லரோ நமது பண்டைமூதறிஞர் வழி வழி வந்த பெரியார் என்று சொல்லத் தக்கவர்? இனித் தாவரங்கட்கு உயிர் உண்மையையும் பெண் ஆண் வேற்றுமை உண்மையையும் மறுத்தற்கு உலகில் சிறிதுமிடமில்லை.

ஏனைய உயிர்களின் பெண் ஆண் உண்மை வெள்ளிடைமலை. ஆகவே இவ்வழகிய உலகம் பெண் ஆண் வடிவாக அமைந்திருத்தல் எவரும் ஒப்ப முடிந்த உண்மை என்க.

பெண் ஆண் வடிவாயிலங்கும் உலகம் காரியமா காரணமா ? எடுத்துக்கொண்ட பொருளுக்கு இது வேண்டற்பாலது. இது குறித்து நீண்ட ஆராய்ச்சியில் தலைப்படவேண்டுவதில்லை. உலகம் நாமரூபங்களையுடையது. நாமரூபங்களுடைய ஒன்று தோற்றக் கேடுகளுக்குட்படல் இயல்பு. தோற்றக்கேடுகளுடைய ஒன்று காரியமாகுமா காரணமாகுமா ? அது காரியமாகாது எங்ஙனங் காரணமாகும் ? உலகம் காரியமென்பது அறிஞர் ஆய்ந்து கண்ட முடிபு.

காரிய உலகம் எக்காட்சி வழங்குகிறது ? பெண் ஆண் காட்சியை வழங்குகிறது. காரிய உலகம் பெண் ஆண் வடிவாயிருத்தலால் அதைக் காரியப்படுத்தும் நிமித்தம் எவ்வடிவினதா யிருத்தல் வேண்டும் ?

உள்ளது, போகாது இல்லது வாராது என்பது நியாயம். காரணத்தில் பெண்மையில்லையெனில் காரியத்திலும் பெண்மையிராது. அவ்வாறே காரணத்தில் ஆண்மையில்லை யெனில் காரியத்திலும் ஆண்மையிராது. காரிய உலகு பெண் ஆணால் ஆக்கப்பட்டிருப்பதால் அதைக் காரியப்படுத்தும் நிமித்தமும் பெண் ஆணாகவே யிருத்

தல்வேண்டும். இவ்வுண்மை கண்டே நம்முன்னோர் நிமித்தமாகிய கடவுளை "அம்மை அப்பன்" எனக் கொண்டார் போலும்.

"முழுமுதற்பொருள் பெண் ஆண் வடிவாகப்பொலிகிறது" என்னும் உண்மை முதல் முதல் நமது நாட்டவரால் காணப்பெற்றது. எல்லாவற்றையுங் கடந்தொளிரும் மெய்ப்பொருளை இக்கால உலகில் பலர் ஆணாகவும், சிலர் பெண்ணாகவும், சிலர் பெண் ஆணாகவுங் கொண்டு வழிபடுகிறார். இனி வரும் உலகம் எத்திறக் கருத்து வேற்றுமையுமின்றி ஓரே உண்மையை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். "மாற்ற மனங் கழிய" நிற்கும் மறை பொருளை அவரவர் விரும்புமாறு போற்ற அவரவர்க் குரிமையுண்டு. "எல்லாமாய் அல்லவுமாய்" விளங்கும் ஒன்றை எவ்வண்ணம் போற்றினாலென்ன? ஆயினும் எடுத்துக்கொண்ட பொருளிற்கேற்பக் கடவுள் பெண் ஆண் நிலையைப்பற்றி ஓர்ந்து உணரவேண்டுவது நமது கடன்.

கடவுளைத் தாயாகக் கொண்டோர் மிகச்சிலர். அவரைத் தந்தையாகக் கொண்டோர் பலர். கடவுளைத் தந்தையாகக் (Fatherhood of God)

கொண்டோர் அவரைத் தாயாகக் (Motherhood of God) கொள்ள மறுத்தற்குப் பொருளில்லை. தந்தையாக உள்ள கடவுள் ஏன் தாயாக இருக்க மாட்டார்? அன்னையினும் அப்பன் சிறந்தவன் கொல்! அப்பனினும் அருள் மிக்கவள் அன்னை யல்லளோ? கடவுளிடத்துள்ள தாய்மைக் குணத்தையா மறைப்பது? மறுப்பது? கடவுளைத் தந்தையாக்கொள்ள ஒருப்பட்டமனம் அவரைத் தாயாக்கொள்ள ஒருப்படுவதில் என்ன இழுக்கு?

முழுமுதற் பொருளைப் பெண் ஆண் என்றும் தாய் தந்தை யென்றுங் கொள்வதால் அதற்குத் திண்ணிய உறுப்புக்களுண்டு என்று எவருங்கருத லாகாது. அப்பொருளின் பெண்மையும் ஆண்மை யுந் திண்ணிய உறுப்புக்களையுடைய பெண் ஆண் வடிவங்களைக் குறிப்பனவல்ல. அவைகள் நுண்ணிய சக்திகளைக் குறிப்பனவாம். புராணங்கள் அவைகளைத் திண்ணிய வடிவங்களாகக் கொண்டு திருமணப் படலங்களும் வகுத்திருக்கின்றன. அறிவால் கூர்ந்து உணரத்தக்க சில நுண்மைகள் மனதிற்பொருளாமாறு அவைகளை உருவகப்படுத்திக் கதைகளாக அணி வகுத்துக் கூறுவது புராண மரபு. கதைகளை உள்ளவாறு நம்புவது

பௌராணிக மதமெனப்படும். ஞான நூலா ராய்ச்சி யுடையார் புராணக் கதைகளின் நுட்ப முணர்ந்து இன்புறுவர்; ஏனையோர் இடர்ப் படுவர்.

நுண்ணிய பெண் ஆண் சக்திகளின்மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். உலகில் இரண்டு சக்திகள் நிலவுகின்றன. ஒன்று கூட்டுஞ்சக்தி; மற்றொன்று பிரிக்குஞ்சக்தி. முன்னையது தண்மை யது; பின்னையது வெம்மையது. இவ்விரண்டுஞ் சடசக்திகளாகும். இவைகளின் உண்மை பூத பௌதிக சாத்திரிகளால் உறுதி செய்யப்பெற்று நீண்ட நாட்களாயின. சடசக்திகள் தாமே இயங்கமாட்டாவாகலின் அவைகளை இயக்கச் சட மல்லாத ஒன்று வேண்டற்பாலது. அதுவே சித் பொருள் என்பது. இயங்குஞ் சடத்தில் இரண்டு சக்திகளிருத்தலைப்போப்ப இயக்குஞ் சித்பொருளி லும் இரண்டு சக்திகளிருத்தல் வேண்டும். இல்லை யேல் குறிப்பிட்ட சடசக்திகள் முறை முறையே இயங்கமாட்டா. ஆகவே சித்பொருளிடத்துங் கூட்டல் பிரித்தற்குரிய தண்மை வெம்மையிருந்தே தீரல்வேண்டும். அவைகளின் இருப்பும் உண்மை கண்ட பெரியோர்களால் உறுதி செய்யப்பட்டிருக்

கிறது. சித்தெனுஞ் செம்பொருள் சடப்பொரு ளுடன் நீக்கமறப் பிரிவின்றி அத்துவிதமாகக் கலந்து நின்று அச்சடத்தை இயக்குந் திறத்தை விரிந்த நூல்களிற் காண்க.

தண்மையைப் பெண்ணென்றும் வெம்மையை ஆணென்றுங் கூறல் உலகோர் இயல்பு. இவ் வியல்புபற்றிச் சித்பொருளின் தண்மைக்கூற்றைப் பெண்ணென்றும், வெம்மைக் கூற்றை ஆணென் றும் நம்முன்னோர் குறிப்பிட்டனர். இவை நிரலே சக்தி என்றும் சிவம் என்றுஞ் சொல்லப்படும். வழிபடுவோர் உள்ளத்தில் அவை பொருளாமாறு முன்னதற்கு நீலநிறமும் பின்னதற்குச் செம்மை நிறமும் மெய்ஞ்ஞானிகளால் பொறிக்கப்பெற்றன. தண்மைக்கு நீலமும் வெம்மைக்குச் செம்மையும் பொறித்தது மிகப்பொருத்தம். நெருப்பு நாநீட்டிச் சுழன்று எரியும்போது அதனுடலில் செம்மையும் விளிம்பில் நீலமும் ஒளிர்தல் காண்கிறோம். இந் நீலமுஞ் செம்மையும் ஒன்றினின்றும் ஒன்று பிரி யாது நிற்றல் போலச் சக்தியுஞ் சிவமும் பிரி வின்றி ஒன்றோடொன்று இயைந்து நிற்குமென்க.

அண்டம் பெண் ஆணுக அமைந்திருத்தல் போலப் பிண்டமும் அவ்வண்ணமே அமைந்

திருக்கிறது. உடற்கூற்று நூற்படி உடலின் இடதுபக்கம் தண்மை நாடியும் வலதுபக்கம் வெம்மை நாடியும் ஓடுகின்றன. யோகிகள் இத் தண்மையையும் வெம்மையையும் முறையே சந்திர கலை சூரியகலை என்று கூறுப. இடைகலை பிங்கலை எனவும்படும். வலதுபக்க வெம்மைச் சூரிய கலையும் இடதுபக்கத் தண்மைச் சந்திரகலையும் சமமாக இயங்கல் வேண்டும். ஒன்று மிகுந்து மற்றொன்று குறையின் உடலுக்கு ஊறு விளையும். இதனை :—

> "மாறு மதியும் ஆதித்தனும் மாறின்றித்
> தாறு படாமல் தண்டோடே தலைப்படில்
> ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்
> பாறுபடா இன்பம் பார்மிசைப் பொங்குமே"

எனவரூஉந் திருமூலர் திருவாக்கான் உணர்க.

இக்கலைகள் பெண்கலை ஆண்கலை யென்று வழங்கலுமுண்டு. "ஈராறு பெண்கலை எண்ணிரண்டாண்கலை" என்றார் அத்திருமூலரே. விரித்துச் செல்லாது சுருங்கச் சொல்லின் மக்கள் இடது பக்கம் பெண் தன்மையும் வலதுபக்கம் ஆண் தன்மையும் நிலவுகின்றன என்னலாம். பிராணாயாமப் பயிற்சியில் தேர்ச்சிபெற்றோர் கலைகளை

ஒழுங்குபெற இயக்கும் ஆற்றல் வாய்ந்தவராக லின், அவர் விரும்புமாறு பெண் குழவியையோ ஆண் குழவியையோ பெறக்கூடுமென்று யோக நூல்கள் கூறுகின்றன. இப்பெண்கலை ஆண்கலைக் கும் பற்றுக்கோடு சக்தி சிவமேயாகும்.

அண்ட பிண்டங்கள் யாவும் பெண் ஆண் வடிவா யிருத்தல்போல அவைகட்குக் காரணமாக உள்ள முழுமுதற் பொருளும் பெண் ஆண் வடிவாயிருத் தல் கவனிக்கத்தக்கது. இந்நுட்பம் அர்த்த நாரீசுரமூர்த்தத்தில் நனிவிளங்கும். அம்மூர்த் தத்தில் ஒருபாதி பெண்ணுருவும் மற்றொருபாதி ஆணுருவும் பொலிதல் காண்கிறோம். அதன் பொருளென்னை? அவ்வடிவம் இவ்வண்டபிண்டம் அர்த்த நாரீசுர வடிவமாயிருத்தலை அறிவுறுத்துவ தென்க.

சக்தி சிவம் என்பன ஒன்றைவிடுத்து ஒன்று பிரிந்து நிற்பனவல்ல. அவை ஒன்றோடொன்று இயைந்து நிற்பன. சக்திக்குஞ் சிவத்துக்கு முள்ள இயைபு மலரும் மணமும் போன்றது; மரமுங் காழ்ப்பும் போன்றது. பரம்பொருளிடத் துள்ள இரண்டு தன்மை சக்தி சிவம் என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றன. சக்தி

யாவது சிவத்தின் அருள். ஒருவனிடத்துள்ள அருட் குணத்தை எங்ஙனம் பிரிக்க இயலும்? சக்தி என்ற அன்றே சிவமுண்டு; சிவம் என்றே அன்றே சக்தி யுண்டு. இரண்டும் அநாதி. இரண்டும் உயர்வு தாழ்வின்றி ஒத்து உலகுயிர் களையியக்குகின்றன. சக்தி சிவத்தைப்பற்றி,

“ அறவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய் வேறாங்
குறியது வுடைத்தாய் வேதா
கமங்களின் குறியி றந்தங்
கறிவினில் அருளான் மன்னி
அம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற
சிவனடி சென்னி வைப்பாம் ”

என்றும்,

“ ஒருவனே இராவ ணாதி
பாவகம் உற்றாற் போலத்
தருவனிவ் வுருவ மெல்லாம்
தன்மையுந் திரியா னாகும்
வரும்வடி வெல்லாஞ் சத்தி
சத்திதான் மரமுங் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச்
சிவத்தினோ டியைந்து நிற்கும் ”

என்றும்,

" சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ்
வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும்
உணர்குண குணியுமாக
வைத்தனன் அவளால் வந்த
வாக்கமிவ் வாழ்க்கையெல்லாம் "

என்றும்,

" எத்திறம் நின்ருன் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள் "

என்றும்,

" அருளது சத்தி யாகும்
அரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச்
சிவமின்றிச் சத்தி யில்லை "

என்றும்

சிவஞான சித்தியார் கூறியிருத்தல்காண்க.

சக்தி சிவம் போலப் பெண்ணுலகும் ஆணுலகும் இலங்கல் வேண்டும். பெண் ஆண் சேர்ந்த ஒன்றே வாழ்வென்பது. பெண்ணும் ஆணுஞ் சேர்ந்த ஒன்றே முழு மனிதத்தன்மை என்று மறுகூறுகிருர். தண்மையும் வெம்மையும் எங்ஙனம் உடல் நலத்துக்கு வேண்டற்பாலனவோ அங்ஙனமே பெண்மையும் ஆண்மையும் வாழ்வு

நலத்துக்கு வேண்டற்பாலன. ஒன்றற்கொன்று சிறுமையுறின் ஊறுங் குலைவும் நிகழும். இவ் வுலக வாழ்விற்குப் பெண்மை ஆண்மை இரண் டும் இன்றியமையாதன. இரண்டனுள் உயர்வு தாழ்வுமில்லை. உயர்வுதாழ்வு கற்பிப்போர் இறை யியல்பையாதல் இயற்கையியல்பையாதல் உணரா தார் என்க.

இவ்வுலகம் பெண் ஆண் வடிவாயிலங்குகிறது. முழுமுதற் பொருளும் பெண் ஆண் வடிவாய்ப் பொலிகிறது. ஆதலால் பெண்ணும் ஆணுங்கூடி வாழும் வாழ்வே வாழ்வு. அவ்வாழ்வு ஓங்க. பெண் ஆண்வாழ்க.

"மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணி லெம் துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே"

—திருஞானசம்பந்தர்.

௨. பெண்ணின் முதன்மை

"பெண்கொடியாக நடந்த துலகே"—திருமூலர்.

பெண்ணுலகு ஆணுலகு என்னும் இரண்டனுள் உயர்வு தாழ்வு கருதலாகாதென்று மேலே சொல்லப்பட்டது. இரண்டுலகினுள் உயர்வுதாழ்வு இல்லையேனும் பெண்ணுலகிற்கு முதன்மை வழங்கவேண்டுமென்பது அறிவும் அன்பும் வாய்ந்தோர் கருத்து. பெண்ணுலகிற்கு இயல்பாயமைந்துள்ள குணம், தொண்டு, கடமை முதலியவற்றை நோக்குழிப் பெண்ணுலகு முதன்மை பெற்று விளங்குவது நன்கு புலனாகும். ஆணுலகின் பேற்றிற்கும் வளத்துக்கும் நலத்துக்கும் பிற ஆக்கத்துக்கும் நிலைக்களனாயிருப்பது பெண்ணுலகென்பது எவரும் அறிந்ததொன்று. அப்பெற்றி வாய்ந்த பெண்ணுலகிற்கு முதன்மை வழங்கினால் நேரும் இழுக்கென்னை?

முதலாவது பெண்ணின் இயல்புகள்மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். பெண்ணெது? இதற்குப் பலர் பலவாறு கூறுப. பெண்ணுறுப்புடையது பெண்ணென்று சொல்வது சாதாரண உலக வழக்கு. பெண்ணுறுப்புடைய சிலரிடத்

ளுள்ளே யுள்ள நுண்மைஇறைமை பெண்மை என்க. அத்தகைப் பெண்மை வாழ்க.

ஆண்மக்களே! உங்கள் பெருமை பெண்ணுடன் பொருந்தி நிற்பது. உங்களைப் பெற்றவள் பெண்; உங்களை வளர்ப்பவள் பெண்; உங்களோடு வாழ்பவள் பெண்; உங்களைப் பெண்ணாக்குபவள் பெண். நீங்கள் பெண்ணாகாது, அதாவது பெண்மைநிலை பெறாது, அதாவது அமைதி நிலை யெய்தாது, விடுதலையடைய இயலாது. பெண்ணால் நலனடையும் நீங்கள் அப் பெண்ணுலகையா வெறுப்பது? துறப்பது? நன்றி கொல்லாதேயுங்கள்; தாய் நன்றி கொல்லாதேயுங்கள்; "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை - செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னும் பொய்யா மொழியை நோக்குங்கள்.

பெண்ணிற்கு மதிப்பு கொடுங்கள்; உரிமை கொடுங்கள்; வணக்கஞ்செலுத்துங்கள். பெண்ணை மதித்துப் போற்றலே நாகரிகம். அவளைக் கட்டுப் படுத்தல் - அடிமைப்படுத்தல் - கொடுமையாக - நடத்தல் - அநாகரிகம்.

பெண்ணலன் உங்கள் நலன்; உங்கள் நாட்டு நலன்; அப்பெண்மகள் கண்ணீர்விடும் நாடு

வறுமை நாடாகும்; அடிமை நாடாகும். அஃது எரிந்துபோகும்; கரிந்து போகும். ஒரு பெண் ணுக்கு ஸ்ரீராமபிரான் எவ்வளவு முயன்றார்; எத் துணை இடுக்கணுற்றார்; எத்தனைப் போர்புரிந்தார்; ஒருபெண்ணின் பொருட்டுப்பாரதப் பெரும்போர் நடந்தது. பெண்ணின் துயர் தீர்ப்பது ஆண்மகன் கடமை. பெண் துயர்தீர்க்க இயலாத மகன் ஆண் மகனல்லன். பெண் சிறுமை போக்க உயிரையுந் துறத்தல்வேண்டும். பெண் பெருமை காக்கவே ஆண்மகன் பிறந்திருக்கிறான். பெண்ணில்லையேல் உலகேது? உயிரேது? அன்பேது? கடவுளேது? எல்லாம் பெண்ணால்; எல்லாம் பெண்ணில். அத் தகைப் பெண்ணை-தாயை-தெய்வத்தைப் போற் றுங்கள்; போற்றுங்கள்.

எங்கணும் பெண்மைபொலிக; எங்கணுந் தாய் மையோங்க; எங்கணும் இறைமை வாழ்க. வந்தே மாதரம்.

“ ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ ”

—அப்பர்.

“ தாயேயாகி வளர்த்தனை போற்றி ”

—வாசகனார்.

பில் ஒழுங்கு-கருப்பிறழ்ச்சி - மலச்சிக்கல் - வியர்வை - பிராணுயாமம் - சிறுநீர் - பித்தம் - நோன்பு - அழகு காத்தல்.

கக. பதியிலார் ௩௯௪—௪௧௫

பெண்ணுலகின் கறை - பதியிலார்வகை - சாதிப்பதியிலார் வரலாறு - தேவடியாள் தாசிப்பெயர் விளக்கம் - கோயில்களும் கூடா வொழுக்கமும் - ஆண்மக்கள் கடமை - குலமகளிர் கடமை - கூடாஒழுக்கத்தால் நேருந்துன்பங்கள் - அன்பில் கலவியில் இன்பில்லை - பதியிலார் துயரம் - பதியிலார் பதியுடையாராதல் - காந்தியடிகள் பொன்னுரைகள் - செல்வர்கள் கடமை - இயற்கை இறை நோக்கம்.

கஉ. கைம்மை ௪௧௬—௪௨௭

கைம் பெண் சிறுமைகள் - நமது நாட்டுநிலை ஜனகணிதக்குறிப்பு - கைம்பெண் தொகை - ஹிந்து மதத்தின் பொறுப்பு - சாத்திரம் - கர்மம் - மறுமணம் - கைம்மையர் துயர் களைதல்.

கரு. பெண்மை தாய்மை இறைமை ௪௨௮—௪௩௬

நூன்முடிபு - அன்பே இறை - தாயன்பு - பெண்ணின் இறைமை - ஸ்ரீ ராமபிரான் - பாரதப்போர் - எல்லாம் பெண்ணுல்.

அ. *இன்ப வாழ்வு ௩௧0—௩௪௬

ஒழுங்குபட்ட இல்லறம் வீடு - வீடு - சிற்றின்பம் பேரின்பம் - காதலுக்குங் காமத்துக்குமுள்ள வேற்றுமை - கலவிப்பான்மை - தலைவிக்கு எச்சரிக்கை மொழிகள் - போகத்தில் அளவு - அஃறிணையுலகம் - ஒரு தலை வேட்கை - மனைவியைச் சகோதரி அல்லது தாயாகக் கருதும் நிலை - மனைவியின் மாட்டு இறைமை காணும் நிலை - பொருந்தா நாயகன் வாய்க்கப்பெற்றால் என் செய்வது? - பொருள் வழி அருள் வளர்த்தல் - பணி - இல்வாழ்வு இன்ப வாழ்வு.

௯. பிள்ளைப்பேறு ௩௫0—௩௬௮

பெண்ணின் பெருமை பிள்ளைப்பேற்றில் - தாய்மை நிலை - கல்வி இன்பம் திருமண இன்பம் பிள்ளை இன்பம் - பிள்ளைப்பேற்றில் இறைமை யரும்பல் - ஒழுக்கத்துக்கும் பிள்ளைப்பேற்றிற்குமுள்ள தொடர்பு - கருவுற்ற வேளையில் நாயகன் எவ்வாறு நடாத்தல் வேண்டும்? - பிள்ளைப்பேறும் தற்கால நாகரிகமும் - பிள்ளைப் பேற்றிலும் அளவு - கருவழிக்கும் பாவம் - சோமாஸ்கந்த மூர்த்தம்.

௧0. பெண்ணலன் ௩௬௯—௩௯௩

தவநாடு - பெண்ணலன் நாட்டு நலன் - செயற்கையில் வீழ்ந்தோர்க்குக் கழுவாய் - எரிநோய் - மாதப்பூப்

* இத்தலைப்பில் சில பக்கங்களில் இன்ப வாழ்வு என்பதற்குப் பதிலாகத் திருமணம் என்று தவறுக விழுந்துவிட்டது. திருத்தி வாசிக்க.

சில விடங்களில் மறுக்கப்பட்டும் வந்தது. இனி அம்மறுப்பிற்கு இடனில்லை.

தாவரங்கட்கு உயிர் உண்மையையும், பெண் ஆண் வேற்றுமை உண்மையையும் நம்முன்னோர்கள் ஏட்டில் மட்டும் பொறித்துச் சென்றார்கள். வேறு வழிகளான் அவ்வுண்மைகளை அவர்கள் நிறுவிக்காட்டியிருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் எத்துறை நண்ணி அவைகளைக் கண்டார்கள் என்பதுஞ் செவ்வனே விளங்கவில்லை. அக்கால மக்கட்கு அகவுணர்வு மிக்கிருந்ததென்று சொல்லப்படுகிறது. அவ்வுணர்வான் அவர்கள் பல நுண்மைகள் கண்டிருக்கலாம். அக்கால நிலை புறக்கருவி ஆராய்ச்சியை வேண்டி நிற்கவில்லை போலும்.

பின்னை நாளில் அதாவது அகவுணர்வு குன்றியபொழுது, முன்னோர்கள் ஏடுகளில் எழுதி வைத்துள்ள பல உண்மைகளைக் கால நிலைக்கேற்ற வண்ணம் புறக்கருவிகள் கொண்டு ஆராய்ந்து, புதிய முறைகளான் உறுதிப்படுத்த வேண்டுவது பிற்கால அறிஞர் கடன். அக்கடனாற்றப்புகாது பழைய மக்களைக் குறைகூறிக் கொண்டிருத்தல் அறமாகாது.

பெண்ணின் பெருமை

அல்லது

வாழ்க்கைத் துணை

க. பெண் ஆண்

" அம்மையே அப்பா ஒப்பிலா மணியே "

—மாணிக்கவாசகர்.

இவ்வழகிய உலகைச் சிறிது உற்று நோக்கு வோம். உலகம் எக்காட்சி வழங்குகிறது? பெண் ஆண் காட்சியை யன்றோ வழங்குகிறது? உலகில் தனிப்பெண் தோற்றமாதல், தனி ஆண் தோற்ற மாதல் புலனாகிறதோ? இல்லை.

உலகில் புல் முதல் மக்கள் ஈறாக உள்ள எல் லாம் பெண் ஆண் வடிவாகப் பொலிதல் காண்கி றோம். புல் முதலிய தாவர இனங்கட்கும் உயிர் உண்டு என்றும், அவைகளுள்ளும் பெண் ஆண் வேற்றுமை உண்டு என்றும் நமது நாட்டு நூல் கள் முழங்குகின்றன. இக்கொள்கை சிலகாலம்

பெண்ணின் முதன்மை

இலும் சிலவற்றிலும் பெண்

கண்கூடு. ஆதலால் உறு பெண்மை எனப்படும்.

கொண்டு பெண்ணிலது எ யது பெண்.

யன்று. உறுப்போடு ம என்னுஞ் சொல்லின் கடைகுறைந்து

கொண்ட ஒன்றே னை நின்று பின்னைப் பெண்ணொனுட

களின் திரட்சி னத்தைக் குறிப்பதாயிற்று. பெண் ஆடூ

பெண்மையுடையர். இது தமிழ் இலக்கண வழக்கு. ஈண்டுட்

பெண்ண பெண்ணை எவள் என்றது, எது என்றது முதற்

பெண்ணெ பொருளை ஒட்டி என்க.

ஓர் இ

பெ

பெண்மை யாவது யாது? அடக்கம் பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று. மண் நீர் காற்று ஒளி முதலியன சேர்ந்து மரமாதல் போல அடக்கம் முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன. சிறு சிறு நீர்த்துளி சேர்ந்து பரந்த நீர்நிலை யென்னும் பெயர் பெறு தல் போலவும், சிறு சிறு பரல்கள் சேர்ந்து மலை யென்னும் பெயர் பெறுதல் போலவும் அடக்

பெண்ணின் பெருமை

ஒன்றி அமை பெண்மை ஏ

ளக்கற்பாற்று. ன. பெண்மை என்பதைக்

உலகில் இன்பம் துன்பம் என்பவைந்து அடக்கம் முதலிய

டு. இன்பம் எப்பொழுது க்கும். அடக்கம் முத

பம் எப்பொழுது விளைகிறது? பெண்மை என்பது

றுமை தியாகம் இரக்கம் முதலியவ

பமெழுதலும், அடங்காமை பொறுமை னும் இரண்டு

ம் அவா வன்கண் முதலியவாற்றால் துன்கெழுகிறது?

தலுங் கண்கூடு. மாயை அவித்தை முத அடக்கம்

ற்றைக் கடந்து விளங்குவது இன்பமென் ற்றால்

அம்மாயையாதியன பொறுமை வெகுளி கன்

முதலிய பேய்க்குணங்களாகக் காரியப்

உயிர்களைப் பிடித்து இன்ப ஊற்றைத்

ந்து கொண்டிருக்கின்றன என்றும் ஞான

ள் நவில்கின்றன. இப்பேய்க்குணங்களால்

அடக்கம் பொறுமை முதலிய தெய்வகுணங்

விளைவது இன்பமென்பது அன்றாட அனு

ேல் அறியக்கிடப்பது.

அடக்கம் முதலியவற்றின் திரட்சி பெண்மையாய்ப் பொலிவதையும், அடக்கம் முதலியவாற்றால் இன்பம் விளைவதையுங் கூர்ந்து நோக்கின் பெண்மை இன்பமாக விளங்காமற் போகாது. ஆகவே பெண்மையை இன்பநிலையாகக் கோடல் எவ்வாற்றானும் பொருந்தும். மின்சாரம் யாண்டும் இயங்கினும், அது யாண்டும் விளங்கித் தோன்றாது, அதனை விளங்கித் தோன்றுமாறு தொழிற்படுத்துமிடத்தில் மட்டும் அஃது ஒளிர்தல்போல இன்பம் யாண்டும் பரந்து நிற்பினும் அது பெண்மையில் விளங்கி நிகழ்ச்சியில் உணர்த்துமென்க.

இனிப் பெண்மையாவது யாது? இன்ப நிலை என்று சொல்லலாமன்றோ? அடக்கம் பொறுமை தியாகம் முதலியன பெண்மையின் உறுப்புக்கள். அவ்வுறுப்புக்கள் சேர்ந்த இன்பம் பெண்மையின் உடல். அவ்வின்ப உடல் நுண்ணியதாகலின் (Abstract) அதற்கு என்பு தோல் போர்த்த ஒரு பருவுடல் இறைவனால் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வடிவம் பெண் பெண் என்னும் பெயரால் உலகில் வழங்கப்பட்டு வருகிறது. இப்பொழுது பெண் எது? இன்பத்தின் பருமை.

இன்பமோ நுண்ணியது; காணக்கூடாதது. காணக்கூடாத இன்பம் பெண்ணாகி நமக்குக்காட்சி யளிக்கிறது. பெண்மையெனும் இன்பத் தெய்வத்தை ஏந்திநிற்கும் பெண்ணை வெறும் பெண்ணெனக்கொள்ளாது பெண் தெய்வமென்றும் போற்றலாம். இத்தகைப் பெண்மையுடைய பெண்ணை முதன்மையுடையாள் எனில் என்ன முழுகிப்போகும்?

பெண்மை இன்பமாயின் பெண்மை அழகு மாகும். இன்பமுள்ள விடத்தில் அழகுமுண்டு. அழகுள்ள விடத்தில் இன்பமுமுண்டு. அழகு புலனாகுமிடத்தில் இன்பநுகர்ச்சியுமிருத்தல் அநுபவம். ஆதலால் பெண்மை அழகுமாதல் கவனிக்கத் தக்கது.

அழகுநுட்பம் உணர்ந்த மக்களுள் பண்டைத் தமிழ்மக்கள் தலைசிறந்து விளங்கினவர்கள். அவர்கள் பெண்ணை அழகென்றே கொண்டார்கள். பெண்ணெனுந் தமிழ்ச்சொற்கு அழகு என்பது பொருள். பெண்ணைக்குறிக்கும் மாதர் முதலிய சொற்கட்கும் அழகுப் பொருளிருத்தல் காண்க. பெண் மாதர் இவைகள் ஆகுபெயர்கள். பல விடங்களில் ஒரோவழி விளங்கும் அழகெலாந்

திரண்டு பெண்ணாகி நிற்றலால் அழகுப்பொருள் அளிக்கும் பெண்ணெனுஞ் சொல் பெண்ணுலகிற் குச் சூட்டப்பட்டது. நீலவானத்தில் திங்கள் போலவும், மலையில் பொழில் போலவும், பசுங் கொடியில் மலர்போலவும், மலரில் நிறம் போல வும், பறவைகளில் மயில் போலவும், விலங்கு களில் மான்போலவும் பெண்ணெனும் அழகு இவ்வழகிய உலகை அழகு செய்கிறது. பெண் ணில்லையேல் உலகில் அழகேது ?

அழகு எது ? இது குறித்து "முருகன்" என் னும் நூலில் எழுதியிருக்கிறேன். அழகுக்கட வுளைக் கண்டின்புற எவரும் வானத்தை நோக்க வேண்டுவதில்லை; மலைக்கேக வேண்டுவதில்லை; காடுகளில் புகவேண்டுவதில்லை; கடலை நாடவேண் டுவதில்லை; காவியங்களைப் புரட்ட வேண்டுவ தில்லை. அழகுக் கடவுள் பெண்ணாகி யாண்டுங் காட்சியளிக்கிறது. கண்ணுளோர் காண்பாராக.

பெண்ணழகிலுள்ள கடவுட்டன்மை யுணர்ந்து அவ்வழகை எத்துணைக் கவிவாணர் எழுத்தால் எழுதி எழுதி இன்பம் நுகர்ந்தார்! அன்னார் எழுதி எழுதி எழுத்துக்கு முடிவு கண்டாரன்றி அவ்வழகுக்கு முடிவு கண்டாரில்லை. அழகுக்

கடவுளுக்கு முடிவேது? அழிவேது? பெண்ணின்பாலுள்ள அழகுக் கடவுளைக் காணுது என்பு தோல்மீது கருத்துக்கொண்டழியும் தூர்த்தர் நிலைகுறித்து இரங்குகிறேன். எல்லாவற்றிலும் முதன்மை பெற்றுள்ள அழகாகிய பெண்ணிற்கு முதன்மை குறித்தல் தவறுமோ?

பெண்ணின் வாழ்க்கையை ஊன்றிக் கவனிப்போமாயின், பெண் பிறவியின் விழுமிய நோக்கம் இனிது புலனுகும். பெண் பிறவி காமவேட்கைக்கும், அடுப்பூதல் முதலிய வேலைகட்கும் என்று கோடல் அறியாமை. இவ்வுலக ஆக்கமும் அழிவும் பெண்ணிடத்திருக்கின்றன. பெண் தன் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளைத் தீயவழியில் வளர்த்து உலகில்விடின் உலகில் அரக்கர் வாழ்வு பெருகித் தெய்வ அன்புவாழ்வு சுருங்கி அழிந்துபடும். பெண்ணினல்லாள் தெய்வமாகலின் எப்பொழுதும் அழிவு நினையாள். அவள் உள்ளத்துள் எப்பொழுதும் ஆக்கமே நிலவும். தன்வயிற்றிற் பிறக்கும் பிள்ளை, பெருங்கல்வியாளனுய், வீரனுய், அன்பனுய், நல்லனுய் உலகில் வாழல் வேண்டும் என்னும் எண்ணத்தையே தாய்கொள்வது வழக்கம். பிள்ளை கெட்டொழிய வேண்டு

மென்று தாய் ஒருபோதும் நினையாள். தாய்வயிற் றிற்பிறந்து அவளால் வளர்க்கப்பெறும் பிள்ளைக ளல்லவோ பின்னைய உலகம்? எனவே உலகம் யாரிடத்திருக்கிறது? தாயினிடத்தன்றோ? அவ் வுலகாக்கும் தாய்மையுடைய பெண்ணின் பெரு மையை என்னென்று கூறுவது? அன்பர்களே! பெண் பிறவியின் விழுப்பத்தைக் கூர்ந்து நோக் குங்கள். பெண்ணின் பெருமை யுணர்ந்தன்றோ திருவள்ளுவனார் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று உலகிற்கு அறிவுறுத்தினார்?

இவ்வுலக ஆக்கத்துக்குரிய தாய்மை பெண் ணின்பாலுண்டெனில் அவளது தொண்டின் சிறப் பை என்னென்று கூறுவேன்? இவ்வுலக நலத்துக் குரிய தொண்டை (Service) அத்தெய்வம் ஏந்தி நிற்கிறது. பயன் கருதிச் செய்யும் வேலை தொண் டாகாது. பயன் கருதாது செய்யப்படும் பணியே தொண்டாகும். பிள்ளைகளை நல்வழியில் வளர்க் குந் தொண்டினுஞ் சிறந்த தொண்டு வேறொன் றுண்டோ? பிள்ளைகளுக்குத் தொண்டு செய்யும் போது தாய் ஏதாவது பயன் கருதுகிறாளா? இல்லையே. உலக நலன் ஒன்றே கருதித் தாய் தொண்டு செய்கிறாள். பயன் கருதாத் தொண்

டன்றோ கடவுள் தொண்டு? அத்தொண்டருளத் தன்றோ கடவுள் வீற்றிருப்பார்? தாயுள்ளத்தி லில்லாத கடவுளெங்கே யிருக்கப்போகிறார்? அது பற்றியே "ஈன்றாளின் என்ன கடவுளுமில்" என்றார் நான்மணிக்கடிகைக்காரர். பெண் தாயாய்ப் புரியுந்தொண்டு பெரிதுங் கவனிக்கற்பாலது. பெண் பிறவியின் விழுமிய நோக்கம் தாயாகித் தொண்டு புரிதல் என்று சொல்லல் மிகையாகாது. எனவே பெண்மை என்னும் நினைவு தோன்றும்போது தாய்மை, தொண்டு என்னும் இரண்டும் பக்கத்தில் தோற்றமுறல் வேண்டும். இத்தாய்மையுந் தொண்டும் வாய்ந்த பெண்ணல்லளோ முதன்மையுடையாள்?

தாய்மைத் தொண்டு என்பது எளியதன்று. தாய்மைத் தொண்டு என்று எளிதில் பேசலாம்; எழுதலாம். நடைமுறையில் அத்தொண்டாற்றுவோர்க்கு அதன் அருமை தெரியும். அவ்வரிய தொண்டு பெண்ணிற்கு வாழ்வாயிருக்கிறது. அத்தொண்டிற்கென்றே பெண் பிறந்தாள்; வளர்ந்தாள்; படித்தாள்; மணங்கொண்டாள்; வாழ்கிறாள் என்றுங் கூறலாம். தொண்டு அடிமை வேலையன்று. பயன் கருதாத்தொண்டு தெய்விகம்

நிரம்பியது. "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னுந் திருவாக்கை யோர்க. இப் பெயரான் யான் ஒரு நூல் எழுதியிருக்கிறேன். விரிவு அதிற்காண்க.

வாழ்க்கையில் தலைப் பட்டுள்ள ஒரு பெண்ணின் வாழ்வை நோக்கின், அவளது தொண்டின் சிறப்பு இனிது புலனாகும். அப்பெண் எத்துணை எத்துணைத் தொண்டாற்றுகிறாள் ! மாமன் முதலியோர்க்கேற்ற தொண்டு-கணவனுக்குரிய தொண்டு - பிள்ளைகளுக்குகந்த தொண்டு-மற்றவர்கட்குத் தக்க தொண்டு - எத்தனை எத்தனை வகைத் தொண்டு! வன்கண்ணர் சேர்ந்த குடும்பமாயின், அக்குடும்ப நெருப்பிடை நின்று, துன்பம் பொறுத்து, மகிழ்ச்சியோடு பெண் பணியாற்றுகிறாள். வருவாயில்லாக்குடும்பமாயின் பொருளீட்டுந் துறையிலும் உழைத்து மற்றக்கடன்களைப் பெண் உளாற்றுகிறாள். பொது வினைகளில் தலைப்படநேரின் அவ்வினைகளையும் பெண்மகள் நிகழ்த்துகிறாள். பெண்மகள் துன்பம் பொறுத்து மகிழ்ச்சியோடு பணிசெய்தல் போல் ஆண்மகன் செய்யமாட்டான்.

பொறுமைப் பொருளாய பெண்ணைக் கிறிஸ்து என்றுங் காந்தி என்றும் நான் போற்றுகிறேன். துன்பப் பொறையில் விளைவது இன்பம் என்று ஆஸ்கார் ஓயில்ட் என்னும் அறிஞர் கூறிப்போந்தார். இவ்வின்பநிலை பெற்றவரல்லரோ என்னையும் அன்பால் பிறர்க்களிப்பவராவர்? இந்நிலை பெண்மக்களுக்கு இயல்பாய் அமைந்து கிடக்கிறது. பெண் எப்பொழுதும் தனக்கென ஒன்றுங்கொள்வதில்லை. பிள்ளைகளை வஞ்சிக்குந் தாய் உலகிலுண்டோ? தன்னுயிர்க்கென ஒன்றிருப்பினும் அதைப் பிள்ளைகட்குக் கொடுக்கத் தாய் சிறிதும் பின்னடையாள். பிள்ளைகட்காகத் தாய் செய்யுந் தியாகத்தை இத்தகைத்தென்று எழுத்தால் எழுதமுடியாது. சுருங்கக் கூறின் பெண் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவள் என்று கூறலாம். குடும்பக் கொடுமைகளைப் பொறுத்தல், உள்ளதை மற்றவர்கட் கீந்து மகிழ்தல், தனக்கென வாழாது பின்னுலகாக்கும் உயிர்கட்கென வாழ்தல், விருந்தோம்பல், ஏழைகட்குதவல் முதலிய அருங்குணங்கள் பெண்ணிடத்துப் பொலிதல் வெள்ளிடைமலை.

இப்பெருங்குணங்கள் பெண்ணின் தொண்டாகப் பரிணமிக்கின்றன. குணமிலாத்தொண்டு தொண்டாகுங்கொல்? தொண்டிற்கு வேண்டற்பாலது குணம் குணமே. பெண்ணின் பாலுள்ள தாய்மையில் எக்குணமடங்காது? உள்ள குணமெலாம் அதன்கண் அடங்கும். எனவே பெண் குணமலையாகிறாள். பெண்ணைக் குணமலை எனப் போற்றல் எவ்வாற்றானும் பொருந்தும். குணம் முதன்மை பெறல் இயல்பன்றோ?

பெண் பிறவி தாங்கினோரில் குணமிலார் இலையோ என்று சிலர் வினவலாம். உலகில் எதற்கும் புறனடையுண்டு. புறனடையைப் பொதுமையில் புகுத்திப்பேசல் உலக வழக்கன்று. ஈண்டுப் பொதுஅறம்பற்றிப் பெண்ணுலகியல்பை யான் மொழிந்து வருகிறேன். பெண்வடிவந் தாங்கினோருள்ளும் பொறுமை தியாகம் முதலிய குணங்களில்லாப் பேய்களிருக்கலாம். இவர்கள் வடிவத்தால் பெண்மக்களேயன்றித் தாய்மைக்குரிய பெண்மை வாய்க்கப்பெற்ற பெண்மக்களல்ல. இவர்களே புறனடைப் பெண்மக்கள். இப் புறனடை ஒவ்வொன்றிலுமுண்டு. ஒரு மாந்தோப்பை எடுத்துக்கொள்வோம். அத்தோப்பி

ஒள்ள மாமரங்களில் இரண்டொன்று கனி கொடாமலிருக்கலாம். அவ்விரண் டொன்றைக் கொண்டு மாமரங் கனியளிக்கும் இயல்பின தன்று என்று கூறல் நியாயமாகுமோ? பெண் ணுலகிலும் யாண்டாயினும் ஒரு மூலையில் பழுது நேரலாம். அதுகொண்டு அப்பழுது பெண்ணுல கின் இயல்பு என்று கூறல் அறமாமோ? பொதுப் படப் பெண்ணுலகின் இயல்பையே நாம் கவனித் தல் வேண்டும்.

குணங்களை இரண்டு கூறுகப் பிரிக்கலாம். ஒன்று பெண்மைக் குணத்தொகுதி; மற்றொன்று ஆண்மைக் குணத்தொகுதி. பெண்மைக் குணங் களாவன: அழகு அடக்கம் பொறுமை தியாகம் பரநலம் இரக்கம் வீரம் முதலியன. ஆண்மைக் குணங்களாவன: கரடு முரடு அவா பொறாமை தன்னலம் சீற்றம் முதலியன. ஆண்மகன் கரடும் முரடும் சுருளும் திரிவும் பிளவும் நிரம்பிய பட்டைகள் போர்த்த வலிய மரம்போன்றவன். பெண்மகள் அக்கரடு முரடு முதலிய கொடுமை களை ஒடுக்க, அம்மரத்தைச் சுற்றி, மனத்துக் கினிய பசுமை வழங்கும் மெல்லிய பூங்கொடி போன்றவள். இக்குணமிலாப் பெண் பெண்ணு

காள். இக்குணமுள்ள ஆண்மகனும் பெண்மை பெற்றவனாகிறான். ஆண்வடிவில் பெண்மைக் குணம்பெற்ற மக்களே இதுகாறும் உலகில் அன்பர்களென்றும், அடியார்களென்றும், அறிஞர்களென்றும், வீரர்களென்றும், பாவலர்களென்றும் சொல்லப்பட்டு வருகிறார்கள். "ஆண் வடிவம் பெண்மைக் குணம்" என்பது கொண்டு அலி என்று எவருங் கருதலாகாது. அலிகள் ஆண் பெண் என்னும் இருபாலாரிலுமுண்டு. அவர்களைப்பற்றிய பேச்சே ஈண்டு வேண்டாம். அவர்கள் சபிக்கப்பட்டவர்கள். அக்கூட்டம் வேறு. ஈண்டு யான் குறிப்பிடும் ஆண் வடிவில் பெண்மைக்குணம் படைத்த கூட்டம் வேறு. ஆண் பிறவி தாங்கினோர் நல்வழியில் முயன்று பெண்மைக்குணம்பெற முயல்வாராக.

'அகமே புறம்' என்றபடி குணத்துக்கேற்ற முகம் மலரும். நல்லன்பர்கள் அருளாளர்கள் வீரர்கள் பாவலர்கள் முதலியோர் முகங்களில் பெண்மை யொழுகல் காணலாம். பண்டைக்கால அன்பர் அருளாளர் முதலியோர் படங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைக்குமேல் அவர்கள் முகத்தில் பெண்மை பார்க்கலாம். புத்தர், கிறிஸ்து,

திருவள்ளுவர், அப்பர், நம்மாழ்வார் முதலியோர் முகங்கள் பெண்முகங்களாகவே பொலிந்திருத்தல் வேண்டும். பாட்டிற்சிறந்த ஷெல்லி, வீரத்திற் சிறந்த நெப்போலியன், பொறுமையிற் சிறந்த காந்தியடிகள் இவர்கள் திருவுருவப் படங்களை உற்று நோக்குவோம். அவர்கள் முகத்தில் மனதைக்கவரும் பெண்மை என்ன அழகாகப்பொழிகிறது! பெண்மைக்குணம் ஊறும் அகம் பெண்மை முகமாக மலரல் இயல்பு.

பெண்ணீர்மைகளே இறைமை நீர்மைகள் என்பன. ஏனைய அரக்கர் நீர்மைகள். அரக்கர் தன்மையைச் செருக்கப் பெண் தன்மை வேண்டற் பாலது. பெண்ணியல்பு பெறாது கடவுள்நிலைபெறல் இயலாது என்று சுருங்கச் சொல்லி விடலாம். ஞான நிலையில் எவரும் பெண்மையாகும் ஒரு நிலையுண்டு. அதாவது, அழுக்காறு அவா வெகுளி முதலியன கழிந்து பொறுமை அருள் முதலியன படியும் ஒரு நிலை என்க. "ஒளியாம் பரமும் உளதாம்பரமும் - அளியார் சிவகாமி யாகுஞ் சமயம்" என்றார் திருமூலனார். "மெய்யருளாந் தாயுடன் சென்று பின் தாதையைக்கூடி" என்றார் பட்டினத்தடிகளும். கடவுள்

நிலை அடைதற்கும் பெண்ணியல்பு இன்றியமை யாததாயிருக்கிறது.||

பெண்மையின் சிறப்புணர்ந்தே நம்முன்னோர்கள் வாழ்விற்கின்றியமையாத கல்வி திரு ஞானம் முதலிய வற்றையும் பெண்ணெனக் குறித்தார் போலும்! கல்வியைக் கலைமகள் என்றும், திருவைத் திருமகள் என்றும், ஞானத்தைப் பரை யென்றும் நமது நாட்டார் கொண்டது கருதற் பாலது. நாட்டைப் பலவழியிலும் ஓம்புங் காட்டைக் காட்டுக்கன்னி - வனதேவதை - என்று கொண்டதும், பல்லுயிர்களைத் தாங்கும் நாட்டைத் தாய் (வந்தேமாதரம்) என்று வழுத்துவதும் உணரற்பாலன. எல்லாவற்றிற்கும் மேலாக விளங்குங் கடவுளையும் நம்மவர்கள் பெண்ணாகவே பெரிதும் போற்றுகிறார்கள். இந்திய நாட்டில் கடவுளைப் பெண்ணாகப் போற்றுவோர் தொகையே பெருகி நிற்கும். முழுமுதற் பொருள் பெண் ஆண் வடிவாயிருப்பினும் அதனிடத்து அருளுக்குரிய பெண் தன்மையேசிறந்து விளங்குதலை அருள் நிலை யெய்திய பெரியோர் நமக்கு அறிவுறுத்திப் போந்துள்ளார். "மூவே ழுலகுக்குந் தாயே" என்றும் "அம்மையெனக்

கருளியவா றூர்பெறுவார் அச்சோவே" என்றும் மாணிக்கவாசகனூர் அருளியிருத்தல் காண்க. உலகில் உயரிய அன்புப் பொருளெலாம் பெண்ணாகவே பேசப்படல் எவரும் அறிந்தவொன்று. இத்துணைச் சிறப்புவாய்ந்த பெண்மையின் பருமையாம் பெண்ணின் முதன்மையைப் பேசவும் வேண்டுமோ?

பெண்ணின் முதன்மை நிறுவப் பலப்பல காரணங்களுண்டு. அவைகளை ஈண்டுவிரிக்கிற் பெருகும். எதையும் ஆய்ந்து உண்மைகண்ட பின்னரே அவ்வுண்மையை உலகிற் கறிவுறுத்தும் மேல் நாட்டுப் பூதபௌதிக ஞானிகளிற் பலர் பெண்தோற்றத்தையே முதல் தோற்றமாகக் கொண்டுள்ளார். இழிந்த பிராணிகளிற் சில சின்னுள் பெண்ணாகவும் சின்னுள் ஆணாகவும் மாறல் கண்கூடு. பையாலஜி என்னும் இயற்கை நூல்களைப் பார்க்க. உலகில் தொன்மையில் பெண் ஆண் வேற்றுமை அரும்புதற்கு முன்னர் முதல் முதல் இயற்கையில் பெண்ணுருப்பே அரும்பியிருத்தல் வேண்டுமென்பது இயற்கை ஞானிகள் ஆராய்ச்சியிற் போந்த உண்மை. இவ்வுண்மைக்கு நமது

நாட்டவருட் சிலர் கண்ட உண்மை அரண் செய்கிறது.

தமிழ்நாட்டிற் பிறந்த மணிகளுள் திருமூலர் என்னுங் குருமணி பெண்ணின் முதன்மையைப் பலவிடங்களில் விரித்துப்பேசியிருத்தல் எனதுள்ளத்தைக் கவர்கிறது. அவர் அருளிய மொழிகளுள் சில வருமாறு:—

பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதைமை
பெண்ணிடை யாணும் பிறந்து கிடந்தது
பெண்ணுடை யாணென் பிறப்பறிந் தீர்க்கின்ற
பெண்ணுடை யாணிடைப் பேச்சற்ற வாறே.

காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனும் மாயனும்
காணுந் தலைவிநற் காரணி காணே.

பைங்கொடி யாளும் பரம னிருந்திடத்
திண்கொடி யாகத் திகழ்தரு சோதியாம்
விண்கொடி யாகி விளங்கி வருதலால்
பெண்கொடி யாக நடந்த துலகே.

இயற்கையில் முதல் முதல் அரும்பியது பெண்ணுறுப்பென்பது பூதபௌதிக ஞானிகள் கொள்கை. அவ்வியற்கைக்குக் காரணமாக உள்ள சக்

திக்கு முதன்மை நமது நாட்டவர் கூறுகிறார். முன்னையது சடத்தைப்பற்றிய ஆராய்ச்சியினின் றும் எழுந்த உண்மை. பின்னையது சித்தைப்பற் றிய ஆராய்ச்சியினின்றும் எழுந்த உண்மை. சித் எவ்வழி அவ்வழி சடமியங்குமாகலின் அவ்வுண் மைக்கு இவ்வுண்மை அரண் செய்தல்காண்க. இயற்கையிலும் இறைமையிலும் முதன்மை பெற் றுள்ள பெண்ணிற்கு முதன்மை எவரும் வழங்க வேண்டுவதில்லை. அம்முதன்மை இயல்பாக அமைந்து கிடக்கிறது. அம்முதன்மை உலகில் பொதுவாகச் சில விடங்களிலும் சிறப்பாக நமது நாட்டிலும் மறக்கப்பட்டிருக்கிறது.

அம்மறப்புள்ள விடங்களில் கல்வி திரு பொலிவு அன்பு உரிமை வாய்மை தெய்வமணம் முதலியன அருகி நிற்கும். இயற்கை அவ்வுலகைப் பல வழியில் ஒறுத்தே தீரும். பெண்ணின் முதன்மை மறக்கப்பட்ட இடம் நரகக்குழி யொத்தது என்று சுருங்கக் கூறுவேன். அழகு அடக்கம் இரக்கம் இன்பம் முதலியன முதன்மை பெறு இடம், நரக மல்லாது பின்னை என்னை? மனத்தைக் கவரும் அழகரும்பி, நல்வாழ்விற்கு அடிகோலும் அடக் கம் மலர்ந்து, பொறுமை தியாகம் தன்னலமறுப்பு,

இரக்கம் முதலிய செவ்விய நீர்மைகட்கு அடிப் படையாயுள்ள அன்பு காய்த்து, பின்னுலகாக்குந் தாய்மைத்தொண்டு கனிந்து, இன்ப வாழ்வெனுந் தேன் பிலிற்றும் பெண் கொடியின் முதன்மை யையா மறப்பது ? மறுப்பது ?

நம்முன்னோர்கள் கடவுளின் பெண்கூற்றை முன்னர்க் குறித்தே பின்னர் ஆண்கூற்றைக் குறிப்பது வழக்கம். பார்வதி பாகன், லட்சுமி நாராயணன், வள்ளி மணாளன் முதலிய வழக்கு களை நோக்குக. உலகம் ஒருபாதி பெண்ணும் மற்றொருபாதி ஆணுமாக ஆக்கப்பட்டிருப்பினும் பெண்ணுலகின் பெருமை நோக்கித் தொன்மை யுலகம் அதற்கு முதன்மை வழங்கிற்று. பெண் ணையே தேவி என்று நம்மவர்கள் அழைக்கிறார் கள். ஆணைத் தேவன் என்று சொல்லும் வழக்கம் பெரிதும் நாட்டில் இல்லை. இவ்வாறு பெண்ணிற்கு முதன்மை வழங்கியநாடு இதுபோழ்து அம்முதன் மை மறுக்கும் நிலை எய்தியிருக்கிறது. தாய்மை யுடைய பெண்ணிற்கு முதன்மை வழங்க மறுப் பது அநாகரிகம். "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையு மாய் " என்றும், " அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றும், "சத்தியாய்ச் சிவமாகி" என்

றும் பெரியோர்கள் முதன்மை பெண்ணுக்கு வழங்கியிருத்தல் காண்க. பெண் வயிற்றிற்பிறந்த நாம் பெண்ணை முதலாகக் கொள்வோமாக.

யான் பெண்ணின் வயிற்றில் தோன்றினேன்; பெண்ணுடன் பிறந்தேன்; பெண்ணுடன் வாழ்ந்தேன். என் வாழ்விற்கு நாடோறுந் துணை புரியும் இயற்கை பெண்ணாகவே காட்சியளிக்கிறாள்; யான் தொழும் அன்புத்தெய்வமும் பெண்ணாகவே யிருக்கிறது; எனதுள்ளத்துள்ள பெண்மை அருளைச்சொரிகிறது; யான் பேசும் மொழி எனக்குப் பெண்ணின்பம் நல்குகிறது. எல்லாம் பெண்மயமாக என்னைச் சூழ்ந்து என்னுடலுக்கும் உயிருக்கும் நலஞ் செய்கின்றன. இத்தகைப் பெண் தெய்வத்தை முதன்மைப் பொருளாகப் போற்றுகிறேன். பெண்ணே முதன்மை யுடையாள்; அத்தாயை வணங்குகிறேன்; வாழ்த்துகிறேன். வந்தேமாதரம்.

"சர்வம் சக்தி மயம் ஜகத்"

௬. பெண்ணுரிமை

“ மாதர்தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம் ”

—பாரதியார்

எல்லாவற்றிலும் முதன்மை பெற்று விளங்கும் பெண்ணிற்கு உரிமை வழங்கவேண்டுமா வேண்டாமா என்னும் ஆராய்ச்சியும் இவ்வுலகில் சிலவிடங்களில் நடைபெற்று வருகிறது. உரிமை என்பது ஒருவர் கொடுப்பதுமன்று ; மற்றொருவர் வாங்குவதுமன்று. அஃது எவரிடத்தும் எல்லாவிடத்தும் இயல்பாயமைந்துகிடப்பது. சிலர் தமக்குள்ள வன்மையால் பிறர் உரிமையை மறித்தும் பறித்தும் வருகிறார். ஒருவர் உரிமைக்கு மற்றொருவர் கேடு சூழ்வதினுங் கொடிய பாவம் பிறிதொன்றிருப்பதாகத் தெரியவில்லை. உரிமையாவது உயிர்கட்குக் கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு பெரும் இயற்கைக் கொடை. தன்னைப்போலவே உயிர்களும் எவ்வித கட்டுப்பாடுமின்றி உலகில் வாழவேண்டுமென்பது கடவுள் நோக்கம். அவ்வருள் நோக்கத்துக்கு மாறுபட்டுப் பிறர் உரிமை தடிவோர், கடவுள் உண்மையில்

உறுதியுடையோராகார். எவ்வுயிர் உரிமைக்கும் எவருங்கேடு நிகழ்த்தலாகாதென்பது பொது அறம். அங்ஙனமாக மன்பதைத்தோற்ற வளர்ச்சிக்கெனக் கடவுளருளால் தாய்மை பெற்ற மென்மைப்பெண்மகளின் உரிமையை, வன்மைஆண்மகன் சிலவிடங்களில் மறித்தும் பறித்துமிருக்கிறான்! இயற்கை நியதிக்கு முரணி நின்று பெண்ணுரிமைகடிந்து பெண்ணுக்கு எவ்வளவில் உரிமை வழங்கலாம் எவ்வளவில் வழங்கக்கூடாது என்னும் ஆராய்ச்சியில் தலைப்படல் எத்தகை அறியாமை! பெண்ணின் உரிமை கெடுக்கவும் வழங்கவும் இவர் யாவர்? அவ்வுரிமை கடிந்த மறத்துக்குக் கழுவாய் தேடவேண்டுவது இவர் கடமை என்று யான் கூறுவேன்.

பெண்ணுரிமைக்குக் கேடு எவ்வுலகில் விளைந்திருக்கிறது? அஃறிணையுலகிலா? ஆறறிவுடைய மக்கள் உலகிலா? வெட்கம்! வெட்கம்! புல் செடி கொடிகளில் ஆணினம் தன் தன் பெண்ணினத்தின் உரிமை தகைந்திருக்கிறதா? ஆண்பறவை பெண்பறவையின் உரிமை கெடுத்திருக்கிறதா? எவ்விலங்காதல் தனது பெண்ணினத்தின் உரிமை உடைத்திருக்கிறதா? அஃறிணை உலகில் பெண்

ணுரிமைக்குப் பழுது நிகழ்ந்தில்லை. பாழான ஆறறிவுடைய உயர்திணை யுலகிலேயே அவ்வுரிமைக்குப் பழுது நேர்ந்திருக்கிறது.

அப்பழுது தொன்று தொட்டு இடையீடின்றி நிலவி வருவதன்று. சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே அப்பழுது பெண்ணுலகில் நுழைந்தது. இதற்குக் காரணம் ஆணுலகின் தன்னலமேயாகும். ஆண்மகன் பெண்மகளைத் தனக்குரிய காமப்பொருளாகவும், பணியாளாகவுங் கொண்டநாள் தொட்டுப் பெண்மகள் உரிமை யிழக்கலானாள். வலிய ஆணின்கொடுமை பெண்ணின் உரிமையைப் பறிமுதல் செய்தது. வலிய ஆண்முன் மெலிய பெண் என் செய்வாள்?

பெண்ணுரிமை, பொதுவாக உலகில் பல விடங்களிலும், சிறப்பாகச் சிலவிடங்களிலும் பின்னை நாளில் கடியப்பட்டது. பெண்ணுரிமையுள்ள நாடுகள் செழுமை யுற்றிருப்பதும், அவ்வுரிமை யில்லா நாடுகள் செழுமையற்றிருப்பதுங் கண்கூடு. பெண் நாட்டின் தாயாகலான் அவள் அடிமைப்படும் இடம் அடிமைப்படல் இயல்பு.

மேல்நாட்டார் தாம் பெண்ணுரிமை தடியாமல் வாழ்தலால் தாம் நாகரிக நுட்பம் உணர்ந்தவ

ரென்றும், கீழ்நாட்டார் பெண்ணுரிமை கடிந்திருப்பதால் அவர் நாகரிக நுட்பம் உணராதாரென்றுங் கருதுகிறார். ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டின் பெண்மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறது என்பது எவருங் கொள்ளத்தக்க உண்மை. பெண்மக்கள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, இடுக்கணுமின்றிப் பிறப்புரிமை யின்பத்தை எங்கே நுகர்கிறார்களோ அங்கேயுள்ள ஆண்மக்கள் நாகரிக நுட்பமுணர்ந்தவர்களாகிறார்கள். அந்நாடே நாகரிகம் பெற்ற நாடாகும்.

கீழ்நாட்டின் பழைய வரலாற்றை நோக்குழிப் பெண்மக்கள் அடிமைவாழ்வு நடாத்தியதாகத் தெரியவில்லை. கீழ்நாட்டுச் சரித்திரங்களில் இவ்வுண்மை காணலாம்.

எகிப்து பாபிலோன் முதலியவிடங்களில் பண்டை நாளில் பெண்மக்கள் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள் என்று தெரியவில்லை. முதல் முதல் ஒரு பெண்பால் அரசு செலுத்திய இடம் எகிப்து என்று சொல்லவேண்டுவதில்லை. சீனத்தில் ஹதாசு, செமிராமிஸ் என்பவர்கள் ஆட்சி நடாத்தி யிருக்கிறார்கள். அணித்தே ஒரு மஹாராணியே சீனத்தின் சக்கரவர்த்தினியாயிருந்தாள். இந்தியாவில்

ரிஜியா, நூர்ஜஹான் முதலியோர் ஆட்சிகள் நடந்தன. சிரியா நகரங்களை அராபியர் பற்றி வந்த போது காலஸ் ஓபீரா என்னும் அராபிய பெண் மணிகள் நாட்டியவீரம் சரித்திரத்திற் காணலாம்.

நபிநாயகத்தின் அருந்தவப் புதல்வியார் பெருமைக்கு ஓர் உறையுளாக இருக்கின்றார். விரிவு அவர் வரலாற்றிற் காண்க. 'பாக்தாத் முதலிய விடங்களிலிருந்த சில கலிபாக்கள் தங்கள் மனைவி மார்களின் நினைவுக்குறியாகப் பல அழகிய நிலையங்கள் எழுப்பினார்கள். ஷாஜஹான் கட்டிய தாஜ் மஹால் அவர் மனைவியின் அன்பிற்கோர் அறிகுறியாக நிற்கிறது.' இவ்வன்புச் செயல்கள் பெண்மக்களிடத்துள்ள மதிப்பைப் புலப்படுத்துகின்றன. முஸ்லீம் பெண்மக்கள் பிறந்தவிடத்தில் சொத்துரிமை பெற்றிருப்பதுங் கவனிக்கத்தக்கது.

கீழ்நாட்டுப் பெண்மணிகளில் கல்வித்துறையில் பேர்பெற்று விளங்கினவர் பலர். ஜப்பானிய இலக்கியங்களிற் சிறந்த இரண்டு நூல்களின் ஆசிரியன் மார்கள் பெண்மக்களே. பாக்தாத் கார்டோவா முதலிய விடங்களில் பெண்மக்கள் கல்லூரிகளில் சென்று பயின்று வந்ததாகச் சொல்லப்படுகிறது. பெண்மக்கள் பற்பல கல்வித் துறைகளிலும் வல்ல

வர்களாயிருந்தார்கள். மீராபாய், ஜிபன்னிஸா, சைஸ், போதோனி முதலிய புகழ்பெற்ற பெண் கவிகளின் சிறப்பை என்னென்று கூறுவது?

கீழ்நாட்டுப் பெண்மக்கள் பெரிதும் தாய்மையையும், அறவொழுக்கத்தையும், சமய வாழ்வையும், தொண்டையுமே தங்களுக்குரிய வாழ்வுச் செல்வமாகக் கொண்டிருந்தார்கள். ஆண் மக்களிடத்தில் போராடுவதும், அவர்களை வழி மறித்துப் புடைப்பதும், அவர்கள் பதவிகளைப் பற்றுவதும் தங்களுக்குரிய வாழ்வென்று அவர்கள் கொண்டார்களில்லை. ஆண்மக்களுடன் போராடுவதுமட்டும் பெண்ணுரிமை யாகாது. பெண் ஆணுடன் கலந்து வாழப் பிறப்பிக்கப்பட்டாளன்றி ஆணுடன் போர்புரிந்து வாழ்வைக் குலைத்து இடர்ப்படப் பிறப்பிக்கப்பட்டாளில்லை. இது பற்றிப் பின்னுங் கூறுவன்.

கீழ்நாடுகளிற் சிறந்த நமது இந்திய நாட்டின் மீது சிறிது கவனஞ் செலுத்துவோம். பண்டை நாளில் இந்திய நாட்டுப் பெண்மக்கள் கல்வியாளர்களாய், வீரத்தாய்மார்களாய், அரசிகளாய், எவ்வினையும் ஆற்றவல்லவர்களாயிருந்தார்கள். அந் நாளில் நாடு உற்றிருந்த செழுமைக்கோரளவில்லை.

இந்திய நாட்டின் செழுமையும் பெருமையும் பிறவும் நூல்களில் சொல்லப்படுகின்றன. நாடு அச்செழிய நிலையுற்றிருந்த நாள் எந்நாள்? பெண்ணுரிமை பெற்றிருந்த நாள் என்று தயங்காது கூறுவேன். பெண்ணுரிமை பறிக்கப் பெற்ற நாள் தொட்டு நாடும் உரிமையிழந்து அடிமைக்குழியில் வீழ்ந்து வருந்துகிறது.

நமது நாட்டின் இப்போதைய சிறுமைக்குக் கூறப்படுங் காரணங்களுள் யான் மூன்றைச் சிறப்பாக எடுத்துக்கூறுவதுவழக்கம். அவை (க) பெண்ணுரிமை தடிந்தது (உ) பிறப்பால் வகுப்பு வகுத்தது (ங) மக்களுள் தீண்டாமை கொண்டது. இம்மூன்றனுள் பெண்ணுரிமை தடிந்ததைத் தலையாய காரணமாகவுங் கொள்ளலாம். பெண், நாட்டின் ஒரு பாதியாகலின் அவள் உரிமைக்கேட்டால் நாடு எங்ஙனம் நல்வாழ்வு பெறக்கூடும்? மனிதனது ஒரு பாதி வாயுவால் இயக்கமின்றி வீழ்ந்தால் அவன் எதற்குப் பயன்படுவான்? பெண்ணுரிமையில்லா நாடு பக்கவாயு உடையானையொத்தது என்று சொல்லவேண்டுவதில்லை.

பண்டைக்காலத்தில் நமது நாட்டுப் பெண்மக்கள் எல்லாத்துறைகளிலும் உரிமைபெற்றிருந்தார்

கள் என்பதற்குச் சான்றுகள் பல உள. வேதகால உலகின்மீதும் பழந்தமிழர்கால உலகின்மீதும் நமது கருத்தைச் செலுத்துவமேல் அக்காலப் பெண்மக்கள்நிலை இனிது புலனாகும். இடைக் காலத்திலும் பெண்மக்கள் சிறுமையுற்றிருந்த தாகத் தெரியவில்லை. பிற்காலத்திலேயே அதாவது ஸ்மிருதி காலத்தில் நமது நாட்டில் பெண் ணுரிமை குலைக்கப்பட்டது.

வேதங்களில் மிகத் தொன்மையது ரிக்வேதம். அதன்கண் பெண்மக்களால் யாக்கப்பட்ட பாக் கள் காணலாம். அத்திரி ரிஷியின் வழித்தோன் றிய விசுவாவரை, அகத்தியரின் காதல் மனைவி யார் லோபாமுத்திரை, ஆம்ப்ரி முனிவரின் அருமைப் புதல்வியார் வாக்தேவியார் முதலியோர் யாத்த பாடல்கள் அவ்வேதத்தில் பொலிகின்றன. மைத்ரேயி, கார்க்கி, தேவபூதி முதலிய பெண் மணிகளைப்பற்றி ஈண்டு விரித்துக்கூற வேண்டுவ தில்லை. மைத்ரேயி என்பார் மித்ரர் என்னும் பெரும் புலவரின் அருந்தவப் புதல்வியார். " தந்தை மகற்காற்று நன்றி அவையத்து - முந்தி யிருப்பச் செயல்" என்றார் வள்ளுவனார். " மக னுக்கு" என்பது கொண்டு மகட்கு அன்று

என்று பொருள் கூறுவது பிற்கால வழக்கு. பொதுவாக உலகிற்கு ஓர் அறம் உரைக்கும் வேளையில் 'ஒருவன்' 'மனிதன்' என்னும் ஆண்பாற் சொற்களை ஆளுதல் தொன்று தொட்டவழக்கம். இவ்வழக்கு எல்லா மொழிகளிலுமுண்டு. திருவள்ளுவர் ஈண்டு மகற்கு என்றது பொதுவாக மக்களைக் குறிப்ப தென்க. இது நிற்க. தந்தை பிள்ளைக்கு நல்க வேண்டிய செல்வம் கல்விச் செல்வமேயாகும். பண்டிதர் மித்ரரும் தமது புதல்வியாரைப் பெரும் பண்டிதையாராக்கினர். இப்பண்டிதையார் பொருட் செல்வத்தின் புன்மையையும் அருட் செல்வத்தின் மேன்மையையும் பற்றித் தமது கணவனார் மகரிஷி யாக்ஞவல்கியருடன் வாதித்த பெரு மொழிகள் ஒரு சிறந்த உபநிஷதத்தில் ஒளிர்கின்றன. அப்பண்டிதையார் ஆசிரியராயிருந்து ஒரு வேதபாடசாலையை நடாத்திய தாகவுஞ் சொல்லப்படுகிறது.

இப்பெருமாட்டியாரின் நெருங்கிய உறவினராய கார்க்கியைப்பற்றித் தெரியாத வடமொழிப் புலவரிரார். கார்க்கி ஒருபோது ஜனகன் கழகத்தில் யாக்ஞவல்கியருடன் வாதம் புரிந்து "தர்க்க அரசி" என்னும் பெயர் பெற்றதாகத் தெரியவருகிறது.

தேவபூதி என்பார் சாங்கிய மதாச்சாரியரா கிய கபிலர் என்னும் பெரியாரை ஈன்ற தாயார். தாயார் தேவபூதியினிடத்திலேயே புதல்வர் கபிலர் கல்வி பயின்று, அப்பயிற்சியின் பயனுகச் சாங்கிய நூல் இயற்றி ஒரு சமயங் காணுந் திறனும் பெற்றுர். இப்பெருமைக்குக் காரணரா யிருந்த தேவபூதியின் கல்விச் சிறப்பை என்னென்று கூறுவது ?

வேதகாலப் பெண்மக்கள் நிலை குறித்துப் பல படப் பேசவேண்டுவதில்லை. அக்கால வழக்க மொன்று ஈண்டுக் குறிப்பிடுவது சாலும். அந் நாளில் தலைவன் வேள்வி செய்யும்போது தலைவி யும் உடனிருப்பாள். மந்திரத்திலாதல் சுரத்திலா தல் தலைவன் பிழை நிகழ்த்துவனேல், உடனே திருத்தமாகத் தலைவி அதைச்சொல்லி ஒழுங்கு செய்வது வழக்கம். இதனுல் ஆண்மக்களைப் போலவே பெண்மக்களும் கல்வியிலும் வேதப் பயிற்சியிலும் சிறந்து விளங்கினுர்கள் என்பது தெற்றெனத் தெரிகிறது.

வேதகாலங் கடந்த பன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் பெண்மக்கள் கல்வித் துறையிலும் பிற துறைகளிலும் உரிமை பெற்றிருந்தார்கள்.

சங்கரர்க்கும் மிசிரர்க்கும் நிகழ்ந்த விவாதத்தில் நடுநிலைத் தலைமை வகிக்கும் பேறு பெற்ற பாரதியும், கணிதத்திற் சிறந்த லீலாவதியும், வான சாஸ்திரத்தில் பேர் பெற்ற கானையும், மணஞ்செய்தற்குத் தன்னையொத்த புலமையுடைய நாயகன் வாய்க்கப்பெறாது கன்னிகையாகவே காலங் கழித்த சுலபையும், ஹுவான்த்ஸாங் என்னுஞ் சீனர் நமது நாடு போந்து சுற்றியபோது எக்கட்டுப்பாடுமின்றிப் புலவர்களோடு பேசிக்கொண்டிருந்ததாக அவர் நூலில் குறிக்கப்பெற்றுள்ள இராஜேசுவரியும் பிறரும் அக்காலப் பண்டிதைமார்களில் குறிக்கத்தக்கவர்கள்.

இதிகாசங்களிற் போந்துள்ள பெண்மக்கள் வரலாறுகளும் அவர்களது நிலையைப் புலப்படுத்தும். சீதையின் நிறையும், பிரபாவதி சபரி இவர்களின் தவமும், குந்தி தனது புதல்வர்கட்கு ஊக்கமூட்டிச் சோர்வுகுலைத்து வீரமெழுப்பியதும், காந்தாரி அரச அவையேறி அரசியல் அறிவுறுத்தியதும், திரௌபதியின் அருஞ்செயல்களும் அக்காலத்திய பெண்மணிகளின் உரிமைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

புத்தர் காலத்திலும் பெண்ணுரிமைக்குக் கேடு நிகழவில்லை. அந்நாளில் ஆண்மக்களைப் போலவே பெண்மக்களும் கல்விபயின்று அறம் வளர்த்தார்கள். அசோகன் காலத்தில் சில பெண்மணிகள் உலகில் பலநாடுகள்போந்து அறம் வளர்த்ததாகச் சரித்திரஞ் சொல்கிறது.

இன்னுஞ் சரித்திரத்தில் சில பெண்மக்கள் அருஞ் செயல்கள் பேசப்படுகின்றன. அரசிகளாகச் சிலர் இருந்தனர்; வீரத்தாய்மார்களாகச் சிலர் இருந்தனர். அறுநூறு எழுநூறு ஆண்டுகட்கு முன்னர் நமது நாட்டில் வதிந்த இராசபுத்திரிகள் போர்முகத்தில் காட்டிய வீரச்செயல்கள் சரித்திரத்தில் பதிந்து கிடக்கின்றன. அச்செயல்களைச் சரித்திரங்களிற்காண்க. அவ்வீரச் செயல்கள் பழைய பெண்மக்கள் வழி வழி வந்து சுருங்கிநின்ற எச்சமாகும். எனவே வேதகாலத்திலும் இடைக்காலத்திலும் நமது நாட்டுப்பெண்மக்கள் உரிமையிழந்து நின்றதாகத் தெரியவில்லை.

பழந்தமிழ்நாட்டுப் பெண்மக்கள்மீது சிறிது கருத்துச்செலுத்துவோம். பழந்தமிழ்நாடு பெண்மக்கள் உரிமைக்கு ஓர் இலக்கியம் என்று கூறல் உயர்வு நவிற்சியாகாது. பழந்தமிழ் நூல்களைத் துரு

வித் துருவி ஆராய்ந்தால் அவைகளில் யாண்டும் பெண்ணுரிமை காணலாம். 'பெண் தாழ்ந்தவள், குறையுடையாள், அடிமை' என்னும் உணர்வே அற்றைநாளி லில்லை. தமிழ் நூல்களில் தலை சிறந்து விளங்கும் அகப்பொருள் நூல்களின் உள் ளக்கிடக்கை என்னை? இன்பமன்றோ? உரிமை யில்லாவிடத்தில் இன்பநிகழ்ச்சி ஏது? உரிமையின் ஒழுக்கன்றோ இன்பம்? இன்பநுகர்ச்சிக்கு இரு பாலாரிடத்தும் ஒத்த உரிமை இயல்புகள் இருத் தல் வேண்டும். ஒத்த உரிமை இயல்புகளே பெரி தும் பழந் தமிழ்நாட்டு ஆண் பெண் வாழ்வாக அமைந்திருந்தன. "ஒத்த நலனும் ஒத்தகுணனும் ஒத்தகல்வியு முடைய ஒருவனும் ஒருத்தியும்" என்றும், தலைவன் தலைவியர் அன்பு நிலையை "ஓராவிற்கு இருகோடு பூத்தா லென்ன" என்றும் நக்கீரனார் நவின்றிருத்தல் காண்க. பழந் தமிழ் நாட்டு மணம் களவுமணமாக விருந்ததும் ஈண்டுக் கருதற் பாற்று. பெண்மகள் 'தனக்கினிய தலை வனைத் தானே தெரிந் தெடுத்து வந்த வழக்க மொன்றே அந்நாளைய பெண்ணுரிமைக்குப் போ தியசான்றாக நிற்கிறது.

'ஒத்தகல்வி' என்னுங் குறிப்பு அக்காலப் பெண் கல்விச் சிறப்பைத் தெரிவிக்கிறது. பழந் தமிழ்நாடு ஆண் புலவர்களோடு பெண் புலவர்களையும் அணிந்திருந்தது. வெள்ளி வீதியார், ஔவையார், பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர், எயினிமார் முதலியோர் அந்நாளில் தமிழ் வளர்த்த பெண்மணிகள். இவர்கள் பாக்களைப் புறநானூறு முதலிய நூல்களிற் காண்க.

அப்பாடல்களில் எளிய குறுகிய பாடல்கள் சில வருமாறு :—

" களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெதிர்ந்
தெம்முளும் உளனொரு பொருநன் வைகல்
எண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே."

" யாமொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை
என்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே."

" ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்

தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
யருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவவன் றாளே.''

—ஔவையார்.

'' அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேம் எங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார் யாம் எந்தையு மிலமே.''

—பாரிமகளிர்.

இப்பாடல்கள் பேச்சுப்போல் இருத்தல் கவனிக்கத்தக்கது. பழந்தமிழ்ப் பெண்மக்கள் பேச்சே பாடல் என்க.

கோவலன் தன்னைவிடுத்துப் பிரிந்தபொழுது மாதவி, மீண்டும் அவனைக் கொணரவேண்டி, எழுத்தாணியைச் செம்பஞ்சின் குழம்பிற் றோய்த்துத் தாழைபின் வெள்ளிய தோட்டிலே திரு

முகந்தீட்டி, அவன்பாற் செலுத்தியதாகச் சிலப் பதிகாரஞ் செப்புகிறது.

“ திருமுகம் போக்குஞ் செவ்விய ளாகி
அலத்தகக் கொழுஞ்சே றளைஇ அயலது
பித்திகைக் கொழுமுகை யாணிகைக் கொண்டு
*   *   *   *
எண்ணெண் கலையும் இசைந்துடன் போகப்
பண்ணுந் திறனும் புறங்கூறு நாவில்
தளைவா யவிழ்ந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்துரை யெழுதி
*   *   *   *”

எனவரூஉம் இளங்கோவடிகள் இன்னுரைகாண்க.

நாலடியாரென்னும் நூலில்,

“ குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு.”

எனவரூஉஞ் செய்யுட்பொருளை உற்றுநோக்குக. குஞ்சி, கொடுந்தானைக்கோடு, மஞ்சள் - இவைகள் பெண்மக்களைக் குறிப்பன என்று எவருங் கூறுவர். நாலடியார் காலத்தில் பெண்கல்வி இயல்பாயிருந்தமை உன்னற்பாலது. இக்கருத்தைச் சிறுபஞ்சமூலமும்,

“ மயிர்வனப்பும் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.”

என்று வெளியிட்டிருத்தல் காண்க.

‘கல்வியிற் பெரியன் கம்பன்’ என்னும் பெயர் தாங்கிய கவிமன்னனும் தனது இராமாயணத்தில், நாட்டுப்படலத்தில்,

“பெருந் தடங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே”

என்று பாடியிருத்தல் காண்க. கம்பன் கோசலை நாட்டைக் குறித்துப் பாடினும் அவன் கோசலை நாட்டை நேரிற்கண்டவனல்லன். அவன் காலத்துக் கோசலமும் இராமன் காலத்துக் கோசலமும் இடையில் எவ்வளவோ வேற்றுமையுற்றிருக்கும். கம்பன் தமிழ் நாட்டில் தான்கண்ட காட்சியைக் கோசலத்தில் அமைத்துப் பாடினனென்க.

நாயன்மார் ஆழ்வார் காலத்திலும் பெண்கல்வி தமிழ்நாட்டில் நிலவியிருந்ததாகத் தெரியவருகிறது. காரைக்கால் அம்மையாரும் ஆண்டாள்

அம்மையாரும் பாடிய அருட்பாடல்கள் நம்மெதிரில் நிற்கின்றன. அவர்கள் பாக்களில் இரண்டொன்று வருமாறு :—

" இடர்களை யாரேனும் எமக்கிரங் காரேனும்
படருநெறி பணியா ரேனுஞ்—சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு."

" *அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது." [கேன்

—காரைக்காலம்மையார்.

" வெள்ளை விளிசங்கு இடங்கையில் கொண்ட
விமலன் எனக்கு ருக் காட்டான்
உள்ளம் புகுந்து என்னை நைவித்து
நாளும் உயிர்ப்பெய்து கூத்தாட்டுக் காணும்
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்
களித்திசை பாடுங் குயிலே
மெள்ள விருந்துமிழற்றி மிழற்றாதென்
வேங்க டவன் வரக்கூவாய் "

—ஆண்டாள்.

*God is unknown and unknowable—*Herbert Spencer.*

இப்பெண்மக்கள் பாட்டிற்கிரங்கி ஆண்டவன் அருள் செய்யா தொழிந்தனனோ? ஆண்டவனுக்கு ஆண் பாட்டாயிருந்தாலென்ன? பெண் பாட்டாயிருந்தாலென்ன? அவனுக்கு வேண்டற்பாலது கல்வியின் பயனாகிய அன்பே. காரைக்காலம்மையாரினதும் ஆண்டாள் அம்மையாரினதும் அன்புநிலையை அளந்து கூறற்கு யான் அருகனல்லன். அத்தகை அன்புக் கல்விமணிகளைப் பெற்றது நந்தமிழ் நாடு.

பண்டைத் தமிழ் நாட்டில் பெண்ணுரிமையும் அவ்வுரிமைக் குயிரனைய கல்வியும் பிறவுமிருந்தமையான், அந்நாளைய பெண்மக்கள் வீரத் தாய்மார்களாகவும், வேறு பல அருஞ்செயல் நிகழ்த்தும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவு மிருந்தார்கள். பழந்தமிழ் நாட்டுப் பெண்மக்கள் வீரச்செயல்களும் பிறவும் போற்றற்குரியன. அவைகளுள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுகிறேன்.

நரம்புதோல் வற்றிய முதியோள் ஒருத்தியின் ஒருபுதல்வன் போர்க்கோலந் தாங்கி அமர்க்களஞ் சென்றனன். அவன் போரிடைப் புறமுதுகிட்டுப்பட்டான் என்று பலர் போந்து அம்முதியோள்பால் அறைந்தனர். அது கேட்ட

அன்னை, தனது முதுமையைச் சிறிதுங் கருதாது, வாள் தாங்கி "இவர் கூற்று மெய்யாயின் இவ் வாளால் அவனுக்குப் பாலூட்டிய எனது மார்பை அறுப்பேன்" என்று எழுந்து, போர்க்களம் புகுந்து, மைந்தனைத் தேடி, ஆண்டுக் குவிந்து கிடந்த பிணங்களை வாளால் பெயர்த்துப் பெயர்த்துப் பார்த்தனள். அங்கே தன்னொருமகன் மருமத்திடை ஊறுதாங்கி, இறந்துபட் டிருத்தலைக் கண்டு, அத்தாய் அவனை ஈன்ற பொழுதினும் பெரிதுவந்தனள். இவளல்லளோ வீரத்தாய்?

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தனன் ஆயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

—புறநானூறு.

மற்றுமொரு பெண்மணியின் கொழுநன் போர்க்களத்தில் மறப்போர் புரிந்து இன்னுயிர் துறந்தான். அவன் உயிர் துறந்த மறுநாள் மாற்றார்

செருப்பறை கேட்டு அப்பெண்மகள் தன்னொரு மகனை அழைத்துத் தலைமயிர் நீவிப் போருடை புனைந்து வேல் கைத்தந்து "போர்க்களம் போய் வருக" என்று மகிழ்ச்சியோடு வழி கூட்டியனுப்பினாள். இவளது வீரம் கொழுநன் பிரிவையும் மறக்கச் செய்தது.

கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேனா ளுற்றசெரு விற்கிவ டன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்றசெரு விற்கிவள் கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே.

—புறநானூறு.

கண்ணகி என்னுங் கற்புக் கடவுளைப் பற்றிக் கேள்வியுறாத தமிழர் அரியர். அப்பெருமாட்டியார் வீரச்செயலை விளம்பவும் வேண்டுமோ? கண்ணகியும் அவளது ஆருயிர்த் தலைவன் கோவலனும் பிறந்த சோழநாடு நீத்துப் பாண்டிநாடு

போந்து, ஆண்டு வாணிபஞ் செய்யவேண்டிக் கண்ணகியின் காற்சிலம்பை விற்கக் கோவலன் சென்றபோது, ஆங்குக் களவுபோன பாண்டிமா தேவியார் சிலம்பே அச்சிலம்பென்று கோவலன்மீது பழிசுமத்தி, மன்னன் ஆணைப்படி அவனைக் கொலைஞர்கள் கொன்றார்கள். அக் கொலைச் செய்தி கேட்ட கண்ணகி "என்னருமை நாயகன்மீது பொல்லாத களவுப்பழி சுமத்தியா இவ்வரசு கொன்றது" என்று வீரக் கிளர்ச்சியுடன் எழுந்து, பாண்டியன் வாயில் நுழைந்து, அவன் ஆணைபெற்று, அவனருகே சென்று, தன் வரலாறு கூறித் தன் நாயகனைக் கொன்றது கொடுங்கோன்மை என்று வாதம் புரிந்தாள். "கள்வனைக் கோறல் கடுங்கோலன்று" என்று மன்னன் எதிர்வாதம் புரிந்தான். பின்னைக் கண்ணகியின் வலியுறுத்தன்மீது வேந்தன் தன் மனைவியின் மற்றொரு காற்சிலம்பினையும் கொலைக்குக் காரணமாக நின்ற கண்ணகியின் ஒருகால் சிலம்பினையும் உடைத்துப் பார்த்ததும் அதனுள் பரலும் இதனுள் மணியுமிருத்தல் கண்டு, பாண்டியன் "யானோ அரசன், யானே கள்வன்" என்று நடுக்குற்று அரியாசனத்தினின்றுங் கீழே சாய்ந்து

மாய்ந்தான். இத்துணை அருவினை கண்ணகியென்னும் பெண் வழி நிகழ்ந்தது. "நாயகன் கொல்லப்பட்டான்; நமக்கென்ன இங்கு வேலை; தந்தை தாயர்க் கறிவித்து வீடு சேரலாம்" என்னுங் கோழை எண்ணம் கண்ணகியின் உள்ளத்தில் உறவில்லை. 'நாயகனை அநியாயமாகக் கொன்றது பிழை' என்று வேந்தன் முன்னை வாது செய்து, உண்மை கிளத்தி, அவன் மனச்சான்றே அவனைக் கொல்லுமாறு செய்ததன்றோ கண்ணகியின் வீரம்? இத்தகை வீரத்தாய்மார்கள் வாழ்ந்த நாடு இத்தமிழ்நாடு. இவ்வீரத்துக்கு அடிப்படை அந்நாளில் பெண்மக்களுக்கிருந்த உரிமையே யாகும். உரிமையில்லா விடத்தில் வீர எழுச்சி ஏது?

இத்தகை வீரச்செயல்கள் மட்டும் பண்டைத் தமிழ்ப் பெண்மக்கள்பால் பொலிந்திருக்கவில்லை. வேறு பல அறவொழுக்கங்களும் அன்னாரிடை நிரம்பியிருந்தன. மாதவி என்னும் மாதரசியைக் கோவலன் விடுத்துப் பிரிந்த பின்னை அம்மாதரசி என் செய்தனள்? அவள் வேறுதுறை நண்ணாது துறவொழுக்கம் பூண்டு நிறைகாத்து அறம் வளர்த்தாள். அவள் வயிற்றிற் பிறந்த

மணிமேகலை எத்துணை உலகச் சோதனைகளைக் கடந்து நின்றனள்? மணிமேகலை அறவொழுக்கத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் நிற்கிறாள். அவள் உயிர்கள் நலங்கருதித் தொண்டுசெய்ததும், சிறைப்பட நேர்ந்தபோது அச்சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கியதும், சமயக் கணக்கர் உரை கேட்டதும், பிறவும் மணிமேகலை என்னுஞ் சீரிய தமிழ் நூலில் மிளிர்தல் காண்க.

நாயகன் தவறி நடப்பின் அவனை அறிவால் அன்பால் திருத்தும் பெருந்தகைமை அந்நாளைய பெண்மக்களுக்கிருந்தது. சிலப்பதிகாரக் கண்ணகியல்லாத மற்றொரு கண்ணகி வழுக்கிய தன்கணவனைப் புலவர்வாயிலாகச் செம்மைப்படுத்தியதைப் பழைய நூல்களிற் காண்க. இச்செயல்கள் என்ன காட்டுகின்றன? அக்காலப் பெண்மக்களின் கல்வி அறிவு ஒழுக்கம், இவை கட்கெல்லாங் காரணமாக நிற்கும் உரிமை முதலியவற்றைக் காட்டுகின்றன.

நாயன்மார்கள் காலத்தும் பெண்ணுரிமைக்குப் பழுது நேர்ந்ததாகத் தெரியவில்லை. நாயன்மாரின் மனைவிமார் நிகழ்த்திய பெருஞ்செயல்களைப் பெரிய புராணத்திற்காண்க. அவர்கள் செயல்களை

ஈண்டு விரிக்கிற் பெருகும். அன்பிற் சிறந்த திருநீலகண்ட நாயனார் சிற்றின்பத்துறையில் எளியராயதை யுணர்ந்த அவரது இல்லக்கிழத்தியார் அவரை எவ்வழியில் திருத்தினார் என்பது கவனிக்கத்தக்கது. அமண் சமயம்புக்க தம்பியாரை மீண்டுஞ் சைவசமயத்தில் கொணர முயன்றவர் யாவர்? ஒரு பெண்மணியே. மற்றுமோர் அருஞ்செயல் தமிழ்நாட்டில் பெண் வழி நிகழ்ந்திருக்கிறது. பெண்பெருமை பேச இந்நிகழ்ச்சியை ஈண்டுப் பொறிக்கின்றேனேயன்றிச் சமயநோக்குடன் அதை ஈண்டுப் பொறிக்கின்றேனில்லை.

பாண்டிமாநாட்டில் ஒருபோது சமணசமயம் பெருகிச் சைவசமயம் அருகிற்று. அவ்வேளையில் மன்னனும் அச்சமயநெறி நின்றான். அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் என்றபடி குடிமக்கள் பலரும் அமண் சமயங்கொண்டனர். சொக்கலிங்கத்தையும் மீனாட்சியையும் தொழுவோர் அரியராயினர். இந்நிலையில் அவ்விடத்தில் மீண்டுஞ் சைவசமயந் தழைக்க உழைத்தவர் யாவர்? ஒரு மங்கையர்க்கரசி யாரே. அம்மங்கையர்க்கரசியார் எவர்? சமணக் கடவுட்டொழுத பாண்டியன் தேவியார். நாயகன் வேறு

சமயம் புகுந்தும், நாடும் வேறு சமயம் புகுந்தும், தமதறிவிற்குப் பொருத்தமெனத் தோன்றிய ஒரு கொள்கையினின்றும் நாயகன் பொருட்டாதல் நாட்டின் பொருட்டாதல் சிறிதும் பிறழாது, உறுதிகொண்டு நின்ற அளவோடுநில்லாது, திருஞான சம்பந்த சுவாமிகளைத் தமது நாட்டிற்கு வரவழைத்து, மீண்டும் நாயகனையும் நாட்டையும் தமது கொள்கை வழி ஒரு பெண் தெய்வந்திருப்பியதெனில் அப்பெண் தெய்வத்தின் உரிமை யுணர்வையும், கல்வி அறிவையும் என்னென்று புகழ்வது? மங்கையர்க்கரசியார் என்னும் ஒரு பெண்மணி அன்றில்லா திருப்பரேல் சைவசமயம் அன்றே தமிழ்நாட்டில் இறந்து பட்டிருக்கும். ஒரு சமயத்தை நிலைபெறுத்திய பெண்ணை நமது தமிழ்நாடு பெற்றிருந்தது.

அந்நாளில் வதிந்த ஆண்மக்களும் பெண்மணிகளின் சிறப்பைக்கூறத் தியங்குவதில்லை. பெண்ணுரிமை கடியப்பட்ட பின்னர்ப் பெண்ணின் சிறப்பை ஆண்மகன் புகழல் பாவமெனக் கருதினன் போலும்! "பெண் அடிபடப் பிறந்தாள்" என்றன்றோ பின்னைப்போந்த ஆண்பெரியோர் எழுதிவைத்தனர்? இவர்கள் மக்களா? பண்டைக்

கால ஆண்மக்களோ பெண்சிறப்பை மகிழ்ச்சி யோடு புகழ்ந்தார்கள். கடவுளைப் பெண்ணாண் வடி வாக்கண்டு பெண்ணுடன் கூடிய கடவுள் என்று அவரை எங்கணும் பாடிய திருஞானசம்பந்தப் பெருந்தகையாரும், பெண்ணுக்குரிய அமைதிநிலை யெய்தி, அதனில் விளங்கும் அன்பு ததும்பிக் கரை புரண்டு தமிழ்ப்பாக்களாக ஓடுதற்கு நிலைக் களனாக விருந்த சேக்கிழாரும், மேற்போந்த மங் கையர்க்கரசியாரைச் செவ்விய செவ்விய தீந்தமிழ் மலரால் தூவிப் போற்றியிருக்கிறார். பெண் ணடிமை என்னும் உணர்வில்லாநாளில் பெண்ணைக் காழ்ப்பின்றி ஆண்மக்கள் புகழ்ந்திருக்கிறார்கள்.

"மங்கை யர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டி மாதேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே"

—திருஞானசம்பந்தர்.

“ மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் டிருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே”

—சேக்கிழார்.

இவர்கள் மங்கையர்க்கரசியாரை எவ்வாறு போற்றியிருக்கிறார்கள் என்பதை அன்பர்கள் உன்னுவார்களாக.

வேதகாலத்திலும் பழந்தமிழர் காலத்திலும் பெண்மக்கள் தங்கள் உரிமை வழிநின்று கடனாற்றினார்கள். அவ்வுரிமை இடைக்காலம் வரை தொடர்ந்து நின்றது. பின்னை நாளில் அதாவது ஸ்மிருதி காலத்தில் பெண்மக்கள் உரிமை நமது நாட்டில் கடியப்பட்டது. வேறு சில விடங்களிலும் அவ்வுரிமை கடியப்பட்டதெனச் சரித்திரங் கூறுகிறது. பெண்ணுரிமை கடிந்து கூறும் ஸ்மிருதிகளையும், அவைகளை யொட்டிப் பின்னை எழுந்த நூல்களையும் நோக்குழிப் பெண்ணுரிமையை அரிக்கும் அநியாயக் கட்டுப்பாடுகளைக்

காணலாம். அவைகளை எழுதிய ஆண்மக்கள் நெஞ்சங்கல்லோ இரும்போ அறிகிலேன்.

முதலாவது பெண்கல்வி வாயில் அப்பாவிகள் மண்ணிட்டார்கள். எல்லா முறையிலும் ஆண்மகனை யொத்தும், சிலவற்றில் மேம்பட்டும் நிற்கும்பெண் மகள் தன் வாழ்விற்கின்றியமையாத கல்வி பெற லாகாதெனுங் கொடிய கட்டுப்பாட்டினுங் கொடிய தொன்றிருக்குமோ? பண்டை நாளில் வேத வேதாந்தத் துறையில் ஈடுபட்டுப் பல கலைகளை யும் எழுதிய பெண்மக்கள் வழிவழி வரும் பெண் மக்களா படிக்கக்கூடாது? இது பெண்மக்களை விலங்காக்கித் தங்கள் வழியில் ஆட்டவேண்டு மெனும் தீய எண்ணமன்றி வேறு என்ன எண் ணம்? "விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல் - கற்றாரோ டேனையவர்" என்றார் திருவள் ளுவனார்.

ஈண்டு மக்கள் என்றது ஆண்மக்களையும் பெண் மக்களையுங் குறிப்பதென்க. பெண்மக்களைப் பிரித்து ஆண்மக்களென்று பொருள் கொண்டது பிற்கால வழக்கு. திருவள்ளுவர் காலத்தில் ஆண் மக்களைப் போலவே பெண்மக்களும் படித்துவந் தார்கள். அதனால் அவர் மக்கள் என்று பொதுப்

படக் கூறினர். அறிவு விளக்கத்துக்கு இன்றியமையாத கல்வியைப் பெண் பெறு தொழிவளேல் அவள் வாழ்வு என்னும்? அவள் பிள்ளைகளை எவ்வாறு வளர்ப்பாள்? உலகப்பொறுப்பை யன்றே அவள் தாங்குந் தாயாகவிருக்கிறாள்? இந்நாளில் நமது நாட்டில் வான்மீகிகள் வியாசர்கள் திருவள்ளுவர்கள் நக்கீரர்கள் தோன்றாமைக்குக் காரணமென்னை? தாயைக் கல்வியிழக்கச்செய்து அவள் உரிமை கடிந்ததன்றி வேறென்னை? பயிரின் நலன் நிலத்தின் பான்மையைப் பொறுத்த தன்றோ? பின்னை நாளில் பெண் மக்களுக்கேற்பட்ட கட்டுப்பாடுகள் இந்நாளில் நாட்டின் நலத்துக்கே கேடு விளைத்திருக்கின்றன.

பழைய நூல்களிலும் பெண்கல்வி மறுப்பு உண்டு என்று சிலர் சில வுரைகளைக் காட்டுவர். அந்நூல்களை முற்றும் ஆய்ந்தால் பல விடங்களில் பெண்கல்வி பேசப்பட்டிருக்கும். ஊன்றி நோக்கினால் அம்மறுப்புரைகள் ஒட்டுபோல் தோன்றும். பெண் படித்தலாகாதெனுங் கொடிய கட்டுப்பாடு எழுந்த நாளில், அக்கட்டுப்பாட்டை விதித்தவர்கள், தங்கள் கருத்தைப் பழைய நூல்களிலுஞ் செருகி விட்டார்கள். இந்நஞ்சு பல பழைய நூல்

களிலும் இறங்கியிருக்கிறது. இடைச் செருகலில் நமது நாடு பேர்பெற்றது. இப்பொழுதும் பழைய நூல்களை அச்சிடுஞ் சிலர் இடையிடையே தங் கருத்துக்கேற்பச் சில மாறுதல் செய்கிறார். பெண் கல்வி மறுப்புப் பழைய நூல்களில் காணப் படுமேல் அதனை இடைச் செருகல் என அறி ஞர் ஒதுக்குவாராக. பெண்கல்வி மறுப்பு ஸ்மிருதி காலத்திலேயே ஏற்பட்டது. வேறு பல கட்டுப் பாடுகளும் ஸ்மிருதிகளிலுண்டு. இந்நாளில் அவை கள் மாற்றப்பெறல் வேண்டும். இல்லையேல் நாட் டுக்கு நலன் இல்லை.

பெண்மக்கள் ஆண்மக்களைப்போலப் படித்த லாகாது என்னுங் கட்டுப்பாடு எற்றுக்கு? கல்வி பயிற்சிக்குரிய மூளை பெண்மக்களுக்கில்லையோ? அவர்கட்கும் மூளையை ஆண்டவன் படைத்திருக் கிறான். ஆண்மக்கள் மூளையினும் பெண்மக்கள் மூளை மென்மையுடையது என்பதைச் சோதனை யிற் காணலாம். நுட்பங்களை விரைவில் ஈர்க்கத் தக்க ஆற்றல் மென்மை மூளைக்கு உண்டு. ஆண் மக்களினும் பெண்மக்கள் நுண்ணிய பொருளை விரைவில் உணரும் ஆற்றல் பெற்றிருத்தல் அறிஞரால் ஒப்பப்பட்ட உண்மை. ஆண்மக்கள்

பள்ளிக்கூடங்களிலும் பெண்மக்கள் பள்ளிக்கூடங் களிலும் அடியேன் ஆசிரியனாயிருந்தபோது இவ் வுண்மையை அநுபவத்தில் கண்டிருக்கிறேன். இத் தன்மை சில ஆண்மக்களிடத்திலும் உண்டு. அவர் கள் பெண்ணியல்பு வாய்ந்தவர்கள். இப்பெண் ணியல்பு குறித்துப் "பெண்ணின் முதன்மை" என்னுந் தலைப்பின் கீழ் உரைத்திருக்கிறேன்.

இன்னும் ஒருவழி பற்றிப் பெண்ணறிவின் நுட்பங் கூறலாம். அமைதியில் அறிவு விளக்கம் உண்டு என்பது எவரும் ஒப்பத்தக்கது. நெஞ் சில் அமைதி நிலவா வேளையில் எந்நூலையும் வாசிக்க மனமெழுவதில்லை. எடுத்து வாசிப்பி னும் பொருள் பதிவதில்லை. இஃது அநுபவம். இரவு உறங்கி வைகறையில் எழும்போது நெஞ் சில் அமைதி நிலவுகிறது. அவ்வேளையில் அறிவு தாண்டவம் புரிகிறது. அந்நேரத்தில் அரிய பொருளெலாம் எளிதில் விளங்குகின்றன. பின் னர் உலகியலில் நுழைந்ததும் அமைதி குலை கிறது. அறிவு விளக்கமுங் குன்றுகிறது. நுண் ணிய பொருளைச் சிந்திக்கவும் இயல்வதில்லை. அமைதிக்கும் அறிவு விளக்கத்துக்குமுள்ள தொடர்பு ஈண்டுக் கருதற்பாற்று.

இவ்வமைதி ஆண்மக்கட் கதிகமுண்டா? பெண் மக்கட்கதிகமுண்டா? அமைதி பெண்மக்கட் கதிகமிருத்தல் கண்கூடு. பெண்மை என்னுஞ் சொல்லிற்கு "கட்புலனாயதோர் அமைதித் தன்மை" என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். கண்ணுக்குப் புலனாகாத அமைதி, பெண் வடிவாகிக் கண்ணுக்குக் காட்சி யளிக்கிறது என்பது அதன் கருத்து. அமைதியே பெண்ணெனத் திரண்டு விளங்குகிறதென்னில் பெண்மக்களின் அறிவு விளக்கத்தைப் பற்றி விளங்க உரைக்க வேண்டுவதில்லை. அதற்கேற்ற மூளையும் படைப்பில் அவர்கட்கு அமைந்திருக்கிறது.

அறிவு அமைதியில் உறைதலான், அறிவிற் குரிய கல்வியை அமைதி குறிக்கும் ஒரு பெண் கடவுளாக நாம் போற்றுவதுங் கவனிக்கத்தக்கது. கலைமகள் நுட்பம், அமைதியுடைய பெண்மையில் அறிவு உறைதலைக்குறிப்பதாகும். கல்விக் கடவுளைப் பெண்ணெனக் கொண்ட நமது நாடு, பின்னைப் பெண்கல்வியை மறுப்பது பொருளற்ற தொன்றாகும். பின்னைநாளில் ஆண்மக்கள் வகுத்த கொடுஞ் சட்டங்கள் நாட்டையுங் குறை கூறச் செய்கின்றன.

பெண்மக்கள் படிக்கக் கூடாதென்பது இயற்கை நோக்கமாயின், பெண்மக்கட்குப் படிப்பு வருதல் கூடாது: பெண்மக்கள் ஆண்மக்களைப்போலவே கல்வி பயின்று பரீட்சைகளில் தேர்வதையும், பட்டம் பெறுவதையும், நூல்கள் எழுதுவதையும், மேடைகளில் பேசுவதையும், கல்லூரிகளிலும் மற்றக் கழகங்களிலும் தலைமை வகித்து வினைகள் முடிப்பதையும், பிறவற்றையுங் கண்ணாரக் காண்கிறோம். கல்வித்துறை பெண்மக்கட்கு இயற்கையில் அரண் செய்வதன்றி முரண் செய்வதில்லை. பெண்கல்வியை மறுப்பது இறைவன் படைப்பு நோக்கை இடர்ப்படுத்துவதாகும்.

'பேதைமை என்பது மாதர்க்கு இயற்கையாய் அமைந்திருப்பது' என்று சிலர் கூறிப் பெண் கல்வியை மறுக்கிறார். அன்னார் "பேதைமை என்பது மாதர்க்கணிகலம்" என்னும் ஔவையார் திருவாக்கையுங் காட்டுகிறார். பேதைமை என்பது பலபொருள் ஒரு சொல். அஃது அறியாமை என்னும் பொருளைப் பெரிதும் வழக்கில் பெற்றிருக்கிறது. பேதைமை என்னுஞ்சொற்கு நக்கீரனார் "கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை" என்று பொருள் விரித்திருத்தல் காண்க. இப்

பொருள் அறிவின்மை மடமை முதலிய கருத்துக் களைத் தெரிப்பதா என்று வினவுகிறேன். பெண் கல்வி மறுக்கப்பட்ட நாள்தொட்டுப் பேதைமை, பெண்ணின் அறியாமை குறிக்குஞ் சிறப்புச் சொல்லாகக் கொள்ளப்பட்டது. இப்பொருள் படப் பின்னாளில் "* * * பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே" என்பதுபோன்ற உரை களும் பிறக்கலாயின. அறிவின்மைப் பொருள் அளிக்கும் பேதைமை எல்லார்க்கும் பொதுவா யிருப்பது. அஃது ஒரு பாலார்க்கே உரித்து என்று சொல்வது தவறு. "பேதைமை" என் னோர் அதிகாரம் திருக்குறளிலிருக்கிறது. அது பெண்ணுலகை மட்டுமா குறித்து நிற்கிறது? சில சொற்கள் காலத்துக்கேற்ற பொருள் பெறுவ துண்டு. அச்சொற்களுள் 'பேதைமை' என்னுஞ் சொல்லும் ஒன்று. பேதைமை என்னுஞ் சொற் குப் பழந்தமிழர் கொண்ட பொருளையும் உன்னுக. இச்சீரிய பொருளுடைய பேதைமை மாதர்க்கணி கலனாயிருத்தலை ஔவையார் மொழிந்தார். இஃ தென்னகுற்றம்? இனிப் பேதைமை என்னுஞ் சொல்லைப் பழம் பொருள்பட ஆட்சியிற் கொணருமாறு புலவர்களை வேண்டிக் கொள்

கிறேன். பெண் கல்வியை மறுத்துக்கூறும் பழமொழிகளும் பிற உரைகளும் ஆட்சியற்று ஒழிவனவாக.

பின்னை நாளில் ஆண்மக்கள், பெண்மக்களின் கல்வியுரிமையை மட்டுமா கெடுத்தார்கள்? வேறு பல பிறப்புரிமைகளையும் பறித்திருக்கிறார்கள். அந்நாளில் பெண்மக்களுக்கு விதிக்கப்பெற்ற கட்டுப்பாடுகளை எண்ண எண்ண உள்ளம் உருகுகிறது; கண்ணீர் பெருகுகிறது. அக்கால அறிஞர்களின் வன்கண் இருந்தவாறென்னே! என்னே! பெண் உற்ற வயதடைந்து பகுத்தறிவு பெறுமுன்னம் ஒருவனை மணத்தல், கைம்மை நேர்ந்தால் மொட்டையடித்து அவளை மானபங்கஞ்செய்தல், அவளைப் பசியால் மெலியச்செய்தல், பல பெண்கள் ஒருவனை மணத்தல், பெண் விபசாரத்துக்குத் தண்டனை விதித்தல், ஆடவன் எச்சிலைத் தின்னுமாறு மகளிரை வலியுறுத்தல் இன்னோரன்ன பிற கட்டுப்பாடுகள் பெண்ணுலகின் உயிர் நாடியைப் போக்கிவிட்டன. இக்கட்டுப்பாடுகள் ஆணுலகிற்குண்டோ? இல்லை; இல்லை.

மனைவியை ஆண்மகன் இழந்தால் அவன் எவ்வளவு வயதான கிழவனாயிருப்பினும் ஒரு கட்டழ

கியை மணந்து இனிது வாழலாம். இளம் பெண்ணொருத்தி கணவனை யிழந்தாலோ மொட்டையடித்து உண்டி கெடுத்து உலகைத் துறத்தல் வேண்டும். என்ன அநியாயம்? விதி என்றால் இருபாலார்க்குமன்றோ இருத்தல் வேண்டும்? ஒருவன் பல பெண்களை மணந்து கொள்ளும் உரிமை பெற்றிருக்கிறான். அநியாயம்! அநியாயம்! ஒருத்தி ஒருவனோடு வாழலே அறவொழுக்கம். அவ்வாறே ஒருவனும் ஒருத்தியுடன் வாழ்தல் வேண்டும். ஒருவன் பல பெண்களை மணக்கலாம் என்னும் விதி பெண்ணுலகை இழிவு படுத்துவதாகும். பெண் தவறி நடந்தால் தண்டனை! ஆண் தவறி நடந்தால் தண்டனையில்லை! இஃதென்ன நீதி? தண்டனை இருபாலார்க்கும் விதிப்பது நீதியாகும்.

பிறப்பில் ஆணாகப் பிறந்தால் எல்லாஞ்செய்யலாம்! பெண்ணாகப் பிறந்தவர்கட்கு மட்டும் விதிகள் - கட்டுப்பாடுகள் - தண்டனைகள்! ஆண்டவனே! கொடுமை பொறுக்க முடியவில்லை. உன்னை நோக்கி முறையிடுகிறேன்.

பெண்மக்கள் கூடாவொழுக்கத்தைப் போற்றிக் கூறுவதாகவாதல் துணை நிற்பதாகவாதல் எவரும் கருதலாகாது. பெண் தவறுதலுக்கு விதிக்கப்பெற்

றுள்ள தண்டனைகள் ஏன் ஆண் தவறுதலுக்கும் விதிக்கப்படவில்லை என்பதே எனது கேள்வி. பெண்ணுலகிற்குச் சிறுமையுண்டு என்பதை ஈண்டு எடுத்துக் காட்ட வேண்டும் என்னும் அவாவால் இவ்வுரைகள் பகரலானேன். ஒரு பாதியாயுள்ள பெண்ணின் சிறுமை மற்றொரு பாதியாயுள்ள ஆணையுந்தாக்கி முடிவில் வாழ்வையும் நாட்டையுங் குலைக்குமென்பதை ஆணுலகம் இனியாதல் உணர்ந்து நடப்பதாக.

உலகையீன்று வளர்க்குந் தாய் பெண்ணாகலின், அவளது ஒழுக்கங் காக்கவேண்டிச் சில கட்டுப்பாடுகள் கோலப்பட்டனவே யன்றிப் பெண்ணைச் சிறுமைப்படுத்தல் வேண்டும் என்னும் நோக்கோடு கட்டுப்பாடுகள் கோலப்படவில்லை என்று சில அறிஞர் திறம்பட வாதிக்கிறார். இதுபோலி வாதமன்றி நியாயவாதமன்று. பெண்ணொழுக்கங் காக்கவேண்டுமென்பதை ஒரு முறைக்குப் பன்முறை யான் வலியுறுத்துகிறேன். அவ்வொழுக்கம் ஆணுலகிற்கும் வேண்டற்பாலதென்று அவ்வளவில் வலியுறுத்துகிறேன். ஆணுலகில் தூய்மை இல்லை எனில் பெண்ணுலகில் தூய்மை எங்ஙனம் ஏற்படும்? தீயொழுக்கமுடைய

ஒருவன் நல்லொழுக்கமுடைய ஒருத்தியின் உடல் நலத்தைக்கெடுத்து, அவள்வழித் தோன்றும் பிள்ளையையும் நோய்வாய்ப் படுத்துகிறானல்லனோ? ஆதலால் ஒழுக்கத் தூய்மை இருபாலார்க்கும் வேண்டற்பாலது. ஒழுக்கத் தவறுதலுக்குத் தண்டனை விதிக்கப்படின் இருபாலார்க்கும் விதிக்கப்படல் வேண்டும்.

ஆண், தன்விருப்பப்படி திரிதற்கு இத்துணை அடக்குமுறைகளைப் பெண்ணிற்கு விதித்தனனோ என்னவோ தெரியவில்லை. ஆண்மக்கள், தாங்கள் களியாட்டில் வரம்புமீறி இறங்குதற் பொருட்டுப் பெண்மக்கள் உரிமை தடிந்து, அவர்களைப் பொம்மைகளாக்கிக் கொண்டார்கள் போலும்! ஒவ்வோர் ஆண்மகனும் ஒவ்வொரு பெண்மகளோடு வாழும் அற ஒழுக்கத்தில் நிற்பனேல் உலகிடை வரைவின்மகளிர் கூட்டத்துக்குத் தோற்றமேது? ஆண்மகன் பல மகளிரை மணத்தலும், பரத்தையருடன் ஆடலும் வரம்புகடந்த நடத்தைகளாகும். ஒருபெண்ணை வீட்டிற் சிறைப்படுத்தி மற்றப் பெண்களோடு கூடி வாழும் உரிமை ஆண்மனுக்கு எங்கிருந்து வந்தது? ஆண்மகன்

கொடுங்கோன்மையால் பெண்ணுரிமை தடிந்து தன் விருப்பப்படி ஆட்சி புரிகிறுன்.

ஒருவன் ஒருத்தியுடனும், ஒருத்தி ஒருவனுடனும் வாழ்தல் இயற்கை. இது குறித்துப் பின்னே விரித்துக்கூறுவேன். இருபாலாரிடத்துந் தீயொழுக்கங் கூடாதென்பது எனது உள்ளக் கிடக்கை. கட்டுப்பாடு எனில் அஃது இருசாரார்க்கு மிருத்தல் வேண்டும். ஒருவர் உரிமையை மற்ருெருவர் கட்டுப்படுத்தல் கூடாதென்பதை மீண்டும் வலியுறுத்தி மேற் செல்கிறேன்.

சில விடங்களில் பெண்ணுக்கு ஆன்மா இல்லை என்றும், பெண் ஆணிடத்திருந்து படைக்கப் பட்டாள் என்றும் நூல்களில் எழுதப்பட்டிருக் கின்றன. சில விடங்களில் பெண்மக்களுக்கு என்றுஞ் சிறைக்கூடு அமைக்கப்பட்டிருக்கிறது. அச்சிறையிருளில் போதிய காற்றின்றி, ஒளி யின்றி அன்புக்கொடிகள் வாடி வதங்குகின்றன. அவர்கள் அப்புறம் இப்புறம் பார்க்கக்கூடாது! பேசக்கூடாது! என்ன கொடுமை! கண்ணும் வாயும் கடவுள் அவர்கட்கு எற்றுக்கோ ஈந்தான்? இயற்கை வாழ்வு எல்லார்க்கு முரியது. அவ் வாழ்வினின்றும் பெண்ணைப் பிரிக்கவும் ஆண்

மக்கள் மனம் ஒருப்பட்டதன்றோ? இன்னோ ரன்ன கட்டுப்பாடுகளுள்ள இடங்களில் பெண்ணுலகிற்குப் பேரிழிவு நேர்ந்திருக்கிறது.

அவ்விடங்களில் பெண் நாய் பேயாகக் கருதப் படுகிறாள்; மாயையாகக் கருதப்படுகிறாள். ஞானத்துக்கும் வீடுபேற்றிற்கும் பெண் இடையூறாக விருக்கிறாளாம். மூவாசையுள் பெண்ணும் ஓர் ஆசைப் பொருளாம். இன்ப அன்புத் தெய்வமாக அடியேன் போற்றும் பெண்ணிற் குற்றுள்ள இழிவை, இன்னும் எழுத்தால் எழுதக் கையோடவில்லை. அந்நாளில் பெண்ணுலகிற் கேற்பட்ட துன்பம் "பெண்ணாய்ப் பிறப்பதினும் மண்ணாய்ப் பிறக்கலாம்" என்னும் பழமொழியை எழுவித்ததெனில், பெண்ணுலகத் துன்பத்தை என்னென்று கூறுவது? பெண் ஆசைப் பொருளல்லள் என்பதையும், அவளை அங்ஙனங் கருதி வெறுத்தலும் துறத்தலும் அன்புக்கடவுளைக் காணும் வழிகளல்ல என்பதையும் வேறோரிடத்தில் விளம்புவன்.

சில விடங்களில் உரிமையையும் கடமையையும் ஒன்றுபடுத்தி மக்கள் இடர்ப்படுகிறார்கள். உரிமை வேறு; கடமைவேறு. பெண் மெல்லியலாள்;

ஆண் வல்லியலான். மென்மை வன்மைக் கேற்ப இரு பாலார்க்குமுரிய கடமைகள் வேறுபடலாம். உரிமையில் கட்டுப்பாடிருத்தல் கூடாதென்ப தொன்றே ஈண்டுக் கவனிக்கற்பாற்று. கடமை வேறுபாடுகளைக் குறிப்பிட்டுப் பெண்ணுரிமையில் கைவைப்பது கொடுமை. உரிமை எல்லார்க்கும் பொதுவானது. வானத்தில் மேகந் தவழ்வது போலவும், கடலில் அலை எழுவது போலவும், பறவை அழகிய சிறகை வீசிப் பறப்பதுபோல வும பெண் தனதுள்ளத்தெழும் விருப்பவழி நடக்கும் உரிமையுடையளாதல் வேண்டும். அவ் வுரிமையைச் சிறைப்படுத்தல் பெரும்பாவம். பெண் அடிமைவாழ்வு நடாத்த நேரின், அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளையும் அடிமையுணர்வுடன் பிறக்கும். பெண் தாயாகலின் அவள் உரிமை தடிதல், அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளை களின் உரிமையைத் தடிவதாகும். பெண்ணு ரிமை பிடுங்கப்பட்டநாடும் உரிமையிழந்த நாடா தல் இயல்பு. இதற்குச் சான்று நமது நாடு நவிலும். பெண்ணுரிமை பறிப்பதன் பயன் இஃ தாகும். பெண்ணுரிமை குலைப்பதைப் போன்ற அறியாமை பிறி தொன்றில்லை. பெண்ணுரிமை

கெடுத்தலாவது பின் சந்ததியின் உயிர் நிலையைக் கெடுப்பதாகும். எக்காரணம் பற்றியும் பெண்ணுரிமைக்குக்கேடு சூழல் கூடாது; கூடாது.

மேல்நாட்டில் சின்னாளாகப் பெண்ணுலகில் ஓர் இயக்கந் தோன்றியிருக்கிறது. பெண்மக்கள் உரிமை என்னும் பெயரால் சில கொடுமைகள் நிகழ்த்தி வருகிறார்கள். அவர்கள் ஆண்மக்களைப்போல எல்லா வழியிலும் வாழ்வுபெறக் கிளர்ச்சி செய்கிறார்கள். அவர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள ஆண்மக்கள்மீது கல்லெறிதல், அவர்களைக் கருவியால் தாக்கல், வழி மறித்தல் முதலிய வன்செயல்கள் புரிகிறார்கள். இச்செயல்கள் உரிமைப் போராட்டமென்று சொல்லப்படுகின்றன. இச்செயல்கள் நமது நாட்டில் ஆண்மக்கள் பெண்மக்களை அடக்கக்கொண்ட மூடச் செயல்களைக் கடிந்து நிற்பன. பெண்ணுரிமை என்பது, ஆண்மக்களோடு பகைமை கொண்டு, அவர்கள் பதவிகளைப் பெற மூர்க்க நெறியில் நின்று, அவர்களைத் தாக்குவதன்று. மேல்நாட்டுப் பெண்மக்கள், உரிமை என்னும் பெயரால் வாழ்வையே குலைத்துக்கொள்கிறார்கள்.

தற்கால மேல்நாட்டு நாகரிகத்தால் விழுங்கப் பெற்றுள்ள கீழ்நாட்டுப் பெண்மக்களும் மேல் நாட்டுப் பெண்மக்கள் அடிச்சுவட்டைப்பற்றி நடக்க முயல்கிறார்கள். அது தவறு.

பெண் பிறவியின் நோக்கம் ஆண்பிறவி தாங்கி னோரிடத்தில் போர்புரிந்து அவரைத் துன்புறுத்த வேண்டு மென்பதன்று. பிறரைத் துன்புறுத்த வேண்டும் என்னும் எண்ணமே பெண்ணீர்மையை அழிப்பதாகும். ஒரு பாதியாகிய பெண், மற் றொருபாதியுடன்கூடி இன்ப வாழ்வை உலகில் பெருக்கி, உலகை வளர்க்கும் நெறியில் நிற்றல் வேண்டும். பெண்மக்கள் ஆண் மக்கட்கு அடி மைப்பட்டு வாழவேண்டுவதில்லை அவர்களுடன் உரிமைகொண்டு வாழலாம். பெண்ணுரிமை என் பது ஆணுடன் போர் புரிவதன்று. ஆணுடன் வாழ்ந்து அன்பை வளர்ப்பது பெண்ணின் உரி மைக் கடன். சமயம் நேருமேல் அன்பு வழியில் ஆண் பதவிகளையும் பெண்மக்கள் ஏற்று உலகை நடாத்தலாம். ஐரோப்பாவில் நடைபெற்ற பெரும் போர் ஆண்மக்கள் கடமைகள் பலவற்றைப் பெண் மக்கள் ஏற்று நிகழ்த்துமாறுசெய்தது. உரிமை யென்று ஆணுலகோடு போர்புரிவதால் பெண் ணுக்

குரிய அமைதிகெட்டு உலகழியுமென்பது பெரி தும் கவனிக்கப்படல் வேண்டும். மேல்நாட்டில் தற்கால நாகரிகத்தால் அன்பு பொறுமை இன் பம் முதலியன அறவே தொலைந்து, வன்கண் பொறாமை துன்பம் முதலியன பெருகுகின்றன. தற்கால நாகரிகந் தொலையவேண்டுமேல் பெண் தெய்வங்கள் தங்கள் தாய்மைத் தொண்டைச் செவ்வனே யாற்றிவருவார்களாக.

பெண்ணுரிமை வழங்கினால் பெண்மக்கள் ஆணுலகிற்கு இடர்விளைத்து வாழ்வையே குலைத் துக்கொள்வார்களாகலின், அவர்களை அடக்கி யாளுமாறு நிறுவப்பெற்ற கட்டுப்பாடுகள் போற் றற்குரியன என்று சிலர் சொல்வதுண்டு. இஃது அறியாமை. பெண் ஆணை அடக்கப்புகுவதுந் தவறு. ஆண் பெண்ணை அடக்கியாள்வதுந் தவறு. இருவரும் ஒத்துநடத்தலே இன்பம். நமது நாட்டுப் பழைய வாழ்வை இதற்கு இலக் கியமாகக்கொள்ளலாம். பெண்மை ஆண்மை இறையிடத்திலும் இயற்கையிடத்திலும் ஒத்து விளங்கலைக்கண்டு, ஓர் உயிர் ஈருடலென அன்பு நிறைந்த இன்பவாழ்வை நமது நாட்டார் நடாத் தினர். உயர்வு, தாழ்வு, போராட்டம் முதலிய

எண்ணங்களின்றி ஓருயிர் ஈருடல் எனப் பெண் ஆணுடன் ஒன்றி, வாழ்வு நடாத்தி உலகை வளர்ப்பாளாக. இது பெண்ணின் பெருமை.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.
கண்க ளிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதமை யற்றிடுங் காணீர்."

—பாரதியார்.

௬. பெண் வளர்ப்பு

"பெண்ணைப் போற்றி வளர்க்க"—பழமொழி.

"இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டி வாய்மை யெருவட்டி
அன்புநீர்ப் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"—அறநெறிச்சாரம்.

உயிர்கள் தோற்றத்துக்கும் ஆக்கத்துக்கும் மூலமாயிருப்பவள் பெண். அப்பெண் வளங்குன்றுமேல் உலக வளனுங்குன்றும். பெண்ணின் வளன் பெரிதும் அவளது இளமை வளர்ப்பையே ஒட்டி நிற்கிறது. பெண் தீயவழியில் வளர்ந்து வருவளேல் அவள் வழித்தோன்றும் உலகமுந் தீயதாகும். பெண் நல்வழியில் வளர்ந்து வருவளேல் அவள் வழித்தோன்றும் உலகமும் நல்லதாகும். உலகை நல்லதாக்க வேண்டுமென்பதே இயற்கையின் நோக்கம். அந்நோக்கத்துக்குத் துணை புரிய வேண்டுவது பெற்றோர்கள் கடன்.

முதலாவது நற்பிள்ளைப் பேற்றிற்குத் தாய் தந்தையரின் உடல் வளனும் நல்லியல்பும் இன்றியமையாதன. அவர் நல்லுடலும் நல்லியல்பும்

பெறுந் துறையில் இறங்கி யுழைப்பது நலம். நில
விதைகளுக்கேற்ற வண்ணமன்றோ பயிரின் இயல்
பிருக்கும்? தாய் தந்தையர் உடல் நலனும் இயல்
பும் பிள்ளையின் வளர்ப்பிற்கு நீரும் ஒளியும்
போன்றன. தாய் தந்தையர் நன்னடை பிள்ளை
கட்குப் பெருந்துணை செய்யும். நற்பிள்ளைப்
பேற்றிற்கும் வளர்ப்பிற்கும் தாய் தந்தையர்
பெரும் பொறுப்பாளர். அப்பொறுப் புணர்ந்து
நடக்கும் தாய் தந்தையர் வாழ்க.

பொதுவாக உலகில் பலவிடங்களிலும் சிறப்
பாக நமது நாட்டிலும் பிறந்த குழவி பெண்ணா
யிருப்பின் "அந்தோ! பெண்ணா" என்று தாய்
தந்தையரும் உற்றார் உறவினரும் இடி கேட்ட
நாகம்போலக் கலக்கமுறுகிறார். இஃதென்ன
அறியாமை? பின் தாயாகி உலகோம்பக் கடவுள்
அளித்த பெண் பிறவியைக் கண்டா கலக்கமுறு
வது? "தாயாகும் பேறுடைய பெண்குழவி நம்
வயிற்றிற் பிறந்ததே" என்று இன்பக் கடலி
லன்றோ திளைத்தல் வேண்டும்? பெண்ணாகப்
பிறத்தல் எற்றுக்கு? பின் தாயாகி உயிர்களை
ஈன்று உலகை வளர்ப்பதற்கன்றோ? பெண்பிறவி
யில்லையேல் கடவுள் படைப்பு நோக்கம் எங்ஙனம்

நிறைவேறும்? கடவுள் படைப்பு நோக்க நிறைவேற்றத்துக்குப் பிறந்த பெண்ணைக்கண்டு கலக்கமுறுவது அறியாமை. பெற்றோர் தம் வயிற்றிற் பிறந்த பெண்குழவியைப் பார்க்குந் தோறும் பார்க்குந்தோறும் "உலகோம்புந்தாய் நம்பால் உதித்திருக்கிறாள்" என்று அடங்காத களிபேருவகை கொள்வாராக. அவ்வுவகை ஊற்றினின்றும் பொங்கி எழும் அன்பு நீரும் அருட்கண்ணொளியும் கான் முளையை இனிது வளர்த்து வரும்.

தாய்தந்தையர்கள் பிள்ளைகளைப் பெறுவது பெருமையன்று. அவைகளை நல்வழியில் வளர்ப்பது பெருமை. பிள்ளைகளை ஒழுங்குமுறையில் வளர்க்குந் தொண்டினுஞ் சிறந்த தொண்டு பிறிதொன்றில்லை. பின்னுலகாக்க உயிர்களைப் பண்படுத்தி விடுவது சிறந்த தெய்வத்தொண்டு.

பிள்ளைகளை நல்வழியில் வளர்க்க முனையாத பெற்றோர்கள் பின்னை உலகத்துக்குக் கேடு சூழ்ந்தவர்களாகிறார்கள்; எத்துணையோ பாவங்கட்கு விதை யிட்டவர்களாகிறார்கள். பிள்ளைகளை—சிறப்பாகப் பெண்பிள்ளைகளை வளர்ப்பதில் தாய் தந்தையர் பெருங்கவலை செலுத்தல் வேண்டும்.

ஒரு பெண்ணின் வாழ்வு அவளோடு நிற்பதில்லை. அவள் வழித்தோன்றும் உலகையுந் தொடர்ந்து நிற்கிறது. "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது பழமொழி. பெண்ணின் தாய்மைக் குரிய வித்து அவளது இளமை வளர்ப்பாகலின், அவளது இளமை நல்வழியில் அரும்புமாறு பெற்றோர்கள் உழைத்தல்வேண்டும். ஆகவே தாய் தந்தையர்கள் பெண்ணின் தாய்மை விழுப்ப முணர்ந்து பெண்ணை வளர்ப்பார்களாக.

நல்லிணக்கமும் வேற்றுமை நினைவும்

பெற்றோர்கள் பெண்ணை வளர்க்கும் முறையைப்பற்றி ஈண்டு விரிக்கிற்பெருகும். அம்முறைகளை விரித்துக் கூறுவது இந்நூலின் நோக்கமுமன்று. எடுத்த பொருளுக்கேற்பச் சில குறிப்புக்கள் மட்டும் பொறிக்கப் புகுகிறேன்.

குழந்தைகள் மனமொழி மெய்களில் எக்காரணம் பற்றியும் தீமை படியாதவாறு தாய் தந்தையர் காத்துவரல் வேண்டும். தாய் தந்தையர்கள் தங்கள் நடத்தையால் குழந்தைகள் நலனைக் காத்து வருவதோடு மற்றவர்கள் கூட்டுறவாலும் அவைகட்குக் கேடு நிகழாவாறு காத்தல்

வேண்டும். குழந்தைகள் உள்ளத்தில் ஆண் பெண் என்னும் நினைவே தோன்றலாகாது. அவ் வெண்ணந் தோன்றுமுறையில் தாய் தந்தையர் நடத்தல் கூடாது. மற்றவர்கள் வாயிலாகவும் அவ்வெண்ணம் குழந்தைகள் மனதில் நுழை யாதவாறு காக்கவேண்டுவது தாய் தந்தையர் கடமை.

பெண் ஆண் உணர்வை உற்றவயதில் இயற்கை தோற்றுவிக்கும். அக்காலத்துக்கு முன்னர், இள மையில் அவ்வெண்ணம் பதிவது பின்னை வாழ் வின் நலத்துக்குரிய அறிவு மனம் உடல் எல்லா வற்றையும் அழிப்பதாகும். அறிவு விளக்கம் மன அமைதியைப் பொறுத்து நிற்கிறது; மன அமைதி உடல் நலத்தைப் பொறுத்துநிற்கிறது. உடல் நலம் இனத்தை அறிவிக்கும் உறுப்பின் அகப்புற வளத்தைப் பொறுத்து நிற்கிறது. அவ் வுறுப்புக்குப் பழுதுநேரின் வாழ்வே குலைந்து போகும். உடலில் எவ்வுறுப்புக்கு ஊறுநேரினும் சிகிச்சை செய்யக்கூடும். அவ்வுறுப்பிழந்தேனும் வாழக்கூடும். அந்தோ! குறிக்கு ஊறு நேரிலோ எவ்வித சிகிச்சையுமில்லை. சிகிச்சை செய்து

கொள்ளினும் ஊறு நீங்காது. அவ்வூறுகொண்டு வாழவும் முடியாது.

எல்லா உறுப்புக்களினுஞ் சிறந்த உறுப்பு, பால் பிரிக்கும் உறுப்பாகும். எல்லா உறுப்புக்கட்கும் அவ்வுறுப்பு உயிர் போன்றது; வேர் போன்றது. இந்நுட்பம் உணர்ந்தே நந்தமிழ் மக்கள் அவ்வுறுப்பிற்கு உயிர்நிலை என்னும் பெயர் சூட்டினார்கள். ஆன்றோர் வழிபற்றி அவ்வுறுப்பை உயிர்நிலை என்றே யானும் இனிக் குறித்துவருவன்.

இப்பொழுது மேல்நாட்டு அறிஞர்கள் உயிர்நிலையின் நுட்பங்களைச் செவ்வனே ஆராய்ந்து அதன் இயல்புகளை எவரும் உணருந் முறையில் அறிவுறுத்தி யிருக்கிறார். அவ்வியல்களை ஒவ்வொரு பெண்மகளும் ஆண்மகனும் உணரல்வேண்டுமென்பது எனது கருத்து. உயிர்நிலையின் நுட்பங்களையுணராது நெறியல்லா நெறி சென்று எத்துணையோ உயிர்கள் பாழ்படுகின்றன.

உயிர்நிலையாக உள்ள உறுப்பு எக்காரணத்தால் மெலிவுறினும் நரப்புக்கட்டுக்களெல்லாம் மெலிந்து குலைந்துபோகும். நரப்புக்கட்டுக் குலைந்த ஒருத்தியோ ஒருவனோ உடல் நலமிழந்து மன அமைதி குன்றி அறிவு விளக்கங்கெட்டுத் தோல்பொம்மை

போலாகி உலகிற்குப் பெருஞ் சுமையாதல் திண்ணம்.

இளமையிலேயே பெண் ஆண் நினைவு அடிக்கடி ஊட்டக்கூடிய வளர்ப்பு, பின்னைப் பல கேடுகட்கு இடமுண்டாக்கும். பெண் இளமையிலேயே அவ்வெண்ணங் கொள்ளல் பெருந்தவறு. அவ்வெண்ணம் அடிக்கடி இன்ப உறுப்பின்மீது கருத்தைச் செலுத்தி அகாலத்தில் அதை மலர்விக்கும். எண்ணத்துக்கும் உயிர்நிலை யுணர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எண்ணமில்லையேல் அவ்வுணர்ச்சியும் இல்லை என்க.

பெண்ணினத்தின் படைப்பிற்குரிய உள்ளுறுப்பு ஏறக்குறைய பத்தாண்டு வரை எடுப்பின்றி உறக்கத்திலேயே இருக்கும். பத்தாண்டிற்கு மேல் அது சிறிது முகிழ்த்தெழுகிறது. அதற்குள் தீய எண்ணத்தால் அதன் எழுச்சியையொடுக்கி அதன் சத்தைக் கெடுத்தல் எவ்வளவு பாவம்! அதன் செழுமை குன்றின், அதன் வாயிலாகத் தசைகட்குச் செல்லவேண்டிய மூலச்சத்தின் சார ஓட்டங் குறைந்துபோகும். அச்சத்தே பெண்ணின் அழகிற்கு உணவு போன்றது. அதன் வலிமையைப் போக்கும் இளம்பெண்

பின்னைப் பெண்மைக்கும் தாய்மைக்கும் இன்றி யமையாத கட்டழகைக் குலைத்துக் கொள்கிறாள். அவள் பெண்ணலனெலாம் இழக்கிறாள் என்று சுருங்கச் சொல்லலாம்.

ஏறக்குறைய பத்தாண்டில் சிறிது முகிழ்த்துத் தலைகாட்டும் இன்ப உறுப்பு, தன்னை முற்றும் பண் படுத்தற்குரிய தசைக்கட்டுகளைக் கட்டிக்கொள் வதில் ஊக்கங்காட்டி நிற்கும். தசைக்கட்டும் பிற வும் பின்னைய தாய்மைக்கு வேண்டற்பாலன. அத் தசையையும் பிறவற்றையுங் கட்ட அடிகோலும் வேளையில் தீய எண்ணத்தாலோ சேர்க்கை யாலோ இன்ப வுறுப்பின் இளங்கொழுமையைப் போக்கல் அறியாமை; அறியாமை. இக்கேடுறு வாறு குழந்தைப் பருவத்திலேயே பெண் ஆண் வேற்றுமை உள்ளத்தில் நுழையாவழியில் குழந் தையைப் பெற்றோர் வளர்க்கவேண்டுமென்று சொல்லவும் வேண்டுமோ?

பின்னைப் பன்னிரண்டு அல்லது பதினொன்கு வய தில் அவ்வுறுப்பு மலர்ச்சியடைந்து தனது கட னாற்றத் துவங்குகிறது. அப்பொழுது கருக்குழி செவ்வியநிலை யெய்தற்கு வேண்டப்படும் முயற்சி யில் அவ்வுறுப்புத் தலைப்பட்டு ஒழுங்குபடுத்தும்.

அங்கிலேயிலுங் கன்னி மனம் உறுதியினின்றும் பிறழலாகாது. பிறழுமேல் பிஞ்சிற்பழுத்த கதை யாகமுடியும். திருமணம்வரை பெண்ணிற்குத் தீக்கிளர்ச்சி எண்ணம் உறவேகூடாது. தீய எண் ணத்துக் கிரையாகாதமுறையில் பெண்ணைப் பெற் ரேர் வளர்ப்பதில் பெருங்கவலை செலுத்தல் வேண்டும்.

குழந்தைப் பருவத்தில் பெண் ஆண் வேற் றுமையுணர்வு தோன்ருத வழியில் குழந்தையை வளர்க்க வேண்டுமென்று தாய் தந்தையர்கட்கு அடிக்கடி நினைவூட்டுகிறேன். 'இஃதென்ன சிறிய காரியம்' என்று பெற்ரேர்கள் கவலை ஈனமாக இருத்தல் கூடாது. கீழ்மக்கள் காற்றுகூட குழந்தைமீது வீசுதலாகாது. கீழ்மக்கள் வாயி னின்றும் வரும் வேதமொழிகளை ஈண்டு நினை வூட்ட வேண்டுவதில்லை. அவர்கள் பேச்சில் நூற்றுக்கு எண்பது சொற்கள் பெண்ணினச் சொற்களாக ஒழுகும். அச்சொல்லொழுக்கின்றி அவர்களால் கருத்தை வெளியிட முடியாது. அவர்களை யறியாமலும் அந்நறுமலர்கள் அவர் கள் வாயினின்றும் உதிர்ந்துவிடும். என் செய் வது! சிறிதும் நாணமின்றி, அக்கம் பக்கத்

துள்ள குழந்தைகளையுங் கன்னிகளையுங் கவனியாது, கீழ்மக்கள் இன உறுப்புப்பற்றிப் பேசுவதும் குறிப்பதும் இயல்பாகிவிட்டன. இக் காட்சி காணுங் குழந்தைகள் விளையாட்டாகக் கீழ்மக்கள் உரைகளைப் பகர்கின்றன; பிறவுஞ் செய்கின்றன. விளையாட்டுப் பின்னை வினையாக முடிகிறது. ஆதலால் குழந்தைகளைக் கீழ்மக்கள் கூட்டத்தினின்றும் பெற்றோர்கள் பிரித்தே தீரல்வேண்டும்.

தாய் தந்தையர்கள் பழக்கத்தாலோ வேறு எதனாலோ சில குழந்தைகள் கரங்களால் அடிக்கடி உயிர் நிலையைத் தொடுகின்றன. இவ்வழக்கம் மிகக்கொடியது. நாளடைவில் அவ்விடத்தில் ஒருவித உணர்ச்சி தோன்றும். அவ்வுணர்ச்சி இன்ப உறுப்பின் நோக்கை வேறு வழியில் திருப்பி, உடலில் சத்தைப் பரப்பும் வினையைக் கெடுக்கும். அதனால வாழ்வு இளமையிலேயே வெம்பி விழுந்துபோகும். குழந்தை அறியாது அத்தீச்செயல் புரியும்போது அதன் கருத்தை வேறு வழியில் துரத்தத் தாய்தந்தையர் முயலல் வேண்டும். குழந்தை தாய் தந்தையர் வழியில் சார்ந்து நிற்றலால் அது தாய்தந்தையர்கள் சொல்

வழியே நிற்கும் என்பதில் ஐயமில்லை. ஈன்ற அன்னையார் குழந்தையை நோக்கி "அங்கே போகாதே; பூதம் பிடித்துக்கொள்ளும்" என்று இரண்டொரு முறை சொற்றால், குழந்தை குறிப்பிட்ட இடத்திற்குப் போக அஞ்சுவது இயல்பு. பிற குழந்தைகள் அங்கே செல்லும்போதும், "போகாதேயுங்கள். பூதம் பிடித்துக்கொள்ளும். அம்மா சொன்னார்கள்" என்று அக்குழந்தை தனது நண்பர்களைத் தடுக்கும். இது குழந்தைகள் இயல்பு. எத்துணைத் தாய்மார்கள் 'பேய் வருகிறது; பூதம் வருகிறது. சோறுண்' என்று அச்சமூட்டிக் குழந்தைக்குச் சோறூட்டுகிறார்கள். வெறுக்கத்தக்க அச்சமூட்டி அவ்வச்ச வழிக் குழந்தையை நிறுத்தி யாளுந்தாய், குழந்தை தெரியாது பின் வாழ்வைக் கெடுத்துக் கொள்ளத்தக்க தீச்செயல் நிகழ்த்தும்போது ஒருமுறை இருமுறை தடுத்தால் குழந்தை மீண்டும் அத்தீச்செயலில் தலைப்படுமோ? தலைப்படாது.

சில தாய் தந்தையர்கள் மூடச் செயல்களால் குழந்தைகள் கெடுகின்றன. அவைகளை ஈண்டு விரித்துக்கூற வேண்டுவதில்லை. இரண்டொன்று குறிப்பிடுகிறேன். சில தாய் தந்தையர்கள் தங்கள்

அன்பைக் குழந்தைகளின் உயிர்நிலையில் காட்ட விரும்புகிறார்கள். இதனாலும் குழந்தைகள் அடிக்கடி தங்கள் உயிர்நிலையைத் தொடும்பயிற்சி பெறலுண்டு. சில மூடப் பெற்றோர்கள் சிறு அறையில் விளக்கேற்றி வைத்துக்கொண்டு குழந்தைகளுடன் படுத்து ஆடல் பாடல் புரிகிறார்கள். சிறிது உணர்வுபெற்ற குழந்தைகள் தாய் தந்தையர் நாடகத்தை நடிக்கத் தொடங்குகின்றன. அதைப் பார்த்து மகிழுங் கயவர்களுமிருக்கிறார்கள். குழந்தைகளின் அத்தீய ஆடல்களை மற்றவர்களோடு பேசிக் களிப்புறுஞ் சிற்றினங்களும் உலகில் வாழ்கின்றன. என்ன இழிவு ? இப்பாவிகளா குழந்தைகளை நல்வழியில் வளர்ப்பவர்கள் ? இவர்களல்லவோ குழந்தைகளைக் கொலைசெய்யும் யமன்கள்? குழந்தைகளுடன் தாய் தந்தையர்கள் ஒரேபடுக்கையில் படுத்தலே கூடாது. படுத்து ஆடல் பாடல் புரிவது என்ன அறிவுடைமை ?

உயிர்நிலையைத் தொடும் பயிற்சியில் குழந்தையிறங்கும்போதே பெற்றோர் தடுத்தல் வேண்டும். அப்பயிற்சியினின்றும் குழந்தை விலகுமட்டும் பெற்றோர் பெருங்கவலை செலுத்தல் வேண்டும். குழந்தை சிறிது உணர்வு பெற்றதாயின்

“அம்மா அங்ஙனஞ் செய்யாதே. கண்ணைத்தொட்டு அழுத்திக்கொண்டே யிருந்தால் கண்ணின் நிலை என்னாகும்? கண் கெட்டாலும் உலகில் வாழலாம். உயிர்நிலை கெட்டால் மரணம் நேரும்” என்று பெற்றோர் அறிவு கொளுத்தி எவ்வழியிலாதல் அத்தீப்பயிற்சியைத் தொலைக்க முயல்வாராக.

எவ்வழியிலும் குழந்தைகள் உள்ளத்தில் பெண் ஆண் என்னும் நினைவே தோன்றாவண்ணம் வளர்வதும், அவைகளைப் பெற்றோர்கள் அந்நெறியில் வளர்ப்பதும் பின்னைய பேரின்ப வாழ்விற்கு அடி கோலுதலாகும். நல்வளர்ப்புக்குக் கேடுவிளைக்கவல்ல சிற்றினங்களைக் கண்ணால் காணவுங் குழந்தைகளை விடலாகாது. அவர்கள் சேர்க்கையேகூடாது. குழந்தையை நல்வழியில் வளர்க்காது பின்னை விதி, கர்மம், ஊழ் பேச்சு பேசுவது அறிவுடைமை யாகாது.

“தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பது வுந்தீதே-தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது”

எனவரூஉம் ஔவையார் அறிவுரையைக் கவனிக்க.

கல்வியுங் கற்பும்

பெண்மக்கள் வாழ்விற்குக் கல்வி இன்றியமை யாதது. பெண் கல்வியைப்பற்றிப் பெண்ணுரி மைத் தலைப்பிலுங் கூறியிருக்கிறேன். பெண் மக்கள் கல்வியை இளமையிற் கற்றல் வேண்டும். இளமை கல்விக்குரியது. "இளமையிற்கல்" என்றார் ஔவையார். இளமைக்கல்வி பின்னை வாழ் விற்குப் பெருந்துணை செய்யும். பெண்ணின் இளமை, கல்வித் துறையில் கழிவது நலம்.

பல்லாயிரம் நூல்களை மட்டும் வாசிப்பது கல்வி யாகாது. பாடங்களை நெட்டுருச்செய்து பரீட்சை யில் தேறிப் பட்டம் பெறுவது மட்டுங் கல்வி யாகாது. கல்வி என்பது வாழ்வில் இரண்டறக் கலந்து வாழ்வுக்குரிய பயனை அளிப்பது. கல்வியின் பயன் என்னை? அறிவையும் ஒழுக்கத்தையும் வாழ்விற்கு வழங்குவது அதன் பயன். கல்வி அறிவு ஒழுக்கம் என்னும் அடுக்கு வழக்கை நோக்குக.

கல்வியாற்பெறும் அறிவுவிளக்கம்மட்டும் வாழ் விற்குப் போதாது. அறிவோடு ஒழுக்கமிருத்தல் வேண்டும். ஒழுக்கமிலா வாழ்வு எத்தகையதாயி னும் அதனால் வாழ்வுநோக்கம் நிறைவேறாது.

ஒழுக்கத்துக்குரிய கல்வியே வேண்டற்பாலது. தாய்மைக்குரிய பெண்ணிற்கு ஒழுக்கம் உயிர் போன்றது. ஒழுக்கமே பெண்ணாக வளர்தல் வேண்டும். ஒழுக்கமிலாப்பெண் பெண்ணல்லள். அவள் பேய். ஆதலால் பெண்ணைத் தெய்வமாக்கும் ஒழுக்கத்தை அளிக்கவல்ல கல்வியை அவள் இளமையில் பெற்றே தீரல்வேண்டும்.

இப்பொழுது பெண்மக்கள் பலவிடங்களில் ஆண்மக்களைப்போலவே கல்வி பயில்கிறார்கள்; உயர் கல்வியும் பெறுகிறார்கள். இக்கல்வி பெறுவோருட் சிலர் தாய்மைநிலை பெறுதற்கஞ்சி வாளா காலங்கழிக்கிறார். இவர்களைக் கற்றவர்களென்று நான் கூறேன். பெண் வாழ்வின் நோக்கமென்னை? தாய்மை நிலை பெறுதலன்றோ? இறைவன் படைப்பு நோக்கமும் அஃதே. இயற்கையின் நோக்கமும் அஃதே. இயற்கைக்கு மாறுபட்டுப் பெண்ணை வாழச் செய்யுங் கல்வி கல்வியாகுங்கொல்! இயற்கையோடியைந்த வாழ்வை யளிக்கக்கூடிய கல்வியே பெண்ணிற்கு வேண்டற்பாலது. ஆணுக்கும் அத்தகைக் கல்வியே வேண்டற்பாலது. இளமையிலேயே இயற்கை

நுட்பம் உணர்த்தக்கூடிய கல்வியைப் பெண் மக்கட்கு ஊட்டுவது நலம்.

பெற்றோர் தமது பெண்ணிற்கு இளமையி லேயே இயற்கையைக் காட்டிக் காட்டி ஆடல் பாடல் அறிவுறுத்தல் வேண்டும்; மரம் செடி கொடி மலை நிலா ஞாயிறு முதலிய இயற்கைப் பொருள் நினைவு தோன்றும் வழியில் பெண்ணை ஆடுமாறும் பாடுமாறும் அவர் வளர்த்தல் வேண் டும். நமது நாட்டில் பழைய தாய்மார்கள் பனைப்பாட்டு மலைப்பாட்டு நிலாப்பாட்டு வானப் பாட்டு பறவைப்பாட்டு முதலிய இயற்கைப் பாடல்களைப் பாடிப் பாடிக் குழந்தைகளைத் தாலாட்டுவது வழக்கம். இயற்கையைப் பற்றிய பல கதைகள் பாட்டிமார்கள் சொல்வதுமுண்டு. திருடன்கதை கொலைக்கதை குடியன்கதை பேய்க் கதை அச்சமூட்டுங்கதை முதலிய ஆபாசக் கதைகளைக் குழந்தைகட்கு எவருஞ் சொல்லவே கூடாது. மரஞ் செடிகள் அழகாக வளர்ந்து காய் கனிகள் தருவதையும், காற்று வீசுவதை யும், ஞாயிறு ஒளி உமிழ்வதையுங் காட்டி, இம் மரஞ் செடியும் காற்றும் ஞாயிறும் ஏதாவது பயன் கருதி இக்கடன்களாற்றுகின்றனவா என்று பெற்

ற்றோர் அடிக்கடி இளம் பெண்ணுடன் பேசிப் பேசிப் பரோபகார சிந்தையை அவள் உள்ளத்தில் பெருக்கல் வேண்டும்.

பின் தாயாகும் பெண்ணுள்ளத்தில் பயன் கருதாது தொண்டாற்றும் அன்புக்கடவுளைப் பதியச் செயல்வேண்டும். பெற்றோர்கள் குழந்தையைத் தமது பிள்ளை என்று கருதுவதைப் பார்க்கினும் அதைத் தாய்மைக்குரிய ஒன்று என்று வளர்ப்பது சிறப்பு.

இளம்பெண்கள், தீய எண்ணங்களை யூட்டவல்ல களிக்கதைகளை - போலி நாவல்களை - மறக்கதைகளை - இன்னோரன்னபிற கதைகளைக் கேட்டலுமாகாது; அக்கதை நூல்களைக் கரத்தே தொடுதலுங் கூடாது. இதில் பெற்றோர் பெருங் கவலை செலுத்தல் வேண்டும். போலி நாவல்கள் பெண்ணுலகையே கெடுத்து வருகின்றன. 'தங்கள் வாழ்வை நஞ்செனை எரிப்பது போலி நாவல்' என்று பெண்மணிகள் கருதுவார்களாக. போலி நாவல்களையும் போலி நாடகங்களையும் படித்து நல்வாழ்வை யிழந்து பின்னை வருந்தி வருந்தி மாண்ட சில பெண்மக்கள் கதை எனக்குத் தெரியும். அருமைக் குழந்தைகளே! போலி

நாவல்களைப் படியாதேயுங்கள்; தொடாதே யுங்கள். உங்கள் வாழ்வு குலைந்துபோகும். நோய்வாய்ப்பட்டு வருந்தி வருந்திச் சாவீர்கள். கடவுள் உங்களை ஏன் உலகிற்கனுப்பினார்? பிஞ்சில் பழுத்து உதிரவா? நோய் வாய்ப்பட்டு வருந்தவா? அண்ணன் தம்பி உற்றார் உறவினர் ஊரார் சீ சீ என்று பேசிப் பேசி ஒதுக்கவா? அன்று; அன்று. "நீங்கள் தாயாகவேண்டும்; நல்வாழ்வு பெறல்வேண்டும்; பேரின்பம் பெறல் வேண்டும்" என்பது ஆண்டவன் நோக்கம். அப்பெருவாழ்விற்கெனப் பிறந்த நீங்கள், சிறு நாவல் பித்துக்கொண்டு வாழ்வையா குலைத்துக் கொள்வது? போலி நாவல்களைப் படியாதேயுங் கள். போலி நாவல்கள் இளம்பெண்கள் கண் களிற் படாதவாறு பெற்றோரும் ஆசிரியன்மாருங் காப்பாராக.

பெண் மக்கட்கு உடற்கூறு நன்றாகத் தெரிதல் வேண்டும். உடற்கூற்று நூல்கள் செவ்வனே பெண்மக்கட்குப் போதிக்கப்படல் வேண்டும். உடற்கூறு தெரியாது எத்துணையோ பெண்கள் பலவழியிலுங் கெடுகிறார்கள். உடல் இயல்பு நன்றாகத் தெரிந்தால் அதற்கேற்ற வண்ணம்

வாழ்வு நடாத்த அவர்களால் இயலும். கருக்குழியைப்பற்றியும், அதன் சினைகளாக உள்ள சிறு சிறு உறுப்புகளைப் பற்றியும், அவைகளின் தொடர் உறுப்புகளைப் பற்றியும் பெண்மக்கள் போதிய உணர்வு பெறுதல் அவசியம். சில பெண்மக்கள் உறுப்புக்களின் நிலையுணராது, வழிதுறை தெரியாது உழன்று, இன்பமிழந்து நிற்பதோடு, வேறு பல நோய்களையுந் தேடிப் பாழ்படுகிறார்கள். உடற்கூறு உணர்ந்து கொள்வதோடு அகத்திணை (உள்ளொழுக்கு, மனோதத்துவம்) தெரிந்து கொள்ள அதைப் பற்றிய நூல்களைப் பெண்மக்கள் பயிலுதல் நலம். மக்களியல்பை அளந்தறியும் ஆற்றல் பெண்மக்கட்கிருத்தல் அவசியம்! அவசியம்!

இல்லறம் நடாத்தவும், பிள்ளைகளைத் தக்க வழியில் வளர்க்கவும், சமயம் நேர்ந்துழி வேறுபல துறைகளிலிறங்கிக் கடனாற்றவும் பெண்மக்கள் பலதிறக் கலைஞானம் பெறுதல்இன்றியமையாமை. எல்லாப் பெண்மக்கட்கும் பதார்த்தகுணம், வைத்தியம், கணிதம், அரசியல் முதலிய கலைகளில் பொதுஅறிவு இருத்தல் வேண்டும். பெண்ணெனில், அவள் ஒரு பல்கலைக் கழகமாயிருத்தல்

வேண்டும். இல்லையேல் அவள் தாயாகிப் பிள்ளை களை எப்படி வளர்க்க முடியும்?

எல்லாக் கல்வித் துறைகட்கும் மேலாகப் பெண்மணி கற்கவேண்டிய ஒரு சிறப்புக் கல்வி யுளது. அதாவது சமயக்கல்வி. மேற்கூறிய கல்வித் துறைகளெல்லாம் உடல்போன்றன. சம யக் கல்வி உயிர்போன்றது. அவ்வுயிர்க்கல்வி மிக மிக இன்றியமையாதது. இயல்பாகப் பெண் மக்களிடத்துக் கடவுட் டன்மையுண்டு. இது குறித்து முன்னருங் கூறியிருக்கிறேன். அவ் வியல்புஅரும்ப, அதைத் தூண்டுதற்குச் சமயக் கல்வி பெண்மக்கட்கு வேண்டற்பாலது.

பெண்மக்கள் உலகியல் கல்வியையும் கடவு ளியல் கல்வியையும் முறையே பெறுவார்களா யின், அவர்கள் உடல்நிலை ஒழுக்கநிலை அன்பு நிலை முதலியவற்றை நன்குணர்ந்து நற்றாய்மார் களாகக் கடவுள் தொண்டு செய்து இன்பநுகர் வார்கள். ஆதலால் பெண்மக்களை இளமையி லேயே கல்வித்துறைகளில் வல்லவர்களாக்கப் பெற்றோர்கள் பெருங்கவலை கொண்டு உழைப் பார்களாக.

பெண்மக்கள் கேட்டிற்குக் காரணம் கல்வி இன்மையே. கல்வி பயின்று உடலியல் உயி

ரியல் ஒழுக்கவியல் அன்பியல் முதலியவற்றைப் பெண்மக்கள் செவ்வனே யுணர்வரேல், அவர்கள் கனவிலும் மறந்தும் தீயொழுக்கத்தை நினையார் கள். நிறைகேட்டால் இன்னின்ன துன்பங்கள் உண்டு என்று இளமையில் செவ்வனே யுணரப் பெறும் பெண்மணி ஒரு போதும் ஒழுக்கந் தவறி நில்லாள். தாஞ்சாக மருந்துண்போர் ஒரு வருமில்லை. பெண்ணிற்குள்ள பெருமை யாண் டுளது? கற்பில் என்று எவருங் கூறுவர்.

" பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின் "

என்றார் திருவள்ளுவனார். பெண்ணிற் பெருந் தகையது ஒன்றில்லை. எப்பொழுது? அவள் கற்பெனுந் திண்மையுண்டாகப் பெறுவளேல் அப்பொழுது அவள் பெருந்தகைமைக்கு உடைய வளாகிறாள். பெண்ணிற்குள்ள பெருமையெல் லாங் கற்பில் அடங்கியிருத்தல் கவனிக்கற்பாலது. கற்புடையாளே பெண். அஃதில்லாள் பெண் ணல்லள்.

கற்பிழக்கும் பெண் முதலாவது தனது உயிர்நிலை யுறுப்புக்களாய இன்பக் கருவிகளின் உணர்ச்சியை நாளடைவில் இழக்கிறாள். அவ்வுணர்ச்சி குன்

றக் குன்ற உடலில் இரத்த ஓட்டங் குன்றும். இரத்த ஓட்டங் குறையக் குறைய உடல் கட்டுக் குலையும். அக்கட்டுக் குலைவால் அழகெனுந் தெய்வம் மறையும். பின்னை எந்நிலையுறும்? உயிர்நிலையில் பல நோய்கள் தோன்றும். அவை உடலெல்லாம் பரவும். பாழும் பெண் படுந் துயரத்துக்கோர் அளவும் உண்டோ? அவள் படுந்துயர் நரகத் துயரன்றோ? அவள் நிலையுன்ன உன்ன உள்ளம் உருகுகிறது. இந்நோய் வாய்ப் படும் பெண் தாயாகும் பேரின்பத்தை யிழக்கி றாள். அவ்வின்பமில்லையேனும் உடலின்பமேனு முண்டோ? இரவும் பகலும் நோயின்பந் தவிர வேறின்பம் அவளுக்கேது? இவ்வளவு கேட்டிற் குங் காரணமென்னை? கற்பிழந்தமையன்றோ? கற்பிழந்தவள் அழகை யிழக்கிறாள்; பெண் மையை யிழக்கிறாள்; தாய்மையை யிழக்கிறாள்; எல்லாமிழக்கிறாள்.

கற்புக்காத்தல் ஒருத்தியின் மனோ நிலையைப் பொறுத்து நிற்பது. மனதில் எழுந் தீய எண் ணமே கற்பைக் குலைப்பது. நல்லெண்ணமோ பெண்ணை வளர்ப்பது. நல்லெண்ணம் அறி வைப் பொறுத்து நிற்பது. அறிவெண்ணங்கட்

கேற்றவண்ணம் கருவுறுப்புக்களின் தன்மை நிலவும். அந்நிலைக்கேற்ற உடல் அமையும். தூய அறிவும் தூய எண்ணமும் நிறை காத்து நல்லுடல் அமைத்து அழகெனுங் கடவுளைப் பெண்ணின்பால் எழுந்தருளச் செய்யும். அழகமையாப் பெண், பெண்ணல்லள். அழகென்பது வெண் தோல் மஞ்சள் தோல் சிவப்புத் தோலைப் பற்றி நிற்பதன்று. அது, தூய மனதால் அமையும் கற்பு உறுதியினின்றும் எழும் இரத்த ஓட்டத்தானும், தசைக்கட்டானுந் தோற்றமுறும் அருவத்தன்மையது. சுருங்கக்கூறின் பெண்ணின் நலன் அவள் கற்பிலிருக்கிறது என்று கூறலாம். இடையிடையே இந்நூற்கண் இதைப்பற்றிக் குறித்துச் செல்வன்.

கற்பிழத்தலால் விளையுங் கேட்டை யுணராத பெண்ணல்லளோ தன்னொழுக்கத்தைக் கெடுத்துக் கொள்பவள்? கற்பிழத்தலால் இத்துணைக் கேடு உண்டு என்று இளமையிலேயே கல்வியறிவால் பெண் உணர்ந்திருப்பளேல் அவள் ஒழுக்கந்தவற உன்னுவளோ? கல்வியிலாக் குறையால் பெண்ணுலகில் சில கேடுகள் விளைகின்றன. ஆதலால் பல கலைகளைப் பெண் இளமையில் பயிலல் வேண்டும்.

கல்வி பயின்ற பெண்கள் நிறை தவறி நிற்ப தில்லையோ என்று சிலர் வினவலாம். ஏட்டைப் படித்தவரெல்லாருங் கல்வி கற்றவராகார். நூல் களெல்லாம் நூல்கள் அல்ல. பெண்களைக் கெடுக் கும் நூல்களுமுண்டு. தீயர்கள் செயல்களெத்துணை யோ நாட்டில் நிலவுகின்றன. அவர்களால் எழுதப் பட்ட நூல்களும் நாட்டில் உலவுகின்றன. அந் நூல்களைப்படிப்பவர்கள் எங்ஙனங் கற்றவர்களா வார்கள் ?

சில நன்னூல்களைப் படித்தவர்களுங் கெடுத லுண்டு. நல்லுணவுடன் தீயவுணவு கலந்துண்டால் தீயவுணவின் பயனே மிகுந்துநிற்கும். நன்னூல் பயிற்சியோடு வேறு தீப்பயிற்சிபெறின் கேடு விளைதல் இயல்பு. நட்பு, கூட்டுறவு, சுற்றம் முதலியவற்றையும் வாழ்வு பொறுத்து நிற்கிறது. நன்னூல் பயிற்சியோடு இவைகளும் நல்லனவாக அமைதல் வேண்டும். தீய நூல்களை விலக்குவது போல தீ நட்பு முதலியவற்றையும் விலக்குதல் வேண்டும். தீ நட்பால் வாழ்வு கெடுமென்று சொல்லவேண்டுவதில்லை.

பெண்மக்கள் நண்பரை - அதினும் ஆண் நண்பரைத் தெரிந்தெடுத்தலில் பெருங்கவலை

செலுத்தல்வேண்டும். ஆடவரோடு நட்புக்கொள்ள லாகாது என்று யான் கூறமாட்டேன். எவரோடும் நட்புக் கொள்ளலாம். அந்நட்பு தீ நட்பாயிருத்தல் கூடாதென்பதை மட்டும் வலியுறுத்துகிறேன். எவ்வாடவனுதல் பேசுகையில் காமக்கிளர்ச்சி எழுப்பக்கூடியஉரைபகர்வானேல்,தன்னைக்கொல்ல வந்த கொலைஞன் என்று அவனைக்கருதி, அவனது நட்பை உடனே பெண்மகள் களைதல் வேண்டும். ஏட்டுக்கல்வியினும் நட்பாராய்ந்து தெரியப் பயி லுங் கல்வி மிகச்சிறந்தது. அதுவுங் கல்வியினத் திற் சேர்ந்ததாகும்.

பெண்மக்கள் இனவேற்றுமை கருதாது ஆண் மக்களுடன் விளையாடலாம். வயதேற வயதேறத் தனித்து ஒரு தனி ஆடவனோடு போதலும் வரு தலும் ஆடலும் பாடலும் கூடா. எதைச் செய் தாலும் பெண்மக்களும் ஆண்மக்களுங் கூட்டங் கூட்டமாகக் கூடிச் செய்யின் வேறு எண்ணத் துக்கு இடம் நேராது.

வயதடைந்த நாள் தொட்டுத் திருமணம் வரை பெண்ணுக்குரிய பருவம் மிக நெருக்கடியானது; சோதனைக்கு முரியது. அக்காலத்தில் தன்னைக் காத்துக்கொள்ளும் பெண்ணே பின்னைப் பெருந்

தேவியாவள். நற்கல்வியும் நன்னட்பும் நல் வளர்ப்பும் பின்னைத் தாய்மைக்குரிய எல்லா நலன் களையுந்தரும். உற்றவயதில் பெண்மக்கள் "பின் தாயாதற்கு ஆக்கந்தேட வேண்டிய பருவம் இது. இதனை நல்வழியில் ஓம்புதல் வேண்டும்" என் னும் எண்ணமே பெண் உளத்தில் உறுத்து நிற்றல் வேண்டும். அதற்குரிய கல்வி நட்பு முத லியன இளமையில் பெறவேண்டுவது அவசியம்.

உடலோம்பல்

கல்வி அறிவு ஒழுக்கம் முதலிய எல்லாவற்றிற் கும் நிலைக்களன் உடல் என்று சொல்லவேண்டுவ தில்லை. உடலை ஓம்பாது வெறுங்கல்வி அறி வைப் பெற முயல்வதால் என்ன பயன் விளையும்? கல்வி அறிவைப் பயன்படுத்த நல்லுடல் தேவை. ஆதலால் உடலோம்புவதிலும் பெண்மக்கள் கருத்துச் செலுத்துவார்களாக.

உடலோப்பு முறைகள் இன்ன இன்ன என்று இந்நூலில் விரித்துக் கூறவேண்டுவதில்லை. அவை கட்கெனத் தனி நூல்கள் பலவிருக்கின்றன. நமது நாட்டுக்குப் பயன்படு முறையில் யானும் ஒரு நூல் எழுத எண்ணியிருக்கிறேன். ஈண் டுச் சிற்சிலவற்றைச் சுருங்கச் சொல்கிறேன்.

தூய்மை அகத்தூய்மை புறத்தூய்மை என இரண்டு வகைப்படும். அகத்தில் நல்ல எண்ணங்களே தோன்றுமாறு பழகல் வேண்டும். தீய எண்ணங்கள் அகத்திலுறுமேல் அவை உடல் வளனையுங் கெடுத்து வாழ்வையே சிதைக்கும். உடலோம்பலுக்கு முதல் முதல் வேண்டற்பாலது அகத்தூய்மை. அகத்தூய்மை உடல்நலத்துக்குப் பெரிய அமிழ்தம். அகத்தூய்மைக்கு உரியது வாய்மை. "அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்றும் "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற செய்யாமைசெய்யாமை நன்று" என்றும் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்திருத்தல் காண்க. வாய்மையுள்ள விடத்தில் வேறு பல அறத்துறைகள் உறைவது இயல்பு. பிற மேலே போந்துள்ள நல்லிணக்கம் என்னுந் தலைப்பின் கீழ்க்காண்க.

அகத்தூய்மை போலப் புறத்தூய்மையுங் காத்தல் வேண்டும். புறத்தூய்மை யில்லாத பெண் மகளின் அகமுந் தூய்மையாயிராது. "அகமே புறம்" "மனம்போல் வாழ்வு" எனவரூஉம் மூதுரைகளே உற்று நோக்குக. புறத்தூய்மையில் உடல் தூய்மையையும் வீட்டுத் தூய்மையை

யுஞ் சேர்த்துக்கொள்க. உடல் தூய்மை காவாது விடின் அஃது உடலில் அழுக்குச் சேர்த்துப் பல திற நோய்களை உண்டுபண்ணும். வீடுகளிலும் அழுக்குகள் அடர்ந்திருந்தால் அவைகளினின்றும் பலதிற நச்சுப்பூச்சிகள் தோன்றி நோய்களைப் பிறப்பிக்கும்.

புறத்தூய்மைக்குப் பல சுகாதார முறைகள் வேண்டற்பாலன. பெண்மக்கட்கு இளமையிலேயே சுகாதாரக்கல்வி பயிற்றல் வேண்டும். சுகாதார அறிவு பெறாத பெண்ணால் அவள் வாழ்விற்கும் அவளைத் தொடர்ந்தோர் வாழ்விற்கும் பல கேடுகள் விளையும். சுகாதார முறைகளை ஆண்மக்கள் மட்டுங் கவனிப்பதால் பயன் விளையாது. அவைகள் பெண்மக்களாலுங் கவனிக்கப் பெறல் வேண்டும். சுகாதார உணர்ச்சியில்லாத பெண்ணுடன் எப்படி வாழ்வது? அவள் சமைக்கும் உணவை எப்படி உண்பது? அவள் சமைக்கும் உணவு நஞ்சன்றோ? பெண் தாயாகலான் அவள் வாழ்வு சுகாதார வாழ்வாயிருத்தல் அவசியம். அவள் அவ்வழி நிற்பாளாயின் அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும் அவ்வழியில் நிற்கப்பயிலும். ஆன்மா சார்ந்ததன் வண்ண மாவதன்றோ?

"புறத்தூய்மை நீரால் அமையும்" என்றார் திருவள்ளுவனார். நீராடலை ஈண்டுக் குறிப்பதற்கு முன்னர் வேறுசில கடன் முறைகளைக் குறிப்பது நலமெனத் தோன்றுகிறது.

உறக்கம் : ஆண்மக்களினும் பெண்மக்கட்கு உறக்கஞ் சிறிது அதிகந்தேவை. நமது நாட்டில் இதற்கு மாறுபட்ட வழக்கமுண்டு. பெண்மக்கள் உறக்கத்தை ஆண்மக்கள் பலவழியிலுஞ் சிதைக்கிறார்கள். பெண்ணின் உடல் இயல்பையும் அமைதித் தன்மையையும் உணரும் ஆண்மகன் பெண்மகள் உறக்கத்துக்கு இடையூறு செய்யான். பெண்மணிகள் நன்றாக உறங்கி எழுவதே நலம். உறக்கம் வாழ்விற்கு வேண்டற்பாலது. உறக்கமாவது மன ஓய்வேயாகும். ஒருவரது உறக்கத்தைக்கொண்டு அவரது உடல் நிலையை அளந்துகொள்ளலாம். உறக்கத்தின் போது பற்பல எண்ணங்களும் பற்பல கனவுகளுந் தோன்றல்கூடாது. நல்லுடல் பெற்றிருப்போர்க்கு அவைகள் தோன்றா. நோயுளார்க்கே அக்கொடுமையுண்டு. இரவில் குலையாத உறக்கம் வரும் முறையில் பகலில் உடற்பயிற்சி யிருத்தல் வேண்டும்.

உறக்கநேரத்தைப்பற்றிப் பலதிறக் கருத்து வேற்றுமைகளுண்டு. சிலர் எட்டுமணி நேரம் என்பர்; சிலர் ஆறுமணி என்பர்; சிலர் நான்கு மணி என்பர். எட்டுமணிக்குமேலே போகாமலும் நான்குமணிக்குக் குறையாமலும் உறங்குவது நலம். ஆறுமணி நேரம் மிகப்பொருத்தம். நேரம் அவரவர் உடல் நிலைக்கேற்ற வண்ணம் அமையும். உறக்கம் இடையில் இடர்ப்படலாகாதென்ப தொன்றே பெரிதுங் கவனிக்கற் பாற்று. இரவு பத்துமணிக்குப்படுத்து நான்கு மணிக்கு எழுவது நலம்.

உறங்குமிடம் நறுங்காற்று எளிதில் உலவக் கூடியதாய், ஞாயிற்றொளி படரக் கூடியதாயிருத் தல் வேண்டும். இவைகள் நன்கு பரவாத குகை களில் படுத்துறங்குவது நாளடைவில் நலத்தைக் குலைத்துக்கொள்வதாகும். படுக்கை அறைக்கதவு களும்,பலகணிகளும் திறக்கப்பட்டிருத்தல் வேண் டும். கதவுகளையும் பலகணிகளையும் அடைத்து உறங்குவதால் பல நோய்கள் உண்டாகும். காசநோய்க்குச் சொல்லப்படும் பலகாரணங்களுள் புழுக்கமான அறையில் படுத்துறங்குவதும் ஒன்று. படுக்கைகளைத் தூய்மையாக வைத்திருத்தல்

வேண்டும். அன்றாடம் ஞாயிறொளியில் படுக்கை களை உலர்த்தல் வேண்டும். பெண்மக்கள் எக்கா ரணம் பற்றியும் அடுப்புள்ள அறையில் படுத்தல் கூடாது. ஆங்கே நச்சுக்காற்று அதிகம்.

துயிலெழல் : "வைகறைத் துயிலெழு" என்பது ஔவையார் திருமொழி. வைகறையில் துயில் எழுவதைப்பற்றி இயற்கை நூலார் பல படக் கூறியிருக்கிறார். பறவைகள் விலங்குகள் முதலிய அஃறிணை யுயிர்கள் பெரிதும் இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்துகின்றன. அவைகள் எப்பொழுது துயிலெழுகின்றன? விடியற் காலத்திலல்லவோ? சூரிய உதயத்துக்குப் பின்னர்ப் படுக்கை விட்டெழுவது இயற்கைக்கு மாறுபாடு. அவ்வாறெழும் பயிற்சியுடையார் விரைவில் நோய்வாய்ப்படுவர். இயற்கை எழுப்பும் போது படுக்கையில் கிடப்பது, குருதியை வெம்மைப்படுத்தி நாளடைவில் கொதிப்பூட்டிப் பல நோய்கட்குக் கால் கொள்வதாகும். ஆதலால் வைகறைத் துயிலெழல் இயற்கை வாழ்விற்குரிய தென்க.

காலைக்கடன் : காலையில் எழுந்ததும் மலங் கழித்தல் ஒழுங்கு. மலம் சிக்கலுறாது கழிவது

நல்லுடலுக்கு அறிகுறியாகும். மலச்சிக்கலுற்றால் நோய்த்தொடக்கம் என்று கொள்ளல் வேண்டும். மலச்சிக்கல் உற்றதும் சிலர் மருந்துங் கையுமாக நிற்கிறார். அது தவறு. மலச்சிக்கல் உற்றதற்குக் காரணம் யாது என்பது காணல் வேண்டும். பொருந்தா உணவு கோடல், மீதூண் கொள்ளல், பசியெழா முன்னம் சாப்பிடல், கள்ளருந்தல், தீயொழுக்கம், கெட்ட எண்ணம், கவலை, புழுங்குமிடத்தில் வாழ்தல், எப்பயிற்சியுஞ் செய்யாது ஓரே யிடத்தில் கிடத்தல் முதலியன. இத்தீமைகளினின்றும் விலகாது மருந்து மட்டும் கொள்வது அந்நேரத்தில் குணங்காண்பதாகும். மருந்து முடிந்ததும் மீண்டும் மலச்சிக்கல் தலைகாட்டி வருத்தும்.

'மலச்சிக்கல் தானே' என்று ஒருநொடிப்பொழுதுங் கவலையீனமாக இருத்தலாகாது. எல்லாப் பிணிகட்கும் பிறப்பிடம் மலச்சிக்கல் என்பதை மக்கள் உணர்வார்களாக. மலம் வேளையில் கழியாது உள்ளே நின்றால், அது நஞ்சாகி உடலின் அகப்புற உறுப்புக்களை எரிக்கும்; உறக்கத்தைக் கெடுக்கும்; நோயுண்டாக்கும்; எல்லாக் கொடுமையுஞ் செய்யும்.

மலச்சிக்கலால் துன்புறுவோர் அன்றாடம் எனிமாவால் மலத்தை வெளிப்படுத்தி இயற்கை வாழ்வு மேற்கொள்ளல் வேண்டும். தண்ணீர் மட்டுங்கொண்டு ஒரு நாளோ இரண்டு நாளோ நிலைமைக் கேற்றபடி விரதமிருந்தால் உள்ளே யிருக்கும் அழுக்குகளெல்லாம் வெளியே வரும்; பசித்தோற்ற முண்டாகும். நீருங் காற்றும் ஞாயி றொளியும் மலச்சிக்கலுக்குப் பெருமருந்து. பழ உணவு மிகப்பொருத்தம். எளிதில் ஜீரணமாகக் கூடிய பொருந்திய உணவு கொள்ளுதல் நலம். உடற்பயிற்சி மீது கவலை செலுத்தல் வேண்டும். பொருந்திய உணவும், நீரும், காற்றும், ஞாயி றொளியும், உடற்பயிற்சியும் மலச்சிக்கலைப்போக்கி நிலைமையை ஒழுங்குபடுத்தும். இந்நூலில் இதைப் பற்றி விரித்துரைத்தல் மிகையாகும். அவ்வப் போது இயற்கை நுட்பந்தெரிந்த மருத்துவர் மாட்டுக் கேட்டு வாழ்வு நடாத்தல் அறிவுடைமை.

பயிற்சி: உடலுக்குப் பயிற்சி மிக அவசியம். இல்லையேல் கட்டுக்களும், தசைகளும், பிறவும் பிணிப்புண்டு பின்னை இடர் விளைக்கும். பயிற்சி யின் அவசியத்தை முதலாவது நன்கு உணர்தல் வேண்டும். உடற் பயிற்சி எதுவாயினுமாக.

அதைக் காலையில் ஒழுங்காகச் செய்துவரல் வேண்டும். காலையிலும் மாலையிலும் பயிற்சி செய்துவரலாம். காலை நேரத்தை விடுத்து மாலை நேரத்தில் பயிற்சி செய்தல் இரண்டாந் தரமாகும். காலையில் பயிற்சி செய்ய முடியாதவர்கள் மாலையில் செய்யலாம். பயிற்சிக்குரிய காலம் காலை நேரமேயாகும்.

பயிற்சிகள் பல திறத்தன. இங்கே அவைகளை விரித்துக்கூறாது பெண்மக்களுக்குரிய சிலவற்றின்மீது கருத்தைச் செலுத்துகிறேன். மேல்நாட்டுப் பெண்மக்கள், நடை, குதிரையேற்றம், பந்தாட்டம், தண்ணீரில் நீந்தல் முதலியவற்றைக் கொண்டிருக்கிறார்கள். இவைகளை நமது நாட்டுப் பெண்மக்களுங் கொள்ளலாம். பந்தாட்டம் பழைய காலத்தில் நமது நாட்டு மகளிர் ஆட்டங்களுள் ஒன்றாயிருந்தது. இதனை நமது நாட்டுப் புராணங்களிற் காணலாம்.

நமது நாட்டு மகளிராட்டங்கள் பல உண்டு. அவை கும்மி குரவை கோலாட்டம் பரதநாட்டியம் இசை முதலியன. இவ்வாட்டங்கள் மகிழ்ச்சியுடன் உடல் நலனையும் ஊட்டுவன. நமது நாட்டுப் பெண்பாடசாலைகளில் இவ்வாட்டங்கள்

போதிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் இவ்வாட்டங்கள் நிகழ்தல் வேண்டும். பரத நாட்டியம் ஒவ்வோர் உறுப்புக்கும் உரமூட்டுவது. அஃது இப்பொழுது வீட்டுக் குலமகளிரை விடுத்து மற்றவரிடம் புகுந்து பொருளீட்டும் களியாட்டுகளுள் ஒன்றாக ஒதுங்கி விட்டது. பரத நாட்டியம் தலையாய பயிற்சி. இசை மிகநுண்ணிய பயிற்சி. அது பல நுண் உறுப்புக்களுக்கு உரமூட்டும். பெண்மக்கள் இசைப் பயிற்சியால் உடல் நலங்காத்து வரலாம்.

நமது நாட்டுப் பெண்மக்கள் வாழ்விலேயே வேறு பல பயிற்சிகளும் அமைந்திருக்கின்றன. அவை நீர் முகத்தல், வீடு பெருக்கல், அரிசி குத்தல், மாவரைத்தல், இராட்டை சுற்றல் முதலியன. இவைகள் பெண் மக்களின் கை கால் இடுப்பு முதலியவற்றிற்கு உரமளிக்கின்றன.

நாகரிகம் என்னும் பெயரால் இப்பொழுது இயந்திரம் என்னும் அரக்கன் உலகத்திலுள்ள இயற்கை ஆற்றலையும் வனப்பையும் வெட்டிச் சாய்த்து வருகிறான். அவ்வரக்கன் நமது நாட்டிலும் நுழைந்து சூறையாடுகிறான்; நமது நாட்டுப் பெண்மக்களின் இரத்தம் சத்து தாது அழகு முத

வியவற்றை உறிஞ்சுகிறான். பெண்மக்கள் என்புக் கூடுகளாய்க் கணீல் கணீல் என இருமல் ஓசை எழுப்புகிறவர்களாய், மருந்துங் கையுமாய் நிற்கிறார்கள். நமது நாட்டில் நெல் அரிசி மிளகு சீயக்காய் எல்லாவற்றையும் தூளாக்க மூலை முடுக்குகளிலும் இயந்திரங்கள் நுழைந்திருக்கின்றன. இயந்திரங்கள் பெண்மக்களைச் சோம்பேறிகளாக்குகின்றன; அவர்களின் உடல் நலங் கெடுக்கின்றன; உணவுப் பொருளிலுள்ள சத்துக்களையும் போக்குகின்றன. உதாரணமாக இயந்திரத்கால் குத்தப் பெற்ற அரிசியை எடுத்துக்கொள்வோம். அரிசிமீது உமியிருக்கிறது. அரிசி மீதுள்ள சத்தின் காப்புக்கென உமி இயற்கையில் அமைந்திருக்கிறது. இயந்திரம் உமியை நீக்கும்போது அரிசி மீதுள்ள சத்துமில்லாதவாறு துலக்கிக் கழிக்கிறது. அச்சத்தில் சில நலன்களுண்டு. அதனுள் ஒன்று ஜீரணத்துக்குத் துணை நிற்பது. அத்தகைச் சத்தில்லாச் சோற்றை உண்பதால் என்ன பயன்? நோயே விளையும் பயன்.

செல்வர் வீட்டுப் பெண்மகளிற் பலர் வீட்டு வேலையுஞ் செய்வதில்லை; வேறு ஆட்டங்களும் ஆடுவதில்லை. அவர்கள் நிலை குறித்துப் பெரி

தும் இரங்குகிறேன். அவர்கள் எத்துணையோ உயிர்க்கொலை செய்யும் பாவத்துக்குள்ளாகிறார்கள் என்று சுருங்கச் சொல்கிறேன். அவர்கள் கருவில் உயிர் தங்குதலே அரிது. தங்கினும் இடையிடையே அது கரைந்துபோகும். கரையாது நிற்பினும் பிள்ளை பெறுகையில் குழந்தை உள்ளே யிறந்துபோதலுண்டு. சில சமயங்களில் பெருமுயற்சி செய்து கருவியால் குழந்தையைத் துண்டித்து வெளிப்படுத்துவது முண்டு. இக்கொலைகட்குக் காரணர் யார்? காரணம் எது? உடற் பயிற்சி செய்யாத செல்வப் பெண்மக்கள் காரணர். காரணம் அவர்கள் சோம்பல்; சோம்பல். பெண்மக்களுக்குப் பயிற்சி யின்றியமையாதது.

நீராடல்: நீராடலைப்பற்றி மேல் நாட்டார் பல முறைகள் வகுத்திருக்கிறார். அவைகளில் வீழ்ந்து நாம் இடர்ப்படவேண்டுவதில்லை. குளிர் மிகுந்த நாட்டில் பல முறைகள் வேண்டற்பாலன. நமது நாட்டிற்குச் சூரிய நாராயணன் திருவருளுண்டு. அத்திருவருள் எவ்வளவோ சுகாதாரக் குறைகளைக்காத்து வருகிறது. ஆதலால் குளிர் மிகுந்த மேல் நாட்டு முறைகள் நமது நாட்டவர்க்கு வேண்டுவதில்லை.

காலையில் தூய நீராடுதல்வேண்டும். மெலிந்த உடலினோர் வெந்நீரில் மூழ்குவது நலம். ஊற்று நீரோ ஓடு நீரோ இல்லாத விடத்து எல்லாரும் வெந்நீரில் மூழ்குவது சிறப்பு. ஓடுநீர் மிகநறு நீராயிருப்பின் மூன்று வேளை தலை மூழ்குவது நலம்.

நீராடும்போது உடம்பிலுள்ள அழுக்குகளை நன்றாகத் தேய்த்துக் கழுவுதல் வேண்டும். பச்சைப்பறுப்பு சீயக்காய் உபயோகிக்கலாம். சோப் அநாவசியம்.

நாடோறும் நீராடுவோரை நோயணுகாது. மற்றவரை நோய் வருத்தும். நீராடல் மிக மிக அவசியம். நீராடாது பெண்மகள் எவ்வினையும் நிகழ்த்தலாகாது. "கூழானாலுங் குளித்துக்குடி கந்தையானாலுங் கசக்கிக்கட்டு" என்னும் பழமொழியை உற்று நோக்குக.

நீர் மூழ்கலைப் போலவே வேறு இரண்டு மூழ்க்குகள் இருக்கின்றன. ஒன்று காற்று மூழ்க்கு; மற்றொன்று ஞாயிறொளி மூழ்க்கு. இவ்விரண்டிற்கும் நீண்ட நேரமும் பெரு முயற்சியும் வேண்டுவதில்லை. சிறிது நேரம் தூய காற்று வீசுமிடத்தில் சூரிய ஒளிபட நின்றால் சாலும். அதிகாலை

யில் புறப்படும் இளஞ் செஞ்ஞாயிறு ஒளியும் மாலை ஞாயிற்றொளியும் உடல் நலத்துக்குரியன. ஞாயிற்றொளி ஒவ்வோர் உறுப்பிலும் படருமாறு புரண்டு புரண்டு படுத்தல் மிகவும் நன்று.

இக்காலைக் கடன்களைக் குறைவறச்செய்து சிறிது நேரம் அன்பு வடிவான ஆண்டவனை உன்னிப்பொருந்திய உணவு கொள்ளல் வேண்டும்.

உணவு: அடக்கம் பெண்மக்களுடைமை என்று மேலே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வுடைமை குழந்தைப் பருவத்திலேயே பெண் மக்கட்கு அணியப்பெறல் வேண்டும். அடக்க நிலைகள் பலதிறத்தன. அவைகளுள் தலையாயது நாவடக்கம். நாவடக்கம் இருபாலார்க்குந் தேவை. அது பெரிதும் பெண்மக்கள்பால் சிறந்து விளங்கல் வேண்டும். நாவடக்கமிலாப் பெண் பின்னைப் பிற அடக்கங்களையுமிழப்பாள். ஆதலால் நாவடக்கம் பெண் மக்கட்கு மிக மிக இன்றியமையாதது.

குழந்தையில் கண்டதைத் தின்று பழகும் பெண் பின் நாவடங்கி வாழ்தல் அரிது. பெண் மகள் குழந்தையில் கண்டதைத் தானே தின்ன மாட்டாள். தாய் தந்தையர்கள் மடமையால்

குழந்தை கண்டதைத் தின்பதுண்டு. குழந்தையில் பெண்மகள் கண்டதைத் தின்பது பின்னை வாழ்வைக் குலைக்குமென்பது மூடத் தாய் தந்தையர்க்குத் தெரிவதில்லை. குழந்தைப் பருவத்திலேயே கண்டதைத்தின்று கொழுத்தால் பின்னை வாழ்வில் பெண் மிக வலிமை யுடையவளா யிருப்பாள் என்பது அத் தாய் தந்தையர்கள் கருத்துப் போலும்! குழந்தைகட்கு அளவாக உணவளித்து, நாவடங்க அவைகளை வளர்க்கத் தாய் தந்தையர்கள் பயில்வார்களாக.

சில தாய் தந்தையர்கள் அன்பு அன்பு என்று கண்டதை வாங்கிக் குழந்தைகட்குக் கொடுப்பதுண்டு. இவ்வன்பு பின்னைப் பெண்ணை என் பாக்கு மென்பதைப் பெற்றோர் உணர்ந்து நடப்பாராக. பிள்ளைகளுக்குக் கண்டதை வாங்கிக் கொடுக்கும் வழியில்தான் பெற்றோர் அன்பைக் காட்டவேண்டும் போலும்! அவ்வன்பு அன்பு மாகாது. அது பெண்ணை விரைவில் சுடுகாட்டுக்கு அனுப்பும் அன்பாக முடியும். அம்மூட அன்பு எத்துணையோ பெண்மக்கள் வாழ்வைக்குலைக்கும் யமனாகிறது. பின் வாழ்வில் பெண் தாயாதற்கு வேண்டப்படும் இயல்பும் உடலும் அமைதற்

குரிய உணவு ஊட்டுவதில் பெற்றோர்கள் கவலை செலுத்துவது அன்பாகும்.

உணவின் தன்மை, அளவு முறை, காலம் முதலியவற்றைப் பெண்ணின் இளமையிலேயே தாய் தந்தையர்கள் கணித்துப் பழக்கத்தில் கொணரல் வேண்டும். அப்பழக்கம் நாவடக்கை இயற்கையில் கொணர்ந்து நிறுத்தும். கண்டபொருளைக் காணுந்தோறும் நாவூறப்பெறும் பெண்ணால் பெண்ணுக்குரிய வாழ்வு நடத்த இயலாது. அவள் அடிக்கடி நோய்வாய்ப்பட்டுங் கிடப்பள்.

நோயற்ற வாழ்வன்றோ வாழ்வு ? நோய் பெரிதும் உணவைப் பொறுத்து நிற்கிறது. பலதிற நோய்கட்குக் காரணம் பெருந்திண்டியே யாகும். அன்றாடம் உண்ணும் உணவு அன்றாடம் ஜீரணமாவதா யிருத்தல் வேண்டும். ஜீரணமாகாது அரை குறையாக உணவு வயிற்றுள் நிற்கும் போது மேலும் மேலும் உண்டுகொண்டிருப்பது நோயை உண்டுபண்ணாது பின்னை எதை உண்டு பண்ணும் ? பசியெடா முன்னம் உணவருந்தும் பயிற்சியினுங் கொடியது பிறிதொன்றில்லை. பெருந்திண்டி, பொருந்தா உணவு, காலந் தவறிய உணவு முதலியன நோய்க்கு அடிகோலுவன.

நோய் என்னுஞ் சொற்குத் துன்பம் என்பது பொருள். உடலுக்குத் துன்பம் எப்பொழுது நேர்கிறது? அவ்வவ்வுறுப்பு தன் தன் கடனை யாற்ற இயலாது தடை படும்போது அதாவது பிணிபடும்போது துன்பம் உண்டாகிறது. அப்பிணிக்குக் காரணம் பெருந்திண்டி பொருந்தா உணவு முதலியன. எனவே துன்பத்துக்கு - அதாவது நோய்க்குக் காரணம் பொருந்தா உணவு முதலியன. உணவை ஒழுங்குபடுத்தி வாழ்வோர்க்கு நோய் தோன்றல் அரிது. நோயற்ற வாழ்விற்கு ஒழுங்குபட்ட உணவு தலை யாய காரணம் என்று கூறலாம்.

வேளை நாழி அறியாது கண்டதை வயிற்றில் அடைத்து நோய் வாய்ப்படும்போது பலதிற மருந்துகளை உண்பது பெண்ணின் கொழுமை யைக் கெடுப்பதாகும். பெருந்திண்டியால் உற்ற நோய்க்கு மருந்து எற்றுக்கு? அத்திண்டியின் அரை குறையும், அதனால் ஏற்படும் மலச்சிக்க லும், பழைய மலக்கட்டு உடலுள் பரப்பும் நஞ் சும் தொலைதற்கு விரதமிருத்தல் வேண்டும். விர தம் வயிற்றினுள்ளேயுள்ள ஆபாசங்களைத் தள்ளி, உறுப்புக்களுக் கேற்பட்ட பிணியையும் சோர்வை

யும் நீக்கி, உறுப்புக்களுக்கு ஊக்கமூட்டும். நோய் போக்கவல்லது விரதமன்றி மருந்தன்று என்பதைப் பெண்மக்கள் இளமையிலேயே உணரல் வேண்டும். இதுகுறித்துப் பின்னருங் கூறுவன்.

ஒழுங்குபட்ட உணவை உண்டுவரின் எந்நோயுந் தலை காட்டாது. பெண்மக்கள் தங்கள் நல்வாழ்விற்கு உணவில் பெருங்கவலை செலுத்துவார்களாக. " உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்றார் நமது மூதாட்டியார். உண்டி சுருக்கத்தைப் பற்றி இதுபோழ்து மேல் நாட்டார் பல நூல்கள் எழுதி வருகிறார். அந்நூல்கள் பெரிதும் நமது பழைய முனிவர்கள் கொண்ட உணவு முறையையே அறிவுறுத்துகின்றன. உண்டி சுருங்குதல் எனில் பட்டினி கிடப்பதன்று. உண்டி பெருக்கங் கூடாதென்பதே அதன் கருத்து. பெருந்திண்டியால் பெண்ணுக்கு விலங்குணர்வு பெருகுவதோடு நோயும் பெருகும். ஆதலால் பெண்மக்கள் உண்டி பெருக்கத்தை ஒழிப்பார்களாக.

பெண் என்னுஞ் சொல்லிற்குக் கட் புலனுயதோர் அமைதித் தன்மை என்று மேலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அவ்வமைதிக்குரிய

பொருளையே பெண்மக்கள் உண்பது நலம். புளி காரம் கலந்த பதார்த்தங்கள், ஊறுகாய்கள், புலால், காப்பி தேயிலை கொக்கோ முதலியவை களால் செய்யப்படும் பானவகைகள், கள் முதலிய மயக்கப்பொருள்கள் முதலியன அமைதி குலைப் பனவாம். பெண்மக்கள் இவைகளைக் கனவிலுங் கருதலாகாது.

புளி காரங்கலந்த பதார்த்தங்களும், ஊறுகாய் களும் நமது நாட்டில் இரத்தத்தோடு கலந்துவிட் டன. அவைகளில் சுவை உண்டு என்பது சிலர் எண்ணம். சுவை என்பது இயற்கைப் பொருளில் இருப்பது. அவ்வியற்கைச் சுவையைக் கெடுக் கும் ஒன்று சுவையாகக் கருதப்படுவது பழக்கத் தின் குற்றம். பெருமித புளி மிளகாய் கலப்பு, கொதிப்பை உண்டாக்கி மக்கட்குச் சீற்றம் முத லிய தீக்குணங்களை எழுப்புகிறது.

"உப்பு புளி காரமிருந்தால் தானே உடலுக்கு நல்லது" என்று நமது வீட்டுத் தாய்மார்கள் சொல்வது வழக்கம். உப்பு புளி காரத்தில் மூழ் கியவர்கள் இரண்டொரு நாள் அவைகளை விடுத் திருப்பின் வானத்தில் பறப்பதுபோலக் காணப் பெறுவார்கள். மேலும் மேலும் அவைகளை

நீக்கிவரின், நாளடைவில் அவைகளின் கொடுமை புலனுகும். உப்பு புளி காரமுண்போர் திடீரென அவைகளை விடவேண்டுவதில்லை. படிப்படியாக அவைகளைக் குறைத்து வருவது நலம்.

உப்பு அளவாக உபயோகித்து வரலாம். இயற்கைக் காய்கறிகளை அப்படியே உண்போர்க்கு உப்பே வேண்டுவதில்லை. காய்கறிகளைச் சமைத்துச் சாப்பிடுவோர் சிறிது உப்பு சேர்த்துக் கொள்ளலாம். நாளடைவில் உப்பையும் நீக்க முயன்று வரலாம்.

புளி மிகக்கொடியது. "காட்டுக்குப்புலி நாட்டுக்குப்புளி" என்பது பழமொழி. புளியின்கொடுமையுணர்ந்து பழமொழி கண்ட நாடு புளியில் தோய்ந்து கிடப்பது அநியாயம். புளியை விலக்கல் அவசியம். வேண்டுமேல் புளிக்குப் பதிலாக எலுமிச்சஞ்சாறு கொள்ளலாம். இதற்குப் பழச்சாறென்றே சிறப்புப் பெயருமுண்டு.

மிளகாயைப்பற்றி ஒன்றும் விரித்துக் கூறவேண்டுவதில்லை. பழைய காலத்தில் மிளகாய் நமது நாட்டிலில்லை. பழையகாலத்தில் காய் கறிகளிலும் ஊறுகாய்களிலும் மிளகாய் காரங்கலந்து நம்மவர்கள் உண்டார்களில்லை. நம்மவர்கள் மிளகு

நீர் உண்டார்களன்றி மிளகாய் நீர் உண்டார் களில்லை. மிளகு ரசம் இப்பொழுது மிளகாய் ரச மாக மாறிவிட்டது. மிளகாய் நமது நாட்டில் இடைக்காலத்தில் நுழைந்தது. அதன்பாலுள்ள காரங்கண்டு நம்மவர்கள் அதை மிளகுகாய் என்று அழைத்தார்கள் போலும்! அது மிளகுகாய் அன்று. நமது நாட்டு உணவுப்பொருளில் மிள காய் ஒன்றன்று. மிளகாய்க்குப் பதிலாக மிளகு கொள்வது நலம்.

இராஜோகுணத்தை எழுப்ப வல்ல கார வகை களை அமைதிவடிவா யிலங்கும் பெண்மக்கள் உண்ணுதிருப்பார்களாக. அவர்கள் இயல்புக்குச் சாத்துவிக உணவே பொருந்தியது. தாய் தந்தையர்கள் குழந்தைகளுக்குச் சிறப்பாகப் பெண் குழந்தைகட்குச் சத்துவ உணவு ஊட்டி வளர்ப்பார்களாக.

எக்காரணம் பற்றியும் பெண்மக்கள் புலால் உண் ணல் கூடாது. பெண்மக்கள் அனைவரும் தூய உணவு கொள்வதில் உறுதி கொள்ளல் வேண்டும். அப்பொழுது ஆணுலகுந் திருந்தும். (பெண்மக் களோ ஆண்மக்களோ) மன்பதைக்குப் புலால் உணவு பொருந்தா உணவேயாகும். புலால் உண்

ணுமையைப்பற்றி நமதுநாட்டார் எழுதியநூல்கள் பலப்பல. நம்மவர்கள் ஜீவகாருண்யத்தை அடிப் படையாகக்கிளத்தி அந்நூல்கள் எழுதினார்கள். மேல்நாட்டாரும் புலால் உண்ணுமையைப் பற்றிப் பலப்பல நூல்கள் எழுதிவருகிறார். அவர்கள் ஆராய்ச்சி வாயிலாக உடல் நலங்கருதிப் புலால் உணவை மறுத்து வருகிறார்கள். புலால் உணவில் வீரம் உண்டு என்று சொல்வது ஆராய்ச்சியல்லார் சொல்லென ஒதுக்குக. அறிஞர் கொள்ளத்தக்க முறையில் காரணங்கள் காட்டி எழுதப்பட்டுவரும் நூல்களைப் படிக்குமாறு சகோதரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

புலால் உணவு குணத்தையுங் கெடுக்கும்; உடல் வளத்தையுங் குலைக்கும். புலால் உடல் வளந் தருவது என்னுங் கூற்றுக்கு இனி அறிவுலகில் ஆதாரமில்லை. புலால் உணவு உடலுக்கு நலஞ் செய்வது அன்று; அன்று. நலத்துக்குப் பதிலாக நோய் செய்யுமென்க.

இயற்கையாகப் பெண்மக்களுக்கு அமைதிக் குணம் அமைந்திருக்கிறது. அவ்வமைதி பெண் ணின் வாழ்விற்குரியது. அதைப் புலால் உணவு சிதைக்கும். மக்களைக் கெடுக்கும் இராஜோ

குணத்தை எழுப்பும் புலாலை எக்காரணம் பற்றி யும் பெண்மக்கள் உண்ணக்கூடாது.

தற்கால நாகரிகம் என்னும் பெயரால் காப்பி தேயிலை கொக்கோ இவைகளால் செய்யப்படும் பானங்கள் உலக முழுவதும் பரவியிருக்கின்றன. நமது நாட்டிலும் குக்கிராமங்களிலும் குடிசை களிலும் அப்பானங்கள் குடியேறி யிருக்கின்றன. காப்பிக்கடைகளில்லாத இடமில்லை. கட்குடியை யொழிக்கப் பல தேசபக்தர்கள் முயல்கிறார்கள். அம்முயற்சி காப்பிக்கடைமீது திரும்புங்காலம் என்று வருமோ? கள்ளுக்கடைக்காதல் சில கட் டுப்பாடுகளிருக்கின்றன. காப்பிக்கடைக்கோ ஒரு வித கட்டுப்பாடுமில்லை. கள்ளுக்குங் காப்பிக்கும் பெருவேற்றுமையில்லை. இருவருஞ் சகோதரர்கள். கள்ளார் அண்ணனர்; காப்பியார் தம்பியார். இவ் வளவே வேற்றுமை. காப்பி முதலிய பானங்க ளால் விளையுங் கொடுமைகள் அறிஞர்களால் சொல்லப்படுகின்றன; எழுதப்படுகின்றன. ஆனல் அவைகளை யொழித்தற்கு எவ்வித முயற்சியுஞ் செய்யப்படுவதில்லை.

காப்பியுந் தேயிலையும் கொக்கோவும் வெம்மை நாட்டு மக்களை எப்படி அரிக்கும் என்று சொல்ல

வேண்டுவதில்லை. நாட்டில் காசம் க்ஷயம் நீரிழிவு முதலிய நோய்களைக் காப்பி முதலிய குடிகள் பெருக்கி வருகின்றன. கொடிய நோய்கட்கு இரை யாகியும் அக்குடிகளை யொழிக்க நம்மவர்கள் துணிகிறார்களில்லை. க்ஷயத்தால் பீடிக்கப்பட்டு உடல் மெலிந்த பின்னர், டாக்டர் அறிவுறுத்திய பிறகு, வேண்டா வெறுப்பாக அக்கொடிய குடியை அகற்ற நம்மவர்கள் முயல்கிறார்கள். இஃதென்ன அறியாமை? இளமை தொட்டே அப்பானங்களை நீக்கி வந்திருந்தால் காசத்துக் கும் க்ஷயத்துக்கும் இரையாக வேண்டுவதில்லை. கண்ணிருந்துங் குழியில் விழுகிறார்கள் நம்ம வர்கள்.

ஆண்மக்களில் நூற்றுக்கு ஐம்பது பேரின் நுரை ஈரல் கெட்டிருந்தால், பெண்மக்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேரின் நுரைஈரல் கெட்டிருக்கும். நகரங்களிலுள்ள எப்பெண்மணி இருமாமலிருக் கிறாள்? வீடுகளில் அழுகொழுகும் பெண்மக்களா நடமாடுகிறார்கள்? என்புக் கூடுகளல்லவோ நிற் கின்றன? பெண்ணுலகின் நிலை இஃதாயின், பின் சந்ததி நிலை என்னாகும்?

பெண் மக்களின் வயிற்றைப்பற்றிய பலதிற நோய்கட்கும், நீரிழிவு முதலிய கொடிய நோய்கட்

கும் காரணமாகக் காப்பி முதலியன நிற்கின்றன. இத்துணைத் துன்பங்கட்குக் காரணம் காபி தேயிலை கொக்கோ என்றுணர்ந்தும் அவைகளைவிட நம்மவர்கள் மனங் கொள்கிறார்களில்லை. காப்பி முதலிய குடிகள் மிகுந்துள்ள இந்நாளில் தாய் தந்தையர்கள் பொதுவாகக் குழந்தைகளைச் சிறப்பாகப் பெண் குழந்தைகளை அக்குடிப் பயிற்சியினின்றுங் காப்பார்களாக.

காப்பி தேயிலை கொக்கோ முதலிய குடிகட்குப் பதிலாக மக்கள் தூநீர், நீர்மோர், பழச்சாறு முதலியவற்றைக் கொள்ளலாம். இவைகளால் உடலுக்குக் கேடில்லை. இவைகள் உள்ளுறுப்புக்களுக்கு எரியூட்டா. ஜீரணத்துக்கும் இரத்த ஓட்டத்துக்கும் கல்லீரல் (Liver) ஊக்கத்துக்கும், பித்தச் சுரப்புக்கும் அவை துணைபுரியும்.

இயற்கை உணவு, அமைதிக்கும் அன்பிற்கும் இன்பத்துக்கும் உரியது. குழந்தைப் பருவந் தொட்டுப் பெண்மக்கள் பொருந்திய உணவு கொண்டு வளருமாறு செய்யவேண்டுவது தாய் தந்தையர்கள் கடன்.

உணவுக்குரிய நேரம் காலை உச்சி மாலை என்று சொல்லவேண்டுவதில்லை. இப்பொழுது ஆறு

முறை உண்போருமுளர். அவர் இன்ப வாழ்வை இழந்தவர் என்பது எனது கருத்து. உணவுப் பெருக்கால் உடல் நலமுறாது. உணவை அளவாக அருந்தலே பொருத்தம். மூன்று வேளையுணவும் நமது நாட்டவரால் மறுக்கப்படுகின்றன. "மூன்று வேளை யுண்பவன் ரோகி, இரண்டுவேளையுண்பவன் போகி; ஒருவேளை யுண்பவன் யோகி" என்றொரு வழக்குத்தொடர் இந்நாட்டில் உலவுகிறது. காலை மாலை இரண்டு வேளை எளிய உணவு கொண்டு, பகல் சிறிது கொழுமையான உணவு கொள்வது நலம். மேலே குறிப்பிட்ட பொருந்தா உணவு போக மிகுதியுள்ள நல்லுணவு அவரவர் வழக்கப்படி உண்ணலாம். உணவுடன் பழம் அருந்தல் நலம். ஆரஞ்சுப் பழம் எவர்க்குந் தீமை செய்யாது.

உணவை நன்றாகமென்று உமிழ் நீரோடு கலக்கச்செய்து விழுங்குவது நலம் பயக்கும். பிற தனி நூல்களிற் காண்க.

உடை: நாகரிகம் முதிர முதிர மக்கட்கு உடை ஏற்பட்டது. அவ்வுடை உடல் நலத்துக்கென அணிய வேண்டுமே யன்றி ஆடம்பரத்துக்கென அணிதல் கூடாது. உலகில் பெரும்பான்மையோர்

ஆடம்பரத்துக்கெனவே உடை உடுத்துகிறார். அதி லும் பெண்மக்கள் ஆடம்பரஞ் சொல்ல வேண்டுவ தில்லை. ஆடம்பர உடை ஒருவரை உயர்த்துவது மில்லை; அல்லாத உடை ஒருவரைத் தாழ்த்துவது மில்லை. உயர்வு தாழ்வு உடையில் இல்லை.

உடை அழகு நல்குகிறதென்றும், மதிப்பளிக் கிறதென்றும் எண்ணுவோரு முளர். உடலில் இல்லாத அழகும், ஒழுக்கத்தில் இல்லாத மதிப் பும் உடையில் எங்கிருந்து முளைக்கின்றனவோ தெரியவில்லை. உடையில் அழகும் மதிப்பும் இருக்கின்றன என்று கருதுவோர், தம்பால் அழ கும் மதிப்புமில்லாதவரா யிருத்தல் வேண்டும். இயற்கை அழகே அழகு. இயற்கை மதிப்பே மதிப்பு.

சில விடங்களில் ஆண்மக்கள் "தேடும் பொரு ளெலாம் பெண்டுகள் புடவைக்கே செலவாகின் றன" என்று சொல்வதுண்டு. பெண்மக்கள் விலை யுயர்ந்த புடவைகளை விரும்புதற்குக் காரணம் என்னை? "உடை எதற்கு" என்னும் அறிவை ஊட்டக்கூடிய கல்வியை அவர்கட்கு இளமை யிலேயே போதியா தொழிந்ததே யாகும். நல் லறிவுடைய பெண்மகள் விலை யுயர்ந்த உடைகளை

வாங்கித்தருமாறு எவரையும் வலியுறுத்தாள். தூயஎளிய நல்லுடையையே அவள் விரும்புவாள். இளமையில் கல்விகொடாது பெண்களை வளர்த்து விட்டால், அவர்கள் அழகும் மதிப்பும் ஆடம்பரத்திலுண்டு என்றே கருதுகிறார்கள். இளமையிலேயே பெண்மக்கட்கு இயற்கையழகு முதலிய நுட்பங்களை உணர்த்தத் தக்க கல்வி யளித்தல் வேண்டும். இளமையில் தவறாக வளர்த்துப் பின்னை மாடென்றும் பேயென்றும் பேசுவதால் என்னபயன் விளையும்? பெண் வளர்ப்பு பெரிதுந் தாயார் பொறுப்பிலிருப்பது. தாயார் ஆடம்பர உடையணிவதை இளம்பெண் பார்த்துப் பார்த்துப் பழகினால் அப்பெண்ணும் வயதில் அவ்வுடைமீதே கருத்துச் செலுத்துவள். தாயார் எளிய நல்லுடை யணிந்து வாழ்வு நடாத்துவது குழந்தைகட்குப் பெரும் பாடம்.

ஆடம்பர உடைமீது கருத்தைப் பதிய வைத்துள்ள பெண்ணின் வாழ்வு பின்னை நலமுறல் அரிது. நமது நாட்டில் எத்துணைப் பெண்மக்கள் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி நாயகனையும் வஞ்சித்து விலையுயர்ந்த புடைவைகள் வாங்கிப் பெட்டியில் வைத்து அழகுபார்த்து மகிழ்கிறார்

கள். உடை எற்றுக்கு என்று இளமையில் உணராத குற்றமே இவ்வறியாமைக்குக் காரணம்.

பெண்மக்கள் உடைக்கோலங்களோ உலகில் பலவிதம். அக்குப்பைகளை ஈண்டுக் கிளற வேண்டுவதில்லை. இரண்டொன்றுமட்டுங் குறிப்பிடுகிறேன்.

உடை, உடையாக இருக்கவேண்டுமேயன்றிச் சுமையாக இருத்தலாகாது. தாங்க முடியாத உடைச் சுமைகளைச் சில பெண்மணிகள் சுமப்பதை நான் காண்கிறேன். "இவர்கள் தலை எழுத்தென்னே? சுமைதாங்கச் சுமை தாங்கிகளிருக்கும்போது இவர்கள் ஏன் சுமைதாங்கிகளாகிறார்கள்" என்று நான் நினைப்பதுண்டு. மேல்நாட்டுப் பெண்மணிகளும் முன்னே சுமைதாங்கிகளாக விருந்தார்கள். இப்பொழுது அவர்கள் தங்களைத் தாங்குபவர்களாய் விட்டார்கள். இந்தியப் பெண்மணிகளின் உடைச் சுமையும் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. உடைச்சுமை உடல் நலத்தைக் கெடுப்பதென்பதைப் பெண்மணிகள் இளமையிலேயே உணருமுறையில் அவர்களை வளர்த்தல் வேண்டும்.

இன்னும் சிலவிடங்களில் பெண்மணிகள் உடைகளை உடலில் இறுக்கி இறுக்கிப் பிணிக்கிறார்கள்

இவ்விறுக்கத்தால் குருதி ஓட்டம் பிணிப் புண்டு, அவ்விடத்தில் தொடக்கத்தில் நமையும் பின்னைப் புண்ணும் பின்னைச்சீழும் நீரும் ஒழு கும். சில இந்தியப் பெண்மக்கள் இடுப்பினும் உடலைச்சுற்றினும் புண்மலிந்த படைத் தழும்புகள் எழும்பி வருத்துகின்றன. இதற்குக் காரணம் புடவையையும் இரவிக்கையையும் இறுகப் பிணித் துக் கட்டுவதேயாகும். உடைகளை இறுக்கிப் பிணிக்கும் பழக்கம் மேல் நாட்டுப்பெண்களிடையு மிருந்தது. இப்பொழுது அப்பழக்கம் முற்றும் மறைந்துவிட்டது. நமது நாட்டிலும் அது மறை தல் வேண்டும்.

நமது இந்தியநாடு குளிர்மிகுந்த நாடுமன்று; வெம்மை செறிந்த நாடுமன்று; இரண்டும் ஒப்ப நிற்கும்நாடு. இந்நாட்டில் உடைச் சுமையும் இறுக்க மும் எங்ஙனம் புகுந்தனவோ தெரியவில்லை. நமது நாட்டில் வாழும் மேல்நாட்டுப் பெண்மணிகள் மெல்லிய உடையை இலகுவாக அணிகிறார்கள். இந்தியப் பெண்மணிகள் உடைக்கோலமும் மாறு பட்டு வருகிறது. அம்மாற்றம் எத்தகையதாயினு மாகுக. சுமையும் இறுக்கமும் பிணிப்பும் வேண் டாம் என்றுமட்டும் சொல்கிறேன்.

பிறர் உள்ளத்தைக் கவரும் முறையில் உடைக் கோலஞ் செய்யும் பெண்மணிகள் நிலைகுறித்து இரங்குகிறேன். தூயமனமுடைய ஆண்மக்கள் மனதையும் உடைக்கக்கூடிய வேடிக்கை உடைகளைச் சில பெண்மக்கள் அணிகிறார்கள். இப்பழக்கம் நிறுத்தப்படல் வேண்டும். உடையைக்கொண்டு ஒருவர் மனோநிலையை உணரக்கூடும். அவரவர் நடைக்கேற்ற உடையையே அவரவர் விரும்புவர். ஒருவர் உடைகொண்டு அவரது நடையை அறிஞர் அளந்துகொள்ளலாம். இதை யொட்டியே ' நடை உடை வழக்கம் ' என்னுஞ் சொற்றொடர் வழக்குந் தோன்றிற்றுப் போலும்! அமைதி வடிவங்களாய பெண்மக்கள் பிறர் மனதைக் கவரத் தக்க உடையணிதல் பாவம்; பாவம். அவ்வெண்ணம் பின்னைத் தன்னைப் பலவழியிலுங் கெடுக்கும் என்பதைப் பெண்மகள் உணர்வாளாக. தீய எண்ணம் உலவும் மனமுடைய ஆண்மக்கள் மனதையுங் கவரக்கூடாத அமைதி உடைக்கோலமும் உண்டு. அத்தகைத் தெய்விக எண்ணமூட்டக்கூடிய உடைக்கோலங் கொள்ளவே பெண்மக்கள் இளமை தொட்டுப் பழகல் வேண்டும்.

பெண்மக்கள் தங்கள் உடையைத் தாங்களே செய்துகொள்ளல் நலம். பெண்மக்கட்குப் பெரி

தும் ஓய்வுண்டு. அவ்வேளையில் அவர்கள் சில பல வீட்டுத்தொழில்கள் செய்யலாம். வீட்டுத் தொழில்களுள் தலையாயது நூல்நூற்றல். நாடோறும் அரைமணிநேரம் நூற்ருல் ஆண்டுக்கு வேண்டப்படும் உடையை அந்நூலளிக்கும். இவ்வாறு பெண்மக்கள் தங்கட்கும் வீட்டிலுள்ள மற்றவர்கட்கும் உடை உதவலாம். ஆதலால் பெண்மக்கட்கு இளமையிலேயே நூற்றல் கற்பித்தல்வேண்டும். தையல் பின்னல் முடைதல் முதலிய வீட்டுத் தொழில்களும் கற்பிக்கலாம். மேல்நாட்டில் பெண்மக்கள் ஓய்ந்தவேளைகளில் நகைகளைப் பார்த்துப்பார்த்துக் களிப்புறுர்கள். அவர்கள் சிறு சிறு வீட்டுத்தொழில்கள் செய்து நாட்டுக்கு நலன்தேடுவார்கள். இளமையில் பெண்மக்கட்கு வீட்டுத் தொழின்முறைகளும் போதிக்கப்படல் வேண்டும். பின்னை வாழ்விற்கு அத்தொழின் முறைகள் எவ்வளவோ துணைசெய்யும். நூற்றல் முதலிய தொழின்முறைகள் கற்பையுங் காக்குமென்றுஞ் சொல்லப்படுகின்றன. இதுகுறித்து "மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்" என்னும் நூலிலும் எழுதியிருக்கிறேன். இது நிற்க.

நகை: நமது நாட்டுப் பெண்மக்களுக்கு மற்றுமொரு பித்துண்டு. அதாவது நகைப்பித்து. அப்

பித்து ஒழிதற்கு எத்துணை நாளாமோ அறி கிலேன். இந்நாட்டுப் பெண்மக்கள் நகைகளில்தான் அழகுண்டு இன்பமுண்டு வாழ்வுண்டு எல்லாம் உண்டு என்று கருதுகிறார்கள். நகையணியும் நாய கனை நன்னாயகனென அவர்கள் கொள்கிறார்கள். பெண்மக்கள் பட்டினி கிடந்தேனும் இழி தொழில் செய்தேனும் பொருளீட்டி நகையணி யவே முயல்கிறார்கள். இதற்குக் காரணம் ஆண் மக்கள் பெண்மக்கள் உரிமை கடிந்து அவர்கள் அறிவைக்கெடுத்து, அவர்களைக் காமப் பொரு ளாகக் கொண்டு, நகைகளால் அணி செய்து, களிப் புற்றதென்று நான் கூறுவேன்.

நீண்டநாள் பழக்கம் இப்பொழுது நாட்டை வருத்துகிறது. சிறு வருவாயுள்ள ஒருவனது நாயகியும் நாயகனை வஞ்சித்தும் தன்னை வஞ்சித் தும் பொருள் சேர்த்து நகைவாங்க எண்ணு கிறாள். பட்டினியால் நோய் மிகுந்து உயிர் போகும் வேளையிலும் நகைப்பித்து அவளை விட் டொழிவதில்லை. அவள் இறந்த பின்னரும் அவ ளது அறிகுறியாக அவள் அணிந்திருந்த விலை யுயர்ந்த உடைகளையும் பூண்களையும் நடுவீட்டில் வைத்து அவளுடைய உறவினர்கள் போற்று

கிறார்கள். நகைகள் நடுவீட்டில் தெய்வங்களாக வும் போற்றப்படுகின்றன. நமது நாட்டுப் பெண் மக்களுக்கு நகைமீதுள்ள பித்தை இந்நூல் முற் றும் எழுதிக்கொண்டே போகலாம்.

நகைப்பித்தால் சில விடங்களில் பெண்மக்கள் வாழ்வுங் குலைகிறது. ஒருத்திமீது எத்துணை எத் துணை ஆயிரம் ஆயிரம் ஏறி நிற்கின்றன. எத் துணை ஏழைமக்கள் உழைப்பு, பட்டினி, துயரம், கண்ணீர் ஒருத்தியின் கழுத்திலுங் காதிலும் தலை யிலும் ஏறி நிற்கின்றன? ஒருத்திமீதுள்ள ஒரு நகை எவ்வளவோ ஏழைமக்கட்கு உணவளிக்கும், உடையளிக்கும்; தொழிலளிக்கும். அத்துணை ஏழைமக்கள் கலி தீர்க்கவல்லபொருள், நகைச் சுமையாயிருப்பதா லென்னபயன்? நகையில் அழ குண்டா? அன்புண்டா? என்ன இருக்கிறது? “அண்டை வீடுகளில் ஏழைமக்கள் பட்டினியால் வருந்த நான் இவ் இவ்வளவு நகைகளைச் சுமந்து கொண்டிருப்பது அறமா” என்று நகைப்பித் துடைய பெண் இரங்குவாளா? நகைப்பித்து பெண்ணின் இயற்கைக்குணமாகிய இரக்கத்தை யுஞ் சிதைக்கிறது.

மூடப்பெண்ணின் நகைப்பித்து ஏழைமக்களைத் தீ யொழுக்கத்திலும் இறங்கச்செய்கிறது. அவர்

களைப் பொறுமையுறச் செய்கிறது; களவாடச் செய்கிறது; சில வேளைகளில் கொலையும் நிகழ்த் தச்செய்கிறது. நகையின் கொடுமை என்னே! என்னே! "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார் திருவள்ளுவர். கல்வியறிவில்லாப் பெண் மக்கள் அவ்வொழுக்கத்தினும் நகையை ஓம்பு கிறார்கள்.

நகைச்சுமையால் உடலுக்காதல் நலனுண்டோ? ஒன்றுமில்லை. உடல் நலத்துக்கென முத்துமாலை, பவளமாலை, மணிபதித்தோடு யணியலாம். சில மணிகளாலும் உடலுக்கு நலன் உண்டு என்று சொல்லப்படுகிறது. பொன்னுக்கும் அக்குணம் உண்டாம். உடல் நலத்துக்கென ஏற்பட்ட இவை பின்னாளில் வெறுஞ் சுமை சுமைகளாக அணியப் பட்டன. இப்பொழுது முத்து முதலியவற்றின் குணநலன் கண்டு எப்பெண்ணும் அவைகளை அணிவதில்லை. குணங்கண்டு அவைகள் அணிவ ளேல் சுமை சுமையாக அணியமாட்டாள். கலன் களாகவே அவைகள் இப்பொழுது அணியப்படு கின்றன. குணங்கண்டு நகைகளை அணியும் நல் லறிவு இருக்குமேல், போலிமுத்து பவளம் மாணிக்கம் இவைகளை ஏன் பெண்மக்கள் அணி

கிறார்கள்? சுகாதார முறைகளை நாடோறும் ஒழுங்காகக் கவனித்து வாழ்வு நடாத்தும் பெண் மகள் உடல் நலத்துக்கெனவும் நகைகளை அணிய வேண்டுவதில்லை. இப்பொழுது உடல் நலத்தைக் கெடுக்கும் சுமையாகவன்றோ நகை துயர் செய்கிறது? அந்நகைப் பித்து உள்ளத்தில் நுழையாவாறு இளம்பருவத்திலேயே இயற்கை வழிப் பெண்மக்களைப் பெற்றோர்கள் வளர்த்து வரல் நலம்.

தலைமயிர் : பெண்மக்கள் தலைமயிரைப்பற்றி இரண்டோர் உரை கூற விரும்புகிறேன். தலைமயிர் உடையன்று. அஃது இயற்கைப் பொருள். அதையும் உடைபோலச் சில பெண்மக்கள் கருதுவதால் அதன் நினைவு எனக்கு இங்கே தோன்றிற்று. தலைமயிர் இயற்கைப் பொருளாதலால் அதை உடையெனக் கருதி அதைப் பலவாறு அலைத்தல் அறியாமை. பெண்மக்களும் தலைமயிரை இப்பொழுது பலவாறு திரித்து வருகிறார்கள். பெண்மக்கள் தலைமயிரைக் கெடுத்து வரல் அழகுக்கும் சுகாதாரத்துக்கும் ஊறுசெய்வதாகும். பெண்மக்களுக்குத் தலையில் குறைந்தது பன்னிரண்டங்குலம் நீண்ட மயிரிருப்பது நலம். இயற்கையில்

அமைந்த மயிரைச் செயற்கையால் மாறுபடுத்த வேண்டுவதில்லை.

அழகு

கல்வி அறிவு ஒழுக்கத்தானும், நல்லோரிணக் கத்தானும், நல்வழியில் உடலோம்பிப் பொருந் திய உணவுகொண்டு, அன்புக் கடவுளைப் போற்றி இயற்கையோடியைந்து வளர்ந்துவரும் பெண் ணின்பால் கண்ணுக்குப் புலனாகாத அழகுத் தெய்வங் கோயில் கொள்ளும். தூயமனத்தால் கற்பும், கற்பால் நல்லுடலும், நல்லுடலால் அழ கும் அரும்புதல் மேலே சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மூலம் அகத்தூய்மை. அகத் தூய்மை புறத்தே அழகாக அரும்புகிறது. அழ குத் தெய்வம் வீற்றிருக்கும் பெண்ணை "நன் மன முடையாள்; நிறையுடையாள்; நல்லுடலுடை யாள்" என்று கூறல் மிகையாகாது.

பெண்ணின் உற்றவயதில் அழகு திரண்டு ஒளி வீசுகிறது. அவ்வழகொளி ஆண்டவன் அருளொளி போன்றது. ஆண்டவன் அரு ளொளியால் உலகம் அலர்கிறது. பெண்ணின் அழகொளியாலும் உலகம் (பிள்ளைப்பேறு) அலர்

கிறது. ஆண்டவன் படைப்பு நோக்கத்தை நிறைவேற்ற வந்தவலல்லவோ பெண்? கற்பின் திண்மையால் அரும்பும் அழகு அன்பருக்குத் தெய்வமாகும்; புலவருக்குப் பாட்டாகும்.

அகிலத்துள்ள இயற்கை வனப்பெலாந் திரண்டு பெண் தெய்வமாகிக் காட்சியளிக்கின்றன. "பெண்ணின் முகம் எனது புத்தகம்" என்று அறிஞர் **பைரன்** என்பார் கூறியிருக்கிறார். இயற்கை வனப்பை ஓரிடத்தில் திரட்டிக் காட்சியளிக்கும் ஒரு பெரும் அழகு நிலையம் என்று பெண்ணைக் கூறலாம். அத்தகை அழகு நிலையத்தை எச் சொல்லால் சொல்வது? எவ்வெழுத்தால் எழுதுவது? தெய்வச் சேக்கிழார் என்னும் ஓவியக் காரர் அவ்வழகு நிலையத்தை எழுத்தோவியமாக எழுதியிருக்கிறார். அவ்வோவியத்தை நோக்குவோமாக.

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் [சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ"

"ஓவியநான் முகனெழுத ஒண்ணுமை உள்ளத்தான்
மேவியதன் வருத்தமுற வித்தித்ததொரு மணி [விளக்கோ"

அழகு நிலையத்தைப் படத்தில் பார்ப்பதினும் பாட்டில் பார்ப்பதில் இன்பமுண்டு. வீடுகளில் தெய்வ உருவங்களின் படங்கள் தூங்குவதைப் பார்க்கினும் பாட்டுகள் தூங்குவது சிறப்பு.

உற்ற வயதடைந்து, வயதுக்கேற்ற உறுப்புரம் பெற்று நிற்கும் "புயல் சுமந்து விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடி" தனது உற்ற வயதுன்னி அகத்தூய்மை கெடுக்கும் எதையும் எண்ணுதலுங்கூடாது. அவ்வெண்ணம் விரைக் கொடியை எரித்து விரை போக்கும். எத்துணைப் பேய்ச் சோதனைகட்கும் விரைக்கொடி இடந் தாராது வளர்வளாக. பேய்ச் சோதனைக்கு இடந் தருவது பின்னைத் தன்மாட்டுக் கனியவேண்டிய தாய்மையைக் கெடுப்பதாகும். பெண் வாழ்வின் நோக்கம் தாய்மை என்று முன்னருஞ் சொல்லப் பட்டிருக்கிறது. சிறு கவலையீனத்தால் பெரும் பயனையா இழப்பது? தாய்மைக்குரிய கற்பையும் உடலையும் அழகையும் அழிப்பவள் பெரும்பாவி. அவள் இவ்வுலகிலேயே நரகத்துன்பம் எய்தல் கண்கூடு. தாய்மை நினைவின்றிக் கெட்டழிந்த பெண்மக்கள் கதைகள் பற்பல. ஆதலால் சகோதரிகள் "இவ்வுடல் இவ்வழகு இவ்வாழ்வு எல்

லாம் தாய்மைப் பேற்றிற்கு” என்று ஒழுங்கு பட்டவாழ்வு நடாத்துவார்களாக. அவ்வாழ்வுடைய பெண்ணிற்குத் தாய்மைப்பேறு இறையருளால் காலத்தில் உண்டாகும்.

அழகொழுக நிற்கும் பெண்மக்களிற் சிலர் மனதை வேறுவழியில் விடாமலும், திருமணம் விரும்பாமலும் வாழ்கிறார். இவ்வாழ்வுங்கூடாது. இதனால் வாழ்வின் நோக்கம் நிறைவேறாது அரைகுறையாய் அழிந்துபடும். ஒருவனோடு வாழாத ஒருத்தி முழுப் பெண்தன்மை எய்தினவள் அல்லள். ஒத்தநலனும் ஒத்தகல்வியும் பிறவும் உடைய ஒருவனுடன் வாழ்ந்து, தாய்மைப் பேறு பெற்று, அன்பு நிலையைக் காண்டல் அறிவுடைமை. அது பெண்ணின் பெருமையுமாகும். இது குறித்துச் சிறிது விரிவுரை கூறவிரும்புகிறேன்.

“மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை.”

—இளங்கோ அடிகள்.

“அழகெனும் அழகுமோர் அழகு பெற்றதே.”

—கம்பன்.

ரு. இறைவழி

" யாவரும் மடந்தை மாரோ டில்லறத் தொழுகுந் தன்மை
மேவரப் பணித்தான் "—கச்சியப்பர்.

பெண் கற்பன கற்று, கேட்பன கேட்டு, நல் வழியில் வளர்ந்து, உற்ற வயதடைந்து நிற்கிறாள். அவ்வாறே ஆணும் வளர்ந்து உற்ற வயதடைந்து நிற்கிறான். பின்னர் இருவர் நிலையும் எங்ஙனம் முற்றுறல் வேண்டும்? அவள் அங்ஙனே தனித்தும் இவன் இங்ஙனே தனித்தும் வதிந்து மாய வேண்டுங்கொல்? இல்லை; இல்லை. இருவருந் தனித்து நின்று சாவார்களாயின் அவர்கள் பிறவி நோக்கம் நிறைவேறியதில்லை யென்க.

பெண் ஆண் சேர்ந்த ஒன்றே வாழ்வு என்பது. வாழ்வின் ஒரு பாதி பெண்; மற்றொரு பாதி ஆண். பாதியாக எத்துணை நாள் உலகில் உறைவது? இருபாதியுஞ் சேர்ந்த ஒன்றே முழு மனிதத் தன்மை. அத்தன்மைப் பேற்றிற்கென்றே பெண் ஆண்வடிவங்கள் இயற்கையில் அமைகின்றன. இல்லையேல் வடிவங்கள் வேறு வழியில் அமையலாமல்லவோ? படைப்பில் வடிவங்கள் அமைந்துள்ள ஒழுங்கை நோக்குழிப் பெண்ணுக்கும்

ஆணுக்குமுள்ள இயற்கைத் தொடர்பு நன்கு புலனாகும்.

தனித்து ஒரு பாதியாக நிற்கும் பெண்ணையும் தனித்து மற்றொரு பாதியாக நிற்கும் ஆணையும் இயற்கை கூட்டும் அழகை என்னென்று சொல் வேன்? இருவர் பாலும் உற்ற வயதில் ஒருவித இன்ப உணர்வு எழுகிறது. இவ்வுணர்வு ஏன் எழு தல் வேண்டும்? அதற்கேதாயினும் பொருளிருத் தல் வேண்டுமன்றோ? அவ்வுணர்வே இரு பாதி யையும் ஒன்றாகப் பிணித்துப் பிறவி நோக்கை நிறைவேற்றும் அன்புக் கயிறென்க.

பிறப்பில் பெண் ஆண்வடிவ அமைப்பு வகுத்து, இரண்டையும் ஒருமைப்படுத்த இறைவன் இயற் கையில் இன்ப உணர்வளித்துள்ள நுட்பத்தை யோர்ந்து, ஒருத்தியும் ஒருவனும் அன்பால் ஒன்றி வாழ்வது அவ்விறை வழி நிற்பதாகும். அங் ஙனமின்றி இருவருந் தனித்து நின்று இறைவனை வழிபடல் அவன் வழி நிற்பதாகாது.

இறைவன் ஆணை வழியே உலகில் ஒருத்தியும் ஒருவனுங்கூடி வாழும் வாழ்வே பெரிதும் நடை பெறுகிறது. இறைவழியே உலகம் இயங்கி வரு கிறது. இதைப்பற்றிப் பேச்சும் வேண்டுவதில்லை;

எழுத்தும் வேண்டுவதில்லை. ஆயினும் இடைக் காலத்தில் இறைவழிக்கு மாறுபட்ட போலித் துறவு என்னும் ஒன்று தோன்றி, அருள்நெறிக்கு இடையூறு செய்து வரலான், அதுபற்றிச் சில உரையாதல் பகரவேண்டுவது எனது கடன்.

"பெண்ணும் ஆணுங்கூடி வாழ்வது இறைநெறி யல்லாத 'பிரவர்த்திமார்க்க' மென்றும், பெண் ஆணைத்துறந்தும் ஆண் பெண்ணைத் துறந்தும் தனித்து நின்று தவங்கிடப்பதே இறை நெறி நிற்கும் 'நிவர்த்தி மார்க்க' மென்றும் பெரியோர் களும் நூல்களும் முழங்கா நிற்க, நீவிர் முற்றும் மாருக இறை வழி குறிப்பதென்னை?" என்று சிலர் வினவலாம். இதற்கு ஒல்லும் வகை யியைந்த விடை பின்னை இறுப்பன். ஈண்டு எடுத் துக்கொண்ட இறைவழி என்பதற்கேற்பச் சிறிது கூறுகிறேன்.

பெண்ணும் ஆணும் பிரிந்து வாழல் நிவர்த்தி என்று கொள்வோர் கடவுள் வழி விடுத்து வேறு வழிச் செல்வோராவர். கடவுள் படைப்பு முயற் சிக்குத் துணை செய்யா தொழிவோர் எங்ஙனங் கடவுள் வழி நிற்போராவர்? இறைவன் படைப் புத் தொழில் எவர் பொருட்டு நடாத்துகிறுன்?

தன் பொருட்டா? உயிர்கள் பொருட்டே அவன் அத்தொழில் புரிகிறான். அம்முயற்சிக்குத் துணை நில்லாதார் எங்ஙனங் கடவுளிடத்தும் உயிர்களிடத்தும் அன்புடையராவர்?

கடவுள் படைப்புத் தொழிலைப்பற்றிப் பலதிறக் கருத்து வேற்றுமைகளுண்டு. அவைகள் சமய வாதங்களின் பாற்படும். அவைகளில் நுழைய வேண்டுவதில்லை. அஃதும் இந்நூலிற்கு வேண்டற்பாலதன்று. கடவுள் ஓரிடத்திருந்து கையால் படைப்புத் தொழில் செய்கிறார் என்று எனக்குத் தோன்றவில்லை. கடவுள் என்பது இன்ப அன்பாக யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள ஒரு பேரறிவு. அஃது இயற்கை வாயிலாகத் தன் வினையாற்றி வருகிறது. அவ்வினைகளுள் ஒன்று படைப்பு என்பது. படைப்பு என்றால் இல்லாத ஒன்றையோ அல்லது இல்லாத ஒன்றினின்றும் ஒன்றையோ புதிதாக உண்டுபண்ணுவதன்று. உள்ள ஒன்றே காரியப்படுவது படைப்பு என்று சொல்லப்படுகிறது. அதற்குக் கடவுளெனும் அறிவு நிமித்தமாக நிற்றலான் "கடவுள் படைப்பு" என்று வழங்கப்படுகிறது.

இனி எடுத்த பொருண்மீது செல்வோம். ஒருத்தியும் ஒருவனுங் கூடி வாழாதொழிவது

கடவுளிடத்தும் உயிர்களிடத்தும் அன்பின்மையை எங்ஙனங் குறிக்கும் என்பதைச் சிறிது ஆராய்வோம்.

எவ்வாராய்ச்சிக்குங் கண்ணுக்குப் பொருளாக உள்ள உலகையும் ஒருவனது அநுபவத்தையும் அடிப்படையாகக் கொள்வது வழக்கம். அவ்வழி பற்றியே யானுஞ் செல்கிறேன். இவ்வுலகில் யான் பிறந்தேன்; வளர்கிறேன். எனது அநுபவத்தில் அறிவு அறியாமை, இன்பம் துன்பம், ஒளி இருள், நினைப்பு மறப்பு ஆகிய இரு நிகழ்ச்சியும் என் மாட்டுறுதல் காண்கிறேன். முழுஅறிவு முழு இன்பம் முழுஒளி தோன்றக் காண்கிறேனில்லை. அவ்வாறே முழு அறியாமை முழுத்துன்பம் முழு இருளுந் தோன்றக் காண்கிறேனில்லை. இவ்வுலகில் இரண்டும் விரவி நிற்கின்றன. எனக்கு அறிவும் விளங்குகிறது; என்னை அறியாமையும் மறைக்கிறது. என்னில் இன்பமும் எழுகிறது; என்னைத் துன்பமுஞ் சூழ்கிறது. நான் ஒளியையுங் காண்கிறேன்; இருளையுங் காண்கிறேன். எனக்கு நினைப்புமுண்டு; மறப்புமுண்டு.

இச்சிறு அறிவு இன்பம் ஒளி கொண்டு முழு அறிவு இன்பம் ஒளியுண்மை நிறுவலாம். அங்

ஙனே சிறு அறியாமை முதலியன கொண்டு முழு அறியாமை முதலியன நிறுவலாம். முதலின்றிச் சினை எங்ஙனந் தோன்றும்? எனவே, முழு அறிவு முதலியன நிலவும் இடத்துக்கும், முழு அறியாமை முதலியன மலியும் இடத்துக்கும் இவ் வுலகம் இடைப்பட்டதென்க.

இவ்வுலகில் வாழும் யான் யாண்டிருந்து ஈண்டுப் போந்திருத்தல் வேண்டும்? முழுஅறிவு இன்பம் ஒளியுள்ள ஓரிடத்திருந்தா அல்லது முழு அறியாமை துன்பம் இருள் செறிந்த ஓரிடத்திருந்தா ஈண்டுப் போந்துளேன் என்பது பற்றிச் சிந்திக்கப் படல்வேண்டும். முழு அறிவும் இன்பமும் ஒளியும் நிலவும் ஓரிடத்திருந்து, அறிவு அறியாமையும், இன்ப துன்பமும், ஒளியிருளும் விரவிநிற்கும் இவ் வுலகை ஏன் நோக்கல் வேண்டும்? நிழலில் வாழும் ஒருவன் கானலில் வாழ ஒருப்படுவனோ? கான லில் வருந்தும் ஒருவன் நிழல்நாடி ஓடல் இயல்பு. ஆகவே யான் முழு அறியாமை முழுத் துன்பம் முழுயிருள் செறிந்த இடத்திருந்தே இரண்டு மிலங்கும் இவ்வுலகம் போந்திருத்தல் வேண்டும். ஈங்கிருந்து முழுஅறிவு முழுஇன்பம் முழுஒளி பெற முயன்று வருகிறேன்.

முழு அறியாமையால் விழுங்கப் பெற்றுத் துன்ப விருளில், எனது நிலையுணராது, செயலின்றிக்கிடந்த யான் இவ்வுலகிற்கு எப்படி வந்தேன்? எனக்கோ அந்நிலையில் அறிவு விளக்கமுமில்லை; செயலுமில்லை. பாம்புதீண்டிய ஒருவனது நிலைக்கு எனது நிலையை ஒப்பிடலாம். அந்நிலையிலிருந்த யான் பிறர் துணையின்றி இங்கு எங்ஙனம் வரக்கூடும்? ஒருவர் துணைகொண்டே யான் ஈண்டுப் போந்திருத்தல் வேண்டும்.

அவ்வொருவர் யாவர்? அவர் எத்தன்மையராயிருத்தல் வேண்டும்? அவர் என்னைப் போல அறியாமையால் விழுங்கப் பெற்றுத் துன்ப இருளில் கிடப்பவராயிருத்தல் கூடாது. அறியாமைத் துன்ப இருளில் செயலன்றிக்கிடப்போர் அந்நிலையிலுள்ள மற்றொருவர்க்கு என்ன செய்யக்கூடும்? குருடனுக்குக் குருடன் வழிகாட்டிய கதையாக முடியும். ஆதலால் அறியாமை-துன்ப - இருட்கட்டில்லா ஒருவரே எனக்குத் துணை நின்று இவ்வுலக வாழ்வு நல்கியிருத்தல் வேண்டும். அவ்வொருவரையே உலகம் கடவுள் என்று போற்றுகிறது.

கடவுள் அறியாமை துன்பம் இருள் முதலிய எக்கட்டு மில்லாதவர் என்பதை ஈண்டுப் பெரிதுங்

கவனித்தல் வேண்டும். எக்கட்டு மில்லாக் கடவுள் கட்டிலா அறிவாய் இன்பமாய் ஒளியாயிருத்தல் வேண்டுமென்று சொல்ல வேண்டுவதில்லை. கட்டிலா அறிவில் என்றும் இன்பம் அன்பு இரக்கம் பிறர் நலநாட்டம் முதலிய அருட் குணங்கள் இருத்தல் இயல்பு. இதனை வலியுறுத்த வேறோர் எடுத்துக்காட்டும் வேண்டுவதில்லை. மக்களாகிய நமது அநுபவமே சாலும். நமது அறிவு கட்டினின்றும் நீங்கி விளக்க முறும்போது நம்பாட்டு அன்பு பொறை இரக்கம் பிறர்க்குதவல் முதலிய நற்குணங்கள் தோன்றுதல் உணர்கிறோம். நம்மாட்டு அறியாமை மிகுந்து நிற்கும் போது அவா பொறாமை வன்கண்மை பிறர்க்குக் கேடு சூழல் முதலிய தீக்குணங்கள் எழுதல் உணர்கிறோம். நல்லெண்ணங்கட்கும் இன்பத்துக்கும் பிறப்பிடம் அறிவு என்பதும், தீய எண்ணங்கட்கும் துன்பத்துக்குந் தோற்றுவாய் அறியாமை என்பதும் அவரவர் அநுபவத்தில் உணரக்கிடப்பனவாம். கட்டினின்றும் வெளியாகும் அறிவிற்கே அன்பு இரக்கம் முதலிய குணங்கள் உண்டெனில், அநாதியாக எக்கட்டு மின்றி என்றும் அறிவா யொளிரும் பரம் பொருளிடத்து எத்

தகை அன்பு எத்தகை அருளிருக்கு மென்பதை எழுத்தால் எழுத முடியாது. அன்பே அது. அருளே அதன் வடிவம்.

நீரில் தண்மை போலவும், நெருப்பில் வெம்மை போலவும், மலரில் மணம் போலவும் ஆண்டவனிடத்தில் அருட்குணம் இயல்பாயமைந்திருக்கிறது. அவ்வருள் வாளாகிடக்குமோ? ஒவ்வொன்றும் தன் தன் வேலையை நிகழ்த்துவது போல அருளும் தன் வேலையை நிகழ்த்தி வருகிறது. ஒருவனுக்கு அருள்-இரக்கம்-தயை பெரிதும் எப்பொழுது சுரக்கிறது? பெரிதும் பிறர் துன்பங்காணும் பொழுதன்றோ? உயிர்களின் துன்பங்காணக் காண இறையருள் சுரந்த வண்ணமாயிருக்கிறது. உயிர்களின் துன்பத்துக்கும் ஓய்வில்லை. ஆண்டவன் அருள் சுரப்பிற்கும் ஓய்வில்லை. உயிர்களிடத்துத் துன்பமுள்ள மட்டும் ஆண்டவன் அருளுஞ் சுரந்து கொண்டே யிருக்கும். இரண்டின் எல்லை கண்டு கூற எவரால் இயலும்? இரண்டும் அநாதியென அறிஞர் கூறுகிறார்.

உயிர்கள் அறியாமையால் விழுங்கப்பெற்றுத் துன்ப இருளில் கட்டுப்பட்டுக் கிடப்பதைத் திருவருளையே திருமேனியாக உடைய ஆண்டவன்

கண்டு வாளாயிருப்பனே? ஆண்டவன் அவை கண்மீது இரக்கங் கொண்டு அவைகளைத் துன்பத்தினின்றும் நீக்கித் தன்னைப் போலாக்கத் திருவுளங் கொள்கிருன். அறிவு விளக்க முஞ் செயலுமின்றிக் கிடக்கும் உயிர்கள் மீது ஆண்டவன் அருளொளி பட்டதும் அவைகட்குத் தனுகரண புவன போகங்கள் கூடுகின்றன. "கண்ணுதலோன் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி" என்ருர் மாணிக்கவாசகனர். கட்டிற் கிடந்த உயிர்கட்குத் தனு முதலியன கிடைத்ததும் அவைகள் சிறிது அறிவு விளக்கமுஞ் செயலும் பெறுகின்றன. இந்நிலையே உயிர்கள் அறிவு அறியாமை, இன்ப துன்பம், ஒளியிருள் முதலிய இரண்டுங்கலந்த இவ்வுலக வாழ்வெனக. இந்நிலையினின்றும் முழு அறிவு விளக்கம் பெற்று முழு இன்ப நிலை எய்த முயலவேண்டுவது உயிர்கள் கடமை.

அறியாமைத் துன்ப இருட்கட்டில் கிடந்த உயிர்கள் அறிவு விளக்கமுஞ் செயலும் பெறும் பொருட்டு ஆண்டவன் புரியுந் துணையன்றே துணை? ஆண்டவன் உயிர்கண் மீது கொண்டுள்ள அருட்பெருக்கிற்கோர் அளவுமுண்டோ? அப்

பெருக்கை ஏழையேன் என்னென்று புகழ்ந் துரைப்பேன்?

இனித் துன்ப இருட்கட்டில் கிடக்கும் உயிர்கட்குத் தனு என்னும் உடலை எவ்வழியில் இறைவன் கூட்டுகிறான் என்பதை உன்னுவோமாக. கட்டிற்கிடக்கும் உயிர்களைத் தனது கையாற் பிடித்துத் தூக்கி உடல் தந்து இறைவன் அவைகளை இவ்வுலகில் கொணர்ந்து விடுகிறானில்லை. ஆண்டவனோ கை கால்களில்லாதவன். பின்னை எவ்வழியில் ஆண்டவன் தன் படைப்புத் தொழிலைச் செய்கிறான்? ஆண்டவன் எதையும் இயற்கை வாயிலாக நிகழ்த்துகிறான். ஆண்டவன் இயற்கையில் நீக்கமற நிறைந்திருப்பவன். அண்டபிண்ட சராசரங்களெல்லாம் அவன் வடிவம். அவன் எங்கும் பொருந்தியிருத்தலால் அவனை இறைவன் என்று போற்றுகிறோம். எங்கும் அறிவாகக் கலந்து நிற்கும் இறைவன் ஓரிடத்திருந்து படைப்புத் தொழிலைச் செய்கிறானில்லை. அவனது படைப்புத்தொழில் ஆங்காங்கே எங்கணும் நிகழ்கிறது. இயற்கை வாயிலாக ஆண்டவன் எல்லாஞ்செய்கிறான். உயிர்கள் தோற்றத்துக்கென முன்னரே உடல் தாங்கித் தோன்றிய உயிர்க

ளிடத்துச் சில இயற்கை அமைப்புகள் ஆண்ட வன் வகுத்திருத்தல் ஈண்டுக் கருதற்பாலது.

பெண் ஆண் என்னும் இரு பாலாரும் உற்ற வயதடைந்ததும், இருவர் மாட்டும் ஒருவித இன்ப உணர்வு இயல்பாக எழுகிறது. இவ்வுணர்வு உயிர் களிடத்தமைந் திருப்பதன் நோக்க மென்னை? அவ்வின்பந் தோன்ற உறுப்புக்கள் அமைந்திருப் பதன் நோக்க மென்னை? அன்பர்களே! உன் னுங்கள். இன்பத் தோற்றத்துக்கென மெல்லிய உறுப்புக்களும், அவைகளின் காப்புக்கெனப் பரு உறுப்புக்களும், அவைகளின் அரணுக் கென நரம்பு என்பு தசை தோல் முதலியன வும் இயற்கையில் அமைந்திருக்கும் நுட்பத்தை உன்ன உன்ன அவைகளின் நோக்கம் புலனு கும். உடல் கூற்றின் அமைப்பும், அதன் பயனாக எழும் இன்பமும், பெண் ஆண் சேர்க்கை இயற் கையில் பொருந்திய தொன்று என்பதைச் செவ் வனே அறிவுறுத்துகின்றன. இதைப்பற்றி விரி வுரை வேண்டுவதில்லை. இச்சேர்க்கையின் வழித் துன்ப விருளிற்கட்டுண்டு கிடக்கும் உயிர்கட்கு உடலீந்து ஆண்டவன் இவ்வுலக வாழ்வு நல்கு கிறான். இவ்வழி ஆண்டவன் படைப்பு நிகழ்ந்து வருகிறது.

பெண் ஆண் சேர்க்கை உயிர்களின் துன்ப நீக்கத்துக்கு இன்றியமையாததாயிருக்க, அதை வெறுப்பதுந் துறப்பதும் அறமா என்று கேட்கிறேன். பெண் ஆணை விடுத்துத் தனித்து நிற்பதும், ஆண் பெண்ணை விடுத்துத் தனித்து நிற்பதும், துன்ப இருளில் கிடக்கும் உயிர்களின் கட்டை நீக்க மறந்து நிற்றலாகும். இதனால் உயிர்களின் துன்பமும் நீங்குவதில்லை. ஆண்டவன் நோக்கமும் நிறைவேறுவதில்லை. எனவே துறவு என்னும் பெயரால் ஒருவரை ஒருவர் நீத்து நிற்போர் உயிர்களிடத்துங் கடவுளிடத்தும் எங்ஙனம் அன்புடையராவர்? உயிர்களின் துன்ப நீக்கத்துக்கு ஆண்டவன் கோலியுள்ள வழி நில்லாது ஆண்டவனைப் போற்றுவோர் எங்ஙனம் அவன் அருள் பெறக்கூடும்? இறை வழி நிற்போரே இறைவனிடத்தும் உயிர்களிடத்தும் அன்புடையராவர்.

துறவு துறவு என்று ஓதுங்கும் பெண்மகளும் ஆண்மகனும் யாண்டிருந்து முளைத்தனர்? அவர் தாய் தந்தையரின்றியோ முளைத்தனர்? அன்னார் உடல் தாங்கி இவ்வுலக வாழ்வைப் பெற்றது போல மற்ற வுயிர்களும் அவ்வாழ்வைப் பெற

வேண்டாமா? அதற்குத் தடையாக நிற்பது அறிவுடைமையா?

உயிர்கள் உடலோடு கூடி வாழ்வு பெற்ற பின்னரே அறிவு விளக்கமுஞ் செயல் நிகழ்ச்சியும் பெறுகின்றன. அவ்வறிவுப் புணை கொண்டே உயிர்கள் பிறவிக்கடல் கடந்து இன்பக்கரை நண்ணல் வேண்டும். அவ்வின்பக்கரை நண்ணற்குக் கருவியாகவுள்ள உடல் வாழ்வைப் பெறப் பெண்ணும் ஆணுங்கூடி வாழா தொழிவரேல் உயிர்கள் நிலை என்னும்? கருணையில்லா மக்களே மணவாழ்வை வெறுப்பார்கள்.

ஒவ்வொரு பெண்ணும் ஆணும் துறவு துறவு என்று மணவாழ்வை வெறுத்து நிற்பின் உலக வளர்ச்சியற்றுப்போகும். உயிர்களின் துன்பமும் நீங்காது. இறைவனது படைப்பு நோக்கமும் நிறைவேறாது. இத்துணை இடருக்குக்காரணராக உள்ள கூட்டத்தார் கடவுளிடத்தும் உயிர்களிடத்தும் தம்மிடத்தும் அன்பில்லாதவர் என்று பன்முறை அறை கூவுகிறேன்.

துறவொழுக்கம் நிவர்த்தி மார்க்கம் என்று பெரிதும் நமது நாட்டு நூல்கள் கூறுவ துண்மை. துறவு வொழுக்கமும் நிவர்த்தி மார்க்கமும்

பெண்ணை வெறுக்குமாறு ஆணிற்கும், ஆணை வெறுக்குமாறு பெண்ணிற்கும் அறிவுறுத்தவில்லை. அவைகளின் நுட்பங்களைப் பின்னே கூறுவேன்.

பெண்ணும் ஆணுங்கூடி வாழ்தல் இறைவழி நிற்றலென்றும், அங்ஙனம் வாழாதொழிவது இறைவழி நிற்பதாகாதென்றும் இவ்வதிகாரத்தில் கூறினேன். இனி இயற்கை நெறிக்கும் பெண் ஆண் சேர்க்கை வேண்டற்பாலதென்பதையும், இல்லையேல் உலகில் பல துன்பங்கள் விளையும் என்பதையும் சிறிது விரித்துக் கூறப்புகுகிறேன்.

"Marriage is the nursery of heaven"—*Jeremy Taylor*.

௫. இயற்கை அறம்

" அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன் "—திருவள்ளுவர்.

இறைவழி எதுவோ அதுவே இயற்கை என்பது. எவன் இயற்கையோ டியைந்த வாழ்வு நடாத்துகிறானோ அவன் இறைவழி நிற்பவனாகிறான். இயற்கையோடியைந்து நிற்றலை உலகோர் அறமெனக் கூறுப. அக்கருத்துப்படவே ஈண்டு இயற்கை நெறியை 'இயற்கை அறம்' என்று குறித்தேன். உலகில் அறமெனும் பெயரால் சில செயற்கை முறைகளும் நிகழ்ச்சியிலிருத்தலால் நேரிய அறத்தை இயற்கை அறமெனக் கோடல் தவறாகாது.

இறை இயற்கை என்னுஞ் சொற்களைக் கொண்டு இரண்டிற்கும் பிரிவு கற்பித்தல் கூடாது. இறைவனை விடுத்து இயற்கை இயங்குவதில்லை. இயற்கையை நீத்து இறை நிற்பதில்லை.

இறைவனைப்பற்றி ஏழையேன் என் சொல்லவல்லேன்? இறைவன் வாக்குமனங் கடந்து நிற்பவன்; உருவிலாதவன்; யாண்டுங் கட்டின்றி அகண்டமாக நீக்கமற நிற்பவன். அங்கிங்கெனாதபடி எங்கும்

நிறைந்து நிற்கும் இறைவனை இயற்கை வாயிலாகவே அறிவால் உணரல்வேண்டும். இறைவனது உண்மையை உணர்த்துங் காட்சிப் பொருள் இயற்கையேயாகும். அவ்வியற்கை வாயிலாகவே இறைவன் அருட்டொழில் நிகழ்ந்து வருகிறது. இயற்கை இறைவனது தொழிற் சக்தியாய் விளங்குகிறது. இறையுண்மை யுணர்ந்து அழியாத இன்பம் நுகரவேண்டுமேல், அதற்குக் காட்சிப் பொருளாய இயற்கைப் புணையையே பற்றல் வேண்டும். இயற்கையை விடுத்து இறைவனை புணர முயல்வது, கானற்சலத்தை நம்பி ஓடினவன் கதையாக முடியும். இறைக்குரிய வழி இயற்கை இயற்கையே. அவ்வியற்கைக்கு அரணுமாறு வாழ்வு நடாத்துவோர் இறையின்பம் நுகரல் திண்ணம். "இறைகளோ டிசைந்த இன்பம் இன்பத் தோடிசைந்த வாழ்வு" என்னுந் திருவாக்கின் நுட்பத்தையோர்க.

இறை இன்பத்துக்கு "அதை விடல்வேண்டும் இதை விடல்வேண்டும்" என்று சொல்வோரு முளர். அவர்களால் எழுதப்பெற்ற நூல்களு முண்டு. "விடல்" எனில் எதை விடுவது? எதுவும் இயற்கையின் கூறுகவே யிருக்கிறது?

அவ்வியற்கையே இறை யுண்மையைத் தெரிவிக்கிறது. அதை விடுத்து இறையின்பத்தை எங்ஙனம் நுகரக்கூடும்? இயற்கையை நீத்து எங்ஙனம் உலகில் வாழ முடியும்? இயற்கையை நீக்கப்புகின் முதலாவது இயற்கையாலாய உடலை நீத்தல் வேண்டும். உடலை நீத்து ஞானத்தைப் பெறுவது எப்படியோ தெரியவில்லை.

பின்னை நீத்தல் என்று சொல்லப்படுவதன் பொருள் என்னை? இயற்கைக்கு மாறுபட்ட செயற்கையை நீத்தலையே நீத்தல் என்பது குறிப்பதாகும். செயற்கை எது? இதை இரு கூறுகப் பிரிக்கலாம். ஒன்று புற உலகில் மனிதன் கையால் செய்வது; இன்னொன்று மக்கள் அக உலகிலிருப்பது. அகஉலகிலுள்ள செயற்கை அழியின் புறஉலகச் செயற்கை தானேஅழியும். அகத்தில் இயற்கை இன்பங்தோன்றப் பெறுவோர் புறத்தேயுள்ள இயற்கை இன்பத்தையுஞ் செவ்விதில் நுகர்வர். உலகில் மக்கள் செயற்கைப் பொருட்களின் வேட்கை கொள்வதற்குக் காரணமாக நிற்பன அவர்கள் உள்ளத்துள்ள செயற்கைக் குணங்களேயாம். அக்குணங்களை நீத்தால் மக்கள் செயற்கை நரகத்துக்கு இரையாக மாட்

டார்கள். எனவே நீத்தல் என்பது அக்குணங்களின் நீத்தலைக் குறிப்பதென்க.

அக்குணங்கள் யாவை? அழுக்காறு அவா வெகுளி முதலியன. அவைகள் இயல்பாக மக்களிடத்தில் பதிந்து கிடக்கின்றன. இயல்பாக உள்ள இக்குணங்களைச் செயற்கையெனச் செப்பல் நியாயமோ என்று சிலர் வினவலாம். இச் செயற்கை உலக வழக்கில் சொல்லப்படுஞ் செயற்கை போன்ற தன்று. இதனை இயற்கைச் செயற்கை எனச் செப்பல் பொருந்தும். அதாவது மக்களுடன் இயல்பாகத் தோன்றி மக்களை யழிப்பது. அது பயிருடன் முளைக்கும் களை போன்ற தென்க.

மக்களிடத்து இருவித குணத்தொகுதி காண்கிறோம். ஒன்று பொறுமை அன்பு அருள் முதலிய குணத்தொகுதி; மற்றொன்று அழுக்காறு அவாவெகுளி முதலிய குணத்தொகுதி. முன்னையது மக்கள் வாழ்விற்குக் கேடு சூழாது, இயற்கையோடியைந்து இறை இன்பைக் கூட்டத்துணை நிற்கிறது; பின்னையது மக்களை இயற்கை வாழ்விற் செலுத்தாது, செயற்கை நரகில் தோய்த்து, இறையின்பைக்கூட்டாது, அவர்கள் வாழ்விற்குக்

கேடு சூழ்கிறது. இவ்விரண்டனுள் மக்கள் நல் வாழ்விற்குரியது எது? உரியதாகாதது எது? பொறுமை அன்பு அருள் முதலிய குணத்தொகுதி மக்கள் நல் வாழ்விற்குரியது. பொறாமை அவா வெகுளி முதலிய குணத்தொகுதி அவ்வாழ்விற் குரியதாகாதது. மக்கள் வாழ்விற்குரியதை இயற் கை என்று கொண்டேன். மற்றதைச் செயற்கை என்று கொண்டேன். அழுக்காறு முதலிய குணங் கள் மக்களுடன் இயல்பாய், அநாதியாயுண்மை யான் அவைகளைச் செயற்கையென்று எங்ஙனங் கூறலாம் என்று சிலர் வாதமிடுவர். வாதத்துக்கும் எனக்கும் நெடுந்தூரம். வாதங் கடந்த ஒன்றே எனக்குரிய இயற்கை வாழ்வு. அழுக்காறு முத லியன ஆதியென்று சொல்வோருமுளர். அநாதி எனச் சொல்வோருமுளர். ஆதியோ அநாதியோ அதைப்பற்றிய ஆராய்ச்சி வேண்டுவதில்லை. மக் கள் வாழ்விற்குரியதை இயற்கையென்றும், உரிய தாகாததைச் செயற்கையென்றும் யான் கொண்டு என் கருத்தை வெளியிடுகிறேன். அன்பர்கள் சொற்போரையொழித்துக் கருத்தை மட்டுங் கவ னிப்பார்களாக.

மக்கள் தங்கள் மாட்டுள்ள அழுக்காறு முத லிய தீக்குணங்கள் தங்களை விடுத்து விலகும்

முறையில் வாழ்வு நடாத்தல் வேண்டும். அவ் வாழ்வு பெறுவது எப்படி? இயற்கை வாயிலாக இறைவன் அதைக் கோலியிருக்கிறான். அஃது இஃதெனச் சில அறிஞர் உலகிற்கு அறிவுறுத்தி யிருக்கிறார். அவருள் நந்தமிழ் நாடளித்த தெய்வத் திருவள்ளுவனாரை யான் கொள்கிறேன்.

திருவள்ளுவனார் அருளிய திருக்குறள் மக்கள் வாழ்விற்குரியது. மக்கள் வாழ்வுக்குரிய முறை களுந் துறைகளுந் திருக்குறளாக அமைந்திருக் கின்றன. திருக்குறள் ஒரு நூலன்று. அஃது உல கம்; மக்கள் வாழ்வு. ஆதலால் அந்நூலை ஈண்டுப் போற்றி ஏற்கிறேன்.

திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் அறிவுறுத்துகிறது. அறம் என்பது ஒரு பெரும்நிலை. அது கடவுள் நிலை. கட வுள் நிலை எய்தற்கு இயற்கை வாழ்வு வேண்டற் பாலது என்று முன்னே சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கை வாழ்வாவது இவ்வுலக வாழ்வு. இவ் வுலக வாழ்விற்குரிய துறைகளைப் பொருட் பாலில் திருக்குறள் வகுத்துக் கூறுகிறது. இப் புற உலக வாழ்வுடன் நின்றுவிடுவதா மக்களின் வாழ்வின் நோக்கம்? இல்லை. மேலான அறநிலை

என்னும் கடவுள்நிலை எய்த வேண்டுமென்பது மக்கள் வாழ்வின் விழுமிய நோக்கம். அம்முறைகளை இன்பத்தில் திருக்குறள் கோலியிருக்கிறது. எனவே பெரிய அற நிலைக்குப் பொருளும் இன்பமும் வேண்டற்பாலன. பொருள் புறத்துக்குரியது. இன்பம் அகத்துக்குரியது.

புறவுலகில் கொலை களவு முதலிய கொடுமைகள் நிகழாதவாறு காக்க அரசு வேண்டற்பாலது. அவ்வரசு நன்கு நடைபெற அமைச்சு கல்வி முயற்சி செல்வம் முதலியன வேண்டும். இவை யாவும் ஒழுங்குபட அமைந்துள்ள நாட்டில் கொடுமைகள் எரியாது அமைதி நிலவும். இவ்வமைதி அகத்துக்கும் தேவை. புறத்தில் அமைதியின்றிக் கிளர்ச்சி நிகழின் அகத்தே அமைதி நிலவுதல் அரிது. ஒருவனது உடல் துன்பம் அவனது உள்ளத்துன்பமாகவு மிருத்தல் கண்கூடு. ஆகவே புறவாழ்வின் நிலை அகவாழ்வின் நிலையைப் பெரிதும் பொறுத்து நிற்கிறது. புறவாழ்வின் அமைதிக்கு அரசு முதலியன குறித்த திருக்குறள் அகவாழ்வின் அமைதிக்கு இன்பத்துறையெனும் இல்லறத்தைக் குறித்து நிற்கிறது. அகத்தில் அமைதி கெடுப்பன யா? அழுக்காறு

அவா வெகுளி முதலியன அல்லவோ? அவைகளைக் கெடுக்க இல்லரசு என்னும் மனைவாழ்க்கையைத் திருக்குறள் குறிக்கிறது. திருக்குறள் குறிக்கும் அவ்வறமே இயற்கை அறமென்க.

முதலாவது அறத்தின் இயல்பைச் சிறிது கவனிப்போம். மாசிலாமனத்தில் அதாவது அழுக்காறு அவாவெகுளி முதலிய தீக்குணங்கள் அற்றவிடத்தில் அறக்கடவுள் பொலியும் என்க. "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் - ஆகுல நீர பிற" என்றும், "அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் - இழுக்கா இயன்றது அறம்" என்றுந் திருவள்ளுவனார் அறத்தின் இயல்பு ஓதியிருத்தல் காண்க. அழுக்காறு முதலிய தத்துவக் கூட்டங்களைக் கடந்து ஒளிர்வது கடவுள் என்னுஞ் செம்பொருள். அப்பொருளை அறம் என்று திருவள்ளுவனார் கூறுகிறார். எனவே கடவுளையும் அறத்தையும் ஒன்றென்றுங் கொள்ளலாம். மேலும் அறத்தின் மேன்மை தோன்ற "அறத்தினூஉங் காக்கமில்லை அதனை - மறத்தலினூங் கில்லை கேடு" என்றார் நம்பெரியார். திருவள்ளுவனார் அருளிய திறக்குறளின் முழு நோக்கம் அறன் வலியுறுத்தல் என்பது உன்னற்

பாற்று. இக்காரணத்தான் அறன் வலியுறுத்தல் பாயிரத்துள் வைக்கப்பட்டிருக்கிறது.

அறம் ஒரு மரம் போன்றது. மற்றைய பால்களும், அதிகாரங்களும், பாக்களும் மரத்தின் கவடு கோடு இலை முதலியன போன்றன. திருக்குறளின் ஒவ்வொரு பாட்டும் அறத்தின் ஒவ்வொரு கூறு என்க. திருக்குறள் அறிவுறுத்தும் வழியில் ஒருவன் வாழ்வு நடாத்துவனேல், அவன் முடிவில் அறநிலை எய்தல் ஒருதலை. அவ்வாழ்வு இயற்கைக்கு அரண்செய்யும் வாழ்வாகவு மிருக்கும்.

மக்கள் அழுக்காறு அவா வெகுளி முதலிய கட்டுகளினின்றும் விடுதலை யடையக் கொள்ளத் தக்க வழிதுறையை நோக்குவோம். மக்கள் கட்டுகளினின்றும் விடுதலை யடையக் கடவுளைப் போற்ற வேண்டுமென்றும், மாயா உலகைத் துறக்க வேண்டுமென்றும், சிறப்பாகப் பெண்ணைத் துறக்க வேண்டுமென்றும், துறந்து நாட்டை விடுத்துக் காட்டுக் கோடிக் கண்ணை மூடி உடலை வருத்தி யோகஞ்செய்ய வேண்டுமென்றுஞ் சிலர் கூறுப. இதைப்பற்றி முன்னருஞ் சிறிது தொகையாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அத்

தொகையை இங்கு வகைப்படுத்திச் சில உரை பகர்கிறேன்.

உலகங் கொடியதாயின் கடவுள் படைப்பில் உலகம் அமைய வேண்டுவதில்லை. பெண்மாயை யாயின் அப்பொருளும் இயற்கையில் தோன்ற வேண்டுவதில்லை. உலகமும் பெண்ணும் கடவுள் படைப்பில் தோற்ற முற்றிருப்பதால், அவைகள் மக்கள் வாழ்விற்கென்றே தோன்றி யிருத்தல் வேண்டும். ஆதலால் உலகையும் பெண்ணையுந் துறந்து வாழல் என்னும் எண்ணம் கடவுளின் படைப்பு நோக்கை அறியாது, கடவுளை மறப்பதாகும். கடவுளின் படைப்பை வெறுப்பது கடவுளை வெறுப்பதாகும்.

பின்னை எங்ஙனம் அழுக்காறு அவா முதலிய வற்றைத் தொலைப்பது? அதற்கொரு வழி வலிந்து செயற்கை முறையில் நாம் கோல வேண்டுவதில்லை. அவ்வழி இயற்கையில் அமைந் திருக்கிறது. எல்லாவற்றையும் அளித்த ஆண்டவன் மக்களின் துன்பத்துக்குக் காரணமாக உள்ள கட்டினின்றும் விடுதலையடைய ஒரு வழியையா கோலாதொழிவன்? கட்டினின்றும் மக்களை விடு தலையடைவிக்கவே அவர்கட்கு இல்வுலக வாழ்வை

ஆண்டவன் நல்கியிருக்கிறான். அவ்வருள் சுரந்த ஆண்டவன் கட்டு நீக்க வழியையும் கோலியிருக்கிறான். இயற்கையில் அவ்வழி அமைந்திருக்கிறது.

இயற்கை நிலை

இயற்கை பெண் ஆண் வடிவாகப் பொலிவது என்று தொடக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பெண் ஆண் சேர்க்கையால் உலகம் வளர்ந்து வருகிறது. பெண்மகளும் ஆண்மகனும் இயற்கையின் கூறுகளேயிருப்பவர். அக்கூறுகள் உள்ள அன்னார் அதற்கியைந்த வாழ்வு செலுத்தலே அறிவுடைமை. வேறுபட்ட வாழ்வு நடாத்தப் புகின் வாழ்வில் பலதிற இன்னல் விளைவது திண்ணம். "உலகத்தோ டொத்துவாழ்" எனவும், "உலகத்தோ டொட்ட ஒழுகல் பல கற்றுங்-கல்லார் அறிவிலா தார்" எனவும் வரூஉம் ஆன்றோர் மொழிகளை ஊன்றிக் கவனிக்க. மற்ற உயிர்கள் இயற்கை புலகோடியைந்த வாழ்வு செலுத்துவதுபோல மக்களும் அவ்வாழ்வு செலுத்தக் கடமைப்படல்வேண்டும். தாவரம் பறவை விலங்கு முதலிய எவ்வுயிரும் பெண் ஆண் சேர்க்கை வாழ்வையே நடாத்துகின்றன. இயற்கை நிலை அவ்

வாருக ஆறறிவுடைய மக்கள் மட்டும் அவ்வாழ்வு துறந்து நிற்கவேண்டுமென்று இயற்கையில் எந் நியதி அமைந்திருக்கிறது?

வாழ்விற்கு நீர் காற்று ஒளி முதலியன வேண் டப்படுவது போலப் பெண்ணிற்கு ஆண் வேண் டற்பாலன்; அவனுக்கு இவள் வேண்டற் பாலள். இரண்டொரு நாள் நீரின்றியும், சிறிது போழ்து காற்று ஒளியின்றியும் வாழ்வு நடாத்த இயல்வ தில்லை. போதிய நீருங் காற்றும் ஒளியுமின்றி வாழ் வோர் முகத்திலும் உடலிலும் வெளுப்பேறி யிருத்தல் காண்கிறோம். இதன் பயனாகப் பலதிற நோய்கள் தோன்றி விரைவில் வாழ்வையே குலைக் கின்றன. இவ்வளவிற்குங் காரணமென்னை? இயற் கையிலுள்ள நீரையுங் காற்றையும் ஒளியையும் அவமதித்த குற்றமன்றோ? இவ்வாறே இயற்கை யின் கூறாகிய பெண் ஆணைத் துறத்தலும் ஆண் பெண்ணைத் துறத்தலும் அறியாமை. அத்துறவு இயற்கைக்கு மாறுபட்ட தொன்றாகலான், பின்னை நாளடைவில் பலதிற நோய்களைத் தோற்றுவித்து வருத்தி வாழ்வைக்குலைப்பது ஒருதலை. இயற்கை யோடியைந்த வாழ்வு நடாத்தலே ஒழுங்குபட்ட வாழ்வாகும்.

அமைப்பின் நோக்கம்

மக்கள் வடிவம் பெண் ஆண் சேர்க்கைக்கேற்ற வாறு அமைந்திருத்தல் கவனிக்கற்பாலது. அவ் வமைப்புக்கு ஒரு நோக்கமும் இருத்தல் வேண் டும். ஒரு நோக்கமுமில்லா ஒன்று இயற்கையில் அமைதல் அரிது. உடலிலுள்ள ஒவ்வோர் உறுப்பையும் உற்று நோக்குவோம். ஒவ்வொன் றற்கும் ஒவ்வொருவித கடனிருத்தல் காண் கிறோம். ஒவ்வோர் உறுப்பும் தன் தன் கடனை ஆற்றுதொழியுமேல் அவைகளால் ஆக்கப்பட்ட உடல் செழுமை யுறாது சூம்பிப்போகும். உடற் செழுமை காக்க வேண்டி ஒவ்வோர் உறுப்பும் இயங்கு முறையில் பயிற்சி செய்கிறோம். அப் பயிற்சியால் உறுப்புக்கட்கும், உடலுக்கும் நலன் விளைவதைக் கண் கூடாகக் காண்கிறோம். உறுப் புக்களின் இயக்கம், குருதி யோட்டத்தை ஒழுங்கு படுத்தி, நரம்புகட்கு உரமேற்றி, கொழுமை திரட்டித் தசை யாக்கி, அதனின்றும் அழகுத் தெய்வக்காட்சியை வழங்குகிறது.

உறுப்புக்களுக்கெல்லாம் உயிர்போன்றது உயிர் நிலையேயாகும். அப்பெயரானே அதன் பெற்றி விளங்கும். அதற்குங்கடன் உண்டு. அக்கடனாற்ற

அதற்கும் பயிற்சியிருத்தல் வேண்டும். உயிர் நிலைப் பயிற்சி குன்றின் அதன் நிலை என்னுகும்? அதனை உயிராகக் கொண்ட மற்ற உறுப்புகள் நிலை என்னுகும்? தற்கால மேல்நாட்டறிஞர் உயிர் நிலையின் நுட்பங்களைத் துருவித் துருவி ஆராய்ந்து, அது மற்றைய உடலுறுப்புக்களுக்கு எங்ஙனங் கொழுக் கொம்பாக இருக்கிறதென்பதையும், அதற்கு எவ்வழியிலாதல் கேடு நிகழின், அக்கேட்டான் எங்ஙனம் உடல் வளன் குன்றுகிற தென்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளத் தெளிய விளக்கிக்காட்டி யிருக்கிறுர்.

இளமையிலோ அல்லது உற்ற வயதிலோ உயிர் நிலைக்கு எவ்வழியிலாதல் ஊறு நிகழ்த்திக்கொள்வோரது பின்னைய நிலை இரங்கத்தக்கதாக முடியும். சிலர் நோய் வாய்ப்பட்டு இறந்துபடுவர்; சிலர் முகப்பொலிவும் உடல் வளமுங் குன்றப் பெற்று, குரலொடுக்குற்று, கண்ணெளி யிழந்து, அழகுடைந்து, பார்வைக்கினிமையயவா உடல் தாங்கியொழிவர். ஒருவரது உடல் வளம் அவரது உயிர் நிலை வளனைப் பொறுத்து நிற்கிறதென்று சுருங்கச் சொல்லலாம். விதையடிக்கப் பெற்ற மாட்டுக்கும் குதிரைக்கும் மற்ற மாட்டுக்கும் குதிரைக்

கும் வேற்றுமையிருத்தல் கண்கூடு. முன்னைய வற்றிற்கு ஊக்கம் எழுச்சி சுறு சுறுப்பு உரிமை யுணர்வு முதலியன போதிய அளவில்லை. பின்னைய வற்றிற்கு அவை உண்டு. அஃறிணையுயிர்களின் உயிர் நிலைக்கேட்டினும் உயர்திணை உயிர்களின் உயிர் நிலைக்கேடு பேரிடர் விளைக்கும்.

உயிர் நிலைக்கேடு அறிவு விளக்கத்துக்கும் ஞாபக சக்திக்கும் பெருங்கேடு விளைக்கும் என்பதை ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடுகிறேன். அறிவு விளக்கங்குன்றி, ஞாபகசக்தி யிழந்து உலகில் வாழ்வது வாழ்வாகுமா?

இளமை தொட்டு உயிர் நிலையை எப்படிக் காத்து வரல்வேண்டும் என்பது பற்றிப் "பெண்ணின் வளர்ப்பு" என்னுந் தலைப்பின் கீழும் உரைத்திருக்கிறேன். உற்ற வயதில் உயிர் நிலையின் இயற்கை அமைப்புக்கேற்ற பயிற்சியிருத்தல் வேண்டும். அப்பொழுதே அவ்வமைப்பின் நோக்கம் நிறைவேறும். உயிர்களின் துன்ப நீக்கத்தையும், இன்ப ஆக்கத்தையும் குறிக்கொண்டு நிற்பது அந்நோக்கமென்பதை மீண்டும் ஈண்டு வலியுறுத்துகிறேன்.

செயற்கை விளைகள்

" உற்ற வயதில் உயிர் நிலைக்குப் பயிற்சிதானே தேவை " என்று மக்கள் செயற்கைத் துறைகளி லிறங்குவது தற்கோலைக்குக் கால்கொள்வதாகும். செயற்கை முறைகள் பற்பல. அவைகளை ஈண்டு விரிக்கிற் பெருகும். அவைகளுள் சுருங்கச் சிற் சிலவற்றை ஈண்டுக் குறிக்கிறேன். அவைகள் வேசையர் கூட்டம், காமுகரீட்டம், நோய்க்குழு, முஷ்டிமைதுனம், மருந்துண்ணல், புலனடக்கல், வாளாகிடத்தல் முதலியன. இவைகள் எப்படிச் செயற்கை முறைகளாகும் என்று சிறிது ஆராய் வோம். ஈண்டுக்கூறுவன யாவும் பொதுவகையில் பெண் ஆண் என்னும் மக்களினத்தைக் குறிப் பன என்று நேயர்கட்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

வேசையர் கூட்டம் : வேசையர் கூட்டம் பெண் மக்களிலுமுண்டு; ஆண் மக்களிலுமுண்டு. ஆனல் அப்பெயர் பெரிதும் பெண்ணினத் திற்கே வழங் கப்பட்டு வருகிறது. அன்புப் பொறுப்புடன் ஒருவனெடு வாழ ஒருப்படாது பிழைப்புக் கென மானம் விற்றுப் பொல்லா வாழ்வு நடாத்தும் பெண்கள் வேசையர்கள் என்று சொல்லப்படு

கிறார்கள். தெய்வத்தன்மை பொருந்திய பெண்ணினத்தில் இக்கூட்டந் தோன்றியதற்குக் காரணம் ஆண் மக்களின் மூடச்செயலேயாகும். ஆணுலகந் தூய்மை காத்திருக்குமேல் பெண்ணுலகில் வேசையர் கூட்டந் தோன்றியிராது. எப்படியோ வேசையர் கூட்டந் தோன்றியிருக்கிறது. அதை யொடுக்க வேண்டுமாயின் ஒருவன் ஒருத்தியோடு வாழும் இயற்கை யறம் உலகில் யாண்டும் பரவுதல் வேண்டும். " ஒருவன் ஒருத்தியுடன் வாழும் பொறுப்பேலாது நினைந்தபோது வேசையர்பால் துயின்றெழுவதால் விளையும் தீமை என்னை? எங்ஙனமாவது பெண் சேர்க்கை தானே வேண்டும் " என்று கொள்வோரு முளர். இவர் இயற்கை செயற்கை நுட்பந்தெரியாதாரென்க.

கலவி என்றால் எல்லாங் கலவியாகுங் கொல்? பெண் ஆண் கலவி என்பது காதல் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அக்காதல் இன்பம், அறிவு மனம் உடல் ஆகமூன்றும் ஒன்றிய அன்பின் வழிப்பிறப்பது. அன்பில்லாவிடத்தில் அவ்வின்பம் பிறவாது. அறிவும் மனமும் உடலும் அன்பால் ஒன்றி நிகழுங் கலவி

யில் பெண்மகளின் உயிர்நிலையின் உட்கருவிகளி லுள்ள சினையுறுப்புக்களினூடே ஒருவித இன்பந் துளும்பி ஊறும். அதன் பயனாக ஒருவித சத்து எழும்பி, ஆண்மகன் சுக்கிலம் விழுந்ததும், ஆணுள் நுழையும். அச்சத்து ஆண்மகன் சுக்கி லச் செலவிற்கு ஈடு செய்யும் அமிழ்தாய் உடல் நலனைக் காப்பதாகிறது. இஃது இயற்கைக் கலவி. இதற்கு மாறுபட்ட கலவி செயற்கை முறையின் பாற்படுவதே யாகும்.

அறிவும் மனமும் ஒன்றுத கலவியில் அச் சத்துப் பிறப்பதில்லை. பொருட் பெண்டிர் கலவி, அன்புவழி அறிவும் மனமும் ஒன் றுத வெறும் உடற்கலவி என்று சொல்ல வேண்டுவதில்லை. அக்கலவியில் பெண்மகளின் உட்கருவிச்சினைகளில் இன்பக் கிளர்ச்சியும் நிக ழாது. அதனின்றுஞ் சத்தும் எழாது. அச்சத்து எழாவிடத்தில் கூடுவது வெறும் உடற் கூடலாக லின் அக்கூடல் செயற்கை முறையின் பாற்படுவ தாகும். அது முஷ்டிமைதுனத்தை யொத்த தெனச் சில அறிஞர் கருதுகிறுர்.

பொருளொன்றே குறிக்கொண்டு சில பெண் மக்களோடு கூடித் திரியும் ஆடவரும் வேசையர்

கூட்டத்திற் சேர்ந்தவராவர். இவர் கலவியும் மன மும் அறிவும் ஒன்றாத அன்பில் கலவியாகலான், அதுவும் செயற்கை முறையின் பாற்பட்டதே யாகும். அன்பு வழி நிகழாத கலவியாவும் செயற் கை முறையின் பாற்பட்டன என்று சுருங்கச் சொல்லலாம். இதைக் கீழ்வரும் இனங்களிலுங் கூட்டிக்கொள்க.

ஆகவே, பொருளில் கருத்து வைத்து மானம் விற்பதைத் தொழிலாக உடைய வேசையர் கூட் டம் உடலுக்கு நலன் பயவாத செயற்கைத் துறை களில் ஒன்றுதல் காண்க.

காமுகர் கூட்டம்: சில விடங்களில் பொருள் வேட்கையின்றி வெறுங் காமக்கிளர்ச்சியால் இரு வர் சேர்க்கை நிகழ்வதுண்டு. காமம் (Lust) என் பது வெறியால் உடலளவில் எழும் ஒருவித துன் பக்கிளர்ச்சி. இவ்வெம்மைக் கிளர்ச்சியால் நிக ழும் புணர்ச்சி மனதில் உறுவதில்லை. காமுகர் சேர்க்கையின் போழ்து பெரிதும் மனம் அலைந்து திரிவதுண்டு. காதலால் விழுங்கப்பட்ட மனம் அலைவதில்லை. அம்மனம் அன்பில் ஒன்றி நிற் கும். அலையும் மனதுடன் கூடுவது வெறும் உடல் சேர்க்கையேயன்றி மனங்கலந்த சேர்க்கை யாகாது.

சில சமயங்களில் மனம் அலையாமலுங் காமுகர் சேர்க்கை நிகழ்வதுண்டு. மனம் அலையாத ஒரு காரணங்கொண்டு, மனங்கலந்த காதற்சேர்க்கை என்று அச்சேர்க்கையையுங் கோடலாகாது. என்னை? இவ்வொருத்திக்கும் ஒருவனுக்கும் அவ் வேட்கை மற்றவரிடத்துஞ் செல்கிறதா இல்லையா என்று பார்த்தல்வேண்டும். அவ்வேட்கை மற்றவ ரிடமுஞ்சென்று தாக்குவதாயின் அவ்விருவர்க்கும் மனக்கலப்பில்லை என்று உணர்ந்து கொள்ள லாம்.

சில காலம் பிறரிடத்து வேட்கை செல்லாத வழியிலுஞ் சில விடங்களில் ஒருத்திக்கும் ஒருவ னுக்கும் காமச்சேர்க்கை நிகழ்தலுண்டு. இதை எங்ஙனம் அறிவது? இருவரையுஞ் சிறிது காலம் பிரித்து வைத்திருப்பின், இவன் இவளையும் இவள் இவனையும் மறந்து விடுவர். சமயம் நேரின் இவர் மற்றக் காமுகரிடத்திலுந் திருவிளையாடல் புரியத்துணிவர்.

காமுகர் சேர்க்கையில் மனக்கலப்பிராது. சில சமயத்தில் போலிக்கலப்பு நிகழும். மனங்கலந்த சேர்க்கையாயின் அது காதல் சேர்க்கையாகும். அக்காதலுடையார் பிறரைக் காமுறார். எவ்வளவு

நாள் பிரிந்திருப்பினும் ஒருவரை ஒருவர் மறவார். உள்ளத்தில் பிரிவே நிகழாது. இதற்கு மாறு பட்டு வாழுங்கூட்டமே காமுகரீட்டமாகும்.

காமுகர் பலரிடங் கூடலால் அவர் பால் நோயும் நிரம்பி யிருக்கும். புணர்ச்சி காலத்தும் மனதைப் பிறரிடஞ் செலுத்துங் காமத்தின் சிறுமையை என்னென்று கூறுவது?

காமுகர் ஈட்டமும், அன்பும் மனக்கலப்பும் இல்லா ஒரு வழியில் உழன்று உடலுக்குக் கேடு தேடிக்கொள்வதால் அதுவுஞ் செயற்கைத் துறை யின்பாற் படுவதாகும்.

நோய்க்குழு : நோயாளி சேர்க்கையைப்பற்றி ஒன்றுங் கூறவேண்டுவதில்லை. நோய் வாய்ப்பட்ட பெண்ணுடன் ஆணோ அல்லது ஆணுடன் பெண்ணோ கூடுவதைப் போன்ற செயற்கை நரகம் பிறிதொன்றிருக்குமோ? அந்நோய் அவளுடனும் அவனுடனும் ஒழிவதில்லை; சில இடங்களில் அவர் வழி வழித்தொடர்ந்தும் வளர்கிறது. இக்கொடுமையைப்பற்றிப் பின்னுங் கூறப்போவதால் இவ்விடத்திற்கேற்ற அளவில் நின்று மேற் செல்கிறேன். நோயாளிக்கு முதலாவது அறிவு விளக்கமிராது. மனோ உரமிராது. இரண்டு

யின்மையால் அவரைச் சிறு காமத் தீ என்றும் எரித்துக் கொண்டேயிருக்கும். நினைந்தவுடன் கிளர்ச்சி யெழும். அந்நினைவன்றி வேறு நினைவு அவர்க்குறுதலும் அரிது. அவர் சேர்க்கை உடலளவிலும் நிகழ்வதில்லை. இதை எங்ஙனம் இயற்கை முறை என்று கூறுவது? ஆதலால் நோய்க்குழுவினர் ஆடலும் செயற்கைத் துறை யெனத் தள்ளுக.

முஷ்டி மைதுனம் :—இது கைமுட்டி என்றும் வழங்குவதுண்டு. இஃதொரு கொடிய செயற்கை முறை. அறிவும் மனமுங் கலவாத ஒருத்தியும் ஒருவனுங் கூடுவதே செயற்கை முறை யெனில் இருவர் சேர்க்கையேயின்றி ஒருவரே இன்பங் காணப்புகும் முயற்சித் துறையை எத்தனைக் கொடிய செயற்கை முறை என்று சொல்லால் சொல்வது? இதுவே சுத்த செயற்கைமுறை.

இச்செயற்கைமுறையின் கொடுமை தெரியாது பலர் இந்நரகத்துக்கு இரையாகிறார். இப்பயிற்சியால் வாழ்வில்விளையுங் கேடுகளை மேல் நாட்டு மருத்துவர்கள் மிகத்தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இவர்களிடையில் பரவுதல் நலம்.

இக்கொடுஞ் செயற்கைப் பயிற்சி பலகாரணங் களால் இளமையில் சில பெண்மக்களிடத்தும் ஆண்மக்களிடத்தும் நுழைந்து அவர்கள் பிறவிப் பயனைக் கொல்கிறது. குழந்தைகள் அப்பருவத் திலேயே அடிக்கடி உயிர் நிலையைத் தொடுவதா லும், தேய்ப்பதாலும், சில மூடத்தாய் தந்தையர் கள் குழந்தைகளின் உயிர் நிலையைத் தொட்டுங் கசக்கியும் முத்தமிடுவதாலும், குழந்தைகள் பீடங் களின் மீதோ மற்றெதன் மீதோ சாய்ந்து உயிர் நிலையை உறுய்வதாலும், இன்னோன்ன பிற காரணங்களாலும், உயிர்நிலை நரம்புகளில் ஒருவித கிளர்ச்சி தோன்றும். நாளடைவில் வயதேற வயதேற அக்கிளர்ச்சி குழந்தைகளை முஷ்டி மைதுனத்தில் செலுத்தும். இதற்குக் காரணம் பெற்றோர்களின் கவலையீனமே. இது குறித்துப் "பெண்ணின் வளர்ப்பு" என்னுந் தலைப்பின் கீழும் உரைத்திருக்கிறேன்.

தீயோர் இணக்கத்தானும் இத்தீப் பயிற்சி நுழைவதுண்டு. ஆயிரக்கணக்கான மாணாக்கர்கள் பயிலும் கல்லூரிகளிலும், மாணாக்கர்கள் வதியும் விடுதிகளிலும், இளைஞர்கள்கூடும் எந்தவிடங்களி லும் இக்கொள்ளை நோய்வாடை சிறிதும் வீசா;

வாறு ஆசிரியன்மார்களும் மற்றவர்களும் பார்த்துக்கொள்ளல்வேண்டும். பெண் பாடசாலைகளும் அவைகளை யொட்டிய விடுதிகளும் நன்மக்கள் பார்வையில் நடைபெறல்வேண்டும். சில விடங்களில் மணவாழ்வு கொள்ளாத பெண்மக்கள் ஆசிரியன்மார்களாகவும், விடுதித்தலைவர்களாகவும் அமர்கிறார்கள். அவர்களில் நல்லோர் பலரிருக்கலாம். இத்தீப் பயிற்சியும், வேறு சில தீப்பயிற்சியும் புகுந்துள்ள சிலரால் அப்பாடசாலையும் விடுதியும் பாழாகிவிடும். இது குறித்துத் தாய்தந்தையர்கள் மிக எச்சரிக்கையா யிருப்பார்களாக.

முஷ்டி மைதுனத்தில் ஒரு நல்ல குணமுண்டு. அது விரைவில் தன்னைக் கொண்டோரைக் காட்டிக் கொடுக்கும். முஷ்டி மைதுனம் தொடங்கப்பெற்ற சில ஆண்டுகளுக்குள்ளாக அது தன் நண்பருடலில் சில மாறுதல் நிகழ்த்தும். அம்மாறுதல் கண்டு பெற்றோரோ மற்றவரோ அப்பயிற்சியுடையாரை எச்சரிக்கை செய்து அதனால் வாழ்வில் விளையுங் கேடுகளை எடுத்துக்காட்டினால் அவர் உடனே அதை விட்டொழிப்பர். அப்பயிற்சியில் தலைப்பட்டோர் உற்ற வயதடைந்தவராயின், உடனே அவர்கட்கு மணவினை முடிப்பது நலம்.

முஷ்டி மைதுனத்தால் விளையுங்கேடுகளை இளமையில் உணர்வோர் அத்துறையில் தலைப்படார். தலைப்பட்டோர் கேடுகளை உணரப்பெற்றதும் அவரும் உடனே அதைத் தொலைப்பர். பல ஆண்டு அப்பயிற்சியிலுழன்று பழுத்தோர் பழுத்து விழவேண்டியவரே. அன்னார்க்குத் துன்பம் நரகம் போலத் தோன்றும். தோன்றினும் அப்பயிற்சியினின்றும் அவர் விடுதலையடைதல் அரிது. அவர் அப்பயிற்சிக்கு அடிமையாய் விட்டவர். அவர் அதன் கொடுமையுணர்ந்து அதனை விட முயலினும் அஃது அவரை விடாது. எந்நோய்க்கும் மருந்துண்டு. எப்பேய்க்கும் மந்திரமுண்டு. இந்நோய் பேய்க்கு மருந்துமில்லை; மந்திரமுமில்லை. பின்னை அவர் உய்யும்வழியாது? ஒன்றுமில்லை என்று சிலர் கூறுவர். உய்யும் வழியுண்டு என்று கூறலாம். அவ்வழி மற்றோரிடத்தில் குறிப்பன். துன்பம் முதிர்ந்தபின்னர்க் காணும் வழியினும் அதுமுதிராவண்ணம் அதைத் தகைவதே அறிவுடைமை.

முஷ்டி மைதுனம் எவ்வழியில் தன்னை யுடையானைக் காட்டிக் கொடுக்கும் என்பதைச் சிறிதுகவனிப்போம். அப்பீடை முதலாவது முகத்தில் ஒரு

விதமாறுதல் நிகழ்த்தும். முகத்தில் இளமை குன்றும். முகத்தில் ஒருவித பழுப்பு தோன்றும். அப்பழுப்பில் கருஞ்சாம்பல் பூசல் போன்ற தொரு சாயல் மிக மென்மையாகத் தோன்றி மறையும். பின்னே கண்களின் கீழ் கருங் கோட்டுக்கீற்றுக்கள் விழும். கண்களில் குழிவிழும். சோர்வு களைப்பு தலைகாட்டும். படிப்பிலோ தொழிலிலோ மனஞ் செல்லாது. நாளடைவில் உயிர் நிலையின் நரப்புக்கட்டுகள் குலைந்து சோர்வுற்றுக் கிளர்ந்தெழுந்தன்மை யிழந்துவாட்டமுறும். உயிர் நிலையின் நரப்புக்கட்டுக் குலைவு தன்னளவில் நின்றுவிடாது. அஃது எல்லாவற்றிற்குந் தாயகமாகலான் அது மற்ற விடங்களிலுள்ள நரப்புக்கட்டுக்களைக் குலைக்கும். மூளையின் உரங்குன்றும். குடர்கள் மெலிவுறும். மண்ணீரலும் குண்டிக்காயுஞ் சுறு சுறுப்பா யிருக்கமாட்டா. இவைகளால் ஜீரண சக்தி குறையும். மலச்சிக்கல் உண்டாகும். இவர்கட்கு ஞாபக சக்தி யிராது. பெரிய நூலாராய்ச்சியில் நாட்டஞ் செல்லாது. கூட்டங்களிலிருக்க இவர்கள் மனம் ஒருப்படுவதில்லை. ஆடவராயின் மகளிர் கூட்டம் நஞ்செனத்தோன்றும்; மகளிராயின் ஆடவர் கூட்டம்

வெறுப்பாகத் தோன்றும். இப்பெரியோர்கள் தனித்து ஒதுங்கி வாழவே விரும்புவார்கள். இன்பூட்டும் இயற்கை இவர்கட்குத் துன்பூட்டுவது போலத்தோன்றும். இன்னும் விரிக்கிற் பெருகும். மேல் நாட்டு அறிஞர்கள் எழுதிய மருத்துவ நூல்களில் முஷ்டி மைதுனத்தால் விளையுங் கொடுமைகளைப் பரக்கக் காண்க. இப்பயிற்சியில் பழுத்த மாக்களே உயிரோடு நரகில் இவ்வுலகத்தில் அழுந்திக்கிடப்பவர்கள்.

இவ்வளவு துன்பத்துக்குங் காரணமென்னை? ஒருத்தி ஒருவனுடனும் ஒருவன் ஒருத்தியுடனும் வாழாதொழிவதன்றோ? ஆண்டவன் விதித்த இயற்கை முறைக்கு இடர் விளைத்த பாவம் வீண் போமோ? இருவர் சேர்க்கைக்கென அமைக்கப்பட்ட உறுப்பில் ஒருவர்க்கென்ன விளையாட்டு? இவரல்லரோ இறையாணையை மீறியவர்? இயற்கைத்தாயை மறந்தவர்? முடிவில் தன்வாழ்விற்கே கேடு சூழ்ந்தவர்? இவரே பேர் பெற்ற தற்கொலையாளர். இன்பத்துக்கென அளிக்கப்பட்ட அரிய பிறவியை - பெறற்கரும் பெருவாழ்வை - துன்பமாக்கிக் கொள்ளும் மடமையினும் மடமை பிறிதொன்றுண்டோ?

இத்துணைக் கேடு விளைவிக்கவல்ல முஷ்டி மைதுனத்தைச் செயற்கைமுறை என்று சொல்லவும் வேண்டுமோ?

மருந்துண்ணல்: இயல்பாக எழும் வேட்கையை யொடுக்கச் சிலர் மருந்துண்கிறார். இம்மருந்தார் முஷ்டி மைதுனத்தார்க்குத் தம்பியாரென்க. இயற்கையை மருந்தால் கட்டுப்படுத்தப் புகலே அறிவுடைமையன்று. மருந்தென்ன செய்கிறது? தாதுவைக் கெடுக்கிறது. இம்மருந்துகளிற் சில மூலாதாரத்தையே கெடுக்கின்றன; வேறு பல நோய்களையும் உண்டு பண்ணுகின்றன. தொடக்கத்தில் மருந்து வேட்கையை யழிப்பதுபோன்றதொரு உணர்வளிக்கும். உண்மையில் மருந்து வேட்கையை யழிக்கவில்லை. அவ்வேட்கைக்கு நிலைக்களனாக உள்ள உறுப்புக்களின் பசையை மருந்து அழிக்கிறது. அப்பசை யழிவு பின்னை படிப்படியாக முஷ்டி மைதுனத்தால் விளையுங் கேடுகளைப் பொறுத்துப் பொறுத்து விளைக்கும். இக்கேடுகளை விளைக்கும் மருந்துண்ணலும் செயற்கை முறையாகும்.

புலனடக்கம்: மேற்போந்த முறைகளைச் செயற்கை முறைகளென்பதில் வாதப்போர் நிக

மாது. புலனடக்கத்தைச் செயற்கை முறை எனில் வாதப்போர் அளவின்றி எழும். "புலனடக்கம் பல பெரியோர்களால் கொள்ளப்பட்டது; நூல்களால் முழங்கப் பெறுவது. அதை எப்படிச் செயற்கை முறை என்று கூறலாம்" என்று பலர் வாதம் நிகழ்த்துவர். புலனடக்கப்பயிற்சி யில்லாதாரே பெரிதும், வாதப் போருக்குப் புறப்படுவர். பெரியோர்கள் மீதும் நூல்கள் மீதும் இவர்கள் கொண்டுள்ள பற்றே இப்பிடிவாதத்துக்குக்காரணம். உண்மைப் பெரியோர்கள் கருத்துக்கும், உண்மை நூல்களின் உள்ளக்கிடக்கைக்கும், அநுபவத்துக்கும் எனது கருத்து முரண்பட்டு நில்லாது என்று உறுதி கூறுகிறேன். பெண்ணை இழிந்த பொருளெனக் கருதி, அவளை வெறுத்து, அவள் நினைவு உள்ளத்தில் பதியாவாறு காக்கப் புலனடக்கம் வேண்டுமென்று சொல்வோர் கூற்றுக்கு எனது கருத்து மாறுபட்டே நிற்கும். பெண்ணை வெறுக்கும் எண்ணத்துடன் புலனடக்கல் செயற்கைமுறை என்பது எனதுகொள்கை. யான் பெரியாரெனக் கொண்டுள்ள அறிஞர் கொள்கையும் அதுவே.

புலனடக்கம் பல ஆன்றோர் நூல்களில் பேசப்பட்டிருத்தல் உண்மை. "அடல் வேண்டும் ஐந்

தன் புலத்தை" என்று திருவள்ளுவனார் திருவாய் மலர்ந்திருக்கிறார். "மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து" என்று மணிவாசகனார் அருளிச் செய்திருக்கிறார். இக்கருத்தடங்கிய நமது நாட்டவர் பாடல்களை மலைமலையாகக் குவிக்கலாம். திருமூலனார் என்னும் பெரியார்,

"அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதனம் ஆமென்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே"

என்று அறிவுறுத்தியிருத்தல் ஊன்றிக் கவனிக் கற்பாற்று. அத்திரு மூலரே,

"ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே"

என்றுங் கூறியிருக்கிறார்.

பெரியோர் கருத்துக்கள் ஒன்றோடொன்று முரண்படுவது போலத் தோன்றும். அவ்வுரைகளை நுணுகி ஆராய்ந்தால் முரண்பாடின்மைகாணலாம்.

முதலாவது அடக்கம் என்னுஞ் சொல்லின் பொருளுணரல்வேண்டும். நெறியல்லா நெறி செல்

வதினின்றுங் காத்தலே அடக்கமென்பது. முற்றுஞ் செயலின்மை அடக்கமாகாது. நாவடக்கம் என்றால் என்னை? நாவைச் செயலின்றிச்செய்வதா? அன்று. கண்டதைத் தின்னலாகாது என்பது அதன் பொருள். வாயடக்கமாயிரு எனில் பேசாமல் ஊமையாயிரு என்றோ பொருள் கூறுவது? பேசத்தகாததைப் பேசாதே என்பதன்றோ அதன் உண்மைப் பொருள்? அவ்வாறே புலனடக்கம் என்பதற்கும் பொருள் கொள்ளல் வேண்டும். புலனடக்க மென்பதற்குப் புலன்களை வழியல்லா வழியில் உழற்றலாகாதென்பது பொருள். புலன்களின்செயல் கெடுத்தல் என்று பொருள்கோடல் தவறு. புலன்களின் செயல் கெடின் மனிதன் அசேதனன் அதாவது அறிவற்ற சடப்பொருளாவன். புலன்களின் செயல்கெடுத்து அழிவோரை நோக்கியே திருமூலனார் "அஞ்சும் அடக்கில் அசேதனமாம்" என்று நல்லறிவு கொளுத்தினார். அத்திருப்பாட்டிலேயே "அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே" என்று புலனடக்கத்தின் நுட்பத்தை அவர் நுவன்றுளார். புலன்களை வினைகெடச்செய்யாது அவைகளைச் செம்மையில் நிறுத்தி வாழ்வோர்க்கு, மன ஒற்றுமையும் அறிவு விளக்கமும் உண்டாகும்.

ஆகவே புலனடக்கம் என்று ஆன்றோர் கூறிய மொழிகளில் வேற்றுமைப் பொருளில்லை என்க. புலனடக்கம் வேண்டற்பாலதே. அசேதனமாய் அழி முறையில் புலன் அடக்கம் வேண்டற்பாலதன்று.

உலகிற்கு இயற்கை அறத்தை அறிவுறுத்தப் போந்த திருவள்ளுவனார் புலன்களைக் கெடுத்து அறிவழியும் முறையையா அறிவுறுத்துவர்? ஒருபோதும் அப்புன்னெறியை அவர் அறிவுறுத்தார்.

"உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து"

என்றார் நமது திருவள்ளுவனார். "உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்" என்று அருளியிருத்தல்காண்க. உரனால் அதாவது அறிவால் ஓரைந்தும் நெறியல்லா நெறிசென்று உழலாதவாறு காத்தல்வேண்டுமேயன்றி அவைகளை அழித்தல் கூடாது. அழித்தால் உரன் விளக்கம் ஏது? "அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை" என்றதென்னை எனில், ஐந்தன் புலம் தீ நெறியில் செல்வதை அடல் வேண்டுமென்று கொள்க. ஐம்புலன் அடங்காது முனைந்தெழுந்து தீ நெறியில் பாயும் தீர்மையுடைமையால் அவை

களின் முனைப்பை அடல்வேண்டும் என்று புலவர் விரைந்து கூறுகிறார்.

> “ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
> இந்திரனே சாலுங் கரி ”

என்னுந் திருக்குறளை உற்றுநோக்குக. ஈண்டு ஐந்து அவித்தான் என்றது கௌதமனாரை. கௌதமனார் ஐம்புலவழியுழலாது ஐம்புலனைத் தம் அறிவின்வழிச் செந்நெறியில் இயக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவரும் அகலிகை என்னும் மனைவியோடு வாழ்ந்தவர். இந்திரன் புலனடக்கும் ஆற்றல் இலனாய், சிற்றின்பத்துக் கெளியனாய், அகலிகையின் கற்பழித்துத் துன்புற்றான். இவ்விருவருள் ஐந்தின் வழியுழலாதவர் ஒருவர்; உழன்றவன் ஒருவன். உழலாதார் ஆற்றல் மேற்போந்த குறளில் காண்க. கௌதமனார் ஐந்தையுஞ் செயலின்றி ஒடுக்கி மாயவில்லை என்பது கவனிக்கற்பாலது.

> “சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின்
> வகை தெரிவான் கட்டே உலகு ”

என்னுங் குறளிலும் ஆசிரியர் ‘ ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு ’ என்று அருளியிருக்கிறார். ஐந்தினை அழித்து வினைகெடுத்தவன்

கண்ணதே உலகு என்று அவர் அறைந்தாரில்லே.

புலனடக்கல் பொறியடக்கல் எனவரூஉம் இடங்களில் அடக்கம் என்பதற்குச் செயலின்மை கொள்ளாது அறிவுவழிச் செந்நெறியில் நின்ருெழுகல் என்று கொள்ளக்கடவேமாக.

இவ்வுண்மை தேருது சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தைக் கெடுக்கு முறையில் புலனடக்கப் பயிற்சி செய்யப்புகுவது செயற்கை முறையாகும். இவ்வைந்துங் கெட்டால் அறிவற்ற பொருளாதல் உறுதி. அறிவு கெடும் முறையில் சிலர் புலனடக்கம் என்னும் பெயரால் பெண்ணே வெறுத்து, யோகம் யோகம் என்று போலியோகஞ் செய்து, மண்ணீரல் இயக்கங் கெடுத்து, உடல் வெளுப்பேறச் சோகை காமாலே இருமல் முதலிய நோய்வாய்ப்பட்டு, வாழ்வைக் குலேத்துக் கொள்கிருர்.

அன்பு நெறி இன்னதென்றுணராது உடல் கெடுக்கும் வெம்மை நெறியில் நுழைந்து திரியும் போலியோகிகள் தங்கள் மறச்செயலுக்குத் திருவள்ளுவனுர் போன்ற அறவோர் உரைகளே எடுத்தாண்டு, பொல்லாப் பழியை அப்பெரியோர்மீது சுமத்தாதிருப்பார்களாக. திருவள்ளு

வனர் ஆங்காங்கே அறிவுறுத்தும் புலனடக்க நுட்பத்தை,

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும்
ஒண்டொடி கண்ணே யுள" [ஐம்புலனும்

என்று அவரே விளக்கியிருத்தல் காண்க. திருவள்ளுவனர் அருளிய திருக்குறளை முற்றும் ஆய்ந்து அவர் உள்ளக்கிடக்கை இன்னதென்று உணராது, ஆங்காங்கே ஒவ்வோர் உரை எடுத்துத் தங்கோள் நிறுத்த முயல்வது நியாயமாகாது. திருவள்ளுவர் அருளிய திருக்குறள் இயற்கை அறவாழ்க்கையை உலகிற்கு அறிவுறுத்த எழுந்த நூல் என்பதை அன்பர்கள் உணர்வார்களாக.

ஆகவே புலனை நல்வழியில் நிறுத்தி ஆளுந்திறனின்றிப் புலனையே கெடுத்து அறிவற்ற பொருளாக்க முயல்வது செயற்கை முறையேயாகும்.

வாளாகிடத்தல்: மேற்போந்த முறைகளெல்லாம் உடல் நலனைக் குலைத்தலால் அத்துறைகளிலிறங்காமலும் மணவாழ்வு கொள்ளாமலும் வாளாகிடத்தல் நலமெனச் சிலர் கருதலாம். வாளாகிடத்தலும் பிழையே. ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு வினை யாற்றினலன்றி உடல் நலன்பெருது. உயிர் நிலைக்கென உள்ள கடனை ஒருத்தியோ ஒருவனே

ஆற்று தொழிவதும் இயற்கைக்கு மாறுபட்டு நிற்பதாகும். மேற்போந்த முறைகள் விரைவில் கேட்டை வெளிப்படுத்தும். வாளாகிடத்தல் நாட் பொறுத்து உடல் நலனுக்கு ஊறு நிகழ்த்தும். இறைபடாத கேணி நிலை என்னும்? அத்த கைத்தே வாளாகிடக்கும் வாழ்வும். வாளா கிடக்கக்கிடக்க உயிர்நிலையின் இயக்கங்குன்றிப் போகும். அதனால் நரம்புக்குத் தளர்ச்சியுண்டா கும். மனைவியோடு வாழாமலும், வேறு தீப் பயிற்சியில் நண்ணுமலு மிருப்போர்க்கும் கண் மங்கல் மண்டையிடி முதலியன தோன்றும். இந் நோய்களுக்குரிய மருந்து காதல்மணவாழ்வே யாகும். ஆதலால் வாளாகிடத்தலும் இயற் கைக்கு மாறுபட்டு நிற்பதாகும்.

இன்னும் பல செயற்கை முறைகளுண்டு. அவ் விழிவுகளை ஈண்டு விரிக்கிற் பெருகும். இயற்கை அறத்துக்கு மாறுபட்ட ஒவ்வொன்றும் செயற் கையின் பாற்படுமென்று சுருங்கச் சொல்லி மேலே செல்கிறேன்.

செயற்கை முறைகளில் தலைப்பட்டால் உடல் நலத்துக்கே கேடு விளையும். உற்ற வயதில் வாளா விருந்தாலும் உயிர் நிலைக்குப் போதிய

பயிற்சியின்றி உடல்நலன் கெடும். பின்னை என்ன செய்கிறது? வேறுவழி யின்றது இயற்கை அமைப்புவழி வாழ்வு நடாத்த ஒருப்படல்வேண்டும். இயற்கை அமைப்பு பெண் ஆண் சேர்க்கையைக் குறிக்கொண்டு நிற்றல் வெள்ளிடைமலை. அந்நோக்குக்கு ஏன் மாறுபட்டொழுகி வாழ்வைக் கெடுத்துக் கொள்ளல்வேண்டும்? அவ்வியற்கை வழி நிற்க ஒருப்படுவதே அறிவுடைமை.

இயற்கை அமைப்பு வழி நின்றால் உடல் நல முறல் உண்மை. ஆனால் அவ்வழி அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞ்ஞானத்தைக் கூட்டுமா என்று ஐயுறுவோருளர். இயற்கைக்கு முரண்பட்டு நிற்கு மட்டும் அஞ்ஞானம் அகலாதென்றும், அதற்கு அரணாக நிற்க நிற்க மெய்ஞ்ஞானங் கூடுமென்றும் அவ்வன்பர் அறிவாராக. இயற்கைக்கு அரணாக வாழ்தலாவது ஒருத்தி ஒருவனுடனும் ஒருவன் ஒருத்தியுடனும் வாழ்வதாகும். "அந்தோ! இஃதென்னை? முற்றும் மாறுபட்ட கருத்து! இல்வாழ்க்கையா மெஞ்ஞானத்தைக் கூட்டும்? அநியாயம் அநியாயம்" என்று கடிந்துரைப்போர் இல்லாமற்போகார்.

அழுக்காறு அவா வெகுளி முதலியன உள்ள விடத்தில் அஞ்ஞானமும், அவை அற்றவிடத்தில்

மெஞ்ஞானமும் நிலவும் என்பது எவரும் ஒப்ப முடிந்த உண்மை. இதில் கருத்து வேற்றுமை யில்லை. அழுக்காறு முதலிய தீக்குணங்களின் நீக்கத்துக்கும், மெய்யுணர்வின் ஆக்கத்துக்கும் கடைப்பிடிக்கத் தக்க வழியாது? இல்லறத்தை அஞ்ஞானமென்றும் பிரவர்த்தியென்றும் பேசுவோர் என்ன வழி குறிக்கிறார்? அவ்வழி செயற்கை வழியாயின் உடலுக்குக்கேடு விளையும். மெய்ஞ்ஞானத்துக்கு உடல்நலன் மிக இன்றியமையாதது. "உடலார் ஒழிந்தால் உயிரார் ஒழிவார் - திடம்பட ஞானம் சேர வொட்டாது" என்றார் திருமூலனார். எவ்வழி நுழையினும் அது செயற்கை வழியாய் முடிகிறது. எஞ்சி நிற்பது இல்வாழ்வு ஒன்றே. அதை அஞ்ஞான வழி எனில் வேறு வழி என்னை? வேறு வழி நீத்தல் அல்லது துறவு என்று அவ்வன்பர்கள் கூறலாம். நீத்தல் அல்லது துறவைப்பற்றி இந்நூல் இடையிடையே சொல்லி வருகிறேன். புலனடக்கத்திலுங் குறிப்பாக அது பற்றிச் சில உரை பகர்ந்திருக்கிறேன். ஆயினும் இன்னுஞ் சில மொழி கூறல் தவறாகாது.

நீத்தல் அல்லது துறவு

புலனடக்கம் எவ்வாறு சில விடங்களில் திரிபாகக் கொள்ளப்பட்டிருக்கிறதோ அவ்வாறே நீத்தலும் திரிபாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. அத்திரிபு பல ஆண்டுகளாக நிலைத்தும் நிற்கிறது. அத்திரிபில் மயங்கிக் கிடப்போர்க்கு என்போன்ரூர் கூற்று கூற்ருகவே தோன்றும்.

யான் புதிதாக ஒன்றுங் கூறுகிறேனில்லை. பண்டைத் தமிழ் மக்கள் கொண்ட ஓர் அறத்தையே இன்று வலியுறுத்துகிறேன். இடைக் காலத்தில் தோன்றிய திரிபும் மயக்கமும் நாட்டையே அலைக்கின்றன. தொல்காப்பியனூர், இறையனூர், திருவள்ளுவனூர், மாணிக்கவாசகனூர் கோலிய அறநெறியே யான் வலியுறுத்துஞ் செந்நெறியாகும். இப்பொழுது ரவீந்திரநாத் தாகூர் அவ்வறநெறியையே உலகிற்கு அறிவுறுத்தி வருகிறூர்.

எனது உள்ளக்கிடக்கையைச் செவ்வனே யுணராது 'புது முறை' என்று என்மீது பழிசுமத்தும் அன்பர்கட்கு எனது வணக்கஞ் செலுத்துகிறேன். யான் குறிப்பது புது முறையன்று. அது பழைய

முறையே. புது முறை காண்பதுங் குற்ற மாகாது. அதற்கும் மக்கட்கு உரிமையிருத்தல் வேண்டும். "தொன்மையவாமெனுமெவையு நன்றாகா இன்று தோன்றிய நூலெனுமெவையுந் தீதாகா" என்று உமாபதி சிவம் உரைத்திருத்தல் காண்க.

நமது நாட்டில் கருத்து வேற்றுமைக்கு மதிப்பு ஏற்படல்வேண்டும். கருத்து வேற்றுமை கொண்டு பகைமை பாராட்டலுங் கேடுசூழலும் அறியாமை. கருத்துவேற்றுமைக்கு இடமும் மதிப்புங் கொடுப்பது சிறந்த நாகரிகம். அவரவர் கருத்தை அவரவர் வெளியிடுவாராக. உலகங் கொள்ளத்தக்கதைக் கொள்ளும்; தள்ளத்தக்கதைத் தள்ளும். பழைமை என்று மடமையைப் போற்றலும், புதுமை என்று செம்மையைத் தூற்றலும் அறிவுடைமை யாகா. அக்குணமுடைய நாடு ஒருபோதும் வளர்ச்சியுறாது. கருத்துவேற்றுமைக்கும் புதுமைக்கும் இடந்தர இடந்தர நாடு வளரும். இது நிற்க.

நீத்தல் என்பதற்கு உலக ஆசையை நீத்தல் என்று சொல்லப்படுகிறது. அவ்வாசை மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை என்று தொகுக்கப்பட்டிருக்கிறது. அம்மூவாசையுள் பெண்ணா

சை நீத்தால் மற்ற ஆசைகள் தாமே நீங்குமென் றும் அறையப்படுகிறது. "மண்ணாசை தன்னிற் பொன்னாசையின் மயக்க வாழ்க்கை - பெண்ணா சை நீத்தல் எளிதோ பெரியோர் தமக்கும்" என்றும் பெண்ணாசையின் கொடுமை குறிக்கப் படுகிறது. பெண்ணாசையால் எல்லா ஆசையும் வளரும் என்பது அச்சகோதரர்கள் கருத்துப் போலும்!

இடைக்காலத்தில் ஆணுலகில் எழுந்த அடக்கு முறை பெண்ணுலகை மாயையாகவும் அஞ்ஞான மாகவுங் கருதச் செய்திருக்கிறது. பெண்ணுடன் வாழ்தல் பிரவர்த்தி மார்க்கமாம்; அஞ்ஞானமாம். அவ்வாழ்வு துறத்தல் நிவர்த்தி மார்க்கமாம்; மெய்ஞ்ஞானமாம். இந்த ஞானம் பேசும் அறி ஞரை நோக்கிச் சில கடாக்கள் கடாவ விரும்பு கிறேன். அறிஞரே! நீவிர்யாண்டிருந்து தோன்றி னீர்? நுமது தந்தை ஒரு பெண்ணுடன் கூடி வாழா தொழிந்திருப்பரேல் நீவிர் இப்பொழுது இந்த ஞானம்பேச முடியுங்கொல்! நுந் தாய் தந்தையர் சேர்க்கை யன்றோ நுமது துன்ப விருட் கட்டை யவிழ்த்து இவ்வுட லீந்து, இவ்வுலக வாழ்வு தந்து, உம்மை

ஞான ஆராய்ச்சி புரியுமாறு செய்திருக்கிறது ? அவரைப் போல நீவிரும் ஒரு பெண்ணுடன் கூடி வாழ்ந்து துன்ப விருளிலுள்ள சில உயிர்கட்கு உடலீந்து இல்வுலகில் கொணர வேண்டு மன்றோ? நீவிர்மட்டும் ஞானம் பெற்று வீடு பேறெய்து வதோ ? இது தன்னலமா பிறர் நலமா ? தன்னல முடையார்க்கு ஞானமுண்டோ ? அன்புண்டோ ? நீவிர் பெண் வாழ்வை மறுப்பது இறைவன் படைப்பு நோக்குக்கு இடையூறு செய்வதாகா தோ ? புத்தர் கிறிஸ்து மகம்மது சாந்தி போன்ற பெரியோர்கள் உலகிற்கு வேண்டாமோ ? பெண் ணுடன் வாழ்தலை வெறுத்தால் அத்தகைப் பெரி யோர்கள் எப்படி உலகில் தோன்றுவார்கள் ? அறிஞரே ! ஓர்மின். பெண்ணின் வயிற்றிற் பிறந்து ஞானம் பேசும் ஒருவர் பெண்ணை-மாயை-அஞ்ஞானம் - பிரவர்த்தி - என்று பேசுவது எத் தகை நன்றியறிதல்! எத்தகைக் கைம்மாறு ! வெட் கம் ! வெட்கம் !

அஞ்ஞானம் எது? மெய்ஞ்ஞானம் எது ? பெண் தெய்வத்தை மாயையாகக் கருதுவதும், அங்ஙனங் கருதி அவளைத் துறப்பதும் அஞ்ஞானமென்றும், பெண்ணைக் கடவுள் வடிவம் என்று உணர்வ

தும், உணர்ந்து அவளுடன் அன்பு வாழ்வு நடாத்துவதும் மெய்ஞ்ஞானமென்றும் நான் சொல்கிறேன்; இங்ஙனமே பெண்ணுடன் கூடி வாழல் நிவர்த்தி என்றும், கூடி வாழாதொழிவது பிரவர்த்தி என்றுஞ் சொல்கிறேன். எப்படி?

திருவள்ளுவனார் வழியே நின்று எனது கருத்தை வெளியிடுகிறேன். திருவள்ளுவனார் "மனத்தின் கண் மாசிலனாதல் அனைத்து அறன்" என்றும், "அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்" என்றும் அறத்தின் இயல்பு கூறியிருக்கிறார். இவ்வறநிலை முன்னருங் கூறப்பட்டிருக்கிறது. அழுக்காறு முதலிய குற்றங்களினின்றும் நீங்கி மனமாசு அகற்றுவது எப்படி? வீட்டுப் படிப்புக் கொண்டு எல்லாவற்றையும் நீத்தால் மனமாசகலுமோ? வாய் வேதாந்தம் மிக எளிதில் பேசிவிடலாம்.

எவ்வெண்ணத்தோடு வாய் ஞானிகள் துறவு கொள்ள விரும்புகிறார்கள்? "பெண் மாயை; காமப் பொருள்" என்னும் எண்ணத்தோடன்றோ? இவ்வெண்ணத்துடன் காட்டுக் கோடினலென்ன? மூக்குப் பிடித்துக் கிடந்தா

லென்ன? இவர் உள்ளத்துள்ள காம நோய் போமோ? காமம் என்னும் எண்ணம் உள்ளமட்டும் அது மலையிலும் எரிக்கும்; நீரிலும் எரிக்கும்; காட்டிலும் எரிக்கும்; நாட்டிலும் எரிக்கும்; எங்கும் எரிக்கும். அவ்வெரியால் இத்துறவோர் கூடா ஒழுக்கத்திலோ வேறு எச்செயற்கைத் துறையிலோ வீழ்ந்து ஒழியினும் ஒழிவர். வீழா தொழியினும் பெருநிலை இவருக்குக் கூடப் போவதில்லை. என்னை? மனமாசகலா ஒருவர்க்கு எங்ஙனம் பெருநிலை கூடும்? இவர் மனதிலுள்ள மாசன்றோ பெண்ணிடத்துள்ள கடவுட்டன்மையை மறைத்து, அதை மாயையாகக் கருதித் துறக்கச்செய்தது? அம்மாசு எவர் பாலது? பெண்ணின் பாலதா? இத்துறவோர் பாலதா? தம்பாலுள்ள மாசினைத் துடைக்க வழிதேடாது, அம்மாசு துடைக்க வந்த பெண் தெய்வத்தை - அன்பு வடிவை - மாயை யென்று கருதியோடுவது அஞ்ஞானமாகாது பின்னை எஞ்ஞானமாகும்?

"மனத்தின் கண்மாசிலனாதல்" என்று அறநிலை கூறிய திருவள்ளுவனார் அம்மனமாசகற்ற வழிகூறா தொழியவில்லை. அவ்வழி எது? பாயிரத்துள் அறன் வலியுறுத்தி, அவ்வறநிலை பெறற்

குப் படிப்படியாக அவர் வழி கோலியிருக்கிறார். முதலாவது திருவள்ளுவனார் இல்வாழ்க்கை குறிக்கிறார்; பின்னை அதற்குரிய வாழ்க்கைத் துணை நலம் வகுக்கிறார்; அதற்கு மேல் மக்கட் பேறு புகல்கிறார்; அதினின்றும் அன்புடைமை விருந்தோம்பல் முதலிய அறத்துறைகளை முறை முறையே அணி யணியாகத் தொகுத்துச் செல்கிறார். இவ்வதிகார வைப்பின் நுட்பத்தைச் சிறிது கூர்ந்து கவனிப்போம்.

அழுக்காறு அவா முதலிய மாசு படர்ந்த மனத்தில் தன்னல உணர்வே பெரிது மிருக்குமன்றிப் பிறர் நலங்கருதும் அன்பு நிகழ்தல் அரிது. அன்புங் கடவுளும் ஒன்றே. அழுக்காறு முதலியன குறையக் குறையத் தன்னலப் பேயுணர்வுந் தேய்ந்து தேய்ந்திறுகும். பின்னை அவ்விடத்தில் அன்புக்கடவுள் உணர்வு வளர்ந்து வளர்ந்து மற்ற உயிர்களிலும் அக்கடவுள் கோயில் கொண்டிருத்தலைப் புலப்படுத்தும். அதனால் எவ்வுயிர்கட்குந் தீங்கு மனதிலும் நினையாது, அவ்வுயிர் நலன் நாடிப்பயன் கருதாத்தொண்டாற்ற இயல்பாக ஒருணர்வு எழும். அவ்வுணர்வு பெறவே மக்கள் பிறக்கிறார்கள். அவ்வுணர்வு பெறுவிக்கவே கட

வுள் உயிர்கட்குத் தநுகரண புவன போகங்களைக் கொடுக்கிறார். இவ்வுலக வாழ்வின் நோக்கமும் இவ்வுணர்வு பெறவேண்டு மென்பதே.

இப்பெரு நிலையைப்பற்றி மக்கள் முதல் முதல் கலைஞானத்தளவில் உணர்கிறார்கள். "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்பது பழமொழி. ஏட்டில் படித்தது நடையில் செயலில் வரல்வேண் டும். "எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்று வாயால் சொல்வது எளிது. அதைச் செயலில் கொணரல் அரிது. அழுக்காறு அவா முதலிய மாசுகளைத் துடைத்தால் தன்னிடத்தும் பிற ரிடத்தும் விளங்கும் அன்புக்கடவுள் தோற்ற முறும் என்று பேசலாம்; எழுதலாம். அப்பெரு நிலையைச் செயலில் பெற்றாலன்றோ வாழ்வின் நோக்கம் நிறைவேறும்? வெறுங் கல்வியுடன் நின் றால் மனமாசு எங்ஙனம் அகலும்? அன்பு ஊற்று எங்ஙனந் திறக்கும்?

'இக்கல்வி' யறிவோடு வளரும் ஒருத்தியும் ஒரு வனும் ஒன்றி வாழப்புகுவரேல் கல்வி யறிவாலாய பயன் பெறுவர். இல்லையேல் அவர் அப்பயன் பெறா தொழிவர். கல்விப்பயனைப் பெறுதற்குரிய நிலை ஒருத்தியும் ஒருவனுங்கூடி வாழும் நிலை

என்க. அங்கிலேகூட்ட இயற்கை நாட்டஞ் செலுத்திக் கொண்டிருக்கிறது.

உற்றவயதில் இருவர்க்கும் ஓரின்ப உணர்வு ஏன் தோன்றுதல்வேண்டும்? அவ்வுணர்வின் நோக்கமென்னை? இருவரையுஞ் சேர்க்க வேண்டுமென்பதன்றே? இருவரும் இயற்கை கூட்டும் வழி சேர்ந்தால் வாழ்வின் நோக்கங் கைவரப்பெறுவர். வாய் வேதாந்தம் பேசிப் போலித்துறவில் அவர் தலைப்படுவரேல் வாழ்வு நோக்கம் பெறுது இடர்ப்பட்டொழிவர். ஆண்டவன் இயற்கை வழிச்செலுத்தும் ஆணைவழிநிற்றலே அறிவுடைமை. அதற்கென்றே படைப்புகளும் அமைந்திருக்கின்றன. ஒருத்தி ஒருவனுடன் வாழ்தலும் ஒருவன் ஒருத்தியுடன் வாழ்தலும் இயற்கை.

இயற்கை வழி ஒருத்தியும் ஒருவனுங்கூடி இல்வாழ்வில் நுழைகிருர். நுழைவதால் வாழ்வுநோக்கம் எங்ஙனம் நிறைவேறும்? இங்கே கூர்ந்து கூர்ந்து வாழ்வின் வளர்ச்சியை நோக்குவோமாக. நாளடைவில் படிப்படியாக இவளிடத்துள்ள அழுக்காறு அவா முதலிய மாசுகளும், அங்ஙனே இவனிடத்துள்ள மாசுகளும் தேய்ந்து தேய்ந்து அவ்விடத்தில் பொறுமை தியாகம் இவை எல்லா

வற்றிற்கும் அடிப்படையாகவுள்ள அன்பு படிப் படியாகக் கால் கொண்டு கோயில் கொள்ளும் அழகை என்னென்று சொல்வது? சுருங்கச் சொல் லின் தன்னலங்கெட்டுப் பரநலம் பெருகுகிறது என்னலாம்.

மணவாழ்விற்கு முன்னர் ஒருத்தி பெரிதும் தன்னையே நேசித்துத் தன்னலத்திலேயே நாட் டஞ் செலுத்துகிறாள். ஒருவனும் அவ்வாறே தன் னலத்தில் தோய்ந்து கிடக்கிறான். காரணம் பர நலத்துக்குரிய அன்பு ஊற்றை அழுக்காறு அவா வெகுளி முதலிய மாசுகள் மறைத்து மூடிக் கொண்டிருப்பதேயாகும். மண வாழ்விற்குப் பின்னை ஒரு பெரும் மாறுதல் இருவர் பாலும் நிகழ்கிறது. இவள் இவனை நேசிக்கிறாள்; இவன் இவளை நேசிக்கிறான்; அந்தோ! எத்தகை நேசம்! சொல்லவும் இயலுமோ! இவள் இவ னாகிறாள். இவன் இவள் ஆகிறான். இருவரும் ஒரு யிர் ஈருடலெனப் பொலிகிறார். இவள் நோயுற்றால் இவன் நோயுற்றதுபோல வருந்துகிறான். இவன் நோயுற்றால் இவளும் அங்ஙனே வருந்துகிறாள். என்ன நேசம்! ஒருவரிடத்தில் முன்னை கட்டுப் பட்டுக்கிடந்த அன்பு இப்பொழுது இருவர்பால்

பரவலாயிற்று. எவ்வளவு அன்பு பரவுகிறதோ அவ்வளவில் அழுக்காறு அவாமுதலிய மாசும், அதனுலாகும் தன்னலமுங் கெடுமென்க.

இருவருங் கூடிவாழும் பொழுது இவர்களது அன்பின் பயனுகக் குழந்தைகள் பிறக்கின்றன. அக்குழந்தைகள் இவ்விருவருடைய உயிர் என்று கூறல் மிகையாகாது. தாயும் தந்தையும் அக் குழந்தைகளை எப்படி நேசிக்கிறர்கள் என்று சொல்லவும் வேண்டுமோ? இருவரிடையே பரவி முட்டிக்கொண்டிருந்த அன்பு இப்பொழுது மூன் ருவது உயிர்களிடைப் பரவி நிற்கிறது. அவ்வள வில் அழுக்காறு அவாமுதலியன கெடுகின்றன. பிள்ளைகள்பால் அழுக்காறு முதலியன செலுத் துந் தாய்தந்தையர் அரியர். தாய்தந்தையர் தமக் கெனக் கொண்ட வாழ்வு இப்பொழுது பிள்ளை களுக்கென என்று அர்ப்பணஞ் செய்யப்படுகிறது. அன்பர்களே! பாருங்கள்; தன்னலங் கெடுவதை யும் தியாக உணர்வு பெருகுவதையும் உன்னிப் பாருங்கள். அன்பு நிகழும் இடத்தில் அழுக்காறு முதலியமாசுகள் தலைகாட்டுமோ? இப்பொழுது தாய் தந்தையர் தம்மை மறந்து மூன்ருவது உயிர்களாகிய பிள்ளைகள் நலத்துக்கென வாழ்ப

வராகிறார். அழுக்காறு முதலியன குறைத லும் அன்பு வளர்தலும் நிவிர்த்தியா பிரவிர்த்தியா என்று பெண்ணை வெறுக்கும் பெரியோர்களை நோக்கி வினவுகிறேன்.

இல்வாழ்வு ஏற்ற ஒருவன் தன்பாலுள்ள மாசு குறைந்து, அன்பு ஊற்றுத்திறக்கப்பெற்று, அவ் வன்பு மனைவி மக்கள் மீது பொழிவது காணும் பேறு பெற்றிருக்கிறான். பெண்ணைமாயையென்று வாய்வேதாந்தம் பேசித்திரியும் ஒருவன் அன்பின் தன்மை இன்னதென்றுணராது மாசடர்ந்த இருள் மனமுடையனாய் நிற்கிறான்; எவன் நிவர்த்தி மார்க்கத்திலிருப்பவன்? எவன் பிரவிர்த்தி மார்க் கத்திலிருப்பவன்? நேயர்களே! சிந்தித்து உண்மை காணுங்கள்.

ஒருத்தியும் ஒருவனும் இளமையில் ஏட்டில் படித்த அன்பை இப்பொழுது வாழ்வில் காண்கி றார். இளமையில் இவ்விருவருங் கற்றவராகலான் பிள்ளைகளைப் பெற்று, அவர்கள் நலனுக்குப்பயன் கருதாத் தொண்டு செய்துவரும் வேளையில் "இவ் வுயிர்கட்கும் மற்றவுயிர்கட்கும், என்ன வேற்று மை? இவர்கட்குள்ள பசி பிணி முதலியன மற்றவர்கட்கு முண்டு. இவர்கள் நம்வயிற்றிற்

பிறந்தமையான் இவர்களை நாம் பாதுகாக்கிறோம். அங்ஙனமே மற்றவர்களுந் தங்கள் தங்கள் மக்களை வளர்த்து வருகிறார்கள். இஃது ஆண்டவன் கோலியுள்ள ஒழுங்குமுறை. உதவியின்றி வருந்தும் உயிர்கட்கும் நாம் உதவுதல் வேண்டும்" என்னும் எண்ணம் அடிக்கடி அவர்கள் உள்ளத்தில் தோன்றும். அப் பரோபகார எண்ணம் முதிர முதிர அழுக்காறு அவா முதலியன கெடுகின்றன. அவை கெடக் கெட அவர்கள் அன்பு மற்ற உயிர்களிடத்தும் பாவத் தொடங்குகிறது. பின்னை அன்பு அஃறிணை உயிர்களிடத்தும் பரவுகிறது. இப்பரவல் முறையை விரித்துக்கூற வேண்டுவதில்லை. பரோபகார எண்ணம் மனமாசைத்துடைத்து மக்களைத் தூய்மைப் படுத்தி எவ்வுயிரிலும் நிறைந்துள்ள அன்புக் கடவுளைக்காட்டும். இம்முழுநிலை பெற்றோர் முழு நிவர்த்தி யடைகிறார். இந்நிலைக்கு இல்வாழ்வும் பிள்ளைப் பேறுங் கருவியாயிருத்தல் கவனிக்கற் பாலது. பிள்ளைப் பேற்றிற்குப் பின்னரே மக்களிடத்து அன்புளமும் பரோபகார சிந்தையும் திறக்கப்படுதலுங் கவனிக்கத்தக்கது. ஒருத்தியும் ஒருவனும் இளமையில் கற்ற "எவ்வுயிர்க்கும்

அன்பா யிரு " என்னுங் கல்வியை இப்பொழுது அவர் வாழ்வில் காண்கிறார். எவ்வுயிர்க்கும் அன்பா யிருத்தலாவது தம்பாலுள்ள குற்றங்களை முற்றுங் களைந்த ஒருநிலை என்க. இஃதன்றோ மெய்ஞ் ஞானம்? நிவர்த்தி மார்க்கம்? திருவள்ளுவனார் உலகிற்கு அறிவுறுத்திய நெறி இச்செந் நெறி யாகும்.

திருவள்ளுவனார் "மனத்தின்கண் மாசிலனாதல் அனைத்தறம்" என்றும் "அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன் றது அறம்" என்றுங்கூறி அழுக்காறு அவா முத லிய மனமாசகற்றும் வழி கோலுவான், இல் வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம், மக்கட் பேறு, அன்புடைமை, விருந்தோம்பல் முதலிய அதிகாரங்களை முறை முறையாக அமைத்தனர். அம்முறையில் அழுக்காறு முதலியன தேய்தலும் வளர்தலும் அமைந்திருத்தல் காண்க.

மக்கட் பேற்றிற்குப் பக்கத்தில் அன்புடைமை யையும் விருந்தோம்பலையும் பொருத்தியிருத்தல் கருதற்பாற்று. ஒருத்தியும் ஒருவனுங் கூடி வாழ்வு நடாத்தி மக்களையீன்ற பின்னரே அன்னார் அன்பின் தன்மை இன்னதென்று அநுபவத்தில்

உணர்கிறார். அந்நிலையில் அவர்தம் அன்பூற்றுத் திறக்கிறது. அவர்க்கு அப்பொழுது அன்பு உடைமையாகிறது. பிள்ளையில்லா ஒருவன் அடாத செயல் நிகழ்த்தும்போது அவனை நோக்கி "பிள்ளையில்லாப்பாவி" என்று உலகோர் சொல்வது வழக்கம். அதன் பொருளென்னை? அன்பில்லாதவன் என்பது. பிள்ளைப் பேற்றிற்கும் அன்பொழுக்கத்துக்குமுள்ள தொடர்பு வாழ்வில் அநுபவத்தில் உணரத்தக்கது. அன்புடைமைக்குப் பின்னே "விருந்தோம்பல்" வைக்கப்பட்டிருக்கிறது. பிள்ளைப் பேற்றிற்குப் பின்னெழும் அன்பு தொடர்புடைய அப்பிள்ளையளவில் நில்லாது, தொடர்பில்லா உயிர்களிடத்தும் பாய்தலை அவ்வதிகாரம் தெரிப்பதென்க. இதுபற்றி மேலேயுஞ் சொல்லியிருக்கிறேன். புதிதாக வருவோரேவிருந்தினராவர். விருந்து என்னுஞ் சொல்லிற்குப் புதுமை என்பது பொருள். உற்றார் உறவினர் நண்பர் முதலியோர் விருந்தினராகார். முன் பின் பழக்கமின்றி வருவோரே விருந்தினராவர். அவர்க்குதவல் தொடர்பில்லாமற்ற உயிர்கட்குதவலைக்குறிப்பதாகும். இக்காரணம்பற்றியே விருந்தோம்பல் அன்புடைமைக்குப் பின்னே பொலிகிறது. அன்பில்லாவிடத்தில் விருந்தோம்பலேது?

மற்றைய மற்றைய அதிகாரங்களெல்லாம் ஒருத்தியும் ஒருவனுங்கூடி வாழும் வாழ்வில் கொள்ளத் தக்க முறைகளையும் தள்ளத்தக்க முறைகளையும் வகைவகையாக விரித்துக்கூறுவனவாகும்.

இப்பொழுது நீத்தல் எது? பெண்ணை மாயை என்று இல்வாழ்வை விடுத்து ஓடுவதா அல்லது இல்வாழ்வு கொண்டு அழுக்காறு முதலியவற்றை நீக்குவதா என்று உன்னுதல் வேண்டும். இல்வாழ்வு, அழுக்காறு அவா முதலிய மாசுகளை நிவர்த்தி செய்யும் மார்க்கமென்று செவ்வனே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. திருவள்ளுவனார் கோலிய வழியும் அதுவே என்றும் விளக்கப்பட்டது. ஆதலால் பெண்ணை மாயையென்று ஓடல் நீத்தல் ஆகாதென்றும், அது மாயையில் தோய்ந்து கிடக்கும் பிரவிர்த்தி மார்க்கமென்றும் உணர்க.

திருவள்ளுவனார் பாயிரத்தில் "நீத்தார் பெருமை" என்றோர் அதிகாரமும், அறத்துப் பாலில் "துறவு" என்றோர் அதிகாரமும் அருளியிருத்தலென்னை என்று சிலர் வினவலாம். அவ்விரண்டதிகாரமும் எனது கருத்துக்கு அரண் செய்வனவே யாகும். மனமாசகற்ற இல்வாழ்க்கை முதலிய வழி காட்டிய ஒருவர் அதற்கு

மாறுபட்டு மற்ற விடங்களில் வேறு வழி காட்டு வரோ? காட்டார். நீத்தல் துறவு என்னுஞ் சொற்களைக் கொண்டு, அவை பெண்ணை வெறுக்கும் போலித் துறவைக் குறிப்பன என்று திருவள்ளுவனாரை மற்றவர் தம் வழி ஈர்க்க முயலலாகாது. பெண்ணை வெறுத்தல் துறவெனக் கொள்வோர் கொள்க. அதைப்பற்றிய கவலை எனக்குச் சிறிதுமில்லை. திருவள்ளுவனாரை அத் துறவோர் தமக்குத் துணை கோடல் குறித்து வருந்துகிறேன். இயற்கை வாழ்வு நடாத்தி "இயற்கை யறவழியே உய்யும் வழி" என்றுணர்த் திய ஒருவர்மீது வீண் பழி என் சுமத்தல் வேண் டும்?

நீத்தார் பெருமை துறவு என்னும் இரண் டதிகாரங்களில் யாண்டாயினும் பெண்ணை மாயை யென்று துறக்குமாறு திருவள்ளுவனார் மொழிந்தி ருக்கிறாரா என்பது ஆராயற்பாற்று. அவ்விரண் டதிகாரங்களும் வருமாறு:—

நீத்தார் பெருமை

" ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."

துறவு

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

வேண்டி னுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.

அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லா மொருங்கு.

இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பு மிகை.

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.''

நீத்தார் பெருமை பாயிரத்திலிருப்பது. துறவு அறத்துப்பாலிலிருப்பது. இப்பாக்களின் பொருள் நுட்பங்களை ஈண்டு ஆராயவேண்டுவதில்லை. திரண்ட கருத்தை மட்டும் எடுத்துக் கொள் வோம். புலன்களைத் தீயவழியில் உழலாதவாறு காத்தல் வேண்டுமென்றும், அவைகள் தீயவழி

யில் உழல முனைந்தெழுமேல் அவைகளின் எழுச்சியை அடல்வேண்டுமென்றும், யான் எனது என்னுஞ் செருக்கறுத்தல் வேண்டுமென்றும், அகப்புறப் பற்றைக் களைதல் வேண்டுமென்றும் இவ்விரண் டதிகாரங்கள் அறிவுறுத்துகின்றன. இவைகளின் கருத்து, பெண்ணைத் துறத்தல் என்று எங்ஙனங் கூறுவது?

புலன்கள் நெறியல்லா நெறி சென்று உலவும் போதும், யான் எனது என்னுஞ் செருக்கு எழும் போதும், அகப்புறப்பற்று உறுத்தும்போதும் மக்கள் அழுக்காறு அவா வெகுளி கொலை களவு கள் காமம் பொய் முதலிய பேய்கட்கு இரையாகிறார்கள். இவைகட்கு இரையாகாதவாறு மக்கள் தங்களைக் காத்துச் செந்நெறி நிற்கவேண்டுமேல் அழுக்காறு முதலியவற்றிற்குப் பிறப்பிடமாயுள்ள புலன் தீ நெறியோடுதலையும், யான் எனது என்னுஞ் செருக்கையும், அகப்புறப்பற்றையும் தடிந்து அவைகளினின்றும் நீத்தல் அதாவது துறத்தல் வேண்டும். எனவே துறத்தலாவது அழுக்காறு முதலியவற்றின் காரணமாகவுள்ள செருக்கு பற்று முதலியவற்றுனின்றும் நீங்குதலாகும். இதுவே துறவென்பது. சிறிது விளக்கிக் கூறின் அழுக்

காறு, அவா, வெகுளி, கொலை, களவு, கள், காமம், பொய் முதலியவற்றை விடுவது துறவு என்பது நனி விளங்கும்.

பெண்ணைத் துறக்குமாறு பெரியோர் நூல்களிற் சில வலியுறுத்திக் கூறுவதன் பொருளென்னை என்னும் ஐயம் சிலவிடங்களில் நிகழலாம். பெண்ணைத் துறக்குமாறு பெரியோர் எவருங் கூறவில்லை. பெண்ணாசையைத் துறக்குமாறு பெரியோர் நூல்கள் நுவல்வது உண்மை. பெண்ணைத் துறத்தல் என்பதற்கும் பெண்ணாசையைத் துறத்தல் என்பதற்கும் வேற்றுமை யுண்டு. பெண்ணாசை எவரிடத்திருப்பது? அது பெண்ணைக் காமுறும் ஒருவன் உள்ளத்திருப்பது. அவ்வாசையத் துறக்கவேண்டுவது அவன் கடமை. அவ்வாசையைத் துறவாது பெண்ணை நீத்துக் காட்டுக்கோடி மூக்கைப் பிடித்தல் எங்ஙனந் துறவாகும்? அவ்வாசை துறக்கும் ஒருவனுக்குப் பெண்ணிடத்துள்ள கடவுட்டன்மை இனிது புலனாகும்.

ஆசை முதலிய குற்றங்களே மனமாசு என்று மேலே குறித்து வந்ததை நேயர்கள் கருத்திலிருத்திக் கொண்டிருத்தல் வேண்டும். அம்மன

மாசு நீக்கத்துக்கு இல்வாழ்வே உறுகருவி என்று திருவள்ளுவனார் கருத்தை யொட்டி மேலே விளக்கப்பட்டிருக்கிறது. மாசு நீக்கத்துக்குக் கருவியா யுள்ள பெண்ணையே துறத்தல் நீத்தலாகாது. மாசைத் தொலைக்க வல்ல பெண்ணைத் துறப்பது மனமாசைச் செவ்வனே பதியவைப்பதாகும். ஆதலால் ஆசை முதலிய மாசுகளைத் துடைத்துப் பெருநிலை யெய்தப் பெண்ணுடன் வாழ்தலே அறிவுடைமை.

நீத்தார் பெருமை இறுதிப் பாட்டின் கருத்தை ஊன்றி நோக்குவோமாக. நீத்தார் பெருமையாது? எவ்வுயிரையுந் தம்முயிர்போற் கொண்டு அவ்வுயிர்க்குச் செந்தண்மை பூண்டொழுகுவது அவர் பெருமை. எவ்வுயிரையுந் தன்னுயிர்போல் கொண்டொழுகுதற்குத் தடையா யிருப்பனயாவை? அழுக்காறு அவா வெகுளி முதலியன. இக்குற்ற நீக்கத்துக்கு உறுகருவி இல்வாழ்வென்று அடிக்கடி சொல்லவேண்டுவதில்லை. இல்வாழ்வின் முடிந்த நிலையாது? மனமாசு முற்றுமகன்று முழு அன்புநிலை பெறுவதன்றோ? அப்பெருநிலையே "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" என்னுங்

குறள் குறிக்கும் நிலையாகும். எனவே நீத்தார் எவரெனில் பெண்ணை மாயையென்று கருதி யோடாது, மனதிலுள்ள மாயையோட்டப் பெண் தெய்வத்துணைகொண்டுவாழ்ந்து, அன்பு நிலை பெற்று, எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொ ழுகுவோரென்க.

பெண்ணைத் துறத்தலே துறவு என்னுங் கொள் கையுடையார் திருவள்ளுவனாரைத் தம் பக்கத் துணையாக்கவேண்டித் திருக்குறளிலுள்ள "பெண் வழிச் சேறல்" என்னும் அதிகாரத்தைத் தமது வைப்பென எடுத்துக் காட்டி "இதற்கென் சொல்கிறீர்" என்று கடாவுகிறார். "வாழ்க்கைத் துணை நலன்" கூறிய திருவள்ளுவனார் - இன்பப் பால் இனிது ஓதிய திருவள்ளுவனார் - "பெண் வழிச்சேறல்" என்று பொதுப்படக் கூறுார். பெண்வழிச் சேறல் என்னும் அதிகார வைப்பு முறையை நோக்குதல் வேண்டும். "பெண்வழிச் சேறல்" என்னும் அதிகாரத்தின் அண்டையில் "வரைவின் மகளிர்" என்னும் அதிகாரம் வைக் கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து கள் சூது முதலிய அதிகாரங்கள் நிற்கின்றன. இக் குழுவிலா தெய்வப் பெண்ணைக் கொணர்ந்து திரு வள்ளுவனார் செருகுவர்?

காமவேட்கை மேலீட்டான் விலைமகளிர் ஏவல் செய்யும் ஆண் கூட்டமுமுண்டு. அச்சிறுமைக் கூட்டத்தின் இழிவைப் "பெண் வழிச் சேறல்" என்னும் அதிகார வாயிலாக ஆசிரியர் விளக்கி யிருக்கிறாரெனக் கொள்க. பெண்வழிச் சேறல் என்னும் அதிகாரம் காமக்கேட்டைத் தெரிப்ப தென்க. வேறு வழியில் அவ்வதிகாரக் கருத் தைக் கொள்வது திருக்குறள் நோக்கத்தை இடர்ப் படுத்துவதாகும்.

திருவள்ளுவனார் இல்வாழ்வு என்னும் அதிகா ரத்தில் "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை" என்றும், "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை" என்றும் அருளிய பாக்களிற் போந்துள்ள "இயல்புடைய மூவர்" "துறந்தார்" யாவர் என்னுங் கேள்வி எழலாம். திருவள்ளுவனார் காலத்தில் நால்வகை ஆச்சிரமம் வழக்கிலிருந்தது. நால் வகை வருணபாகுபாடு மிருந்தது. வருணபாகுபாடு பிறப்பில் இருத்தல் கூடாது என்று "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப் பொவ்வா - செய் தொழில் வேற்றுமை யான்" என்னுங் குறளால் மறுத்தனர். தொழில்

முறைபற்றிய நால்வகை இனம் எங்கணும் உண்டு. நமது நாட்டில் பிறப்பை யொட்டி அவ்வின வேற்றுமை இடைக்காலத்தில் கருதப்பட்டது. வேத காலத்தில் பிறப்பை யொட்டி நால்வகை வருணம் இயங்கவில்லை. இடைக் காலத்திலேயே அவ்வேற்றுமை யிடம்பெற்றது. அவ்வேற்றுமை பிறப்பில் கொள்ளலாகாதென்று திருவள்ளுவனார் மறுத்துரைத்தார்.

ஆச்சிரம ஒழுக்கமும் மக்கள் வழ்ாவிற்குரியது. சில இடத்தில் அம்முறை மூன்றாகவும், சிலவிடத்தில் இரண்டாகவும் தொகுக்கப்பட்டிருக்கிறது. நமது நாட்டில் அது நான்காக வகுக்கப்பட்டிருக்கிறது.

மாணாக்கனா யிருந்து கல்வி கற்றல், பின்னை அக்கல்விப் பயனைப்பெற இல்வாழ்க்கை ஏற்றல், அவ்வில் வாழ்க்கையினின்றும் அன்பும் அருளும் விளங்கப்பெற்று உயிர்கட்குத் தொண்டுசெயத் தம்மைப் பண்படுத்தல், அதன் பயனாக எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகல் ஆகிய இவை ஒவ்வொருவர் வாழ்விலும் அரும்பி மலர்ந்து காய்த்துக் கனியவேண்டுவன. மனைவியோடு தொடக்கத்தில் வாழும் ஒருவன் வாழ்விற்குத்

தொழில் பல செய்து பொருளுடையவனாகிறான். அவன் ஏழைமாணாக்கர்கட்கும், தொண்டிற்குத் தம்மைப் பண்படுத்திக் கொள்ளும் வாய்ப்புப் பெறுதார்க்கும், எல்லாங் கடவுள் மயம் என்று தொண்டு செய்வோர்க்கும் உண்டி முதலியன உதவுதல் இயல்பு. ஈண்டுத் துறந்தார் என்போர் பெண்ணைத் துறந்தவரல்லர் ; காமவெகுளி முத லியவற்றை மறந்தவரென்க. இம்மூவர்க்கும் இல் வாழ்வின் முதற்படியில் நிற்பவன் துணை புரியக் கடமைப்பட்டிருக்கிறான். பெண்ணை வெறுத் தோடும் பூரியரை ஈண்டுத் திருவள்ளுவனார் மூவர் என்றுந் துறந்தா ரென்றுங் குறிப்பிட்டாரில்லை. அவ்வேற்றுமை தோன்றவே அவர் "இயல் புடைய மூவர்க்கு" என்றார்.

வாழ்வை நான்கு கூறிட்டு ஆச்சிரமம் வகுத்த அறிஞர்களும் இல்வாழ்வை ஒதுக்கினார்களில்லை. பிரமசரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நி யாசம் என்னும் நான்கனுள் கிருஹஸ்தமும் ஒன்றா யிருக்கிறது. பிரம சரியத்தில் படித்துணர்வதை அனுபவத்திற் பெறுதற்குரிய ஆச்சிரமம் கிரு ஹஸ்தம். அக்கிருஹஸ்தத்தின் பயன் வானப் பிரஸ்தமும் சந்நியாசமுமாகும். கிருஹஸ்தத்

தின் முழுமை (Perfection) சந்நியாசமாகும். சந்நியாசமென்பது கிருஹஸ்தத்தினின்றும் பிரிந்து வேறுபட்டு நிற்பதன்று; சந்நியாசமாவது முற்றும் அழுக்காறு முதலிய மாசுகளினின்றும் நீங்கி, எவ்வுயிரிடத்தும் அன்புக்கடவுளைக் கண்டு, அவ்வுயிர் நலன் நாடிப் பயன் கருதாத் தொண்டு செய்வது. இப்பெருநிலைக்குக் காரணமாயுள்ள கிருஹஸ்தத்தை வெறுக்குமாறு ஆச்சிரமக்காரருங் கூறவில்லை. துறவோர் என்று சொல்லப்படும் பெரு முனிவரர்கள் அனைவரும் பெண்ணுடன் வாழ்ந்த பெரியோர்கள் என்பது எவர்க்குந் தெரியும்.

'தவம் என்று ஒரு நிலை சொல்லப்படுகிறதே அஃதென்னை' என்னும் ஐயமும் ஈண்டுச் சிலர்க்கு நிகழலாம். திருக்குறளில் தவம் என்னும் ஓர் அதிகார மிருக்கிறது. தவம் என்பதும் அற நிலையின் ஓர் உறுப்பு. தவம் என்பது என்னை? பெண்ணை விடுத்துச் செல்வதா? அன்று.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

என்றார் திருவள்ளுவனார். எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாமையும், பிறர் தீங்கு செய்யும்போதும், அதனால் விளையும் துன்பம் பொறுத்தலும்,

பொறுத்து அவர்க்குங் கேடு சூழாது நலன் புரிவதும் தவ நிலையாகும்.

போலித்துறவு திருவள்ளுவனார் காலத்திலேயே உலகில் நிலவலாயிற்று. அதன் வரலாறு பின்னே கூறுவன். அப்போலித் துறவைத் திருவள்ளுவனார் மிக உரமாக மறுத்திருக்கிறார். அம்மறுப்புரைகள் சில வருமாறு:—

“வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்.

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.”

போலியும் உண்மையும்

பெண்ணை வெறுத்தல் துறவு என்னுங் கொள்கை எப்பொழுது எப்படி உலகிடை நுழைந்தது?

புத்தர் காலத்திற்குச் சில நூற்றாண்டுகட்குப் பின்னர் இப்போலித்துறவு உலகிடை நுழைந்தது. எப்படி நுழைந்தது என்பதைச் சிறிது உன்னுவோம்.

புத்தர் பெருமான் தமது அறத்தை உலகிற்கு அறிவுறுத்தத் திருவுளம் பற்றியபோது புகை வண்டி மோட்டார் வண்டி பத்திரிகைகள் போன்ற சாதனங்களில்லை. புத்தர் பெருமான் தமது சீரிய அறத்தை உலகமுழுவதும் பரப்பும் பொருட்டுச் சில நன்மக்களைத் தொண்டர்களாகச் சேர்த்தனர். அவர்களுள் பெண் ஆண் என்னும் இருபாலாரு மிருந்தனர். அந்நன்மக்கள் காடுமலை கடந்து பல விடங்கட்குச் செல்ல வேண்டியிருந்தமையானும், சிலவிடங்களில் தங்க வேண்டியிருந்தமையானும், வேறுபல காரணம்பற்றியும், அவர்கள் இல்வாழ்வு மேற்கொள்ளாது, தன்னந் தனியராய்ப் புறப்பட்டார்கள். தொண்டில் தலைப்படுவோர் இல்வாழ்க்கை ஏலாதிருத்தல் வேண்டும் என்னும் விதி அன்று பிறந்ததோ பிறக்கவில்லையோ தெரியாது. பிறந்ததாகவே வைத்துக் கொள்வோம். வைத்துக் கொள்ளினும் அவ்விதி காலநிலைக்கேற்றவாறு நிறுவப்பட்டதென்று கோடல் வேண்டும். கால

நிலைக்கேற்றவாறு சில காரணம்பற்றிச் செய்யப் படும் ஏற்பாடுகளை என்றும் நிலவ வைத்துக் கொண்டு பிடிவாதங்காட்டுவது அறிவுடைமை யாகாது. அத்தகை மக்கள் வாழும் நாடும் முன் னேற்ற மடைதல் அரிது. நமது நாடு இதற்கு எடுத்துக் காட்டாக நிற்கிறது.

இப்பொழுது மகாத்மாகாந்தி இந்தியர் இல் வாழ்வு ஏலாதிருப்பது நலம் என்று அறிவுறுத்து கிறார். "மகாத்மாகாந்தி ஏன் இவ்வாறு கூறு கிறார்; இப்போதனைக்கு இப்பொழுது அவசிய மென்னை?" என்று ஆராயாது, அவர்போதனையை நிலைபேருக உள்ள இயற்கை அறமாகக் கோடல் நியாயமன்று. மகாத்மாகாந்தி என்றும் இல்வாழ்வு வேண்டாம் என்று சொல்கிறாரில்லை. நாடு உரிமை யிழந்து, செல்வ நிலை குலைந்து, வறுமை மேலிட்டான் பசியானும் பிணியானும் அலக்க ணுறும் இவ்வேளையில் உயிர்களைப் பெருக்கலால் அவ்வுயிர்கள் இன்னலுறு மாதலால், நாடு உரிமை பெறும்வரை இல்வாழ்வு வேண்டாமென்று அடி கள் அறிவுறுத்துகிறார். இச்செம்மொழி உயிர் கள்மீதுள்ள இரக்கத்தினின்றும் எழுந்ததென்க.

காலநிலை நாட்டுநிலை நோக்கிப் பெரியோர்கள் சொல்லும் மொழிகளையும் கோலும்முறைகளையும்

என்றும் நிலைபேறுகக் கொள்வதால் வாழ்வில் பல இடர்கள் நிகழ்கின்றன. சிற்சில சமயங்களில் நோயாளர்க்குப் பத்தியம் விதிப்பதுபோல இயற்கைக்கு மாறுபடுவதுபோல் தோன்றத்தக்க சில விதிகள் அறிஞர்களால் நிறுவப் பெறுதல் உண்டு. நிலை மாறி ஒழுங்கு பெற்றதும் அவ்விதியை விலக்கிவிடல் வேண்டும்.

அங்ஙனே பௌத்த தர்மத்தைப் பரப்பவேண்டுமென்னும் பேராவலால் புத்தர் பெருமான் காலநிலை நாட்டுநிலை பிறநிலை முதலியவற்றை உன்னித் தொண்டர்களை இல்வாழ்வு ஏலாதிருக்குமாறு அறிவுறுத்தியிருக்கலாம். இப்பொழுது நிலைகள் மாறுபட்டிருக்கின்றன. இல்வாழ்வு ஏற்றும் பௌத்த தர்மத்தைப் போதிக்கலாம். இந்நாளில் பலதிற வண்டி, தபால், தந்தி, அச்சு, பத்திரிகை முதலிய பல சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அறத்தைப் பரப்பும் முறைகளையும் மாற்றிக்கொள்ளலாம்.

மற்றுமொன்று ஈண்டுக் கூற விழைகிறேன். இல்வாழ்வின்றித் தனித்து வாழலும் இயற்கைக்கு முரண்பாடென்று முன்னே யான் வலியுறுத்தியதை ஈண்டு நினைவூட்டிக் கொள்ளுமாறு நேயர்

களை வேண்டுகிறேன். அறத்தொண்டிற்கெனப் புறப்பட்ட நன்மக்களும் தனி வாழ்வால் உடல் வளங்குலைந்து வருந்தார்களோ எனில் வருந்தார் கள் என்று சொல்வேன். அறத்தொண்டிற்கெனப் புறப்படும் நன்மக்கள் உள்ளத்தில் அழுக்காறு அவா வெகுளி முதலிய பேய்கள் உலவுமா அல் லது அன்பு - அருள்-தயை என்னும் தெய்வம் நில வுமா என்று கேட்கிறேன். பேயுலவும் உள்ளமுடை யார் அறத் தொண்டிற்கு அருகராகார். அருட் டெய்வம்நிலவும் உள்ளமுடையாரே அறத்தொண் டிற்குரியராவர். தொண்டு என்பதன் பொருள் என்னை? வளைவு தாழ்வு என்பது பொருள். அழுக்காறு அவா முதலியவற்றிற்கு மூலமாயுள்ள யான் எனது என்று நிமிர்ந்து நிற்கும் முனைப்பு கெட்டு அன்பிலும் அருளிலுந் தாழ்வு பெற்றுப் பிற உயிர் நலன் நாடிப் பயன் கருதாது செய்யும் அருட்பணியே தொண்டாகும். அத்தொண்டு டையார் உள்ளத்தில் அருள் - இரக்கம் - தயை - என்னும் பரோபகார தெய்வமிருத்தலால், அவர் கள் உடலுக்கு எவ்வித கேடும் நேராது. தொண்டு செய்யும்போது அவர் உள்ளத்தெழும் மகிழ்ச்சி அவர்கள் உடலைச் செவ்வனே யோம்பும். இந் நிலையையே இல்வாழ்வுங் கூட்டுவதென்க.

இப்பெரியோர்கள் உள்ளம் தொண்டில் படிவதால் இவர்கள் உடல் நலங் குலைவதில்லை. இஃது ஏற்றுக்கொள்ளற் பாலதே. மற்றுமொன்று மேலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அஃதென்னை? அஃது உயிர்களின் துன்ப நீக்கத்துக்கு இல்வாழ்வு நடாத்த வேண்டுமென்பது. பெரியோர்கள் தொண்டுளங்கொண்டு இல்வாழ்வு ஏலா தொழிவரேல் இவர்கள் வழித்தோன்ற வேண்டிய உயிர்கள் கதி என்ன? அவ்வுயிர்களின் தோற்றத்துக்குத் துணை புரியாத பாவம் பெரியோர்களைச் சூழுமன்றோ? இவர்கள் போன்ற பெரியோர்கள் உலகிடைத் தோன்றுமைக்கும் இவர்கள் காரணர்களாக நிற்கிறார்களல்லவோ? இதற்கென் சொல்வது? இல்வாழ்வு ஏலாது தொண்டிற்புகும் பெரியோர்கள் வழி உயிர்கள் தோற்றமுறு முறையில் இயற்கை இப்பெரியோர்கட்குத் துணை புரியுமென்க. இவர்கள் வழித் தோற்றமுறும் உயிர்களும் நியதியில் அமைந்திரா. மலரும் எல்லாப் பூக்களும் காய்க்கின்றனவோ? இஃது இயற்கையின் நியதி.

இவ்வியல்புடன் உலகில் தோன்றும் பெரியோர் தொகையை விரல்வைத்து எண்ணிவிடலாம்.

இத்தகையோர் உலகில் கோடியில் ஒருவர் இருவர் பிறத்தலும் அரிது. கிறிஸ்து, மணிமேகலை முதலியோர் இல்வாழ்வு ஏலாது அறத்தொண்டாற்றினர். இவர் போன்றார் மிக அரியர். இவர் போன்றார் வாழ்வை எடுத்துக் காட்டாகக் கொண்டு பெண்ணை வெறுக்கும் போலித்துறவை நிலை நாட்டப்புகுவது அறியாமை.

இப்பெரியோர்களிற் பெண் ஆணையாதல் ஆண் பெண்ணையாதல் வெறுத்தார்களா என்பது கவனிக்கப்படல் வேண்டும். இவர்கள் வாழ்வில் ஒருவரை ஒருவர் மாயையென்று வெறுப்பது இல்லை. வெறுப்புள்ள இடத்தில் அன்பேது? அருளேது? தொண்டேது?

புத்தர் பெருமான் காலத்தில் அறத்தொண்டிற்கெனப் புறப்பட்டவர்கள், "அறத்தை வளர்க்க வேண்டும்" என்னும் ஆர்வத்தால் விழுங்கப்பட்ட பெரியோர்களாதலால், அவர்கள் உள்ளம், வேறு வழியில் செல்லாது தொண்டிலேயே நிலைத்து நின்றது. உயிர்களிடத்து இரக்கங் கொண்ட உள்ளத்தில் எம்மாசு நிலவும்? எம்மாசு புகும்? இவர்களையே உலகம் அந்நாளில் அறவோர் துறவோர் நீத்தார் அந்தணர் என்று அழைத்தது.

உயிர்களிடத்து இயல்பாக இரக்கந் தோன்றுதா ருள்ளத்துள்ள யான் எனது என்னுஞ் செருக்கை உடைத்தெறிவது இல்வாழ்க்கை. இல்வாழ்க்கையே உலகில் இயற்கை வாழ்வாக அமைந்திருக்கிறது. ஒருவர் இருவர் இயல்பாக ஒரு நிலை பெறுவதை உலகிற்குரியதொன்றாக்கொள்ளாது புறனடையாகவே கொள்ளல்வேண்டும். இல்வாழ்வி லிருந்து, மாசு கழியப்பெற்ற அனைவரும் அறவோர் துறவோர் நீத்தார் அந்தணராகின்றார்.

பலகாரணம் பற்றி இல்வாழ்விற் புகாது, அறத்தொண்டுக்கெனப் புறப்பட்ட பௌத்த பெரியோர்களின் அகநிலையை யுணராது, அவர்களது தனி வாழ்வின்மீதும், மற்றப் புறக்கோலங்களின்மீதும் பெரிதும் சமய உலகம் தன் கருத்தைச் செலுத்திற்று. பௌத்த பெரியோர்களின் தனிவாழ்வும் புறக்கோலங்களும் நாளடைவில் மற்றச்சமய குருமார்களிடம் குடியேறின. அற்றை ஞான்று சமய குருமாரென வெளிப்போந்த ஆண்பாலார் பெண்பாலாரை வெறுத்து நீப்பதும், பெண்பாலார் ஆண்பாலாரை வெறுத்து நீப்பதும் மிகச் சிறப்பாகக் கொள்ளப்பட்டன. அன்று நுழைந்த இவ்வழக்கம் இன்றும் வீழ்ந்து

படாமலிருக்கிறது. இன்னும் மடாதிபதிகளென்போர் தமக்கென வாழ்க்கைத்துணை கொள்ள ஒருப்படாது, வாழ்வு நடாத்தல் கண்கூடு. இம் மடாதிபதிகள் எத்துணைக் கூடா ஒழுக்கச் சேற்றில் வீழ்ந்து புரண்டாலும் வெளிப்படையாக ஒருவன் ஒருத்தியை அல்லது ஒருத்தி ஒருவனை மணஞ் செய்து கொள்வதில்லை. ஆண் பெண்ணுடன் வாழாமையும், பெண் ஆணுடன் வாழாமையும் கடவுள் நெறிக்கு ஓர் அறிகுறி என்னும் மூடக்கொள்கை பலவிடங்களில் வேரூன்றி நிலைத்துவிட்டது.

பின்னைப் பெண்ணுரிமை குலைக்கப்பட்ட விடங்களில், இக்கொள்கை ஆணுலகில்மட்டும் நிலவலாயிற்று. அந்நாளில் நமது நாட்டில் எழுதப்பெற்ற விதி நூல்களில் "பெண்பால் சந்நியாசம் பெறக்கூடாது" என்னுங் கட்டுப்பாடு நிறுவப்பெற்றது. அன்று தொட்டுப் பெணணை வெறுத்தல் நீத்தல் கடவுள் நெறி கூட்டும் துறவறம் என்னும் பொருளற்ற சிறுமைக் கொள்கை வழக்கில் வந்தது. அவ்வழக்கு வளர்ந்து வளர்ந்து பெரிய நூல்களிலும் நுழைந்திருக்கிறது. முடிவில் மூவாசைப் பொருள்களுள் ஒன்றாகப் பெண்ணும்

பாவிக்கப்பட்டாள். பெண்ணை வெறுத்து நீத்தல் துறவொழுக்கமென்றும், அவளை இழித்துரைத்தல் ஞான நெறி என்றும் பொதுமக்களால் எண்ணப்பட்டன. இவ்வாறு பெண்ணை வெறுக்கும் போலித்துறவு பொதுவாக உலகிலும், சிறப்பாக நமது நாட்டிலுங் கால்கொண்டது.

ஒருத்தியுடன் வாழாது, துவராடை புனைந்து, மொட்டை யடித்தோ சடை வளர்த்தோ மடத்திலோ மற்றை யிடங்களிலோ உறைவது துறவொழுக்கம் அல்லது சந்நியாசம் என்று கொள்ளப்பட்டது. அழுக்காறு அவா முதலிய மாசுகளினின்றும் விடுதலையடைந்து, எவ்வுயிரையுந் தன்னுயிர்போல் கருதித் தொண்டாற்றும் அறவொழுக்க நிலைக்கு வழங்கப்பெற்று வந்த துறவு நீத்தல் சந்நியாசம் சாது முதலிய சொற்கள், தமக்குரிய பொருளிழந்து, வெறுந் தனி வாழ்விற்கும் புறக்கோலத்துக்கும் வழங்கலாயின. அறம் என்னும் இல்லறம் அறத்தின் ஒரு கூறாகக்கொள்ளப்பட்டது. இல்லறத்தின் முடிந்த நிலையாக உள்ள துறவு, அறத்தின் மற்றொரு கூறாகக்கொள்ளப்பட்டது. இம்மாற்றங் கண்டே திருவள்ளுவர் ஔவையார் முதலியோர் அறத்தின் உண்மை

விளக்கவேண்டி "அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை" என்றும் "இல்லறமல்லது நல் லறமன்று" என்றும் அறிவு கொளுத்தினர். கொளுத்தியும் பயன் விளையவில்லை. அத்திரு வாக்குகட்குத் திரிபுப் பொருள் சொல்லப்படு கிறது. இந்நாளில் மூலத்தின் வழிநின்று துறவின் உண்மை இயல்பு கூறுவோர் எள்ளி நகையாடப் படுகிறார். என் செய்வது! காலத்தின் கோலம்!

ஒருத்தியுடன் அறநெறியில் வாழும் பொறுப் பேற்க நடுக்குறும் பயங்கொள்ளிகள், "மனைவி மக்கள் மற்றவர்கள் நலத்துக்கு நாமேன் உழைத் தல் வேண்டும்" என்றெண்ணுந் தன்னலத்தார் கள், பிழைக்க வழி தெரியாதவர்கள், திண்ணை தூங்குஞ் சோம்பேறிகள் முதலிய சிற்றினங்கட் குப் போலிச் சந்நியாசம் புகலிடமாயிருக்கிறது. இச்சிற்றினம் நாளுக்கு நாள் தொகையில் பெருகு கிறது. இவ்வினத்தவர்களில் படித்தவர்கள் தங் கள் நலன் நாடி, வேதாந்தப் பெயரால், "பெண் மாயை; அவளைத் துறப்பது வீடு" என்று சில நூல்களையும் எழுதி வைத்தார்கள். அந்நூல்கள் மக்கட்குச் செய்துவரும் இன்னல்கள் எண்ணில; எண்ணில.

உண்மை வேதாந்தம் பெண்ணை வெறுக்குமாறு உரைக்கவில்லை. எல்லாவற்றையுங் கடவுள் வடிவாகக்கொண்ட வேதாந்தம் பெண்ணிடத்துள்ள கடவுளிருப்பை மட்டும் எங்ஙனம் மறுக்கும்? பெண்ணிடத்துள்ள கடவுள்தன்மை விளங்கப்பெறுவோர் மற்ற விடங்களிலுள்ள கடவுள்தன்மை விளங்கப்பெறுவர். பெண்ணைக் காமப் பொருளாகக் கருதும் மனம் அவளைக் கடவுளாகக் கருதும் பேறு பெறுமேல், அம்மனமுடைய ஒருவன், வாழ்வின் முடிந்த நிலை கண்ட உண்மை வேதாந்தியாகிறான். பெண்ணைக் காமப் பொருளாகக் கருதிக்கொண்டு அவளை வெறுத்து நிற்குமட்டும் உண்மை வேதாந்தம் எவ்வழியில் கைகூடும்? காமவேட்கையால் பெண்ணுடன் 'வாழாது, காதல் வழி நின்று அவளுடன் வாழ வாழ, அவள் பாலுள்ள கடவுட்டன்மை புலனாகும். தலைவனுக்குந் தலைவிக்கும் ஏற்படும்பற்று, அழுக்காறு முதலிய மாசுகளைக் கழுவவல்ல கடவுள்பற்று அதாவது அன்பாக விருத்தல் வேண்டும். பெண்ணுடன் அன்புவழியில்கூடி வாழ வாழவன்றோ பெண்ணின் பெருமை புலனாகும்? அவ்வழி நின்று இல்வாழ்வு நடாத்திய சுந்தர

மூர்த்தி சுவாமிகள் "பண்மயத்த மொழிப்பாவை சங்கிலிக்கும் எனக்கும் பற்ருய பெருமானே" என்று தமது அநுபவத்தை உலகிற் கறிவுறுத்தி யிருத்தல் காண்க. அன்பு வழியில் பெண்ணுடன் கூடி வாழாது "வெறுப்பு, வெறுப்பு" என்னும் நெருப்பிடை நிற்போர் காமம் வெகுளி முதலிய கனலால் எரிக்கப்படுதல் திண்ணம். பெண்ணை வெறுத்தோரும் எத்துணைப் போலிச் சந்நியாசிகள் பின்னைக் காமத்தால் எரிக்கப்பட்டு, அவ்வெரி தாங்காது பலதிற செயற்கைக் குழிகளில் வீழ்ந்து வருந்துகிருர்கள். எத்துணை நோய்கள் இவர்களை அடர்கின்றன. நோய்வாய்ப்பட்டு இவர்கள் வருந்துவதை என்னென்று வருணிப்பது? அனலிடைப்பட்ட புழுவென இவர்கள் துன்பத்தில் நெளிகிருர்கள். நரகத்துன்பத்தை இவ்வுலகில் இவர்கள் அனுபவிக்கிருர்கள் என்று சுருங்கச் சொல்லலாம். இத்துன்பத்துககுக் காரணம் என்னை? பெண் தெய்வத்தை வெறுத்த பாவம்; அத்தெய்வத்தை மாயையென்று கருதிய பாவம்; அவ்வாறு மற்றவர்க்குப் போதித்த பாவம். ஆண்டவனருளால் உயிர்கள் நலத்துக்கெனத் தோன்றிய பெண்ணை வெறுத்தால், ஆண்டவன் பணி

நிகழ்த்தும் இயற்கை வாளா கிடக்குமோ? இயற்கைக்கு மாறுபட்டுநிற்போரை இயற்கை ஒறுத்தே தீரும். போலிச் சந்நியாசகள் போதனைக்குச் செவி சாய்த்துப் பின்னை இடர்ப்பட்ட இளைஞர் பலரை யான் அறிவேன். ஆதலால் போலிச் சந்நியாசிகள் வலையில் சிக்குறு திருக்குமாறு இளைஞர்களை எச்சரிக்கை செய்கிறேன்.

காமம் வெகுளி முதலிய நோய்போக்கும் மருந்து இல்வாழ்வென்று அடிக்கடி அறைய வேண்டுவதில்லை. காமம் வெகுளி முதலிய நாவிட்டெரியுந் தீயைத்தணிக்கும் அன்பெண்ணுந் தண்புனல் ஊற்று, பெண் தெய்வமென்பதை உலகம் உணர்ந்து நடப்பதாக. இத்தகைப் பெருமை வாய்ந்த பெண் தெய்வத்தை - அன்பு ஊற்றை - அருட்பெருக்கை - மாயையென்றும் நாயென்றும் பேயென்றும் பேசுவதா ஞானம்? அஃதன்றோ அஞ்ஞானம்? வாழ்விற்கின்றியமையாத பெண்ணுடன் வாழாது, இரண்டொரு போலி நூல்பயின்று, காஷாயஞ்சுற்றி, மொட்டையடித்து "பெண் மாயை; அப்பா! அவள் வாழ்வை விடு" என்று பேசுவது வேதாந்தமுமன்று; ஞானமுமன்று. ஞானம் எது, அஞ்ஞானம் எது

என்பதுபற்றி மேலேகுறித்திருக்கிறேன். ஆகவே பெண்ணின் பெருமையுணராது பெண்ணைச் சிறுமைப்படுத்திப் போலிசந்நியாசிகளாலும் அவர்கள் சொற்கேட்டு ஏமாந்த மற்றவர்களாலும் பேசப்படும் பேச்சுக்களும் எழுதப்படும் எழுத்துக்களும் வேதாந்த ஞான உண்மைதெரிக்கும் பேச்சுக்களுமல்ல; எழுத்துக்களுமல்ல.

தன்னல மேலீட்டான் வெளிவரும் போலிச் சந்நியாசிகள் எழுதி வைத்துள்ள நூல்களை நம்பி உலகம் மோசம் போகலாகாது. இவர்கள் என்னென்னவோ எழுதி வைத்திருக்கிறார்கள். இவர்கள் குணங் குற்றமோராது பெண்ணுடன் வாழும் புனிதர்கள் இவர்கட்குச் சோறிட வேண்டுமாம்; கூறையளித்தல் வேண்டுமாம். நிஷ்டையில் திளைத்துக் கொண்டிருக்கும் வேளையில் இப்பெரியோர்கட்குச் சிற்றின்ப நினைவு தோன்றினுந் தோன்றுமாம். தோன்றுமேல் அந்நினைவைக் கழித்துக்கொள்ள சுவாமிகள் வரைவின் மகளிரில்லம்போந்து துயில்நீத்துப் பின்னை நிஷ்டை கூடுவார்களாம். இந்நிஷ்டாபரனர் பொருட்டு மன்னர்களும் மற்றவர்களும் காமச் சத்திரங்கட்டி நடாத்துவது அறமாம்.

அந்தோ! அந்தோ! உலகம் எப்படி ஏமாற்றப் பட்டது! ஏமாந்த உலகமே! இன்னுமா ஏமாறுவை! ஏமாந்தது போதும்! போதும்!

இப்போலிக் கூட்டத்துக்குப் பாவமேது? புண்ணியமேது? இவர்கள் முத்தர்களல்லவோ? இவர்கட்கு எல்லாம் ஒன்றுதானே. இவர்கள் கொலை செய்யலாம்; களவாடலாம்; கள்ளருந்தலாம்; காமத்திற் கிரையாகலாம்; பொய் கூறலாம். இவர்கள் எல்லாஞ் செய்யலாம். கொலை களவு முதலியவற்றிற்கும் கொல்லாமை கள்ளாமை முதலியவற்றிற்கும் இச்சமரச ஞானிகட்கு வேற்றுமை தோன்றினலன்றோ இவர்கட்குப் பாவ புண்ணிய வேற்றுமை புலனுகும்? இத்தகைக் கூட்டத்தை என்னென்று கூறுவது? இவர்களை ஆண் வேசையர் கூட்டமென்று கூறுவது குற்றமாகாது. தனக்கென ஒரு நாயகனின்றிக் கூடா ஒழுக்கத்தில் உழலும் மகளிர், வேசை என்று சொல்லப்படுகிருள். அவ்வாறே தனக்கென ஒரு நாயகியின்றிக் கூடா வொழுக்கத்தில் உழலும் ஆடவனை வேசையரினத்தில் சேர்க்கலாமன்றோ? ஆண்மக்களில் இக்கூட்டம் அருகிஞல் பெண்மக்களில் வேசையர் கூட்டமும் அருகும். இப்

போலிச் சந்நியாசமே பெண்ணுலகில் வேசையர் கூட்டந் திரண்டதற்குங் காரணமென்று ஊகிக்க இடமுண்டு. சில வேசையர்கள் தங்களைப் பெண் சந்நியாசிகளென்றுஞ் சொல்வதுண்டு.

தன்னலத்துக்கெனப் பெண்ணை வெறுக்கும் போலித் துறவோரால், பெண்ணை வேண்டு மென்று வெறுத்துத் தள்ளாது, உயிர்கள் மீது கொண்ட இரக்கத்தால் தொண்டுக்கென வெளி வரும் அறவோர்க்கும் இவ்வுலகில் இன்னல் விளை கிறது. இருவர்க்கும் புறத்தே வேற்றுமை காண் டல் மிக அரிதாயிருக்கிறது. **தொண்டில் குறி கொண்டு தனித்து வாழும்** அறவோர் திருவடி எனது முடியணி என்று ஈண்டு அறிக்கை செய் கிறேன். அத்தகைத் தொண்டர் இந்நாளில் மிக அரியர்; அரியர். அவரைப்பற்றி முன்னருங் கூறி யிருக்கிறேன்.

அறத்தொண்டிற்கெனச் சில காரணம் பற்றி ஒரு போது குறிப்பிட்ட சிலரால் கொள்ளப் பெற்ற பெண்ணுடன் வாழாமை, பின்னைப் பெண்ணை வெறுக்கும் போலித்துறவாய் முடிந் தமை கண்டு ஆங்காங்குள்ள அறிஞர் அப் போலியை மறுத்தனர். " கலியுகத்தில் சந்நியா

சங்கூடாது" என்னும் விதி நமது நாட்டில் பிறந்தது. மேல் நாட்டில் கிறிஸ்துவ மதத்தில் ஒருவரை ஒருவர் வெறுக்குந் துறவு என்னுந் தீமுண்டது. மகளிரை நீத்த ஆடவரும் ஆடவரை நீத்த மகளிரும் பலவிடங்களில் மடங்களும் ஆசிரமங்களும் அமைத்துக் கடவுளை மறைக்குந் தீவினைகளில் தலைப்பட்டு வாழ்விற்குக் கேடு சூழ்ந்தனர். ஆங்கே லூத்தர் முதலிய அறிஞர் தோன்றி அந் நாட்டைச் சீர்திருத்தஞ் செய்தனர். அரேபியாவில் நபிநாயகந் தோன்றி இல்வாழ்வு நடாத்திக்காட்டிப் பெண்ணை வெறுத்து வாழும் அறியாமையை யொழித்து உலகை உய்வித்தனர். பெண்ணை வெறுத்து வாழல் கடவுள் நெறி யென்றும், ஞான மென்றும், வேதாந்த மென்றும் உலகில் எழுந்த போலி அறம் விரைவில் ஒழியுமாறு ஆண்டவனை வழுத்துகிறேன்.

ஞானிகள்

பொதுவாக உலகிலும் சிறப்பாக நமது நாட்டிலுந் தோன்றிய ஞானிகளிற் பெரும்பான்மையோர் பெண்ணை இழித்துக் கூறியதாகச் சிலர் எண்ணியிருக்கிறார். இதுபற்றிப் பல விடங்களில்

யான் பேசி வருகிறேன். மெய்ஞ்ஞானிகள் ஒரு போதும் பெண்ணை யிழித்துக் கூறுர்கள். பெண்ணைக் காமப்பொருளாகக் கருதும் தமது மனதை நொந்து நொந்து அவர்கள் கூறிக்கொள் வது வழக்கம். சிலஞானிகள் பெண்ணையே நேரா கத்தாக்கியிருப்பது பெண்ணுலகினின்றும்வழுக்கி வீழ்ந்த வரைவின் மகளிர் கூட்டத்தைக் குறிப்ப தென்க. வரைவின் மகளிரை நன்னெறியில்திருப்ப வேண்டுமென்பது ஞானிகளின் விருப்பம். காம வேட்கையால் விழுங்கப்பட்டு மயக்குற்றுப் பெண் ணின் நுண்மை யுணராது, பூவை மாந்து கிடக் கும் வண்டைப்போல, பெண்ணின் என்பு தோலில் பற்றுக்கொண்டு வீழ்ந்து கிடக்கு மார்த்தர்கட்கு நல்லறிவு கொளுத்த வேண்டி, ஞானிகள் சில உரைகள் பகர்ந்து மிருக்கிறுர்கள். இவைகள் யாவும் பெண்ணுலகை வெறுத்துக் கூறிய தல்ல என்று ஒரு முறைக்குப் பன்முறை பறைசாற்றுகிறேன்.

ஈண்டுப் பல ஞானிகளைக் குறித்தும், அவர்கள் வாய் மொழிகளைக் குறித்தும் முறை முறை யாக எழுதிச்செல்லின் மிகவிரியும். இரண் டொரு ஞானிகளை மட்டும் ஈண்டு எடுத்துக் கொள்

வது நலம். நமது நாட்டிற்றோன்றிய ஞானிகளுள் பெண்ணைப் பெரிதும் இழித்துப் பாடினவர் பட்டினத்தாரென்று பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அவர் பெண்ணை வெறுத்துப்பாடினமையால் அவரது துறவு நிலையை "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் - ஆருந்துறக்கை அரிது அரிது" என்று அருளூகிமாகிய தாயுமானாரே விதந்தோதி யிருக்கிறார் என்று சிலர் கருதுவதும் எனக்குத் தெரியும். பட்டினத்தார் மிகப் பெரியவர்; முற்றும் மனமாசகலப் பெற்றவர். அவர் இவ்வுலகிலேயே சிவோகம் பாவனை நிலையுற்று, எல்லாவற்றையுஞ் சிவமாக் கண்டு "வாவியெல்லாந் தீர்த்தம் மணலெல்லாஞ் சிவலிங்கம்" என்று பாடினார். பட்டினத்தார்க்குப் பார் முழுவதுஞ் சிவமாகத் தோன்றியதே யன்றி மாயையாகத் தோன்றவில்லை. அவரது பெரு நிலையைத் தாயுமானார் உலகிற்கெடுத்துக் காட்டினார். மனமாசு முற்றும் அகல்வதே துறவுநிலை என்று முன்னே விளக்கியிருக்கிறேன். அத துறவுநிலை யெய்தினவர் நமது பட்டினத்தாரென்க.

பெண்ணை வெறுத்தல் துறவு ஞானம் என்று பட்டினத்தார் பகர்ந்தாரா என்பதொன்றே ஈண்

டுப் பெரிதுங் கருதற்பாற்று. பட்டினத்தார் பெயரால் இருவித நூல்கள் உலகில் உலவுகின் றன. பதினொராந் திருமுறையில் பட்டினத்தார் அருளிய சில நூல்கள் அடங்கியிருக்கின்றன. பட்டினத்தார் அருளிய திருப்பாடற்றிரட்டு என் ெறாரு நூலும் ஆட்சியிலிருக்கிறது. இத்திரட் டுப் பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பட் டில்லை.

மொழிவனப்பு பாநடை முதலியவற்றை நோக்குழி இரண்டிற்கும் வேற்றுமை நன்கு புலனு கிறது. பட்டினத்தார் இருவர் இருந்தனர் என் பதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. பெண்ணைப் பற்றிய மயக்க உரைகள் பெரிதும் திருப்பாடற் றிரட்டிலேயே யிருக்கின்றன. பதி னொராந் திருமுறை பாடிய பட்டினத்தார் திருப் பாடற்றிரட்டைப் பாடியிருப்பரோ என்னும் ஐயம் ஆராய்ச்சிக்காரர்க்கு இயல்பாக நிகழும். இவ்வாராய்ச்சியில் தலைப்படாது பட்டினத்தார் பெண்ணைப்பற்றிக் கொண்ட கருத்தென்னை என் பதன்மீது கருத்தை யிருத்துவோம். ||பதினொ ராந் திருமுறையில் பட்டினத்தார் அருளிய திரு விடைமருதூர் மும்மணிக்கோவையில், ||

“ மலர்தலை யுலகத்துப் பலப்பல மாக்கண் - மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ - மனையும் பிறவுந் அறந்து நினைவருங் - காடு மலையும் புக்குக் கோடையிற் - கைம்மே னிமிர்த்துக் காலொன்று முடக்கி - ஐவகை நெருப்பி னழுவத்து நின்று - மாரி நாளிலும் வார்பனி நாளிலும் - நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ் - சடையைப் புனைந்துந் தலையைப் பறித்தும் - உடையைத் துறந்து முண்ணு துழன்றுங் - காயுங் கிழங்குங் காற் றுதிர் சருகும் - வாயுவும் நீரும் வந்தன வருந்தியுங் - களரிலுங் கல்லிலுங் கண்படை கொண்டுங் - தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவர் - அம்மை முத்தி யடைவதற்காகத் - தம்மைத் தாமே சாலவு மொறுப்பர் - ஈங்கிவை செய்யா தியாங்க ளெல்லாம் - பழுதின் றுயர்ந்த எழுநிலை மாடத்துஞ் - செந்தா துதிர்ந்த நந் தன வனத்துங் - தென்ற லியங்கு முன்றில கத்துங் - தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும் - பூவிரி தரங்க வாவிக் கரையிலும்-மயிற்பெடை யாலக் குயிற்றிய குன் றிலும் - வேண்டுழி வேண்டுழி யாண்டாண் டிட்ட - மருப்பினியன்ற வாளரி சுமந்த - விருப்புறு கட்டின் மீமிசைப் படுத்த - ஐவகை யமளி யணைமேற் பொங் கத் - தண் மலர் கமழும் வெண்மடி விரித்துப் - பட்டி னுட்பெய்த பதநுண் பஞ்சி-னெட்டணை யருகாக் கொட் டைகள் பரப்பிப் - பாயின் மீது பரிபுர மிழற்றச் - சாய லன்னத்தின் றளர்நடைப் பயிற்றி-* * * * அஞ்சொன்

மடந்தைய ராகந் தோய்ந்தும் - சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தின் - அறுசுவை யடிசில் வறிதினி தருந்தா - தாடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும் - வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும் - பூசுவன பூசியும் புனைவன புனைந்தும் - தூசு நல்லன தொடையிற் சேர்த்தியும் - ஐந்து புலன்களு மார வார்ந்து - மைந்தரு மொக்கலு மகிழ்வன மகிழ்ந்து - இவ்வகை யிருந்தோ மாயினு மவ்வகை - மந்திரவெழுத் தைந்தும் வாயிடை மறவாது - சிந்தை நின்வழி செலுத்தலி னந்த - முத்தியு மிழந்தில முதல்வ வத்திற - நின்னது பெருமை யன்றோ ''

எனவரூஉஞ் செம்மொழிகளைப் பன்முறை உற்று உற்று நோக்குக. இத்திருவாக்கில் இல்வாழ்விற் கும் கடவுள் நெறிக்குமுள்ள தொடர்பைக் கூர்ந்து ஊன்றிப் பார்க்க. இக்கருத்துடைய பட்டினத் தார் பெண்ணை இழித்துக் கூறுவரோ? ஒரு போதுங் கூறார்.

திருப்பாடற்றிரட்டும் அப்பட்டினத்தாரே அரு ளியதாகக் கருதப்படின், அதன்கண்ணுளரும் பெண்ணைப்பற்றிய பாடல்கள் பெரிதும் பெண் ணைக் காமப்பொருளாகக் கருதும் மனதிற்கும், காமுகர்க்கும், வரைவின் மகளிர்க்கும் அறிவு கொளுத்தும் நோக்குடன் அருளிச்செய்யப்பெற்

றன என்று கொள்ளப்படல்வேண்டும். வேறு ஒரு பட்டினத்தாராயினும் இவ்வாறு கோடல் தவறுகாது. திருப்பாடற்றிரட்டிலுள்ள இரண்டொரு திருவாக்குக்களை நோக்குவோம். "தோகையர் மாயையிலே செல்லாமல் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே" "மாலையுபாதி துயில் காமம் இவை மாற்றிவிட்டே - ஆலமுகந் தருள் அம்பலவா என்னை ஆண்டருளே"; "சிற்றின்பம் விட்டு ஏறும் பதந்தருவாய் திருக்காளத்தி ஈசுரனே" எனவரூஉம் அடிகள் திருவாக்குகள் பெண்ணை வெறுக்குமாறு அறிவிக்கின்றன? பெண்ணைக் காமப்பொருளாகக் கருதும் மனத்தை நல்வழியில் திருப்ப ஆண்டவன் அருளை யன்றோ அத்திருவாக்குகள் குறிக்கொண்டு நிற்கின்றன? "பட்டப்பகலில் வெளி மயக்கே செய்யும் பாவையர்மேல் இட்டத்தை நீதவிர்ப்பாய் இறைவா கச்சி ஏகம்பனே" எனவரூஉம் இன்னோரன்ன கருத்துடைய பாக்களில் வரைவின் மகளிர் நடைமுறைகளை அடிகள் விளக்கியவாறு காண்க. வேறு பல இழிமொழிகளடங்கிய பாக்கள் தூர்த்தர்கட்கு நல்லறிவு கொளுத்த அருளிச் செய்யப் பெற்றன என்க. பட்டினத்தடிகள் கருத்தில்

பெண்ணை வெறுத்ததில்லை என்பதொன்றையே நேயர்கள் கவனிப்பார்களாக.

“ பேய்போற்றிரிந்துபிணம்போற்கிடந்திட்ட
  பிச்சையெல்லாம்
நாய்போலருந்தி நரிபோலுழன்றுநன்
  மங்கையரைத்
தாய்போற்கருதித் தமர்போலனைவர்க்குந்
  தாழ்மைசொல்லித்
சேய்போலிருப்பர்கண்டீ ருண்மைஞானந்
  தெளிந்தவரே ”

இப்பாட்டுந் திருப்பாடற்றிரட்டிலிருப்பதே. இப்பாட்டு எல்லா ஐயத்தையும் போக்கி அடிகளின் உள்ளக்கிடக்கையையுஞ் செவ்வனே தெரிக்கிறது. “ நன்மங்கையரைத் தாய்போல் கருது” மாறு அடிகள் உலகிற்கு அறிவுறுத்துகிறார். அஃது உண்மை ஞானந் தெளிந்தவர் இயல்பென்றும் அவர் கூறுகிறார்.

நன்மங்கையரைத் தாய்போல் கருதுவது உண்மை ஞானம் என்று கூறிய ஞானியா பெண்ணை வெறுப்பர்? மாயை யென்று கூறுவர்? எந்த உண்மை ஞானியும் தாயாகிய பெண்ணை வெறுத்து இழித்துக்கூறுர்.

அருணகிரியார் வரைவின் மகளிரைப்பற்றிக் குறித்த பாடல்களும் பெண்ணைப் பொதுவாகக் குறிப்பன என்று கொண்டு இடர்ப்படுவோரு முளர். இதுபற்றி "முருகன்" என்னும் நூலில் நுவன்றிருக்கிறேன்.

"கடவுள் அருள் பெற்றுப் பேரன்பர்களாய்ச் சமய குருமார்களெனப் போற்றப்படும் நம்மாழ்வார் மாணிக்கவாசகர் முதலிய பெரியோர்கள் பெண்ணின் பெருமை பேசும் அகப்பொருட்டுறைகட்கு இலக்கியமாகத் திருவிருத்தம், திருக்கோவையார் முதலிய இன்ப நூல்களை உலகிற்கு வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் பெண் தெய்வத்தை முன்னிலைப்படுத்திக் கடவுளை நோக்கிப் பாடியிருக்கிறார்கள். பெண் தன்மைக்கும் கடவுள் தன்மைக்குமுள்ள உறவு அப்பெரியோர்களால் நன்கு உணரப்பட்டது."

ஆதலால் எந்த உண்மை ஞானியும் பெண்ணை வெறுத்தல் துறவு என்று இழித்துக்கூறார். அங்ஙனங் கூறுவோர் உண்மை ஞானிகளாகார் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். ஞானிகளின் உள்ளக்கிடக்கை தேறாது அவர்கள் மீது பழிசுமத்துவது அறியாமை.

இல்லறம்

இறை வழியையும், இயற்கை நோக்கையும், படைப்பமைப்பையும், இன்னோரன்ன பிறவற்றையுங் கூர்ந்து நோக்குழி ஒருத்தி ஒருவனுடனும், ஒருவன் ஒருத்தியுடனுங் கூடி வாழுதலே அறம் என்று புலப்படுகிறது. அதுவே வாழ்விற்குரிய இயற்கையாகலான் அதனை இயற்கை அறம் என்று தலைப்பில் பொறித்தேன். இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தலே அறம். அதற்கு மாறுபட்டு வாழுதல் மறம். ஒருத்தி ஒருவனுடனும் ஒருவன் ஒருத்தியுடனும் வாழ்வதே இயற்கை அறமென்று இதுகாறுஞ் சொல்லப்பட்டு வந்தது. இவ்வியற்கை அறத்தை உலகம் இல்லறம் என்று சொல்கிறது. எனவே அறம், இயற்கை அறம், இல்லறம் எல்லாம் ஒன்றே ஆதல் காண்க.

அறம், இல்லறமென்றும் துறவறமென்றும் இருகூறுக உலகில் விளங்கிக் கொண்டிருக்க, அதனை இல்லறத்தில் மட்டும் ஒடுக்கி அடக்குவதென்னை என்று சிலர் ஐயுறலாம். இயற்கை வாழ்விற்குரிய நல்லன யாவும் அறத்தின் கூறுகளே யாகும். மனமாசினின்றும் நீத்தலாகிய துறவும் அக்கூறுகளுள் ஒன்று. இல்லறமோ அறக்கூறுகள் யாவுஞ் சேர்ந்த ஒரு முழுமை.

அறம் என்பது ஒரு மரம் போன்றது. திருமணம், பிள்ளைப்பேறு, அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், பொறை, ஒப்புரவு, ஈகை, அருள், தவம், வாய்மை, துறவு, மெய்யுணர்வு முதலியன அம்மரத்தின் உறுப்புக்களாகிய வேர், பட்டை, கவடு, கோடு, இலை, மலர், காய், கனி முதலியன போன்றன. இவ்வறக் கூறுகள் யாவும் பிறந்து வளர்ந்து பயனளிக்க வேண்டிய தாயகம் இல்லறமாகும். இந்நுட்பத்தை யோர்ந்து தெளியின் அறத்துக்கும் இல்லறத்துக்கும் வேற்றுமை தோன்றாது. நீண்ட நாள் இல்லறம் துறவறம் என்று கேட்டும் படித்தும் நினைந்தும் பழகியும் தழும்பேறப் பெற்ற காதுக்கும் நாவுக்கும் நெஞ்சிற்கும் எனது கூற்றுப் புதுமையாகவே தோன்றும்.

பெண்ணுரிமை கடியப்பட்ட நாள் தொட்டும், பெண்ணை வெறுத்தல் துறவு என்னுஞ் சிறுமைக் கொள்கை முளைத்த நாள் தொட்டும், பெண்ணுடன் வாழ்தல் அறத்தின் ஒரு பெருங் கூறென்றும், பெண்ணை விடுத்தல் அறத்தின் மற்றொரு பெருங் கூறென்றும் நாட்டில் பிரிக்கப்பட்டன. இக்கொள்கை மக்களிடையில் புகுந்து வேர் கொண்ட

பின்னைப் போலித் துறவைக் கடிந்த திருவள்ளு வனார் அருளிய திருக்குறள் போன்ற நூல்களின் உள்ளக் கிடக்கையையும் பின் வந்தார் தங் கருத்துவழித் திருப்பலாயினர்.

திருக்குறளில் இல்லறவியல் துறவறவியல் என் னும் இரண்டு இயல்கள் காணப்படுகின்றன. அவ் வவ்வியல்களின் உறுப்புக்களாகச் சிற்சில அதி காரங்கள் முறை முறையாக ஒழுங்கு செய்யப் பட்டிருக்கின்றன. காலத்துக் கேற்ற வண்ணம் இயல்தொகுத்து அதிகாரம் வகுத்த பின்வந்தார் கூர்த்த மதியைப் போற்றுகிறேன். ஒரு கொள்கை யைக் காலத்துக்கேற்ற வழியில் ஒழுங்கு படுத் திக் காட்டல் சிறந்த அறிவுடைமையாகும்.

அதிகாரம் அதிகாரமாகத் திருவள்ளுவனார் திருக்குறளைப் பாடியது உண்மை. இல்லறம் துற வறம் என்னும் இயலாதல் வேறு இயலாதல் திரு வள்ளுவனார் வகுத்திருப்பார் என்று எளியேன் ஐயுறுகிறேன். அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றன் விரிவாகத் திருவள்ளுவனார் திருக்குறள் என்னும் ஓர் அரிய நூல் யாத்தனர். அதன் கண் அறத்தை இல்லறம் துறவறம் என்று அவர் இரண்டு கூறிட்டிரார் என்றே எனது சிற்றறிவிற்

குப் புலனாகிறது. திருவள்ளுவனார் அறமும் இல்லறமும் ஒன்றே என்னுங்கருத்துடையார் என்பது எனது ஆராய்ச்சியிற்போந்த உண்மை. திருவள்ளுவனார், பாயிரத்தில் அறனை வலியுறுத்திப் பின்னை அதன் விளக்கங் கூறப்புகுந்தார். அவர் நேரே வாழ்க்கைத் துணை நலங்கூறுது இல்லறம் அல்லது இல்வாழ்வு என்றோர் அதிகாரம் ஏன் கூறினார்? அவர் பாயிரத்திற் பகர்ந்த அறனையே பொருளாகக்கொண்டு பின்னை இல்வாழ்வில் அதன் விளக்கம் உரைக்கலாயினார்.

அறன் வலியுறுத்தலில் திருவள்ளுவனார் "அறத்தான் வருவதே இன்பம்" என்று இயற்கை அறத்தின் மாண்பு தெரித்து, அந்நாளில் தலை காட்டி நிமிர்ந்து நின்ற மற்ற செயற்கை யறத்தை "மற்றெல்லாம் புறத்த புகழுமில" என்று மறுத்துரைத்தார். இல்லறம் என்னும் அதிகாரத்திலும் ஆசிரியர் "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்" என்று இயற்கையறத்தை விதந்தோதிப் பின்னே "புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்" என்று பொல்லாத போலி அறத்தை இழித்துக் கூறினார். இன்னும் இல்லற அதிகாரத்தில் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று இயற்கை யறத்தை

வலியுறுத்தி, அதனை நேர்மை வழியில் நடாத்தல் வேண்டும் என்பார் "அஃதும் பிறன் பழிப்ப தில்லாயினன்று" என்றார்.

துறவு என்பது பின் வந்தார் கருத்துப்படி அறத்தின் ஒரு பெருங் கூறாயின், அவ்வதிகாரத்தில் அறத்தைப்பற்றி ஓர் உரையாதல் ஆசிரியர் அருளியிருப்பார். அவ்வதிகாரத்தில் அறம் என்னுஞ் சொல் மருந்திற்குமில்லை. நேயர்கள் அவ்வதிகாரத்தை ஊன்றி ஊன்றி ஆராய்வார்களாக.

ஆராயின் மனமாசினின்றும் நீத்தல் துறவு என்னும் உண்மையும், பெண்ணை விடுத்து நீத்தலைப் பற்றியபேச்சே ஆண்டின்மையும் புலனாகும். மனமாசினின்றும் நீத்தல் இல்லறத்தின் ஒருகூறு. இல்லறத்தின் பற்பல நோக்கங்களுள் ஒன்றாயிருப்பது அந்நீத்தல் அல்லது துறவு. அத்துறவு இல்லறத்துக்கு வேறுபட்டு எங்ஙனம் நிற்கும்? ஆகவே துறவு என்பது இல்லறமென்னும் அறத்தின் ஒருகூறு என்றே கொள்ளற்பாலது. பெண்ணுடன் வாழ்தல் இல்லறமென்றும் பெண்ணை விடுத்தல் துறவறமென்றுங் கொள்ளற்க.

பெண்ணுடன் வாழல் எனில் பெண்ணுடன் சேர்ந்து பிள்ளை பெறற்குமட்டும் என்று நினைப்

பது அறியாமை. பிள்ளைப்பேறு இல்லறத்தின் ஒருகூறு. அவ்வளவில் இல்லறத்தின் நோக்கு நிறைவேறுவதில்லை. வேறுபல அறக்கூறுகளெல்லாம் அதன்கண் நிறைவேறல் வேண்டும். அவைகளின் நிறைவேற்றத்துக்கே பெண் ஆணின் ஒத்த வாழ்வு வேண்டற்பாலது. அவ்வாழ்வு பிள்ளைப் பேறுடன் நில்லாது, மனமாசைத் துறத்தற்கும், அன்பு அருள் பெறுதற்கும், முடிவில் இன்பநிலை எய்தற்குந் துணை புரிகிறது. சுருங்கக்கூறின், ஆன்மாவிற்கு முழுத் தூய்மை அதாவது அறநிலை அதாவது கடவுள்நிலை கூட்டுவது அவ்வொன்றிய வாழ்வு என்று கூறலாம்.

துறவு என்பதை இல்லறத்துக்கு மாறுபட்ட தனியறமாகப் பிரித்த அறிஞர்கள், அறத்தின் பயனாகிய இன்பத்தையும் இரு கூறிட்டார்கள். அறம் இரண்டாகப் பிரியும்போது அதன் பயனாய இன்பமும் இரண்டாகப் பிரிவது இயல்பன்றோ? ஆழ்ந்த அறிவு கொண்டே அறிஞர் அப்பிரிவு கண்டார் போலும்! அது காலநிலையைப் பொறுத்தது.

பெண்ணுடன் வாழ்தல் என்னும் இல்லறம் சிற்றின்பத்துக்குரியதாம். பெண்ணை விடுத்தல் என்னுந் துறவறம் பேரின்பத்துக்குரியதாம். இன்பத்

தில் சிறுமை பெருமை ஏன் கற்பித்தல் வேண்டும்? பெண்ணுலகு சிறுமைப்பட்ட காலந்தொட்டு இன்பம் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டது. அறம் பொருள் இன்பம் என்னும் மூவகைப்பேறு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகையாகப் பிரிந்தன. இன்பத்துக்கு வேறாக வீடு என்பதொன்று பிரிக்கப்பட்டது.

கட்டு அதாவது பந்தம்விட்ட இடம் வீடு. துன்பம் நீங்கிய இடம் இன்பம். எனவே வீட்டிற்கும் இன்பத்துக்கும் என்ன வேற்றுமை? பெண்ணும் இல்லறமும் குறைவாக நினைக்கப்பட்ட நாளில் இன்பத்தில் சிறுமையும் பெருமையும் நுழைந்து கொண்டன. உண்மையில் அதன்கண் சிறுமையுமில்லை; பெருமையுமில்லை. அஃதென்றும் ஒரு பெற்றியாய் இலங்கிக்கொண்டிருக்கிறது.

பெண்ணுடன் வாழ்தல் உடலின்பத்தை மட்டும் அளிப்பதன்று. அஃது உயிரின்பத்தையும் அது கடந்த அழியா இன்பத்தையும் அளிக்க வல்ல அன்புத்தொடர்புடையது. பெண் ஒரு பொழுது பரு உடல் தாங்கி மனைவியாய் இன்பமளிக்கிறாள். பின்னை அப்பெண்ணிடத்துள்ள நுண்

மைத் தெய்வம் வேறு வழியில் அவ்வின்பத்தை நிலைபெறச் செய்கிறது.

"பிரிவின்றி நின்ற பெருந்தகைப் பேதை
குறியொன்றி நின்றிடுங் கோமளக் கொம்பு
பொறியொன்றி நின்று புணர்ச்சிசெய் தாங்கே
அறிவொன்ற நின்றன ளாருயி ருள்ளே"

எனவரூஉந் திருமூலர் திருவாக்கையோர்க.

இம்மையிலும் மறுமையிலும் இவை கடந்த பெருநிலையிலும் பெண்கூட்டுறவின்றி அவ்வந்நிலையில் இன்பமெய்துதல் இல்லை என்க. அவ்வின்பம் ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு விதமாகப் பெருகிப் பெருகி முடிவில் தன்முழு நிலையெய்தும். துன்பநீக்கத்துக்கேற்ற அளவாக இன்பம் நிகழ்ந்து கொண்டே போகும். எந்நிலையிலும் பெண்ணின் கூட்டுறவுண்டு. அக்கூட்டுறவு இல்லாவிடத்தில் இன்ப நிகழ்ச்சியில்லை. எந்நிலையினும் பெண்ணைத் துறத்தல் செயற்கை முறையாகும். பெண்ணுடன் வாழ்தல் என்றும் வேண்டற்பாலது. அவ் வாழ்வைக் கூட்டி வைப்பதே இல்லறமாகும். இக்கருத்துப்பற்றியே ஔவையாரும் "இல்லறமல்லது நல்லற மன்று" என்று அருளினர்.

திருவள்ளுவனார் பெண்ணுடன் வாழ்ந்து தாம் பெற்ற அநுபவத்தைத் திருக்குறள் என்னும் நூலாகத் திருவாய் மலர்ந்தருளினார். திருவள்ளுவனார் பெண்ணின்பத்தைப் பற்றியும், இல்வாழ்வைப்பற்றியும் அருளிய குறட்பாக்கள் இரண்டொன்று வருமாறு :—

" கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றி அறியும் ஐம்
ஒண்டொடி கண்ணே யுள " [புலனும

" தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு "

" இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை "

' வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும் "

இத்திருவாக்குகள் வாழ்வின் அநுபவத்தினின்றும் பிறந்தன என்பது கூர்த்த மதியினர்க்குச் செவ்விதில் விளங்கும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்பார் பெண் வாழ்வின் வாயிலாகக் கடவுள் இன்ப நிலையை இவ்வுலகில் கண்டவர். அவர், பரவை சங்கிலி என்னும் இருபெண்மணிகளுடன் இன்பம் நுகர்ந்தார்.

அஃது எத்தகை இன்பம்? "பண்மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெரு மானே மற்றாரை உடையேன்" என்று தமது அநுபவத்தை உலகிற்கு அறிவுறுத்துகிறார். ஈங் குக் குறிப்பிட்ட பற்று சிற்றின்பப் பற்றா? நேயர்களே! உன்னுங்கள். என்பு தோல் போர்த்த ஒரு பாவையாகப் பெண்ணைக் கருதித் தமது காமவெம்மை கழிக்க அவளுடன் வாழுங் கீழோர்க்கு அவள் இன்பஞ் சிறு இன்பமாகத் தோன்றும். மேலோர் பிள்ளைப் பேற்றிற்கென உடலும் உள்ளமும் அன்பால் ஒன்றச்சேர்ந்து பின்னை அவ்வன்பறாத முறையில் இன்பவாழ்வு நடாத்துவர். "பெண் என்பு தோல் போர்த்த காமக்கூடு. இவளோடு சின்னாள் தொலைத்துப் பின்னை இவளை விடுத்துத் தனியே யிருத்தல் வேண்டும்" என்னும் எண்ணத்துடன் பெண் ணொடு வாழுங்காமுகர்கட்குப் பெண்ணின் நுண் மையும் விளங்காது; இன்பத்தின் இயல்புந் தெரி யாது.

இப்பொழுது உலகம் போற்றும் மகாத்மா காந்தி இல்லறத்திருந்து கொண்டே பெருங்கட னாற்றி வருகிறார். அவரது இல்வாழ்வைப்பற்றி

"மனிதவாழ்க்கையும் காந்தி அடிகளும்" என்னும் நூலில் விரித்துக்கூறி யிருக்கிறேன். ஆண்டுக் காண்க.

இப்பொழுது உலகில் மிக உயரிய நூலாகப் போற்றப்படுவது கீதாஞ்சலி. அந்நூலை எல்லாச் சமயத்தவரும் போற்றுகிறார். அந்நூலின் உள்ளக்கிடக்கையாது ? எதையும் வெறுத்துத் துறத்தல் கூடாவென்பதே. எல்லாங் கடவுள் வடிவமாகப் பொலியும்போது, எதை வெறுப்பது, எதைத் துறப்பது என்று அந்நூலாசிரியர் ரவீந்திர நாத்தாகூர் கேட்கிறார்.

"அன்பு நோக்குடையார்க்கு எல்லாம் இன்பமயம்" என்பது அவரது உட்கிடக்கை. கீதாஞ்சலி என்னும் அரிய நூலை அன்பு இன்பம் ஒழுகும் பாட்டாக யாக்க ரவீந்திரர் எக்கழகத்தில் பயின்றார் ? வெறும் ஏட்டுக் கல்வியா அவரது அன்புக்கண்ணைத் திறந்தது ? பின்னை எது ? அவர் பெண்ணுடன் கலந்து இயற்கை அறமெனும் இல்லறக் கழகத்தில் பயின்று பயின்று பெற்ற அனுபவமும் பயனுமே கீதாஞ்சலி யென்னும் பாட்டாகப் பரிணமித்தன. தீங்கனியின் சுவை எவர்க்கு இனிக்கும் ? தின்று

கண்டவர்க்கன்றோ? தின்னாதார்க்கு எங்ஙனம் இனிக்கும்? நன்று பெறாத நோயாளர்க்கு அது கைக்கும். அதுபோல பெண்ணுடன் அன்பு வாழ்வு நடாத்துவோர்க்கு அதன் இன்பப்பயன் தெரியும். அவ்வாழ்வில் தலைப்படாதோர்க்கு ஒன்றுமே தெரியாது. காம நோயால் அவ்வின்பம் நுகரப்புகுவோர்க்கும் ஒன்றுந் தெரியாது.

களவியலுக்கு உரைகண்ட நக்கீரனார் களவு மணத்தைப் பிற களவுகளினின்றும் வேறுபடுத்தி அதன் பெற்றி பேசும்பொழுது,

> "இங்குப் பிறவுங் களவுண்மைசொல்லி அக்களவு கட்கெல்லாம் இக்களவு சிறப்புடைமை சொல்லும் துறக்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான் எனப்படுவ தென்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது."

என்றும்,

தொல்காப்பியத்துக்கு உரைகண்ட ஆசிரியர் நச்சினார்க்கினியர்,

> "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியுங்கூடு
> கின்ற காலத்துப் பிறந்த பேரின்பம்"

என்றுங் கூறியிருத்தல் காண்க.

பெண்ணுடன் வாழ்வது உடலளவில் இன்பம் பயந்து இறந்துபடுவதென்பதும், மற்றுமோர் இன்

பத்துக்கு மற்றுமோர் அறந்தாங்க வேண்டுமென் பதும் பிற்காலம் புகுந்தவழக்கு. அந்நாள் தொட்டு நமது நாடு, நமது வாழ்வு, எல்லாங் குலையப்பெற்று முடிவில் உரிமையையும் இழந்தோம். இவ்வள விற்குங் காரணம் இன்ப வாழ்விற்குரிய பெண்ணை யும், அவளுடன் வாழும் இயற்கை அறத்தையும் இழித்துப் போலி முறை கொண்டதேயாகும். ஆதலால் இன்பத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுவது அநாவசியம். பிரித்தெழுந்த வழக் கையும், அவ்வழக்குப்பற்றி நல்லோர் எழுதிய நூல்களையும் இதுபோழ்து குறைகூறல் வேண்டுவ தில்லை. காலத்தின் கோலம் என்று கொண்டு மூலத்தின் வழியை மீண்டும் உயிர்ப்பிக்க முயலல் அறிவுடைமை. திருவள்ளுவனார் முப்பா லில்எல்லாம் அடங்கும். வீட்டைப் பற்றித் தனி வாழ்வு கொள்வது பேய்த்தேரை (கானற் சலத்தை) நம்பி யோடினவன் கதையாக முடியும். வீடு என்பது முழு இன்பநிலை என்க.

இதுகாறுங் கூறியவாற்றான் இயற்கையோ டியைந்து வாழலே இறை வழிக்குரிய தென்ப தும், அவ்வாழ்வு பெண்ணுடன் கூடி வாழும் இல்வாழ்வு என்பதும், செந்நெறியில் அவ்வாழ்வு

நடாத்தின், அதனால் இன்பநிலை கூடும் என்ப தும், பிறமுறைகள் செயற்கையின்பாற் படுவன என்பதும், அவைகளால் உடல் நலன் கெடுவ தோடு வாழ்வுஞ் சூலைந்து வாழ்விற் பெறவேண்டிய இன்பத்தையும் இழக்க நேர்கிறது என்பதும் ஒருவாறு விளக்கப்பட்டன. ஆதலால் உலகில் இயற்கை அறமோங்கி வளர்வதாக.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை"

—திருவள்ளுவர்.

எ. திருமணம்

“சொற்பால் அமுதிவள் யான்சுவை
  என்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று
  நான் இவளாம் பகுதிப்
பொற்பார் அறிவார் புலியூர்ப்
  புனிதன் பொதியில் வெற்பில்
கற்பா வியவரை வாய்கடி
  தோட்ட களவகத்தே”

—திருக்கோவையார்.

ஒருபாதியாய பெண்ணும் மற்றொரு பாதியாய ஆணும் ஒன்றுபடுவது திருமணமென்பது. அவ்வொன்றிய வாழ்வின் இன்றியமையாமை முன்னே “இறைவழி” “இயற்கை அறம்” என்னுந் தலைப்புக்களின்கீழ் விரித்தோதப் பட்டிருக்கிறது. அவ்விரண்டும் இத் “திருமணத்”துக்கு முற்றுந் தொடர்புடையன. மணவாழ்வைப்பற்றி யெழும் பலதிற ஐயங்கட்கும் தடைகட்கும் ஆண்டுச் செவ்வன் இறை இறுத்திருத்தலான், அவைகளை ஈண்டு மீண்டுங் கூறவேண்டுவதில்லை.

மக்கள் இயற்கை அமைப்பை நோக்குழி, அவர்கள் தனித்து வாழும் இயல்பினரல்லர் என்

பது புலனாகும். மக்கள் கூடிவாழும் இயல்பினரே யாவர். அக்கூட்டு நிகழ்த்துவது திருமணம். அத் திருமணப் பேறுபெறாதார் பிறவிப் பேற்றை யிழந்தவராகிறார்.

மக்கள் ஏன் பிறக்கிறார்கள்? பிறந்து உண்டு களித்து மாண்டுபோகவா பிறக்கிறார்கள்? ஒருவரோடொருவர்கூடி வாழ்ந்து, அன்பைப் பெற்று, அவ்வன்பைப் பிற உயிர்களும் பெறத் துணை நின்று, முடிவில் இன்பநிலை எய்துவது பிறவி நோக்கம். அந்நோக்கம் திருமணமின்றி எங்ஙனம் நிறைவேறக்கூடும்?

திருமணம் என்பது வெறும் விளையாட்டன்று. ஒருபாதியாய் வளர்ந்துவரும் இரண்டுயிர் ஒன்றி முழுத்தன்மை எய்திக்கடவுற்ற அவைகளை அன்புக் கயிற்றால் இயற்கைபிணிப்பது திருமணம். இப் பிணிப்புக்கென்றே இயற்கை இருவரையும் பாதிப் பாதியாகத் தோற்றுவிக்கிறது. அப்பாதி நிலை, இருவரும் பின்னைக்கூடி வாழ்தற்கு வேண்டப்படும் ஒழுங்குகளைப் பண்படுத்தற் குரியதாகிறது. இருவர் அறிவும் மனமும் ஏனைய உறுப்புக்களும் தனித்தனி பண்பட்டதும் இயற்கை திருமண வாயிலாக அவர் இருமை கெடுத்து

ஒருமையாக்கி முழுமை வழங்குகிறது. அம் முழுமை பிறவி நோக்கை நிறைவேற்றுவதாகும்.

"திருமணம் இருபாதியை எங்கே கெடுக்கிறது? பெண் ஆண் உடல்கள் ஒன்றுபடுகின்றனவா? இருவர் உடலும் வெவ்வேருகவே விளங்குகின்றன" என்று கருதுவோர் இருப்பர். ஈண்டு ஒற்றுமை என்றது அன்பு ஒற்றுமையையென்க. பெண்மகள் என்பவளும் உடல் அல்லள்; ஆண்மகன் என்பவனும் உடல் அல்லன். உடல் அவர்களுக்கோர் உறையுள். உடலே அவர்களன்று. உடலுக்குள்ளே ஒரு நுண்பொருள் இருக்கிறது. அந்நுண்மை இயல்பு விளங்கப்பெறவே மக்கள் இளமையில் கல்வி பயில்கிருர்கள். அந்நுண் பொருள் யாண்டும் விளங்குவதை முதல் முதல் மக்கள் கலையளவில் உணர்கிருர்கள். அதைப்பின்னை அநுபவத்திற் பெறுவிப்பது திருமணம்.

தொடக்கத்தில் பெண் ஆண் சேர்க்கையால் அவ்வொருமை புலனுகும். பின்னைப் பிள்ளைப் பேற்ருனும், பிறவாற்ருனும் அஃது யாண்டும் புலனுகும். விரிவு இந்நூல் "இறைவழி"யினும் "இயற்கை அறத்"தினுங் காண்க. ஆகவே

பெண் ஆண் சேர்க்கையால் எய்தும் ஒருமை வெறும் உடல் அளவினதன்று என்றும், உடலி னுள் பொலியும் நுண்பொருளைப் பற்றியது என் றுங்கொள்க. இரண்டாறு ஒன்றுபடுவது போல என்க. ஆறு என்பது சொல்லால் இடத்தைக் குறிப்பினும், பொருளால் நீரைக்குறிப்பதாகிறது. இரண்டாறு ஓரிடத்தில் கலந்து ஓடத்தொடங்கிய பின்னை இஃது இவ்வாற்றுப்புனல் என்று புனலில் எவ்வாறு வேற்றுமை காணக்கூடும்? இவ்வாறே திருமணம் என்னுங் கூட்டால் பெண் ஆண் என் னும் வேற்றுமைக்குரிய இருமை கெட்டு ஒருமை பெறுகிறது.

உலகியல் வழிநின்று பெண் ஆண் ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக் காட்டுக்கூறலாம். ஓராவிற்கு இரு கோடு பூத்திருத்தல் காண்கிறோம். ஆவொன்று. கோடு இரண்டு. ஆபோன்றது தலைவி தலைவன் அன்பு. கோடுகள்போன்றன அன்னார் உடல்கள். ஈருடல் ஓருயிர் என்னும் வழக்கும் இக்கருத்துப் பற்றி யெழுந்ததாகும். மேலே ஒளிரும் மாணிக்க வாசகனார் திருமொழியில் “அமுதிவள் யான் சுவை” என்றும், “நான் இவளாம் பகுதிப்பொற் பார் அறிவார்” என்றும் போந்திருத்தல் காண்க.

இவள் இவனுமாறும் இவன் இவளாமாறுந் துணைபுரியுந் திருமணத்தின் பெற்றியை எவ்வுரையால் அளந்து கூறவல்லேன் ?

அப்பெற்றி வாய்ந்த திருமணம் இப்பொழுது வெறுங் கருமணமாய் மாறியிருக்கிறது. இரண்டு மரத்துண்டுகளைத் தச்சன் ஒட்டுவதுபோல் இரண்டு உடல்களை ஓரிடத்தில் சிலர் ஒட்ட வைக்கிறார். மனம் ஒட்டுகிறதோ ஒட்டவில்லையோ? அவ்வுண்மை எவர்க்குத் தெரியும்? இருமை கெடுத்து ஒருமை கூட்டவல்ல அன்பினின்றும் அரும்பவேண்டிய திருமணம் இப்பொழுது யாண்டிருந்து அரும்புகிறது? அவ்விழிவைச்சொல்லவும் வேண்டுமோ? காணி பூமியில் எத்துணைமணம், பொன்பொருளில் எத்துணைமணம், போலிக்கல்வியில் எத்துணைமணம், பதவிப்பட்டத்தில் எத்துணை மணம், புகைப்படத்தில் எத்துணை மணம், ஆடையில் அணியில் எத்துணைமணம், ஊன்பொதிந்த உடலில் எத்துணை மணம், வேறு பல இழிவுகளில் எத்துணை எத்துணை மணம் அரும்புகின்றன. அந்தோ! கொடுமை! கொடுமை! அன்புமணக் கமழ்ச்சி எங்கே? எங்கே? துன்ப மணத்துறைதவா யாண்டும்? அன்புமணம் வளர்ந்த

நமது தமிழ்நாடும் துன்பக்குழியில் விழுந்து கிடக்கிறது! அகத்திணை அரும்பிய தமிழ் நாடே! களவியல்கண்ட தமிழ் நாடே! கோவையார் கொண்ட தமிழ் நாடே! நீயுமா குழியில் விழுந்தனை?

திருமணம் என்பது ஒருபொழுது தோன்றி மற்றொருபொழுது அழிவதன்று. அஃது இம்மை மறுமைவரை தொடர்ந்து நிற்பது. "ஆயிரங்காலத்துப் பயிர்" என்று நம்மவர்கள் சொல்வதுண்டு. அத்தகைய ஒன்றை விளையாட்டாகவா கருதுவது? மக்கள் பிறப்பதும் வாழ்வதும் படிப்பதும் உழைப்பதும் உண்பதும் எற்றுக்கு? திருமண வாழ்விற்கன்றோ? அத்திருமண நிலை குன்றின் உலகில் என்ன வளரும்? என்ன ஓங்கும்? தற்செயலாகச் சிலவிடங்களில் சில நன்மணங்கள் கூடிவிடுகின்றன. பல திருமணங்கள் பெரும் போராட்டமாக முடிகின்றன. தலைவி தலைவனை நீதிமன்றங்களில் ஏற்றும் மணங்கள் திருமணங்களா என்று கேட்கிறேன். திருமணநிலை மிக இழிந்தநிலை எய்தியிருக்கிறது. ஆதலால் திருமணத்தின்மீது மக்கள் பெருங்கவலை செலுத்துவார்களாக.

வகை

அன்பு வழியில் இருமை கெடுத்து ஒருமை கூட்டுந் திருமணத்தில் வகை என்ன? பிற என்ன? என்று சிலர் வினவலாம். தொடக்கத்தில் வகையுமில்லை; பிறவுமில்லை. பின்னை நாளடைவில் வகையும் பிறவும் ஆங்காங்கே நுழைந்தன? இந்நுழைவிற்குக் காரணர் யாவர்? ஆண்மக்கள் என்று கூறல் மிகையாகாது. ஆணுலகில் தீயொழுக்கம், பொறுப்பின்மை, பொய்ம்மை முதலியன தோன்றிய நாள் தொட்டுப் பெண்ணுலகக் காப்புக்கெனத் திருமண விதிகள் கோலப்பட்டன. நாளடைவில் அவ்விதிகளினின்றும் வகையும் முறையும் கிரியையும் கோலமும் பிறவும் பிறந்தன. அவை நாட்டுக்கேற்றவாறும், சமயத்துக்கேற்றவாறும் பலபடப் பரந்து கிடக்கின்றன. கால தேச வர்த்தமானத்துக் கேற்ற வண்ணம் அவ்வப்பொழுது அவை மாறுதலும் அடைந்து வருகின்றன. அம்மாறுதலும் பிறவும் பலவிடங்களில் திருமணத்தின் உள்நோக்கிற்குக் கேடு விளைத்திருக்கின்றன. திருமணக் கட்டுப்பாடுகளாலும் பிறவாற்றாலும் உலகில் விளையும் போருக்கும் பிரிவிற்கும் வழக்கிற்கும் ஓரளவுமுண்டோ? அன்பு வழியில் திரு

மணம் நடக்குமேல் போரேது? பிரிவேது? வழக்கேது?

உலகிலுள்ள மண வகைகளை ஈண்டு விரிப்பிற் பெருகும். நமது நாட்டு மணவகைகளை மட்டுங் கவனிப்போம். அவைகளுள் உலக மணங்கள் பல அடங்கும். நமது நாட்டு நூல்களை ஆய்ந் தால் அவைகளில் பலதிற மணங்கள் காணலாம். பண்டைக் காலத்தின் முடிவிலிருந்த அறிஞர் கள் மணத்தை எட்டு வகையாகப் பிரித்தார்கள். நக்கீரனாரும் நச்சினார்க்கினியரும் முறையே தமது இறையனார் அகப்பொருள் உரைக்கண்ணும், தொல்காப்பிய உரைக்கண்ணும் அவ்வெட்டுவகை மணங்களை விளக்கி யுரைத்திருக்கிறார். அவர் உரைகளை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன். அவை வருமாறு:—

"**பிரமம்** என்பது நாற்பத்தெட்டியாண்டு பிரம சரியங் காத்தற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை அணிகலனணிந்து கொடுப்பது. கொடாவிடின், ஓரிருதுகாட்சி ஒருவனைச்சாராது கழிந்தவிடத்து ஒரு பார்ப்பனக் கொலையோடு ஒக்குமென்ப; அதனை அறநிலையென்பது. **பிரசாபத்தியம்** என்பது மைத் துன கோத்திரத்தான் மகள்வேண்டிச் சென்றால் மறாது கொடுப்பது; அதனை ஒப்பென்பது. **ஆரிடம்**

என்பது ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற் குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீரிற்கொடுப் பது; அதனைப் பொருள்கோளென்பது. **தெய்வம்** என்பது, வேள்வியாசிரியற்கு வேள்வித் தீமுன் வைத்துக் கொடுப்பது; அதனைத் தெய்வமென்று வழிபடப்பட்டது. **அசுரம்** என்பது, கொல்லேறு கொண்டான் இவளையெய்தும், வில்லேற்றினன் இவளை யெய்தும், திரிபின்றி எய்தான் இவளை யெய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளை யெய்தும், இன்னதொரு பொருள் தந்தான் இவளை யெய்து மென இவ்வாறு சொல்லிக்கொடுப்பது: அஃது அரும்பொருள் வினைநிலையென்பது. **இராக்கதம்** என்பது அவள் தன்னினுந் தமரினும் பெறாது வலிந்து கொள்வது. **பைசாசம்** என்பது மூத்தாண்மாட்டுந் துயின்றாண்மாட்டுங் களித்தாண்மாட்டுஞ் சார்வது: அது பேய்நிலை யெனப்படும். **கந்தர்வம்** என்பது இருவர் ஒத்தார் தாமே கூடுங் கூட்டம்; அதனை யாழோர் கூட்டமென்ப.

—**நக்கீரனார்.**

பிரமமாவது:—ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத் தெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீ ராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக்கொடுப்பது.। " கயலே ரமருண்

கட் கன்னிபூப் பெய்தி - யயல்பே ரணிகலன்கள் சேர்த்தி - யியலி - னிரலொத்த வந்தணற்கு நீரிற் கொடுத்தல் - பிரமமண மென்னும் பெயர்த்து.'' **பிராசாபத்தியமாவது :—** மகட்கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம் மகட்கு ஈந்து கொடுப்பது. "அரிமத ருண்க ணாயிழை யெய்துதற் - குரியவன் கொடுத்த வொண்பொரு ளிரட்டி-திரிவின் றந்தை திண்ணிதிற் சேர்த்தி-யரிய தன் கிளையோ டமைவரக் கொடுத்தல் - பிரித லில்லாப் பிராசா பத்தியம்.'' **ஆரிடமாவது :—**தக்கான் ஒருவற்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற் குளம்பினவாகச்செய்து அவற்றிடை நிறீஇப்பொன அணிந்து நீரும் இவைபோற் பொலிந்து வாழ்வீரென நீரிற்கொடுப்பது."தனக்கொத்த வொண்பொருடன் மகளைச் சேர்த்தி - மனைக்கொத்த மாண்புடையாற் பேணி - யினக்கொத்த - வீரிடத் தாவை நிறீஇயினி தீவதே - ஆரிடத்தார் கண்டமண மாம்.'' **தெய்வ மாவது :—** பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒருவற்கு அவ்வேள்வித் தீமுன்னர்த் தக்கணையாகக் கொடுப்பது. "நீளி நெடுநகர் நெய்பெய்து பாரித்த - வேள்வி விளங்கழன் முன்னிறீஇக் - கேள்வியாற் - கைவைத்தாம் பூணுளைக் காமுற்றாற் கீவதே-தெய்வ மணத்தார் திறம்.'' **அசுரமாவது :—** கொல்லேறு கோடல் திரிபன்றியெய்தல் வில்லேற்றுதல் முதலி யன செய்து கோடல். "முகையவிழ் கோதையை

முள்ளெயிற் றரிவையைத் - தகைநலங் கருதுந் தருக்கினி ருளரெனி - னிவையிவை செய்தாற் கெளியண்மற் றிவளெனத் - தொகைநிலை யுரைத்த பின்றைப் பகைவலித் - தன்னவை யாற்றிய வளவை யிற் - றென்னிலை யசுரந் துணிந்த வாறே."

இராக்கதமாவது :— தலைமகடன்னினுந் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது. "மலிபொற்பைம் பூணோர் மாலுற்ற மைந்தர் - வலிதிற்கொண் டாள் வதே யென்ப - வலிதிற் - பாரக்கதஞ் செய்துழலும் பாழி நிமிர்தோ - ளிராக்கதத்தார் மன்ற லியல்பு."

பைசாசமாவது :—மூத்தோர் களித்தோர் துயின் றோர் புணர்ச்சியும் இழிந்தோரை மணஞ்செய்தலும் ஆடை மாறுதலும் பிறவுமாம். "எச்சார்க் கெளிய ரியைந்த காவலர்-பொச்சாப் பெய்திய பொழுதுகொ ளமையத்து - மெய்ச்சார் பெய்திய மிகுபுகழ் நண்பி - னுசாவார்க் குதவாக் கோண்மைப் - பிசாசர் பேணிய பெருமைசா லியல்பே." "இடைமயக்கஞ் செய்யா வியல்பினி னீங்கி - யுடைமயக்கி யுட்கறுத்த லென்ப - வுடைய - அசாவார்க் குதவாத வூனிலா யாக்கைப் - பிசாசத்தார் கண்டமணப்பேறு." இனிக்

கந்தருவமாவது :—கந்தருவ குமாரருங் கன்னியருந் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு இயைந்ததுபோலத் தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது. "அதிர்ப்பில்லைம் பூணரு மாடவருந் தம்மு - ளெதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப - கதிர்ப்பொன்

பாழ் - முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக் - கந்தருவர் கண்ட கலப்பு " என இவற்றானுணர்க.

—நச்சினார்க்கினியர்.

இவ்வெட்டனுள் பண்டைக் காலத்தில் நிலவி யது களவு மணம். அக்கால இறுதியில் எட்டு வித மண வகைகள் தோன்றியதாகத் தெரிகிறது. அவ்வெட்டும் நிலவியபோதும் அறிஞர்கள் பண் டை மணமாய களவு மணங்கொண்டே வாழ்ந்தார் கள். தொல்காப்பியனாரும், இறையனாரும் களவு மணத்தையே போற்றி அவைகளின் இயல் கூறிப்போந்தார்.

" இன்பமும் பொருளு மறனு மென்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்
காமக் கூட்டங் காணுங்காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே."

—தொல்காப்பியனார்.

" அன்பி னைந்திணைக் களவெனப் படுவது
அந்தண ரருமறை மன்றல் எட்டனுள்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர் "

—இறையனார்.

இம்மணங்களை உற்று நோக்குழிக் களவு மணம் ஒன்று தவிர ஏனைய மணங்களிற் சில ,ஒருதலைக்

காமமுடையனவாயும், சில இருவர் வழிவேட்கை பெறினும் வயது முதலியன பொருந்தாதனவா யும் விளங்குதல் காணலாம். ஒரு தலைக்காமம் கைக்கிளையென்றும், பொருந்தாது பெருந்திணை யென்றும் பண்டை மக்களால் அழைக்கப்பட் டன.

" முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே"

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். அகத்திணை யுணர்ந்த அறிஞர் இவ்விரண்டையும் ஒதுக்கிக் களவு மணமொன்றையே கொண்டனர். தொல் காப்பியனாரும் இறையனாரும் "ஒத்த கிழவனும் கிழத்தியும்" என்றும், "அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவது" என்றும் முறை முறையே ஓதியிருத்தல் காண்க.

களவு மணத்தின் நுட்பம் உணராதார் களவு என்னுஞ் சொற்கேட்டு அம்மணத்தை இழிவாகக் கருதுகிறார். ஈண்டுக் களவு என்பது மற்றக் களவு போன்றதன்று.

"என் பயக்குமோ இது சற்கவெனின், வீடுபேறு பயக்குமென்பது. என்னை? இது களவியலன்றே? இதுகற்க வீடுபேறு பயக்குமாறென்னை? களவு

கொலை காமம் இணைவிழைச்சு என்பனவன்றே சம
யத்தாரானும் உலகத்தாரானுங் கடியப்பட்டன?
அவற்றுள் ஒன்றன்றோ இது? எனின்; அற்
றன்று, [illegible] றவல்லதூஉந் சொற்கேட்டுக் களவுதீதென்
பதூஉங் கா[illegible] த்தாக்கூ சொற்கேட்டுக் காமந்தீதென்
பதூஉமன்று [illegible] நடை[illegible]லை நல்லவாமாறு முண்டு:
என்னை? ஒரு [illegible]வில் கூட்டி [illegible]மமொடுகலாய்த்து
நஞ்சுண்டுசாவலெ[illegible]ப் பெண்[illegible]ளாய் நஞ்சுகூட்டி
வைத்து, விலக்கு[illegible] நிகழும் அ[illegible] தண்பலென்று
நின்றவிடத்து, அ[illegible] பற்றோர்கள்[illegible]வன் அதனைக்
கண்டு இவளிதனையு[illegible] வினைகளுக்கு கொண்டுபோ
[illegible]குப்பலென்று அவளை [illegible] கொண்டுபோ
யுகுத்திட்டாள்; அவளு[illegible] துக்கண் நஞ்
சுண்டு சாவான் சென்றாள் [illegible]ரிய பின்னை [illegible]ளாய்ச் சாக்
[illegible] நீங்கினாள். அவன் அக[illegible]ன்ப" [illegible]ளை உய்
யக்கொண்டமையான் நல்லூழ் [illegible]மணபது.
மற்றும் இது போல்வன களவாகா, நன்மை பயக்கு
மென்பது."

"இங்குப் பிறவுங் களவுண்மை சொல்லி அக்களவ
கட்டெல்லாம் இக்களவு சிறப்புடைமை சொல்லும்,
துறக்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான் எனப்படு
தென்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது. அது பாயி
ரத்துள்ளும் உரைத்தாம். மற்று உலகத்துக் களவா
யினவெல்லாங் கைகுறைப்பவுங் கண்சூலவுங் கழு

வேற்றவும் பட்டுப் பழியும் பாவமுமாக்கி, நரகத் தொடக்கத் தீக்கதிகளில் உய்க்கும். இது நன்மக்க ளாற் புகழப்பட்டு ஞானவொழுக்கத்தோடொத்த இயல்பிற்றாகலானும் பழிபாவந்தராது [illegible]ம் எனப் படுவதென்று விசேடிக்கப்பட்டால்

என்று நக்கீரனாரும்,

"பிறர்க்குரித்தென் றுதந்து குரவராற் கைக்கிளைக் கொடையெதிர்க்கும் பெருந்திணை அவர் கொடுப்பக் கொள்ளாது உள்ளத்தோடு எதிர்ப் பட்டுப் புணரியர் தொல்காப்பியனார் இது பிறர்க்குரிய பொருளை மறுத்தினார் இவ்வாறுங் களவன்றாயிற்று. இது வேதத்தை மொன்றைநின்றாற் போலக்கொள்க. * *

* * "உறுரும் இறையுமாவது குரவர் கொடுப்பதற்கு முன்னரும்" என்று ஒருத்திக்குங் கண்ணும் மன யர்வெனப்படுவதுவதேயென வேதமுங் கூறிற் [illegible]றதலின்"

என்று நச்சினார்க்கினியரும் களவியல் விளக்கி யிருத்தல் காண்க. விரிவு அக நூல்களிற் பார்க்க.

களவுமணமாவது "ஒத்த பண்பும் ஒத்த நல னும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியும் உடைய" ஒருத்தியும் ஒருவனும் பிறர் முயற்சியின்றி ஆண்டவன் அருள்கூட்டிய வழிக் கூடி இவள் இவனுமாறும் இவன் இவளா மாறும்

ஐம்புலனும் இன்பநுகரும் காதல் மணமென்க. இம்மண வாய்ப்படும் ஒருத்திக்கும் ஒருவனுக்கும் நிகழும் இன்ப அன்பே வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றவல்லது. இதன் பெற்றியை அக நூல்கள் விரித்துக் கூறுகின்றன.

இவ்வாறு நடைபெற்றுவந்த களவு மணத்துடனும் நாளடைவில் சில வினை முறைகள் கூடலாயின. உலகிடைப் பொய்யும் வழுவும் புகுந்த பின்னர்க் களவுவழி நிகழும் அன்புக் குறிப்பை உலகுக்குணர்த்தப் பெற்றோர்கள் சில வினைகள் கொண்டார்கள். அவ்வினைகளுக்கேற்ற கிரியைகளும் வகுக்கப்பட்டன.

“ பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப ”

என வரூஉந் தொல்காப்பியச் சூத்திரங் கவனிக்கத் தக்கது. இக்கிரியை கொண்டதே கற்பியல் என்பது. இக்கற்பியல் களவியல் வழிப்பிறந்தது. களவின்றேல் கற்பில்லை. தொல்காப்பியனார் காலத்தில் களவு மணம் இந்நிலையுற்றிருந்த தென்பது தொல்காப்பியப் பொருள் அதிகாரத்திற் போந்துள்ள களவியல் கற்பியல்களான் தெரிகிறது. பின்வந்த ஏனையோர் அவ்வழி நின்றே நூல்கள் எழுதினர்.

பின்னை நாளடைவில் தொல்காப்பியர் காலத்திய களவு மணமும் மறைந்து வேறு மணங்கள் மன்பதையில் நுழைந்தன. இப்பொழுது மணங்கள் போலியாய் முடிந்திருத்தல் கண்கூடு. போலி மணங்களால் மக்கள் வாழ்வு குலைந்து வருகிறது; தீயொழுக்கம் பெருகி வருகிறது.

இந்நாளில் பழைய களவு மணத்தை உயிர்ப்பித்தலும் அரிது. என்னை? அந்நாளில் இருபாலாரும் அகத்திணைப் பயிற்சியில் வல்லவராயிருந்தனர். அவர் காட்சியளவான் மெய்ப்பாடு கொண்டு அகப்பொருத்த முணரும் நுண்ணறிவு பெற்றிருந்தனர். இப்பொழுது அப்பயிற்சி இறந்துபட்டமையான் புற வழியில் நிலைமை புணர்ந்தாதல் திருமணம் நடாத்தல் வேண்டும். அது குறித்துச் சில உரை பகர்கிறேன்.

வயது

முதலாவது வயதைப்பற்றிக் கவனிப்போம்; பின்னே பிறவற்றை நோக்குவோம். "ஒத்த பண்பு ஒத்த நலன் ஒத்த அன்பு ஒத்த செல்வம் ஒத்த கல்வி" என்று கூறிய அறிஞர்கள் ஒத்த வயது என்று கூறாமை உன்னற்பாற்று. வயதில் மாறுதல் இருத்தல் வேண்டும். எத்தகை

மாறுதல்? ஒத்திருத்தல் கூடாதென்பது விளங்குகிறது. ஆதலால் அதைப்பற்றிய ஆராய்ச்சி வேண்டுவதில்லை. ஒத்தலின்றேல் ஏற்றக் குறைவிருத்தல் வேண்டும். ஏற்ற வயது எவர்க்கிருத்தல்வேண்டும்? குறைந்த வயது எவர்க்கிருத்தல் வேண்டும்? ஒத்த பண்பு ஒத்த நலன் ஓதிய அறிஞர் வயதில் மட்டும் வேற்றுமை காட்டவேண்டி “இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய் இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியும் உடையராய்” என்று வயது குறித்திருத்தல் ஊன்றி ஊன்றி நோக்கற்பாலது. இதனால் ஆண்வயது பெண்வயதினுஞ் சிறிது ஏறியிருத்தல் வேண்டுமென்று தெரிகிறது. இதனை ஆராய்ச்சி மிகுந்த மேல்நாட்டறிஞரும் ஏற்றுக்கொள்கிறார். பெண் ஆணைவிடச் சிறிது விரைவில் வயதடைதலான், ஆண் வயதினும் பெண் வயது சிறிது குறைந்திருத்தல் பொருத்தம். இல்லையேல் பெண்ணுக்குத் துன்பம் மிகும். ஆணுக்கு மின்பமில்லை.

இவ்வயது வேற்றுமை கொண்டு ஆண்டில் பல பட முதிர்ந்த நரை மூதாளன் ஓரிளங் கன்னியைக்

கட்டலாமோ எனில் அதுவுங்கூடாது. வயதில் முதிர்ந்த பெண்ணுடன் வயதில் இளைய ஆண் சேர்தலுங்கூடாது. இம்மணங்களால் இன்பம் விளைவதில்லை; நற்பிள்ளைப்பேறும் உறுவதில்லை. இன்பம் பொருந்தாததாகவும் ஒருதலையாகவு மிருத்தலான் உடல் நலனுங் கெடுகிறது. ஆதலால் வயதில் சிறு வேற்றுமையுடைய காளையுங் கன்னியும் மணம் புரிதலே சால்புடைத்து. அச்சிறு வேற்றுமையாது? அதற்குக் கால எல்லையுண்டோ? நமது நாட்டார் பதினாறு பன்னிரண்டு என்று நான்குவயது வேற்றுமை கொண்டார். இன்னும் ஓராண்டு கூட்டி ஐந்துவயது வேற்றுமையுங் கொள்ளலாம். இரண்டு வயது வேற்றுமையும் ஒருபுடை யொக்கும். வேற்றுமை வயது ஐந்துக்குமேற் போகாமலும், இரண்டிற்குக் குறையாமலுமிருப்பது நலம். பொருத்தம் நான்கு வயது வேற்றுமையென்க.

பதினாறு பன்னிரண்டு வயதைப் பற்றிச் சிறிது உன்னுவோம். இவ்வயது முறை இப்பொழுது மறுக்கப்படுகிறது. அம்மறுப்புக்கு யானும் உடன்படுகிறேன். ஆனால் பதினாறு பன்னிரண்டு வயது குறித்துச் சென்ற பண்டை

மூதறிஞர்மீது இக்காலத்துச் சிலர் சுமத்தும் பழிக்கு யான் துணைநில்லேன்; நில்லேன். என்னை?

பதினாறு பன்னிரண்டு வயது குறிப்பிட்ட கால தேசவர்த்தமானத்துக்கும், தற்கால தேச வர்த்தமானத்துக்கும் வேற்றுமையுண்டு. இப்பொழுதுள்ள நிலைகொண்டு பண்டை மூதறிஞர் செயலைக் குறை கூறுவது பிழை. அவரைக் குறை கூறாது காலத்துக்கேற்ற மாறுதல் செய்வது அறிவுடைமை. அந்நாளில் பிராணயாமம் முதலிய பயிற்சிகள் ஐந்து வயதில் தொடங்கப்படும். பதினாறு வயதில் அப்பயிற்சிகள் முழுமை யெய்தும். அவ்வயதில் திருமணத்துக்குரிய இயல் திறம் உரம் முதலிய யாவும் ஆடவன்பால் பொருந்தி வந்தன. பெண்ணும் பன்னீராண்டில் திருமணத் துக்குரிய யாவும் பெறுவள். இந்நாளைய பதினாறு வயதுடைய பிள்ளையும் பன்னிரு வயதுடைய பெண்ணும் புல் தடுப்பினும் கீழே விழுகிறார்கள். இப்பதினாறு பன்னிரண்டையா அப்பதினாறு பன்னிரண்டுடன் ஒப்ப நோக்கி ஆன்றோர்களைப் பழித்துக் கூறுவது?

கால தேசவர்த்தமான நிலை நோக்கி அப்பதினாறையும் பன்னிரண்டையும் முறையே இருபது

பதினாருக்கலாம். வேண்டுமேல் இரண்டு வயது உடன் கூட்டலாம். இருவர்க்கும் நான்கு வயது வேற்றுமை யிருத்தல் வேண்டும்.

இந்நாளிற் சிலர் மேல்நாட்டு முறைபற்றி முப்பது முப்பத்தைந்து என்று சொல்கிறார். நமது நாடு மேல் நாடன்று. மேல்நாட்டார் வெண்ணிறத்துடன் பிறக்கிறார். நாம் அந்நிறத்துடன் பிறப்பதில்லை. மேல்நாடு தண்மைநாடு. அதை நோக்க நமதுநாடு வெம்மைநாடு. இன்பக் கிளர்ச்சி வெம்மை நாட்டில் விரைவில் எழுதலியல்பு. அவ்வெழுச்சியைத் தகைய' இயற்கையோடு மாறுபட்டுப் போர்புரிதல் அறிவுடைமையாகாது. எல்லாவற்றிற்கும் மேல்நாட்டை இலக்கியமாகக் கொள்வது நமது நாட்டின் வளத்தைக் கெடுப்பதாகும். மேல்நாட்டு முறைபற்றி முப்பது முப்பத்தைந்து பாட்டு பாடுவது அறமன்று. எக்காரணம்பற்றியும் இருபத்திரண்டு வயதுக்குள் மணவினை முடிப்பது அறிவுடைமையாகும். புறநடையாகச் சிலர் இருபத்தைந்து கொள்ளலாம். இருபது இருபத்தைந்துக்குள் ஆடவனுக்கும் பதினாறு இருபதுக்குள் மகளிர்க்கும் மணவினை முடித்தல் நமதுநாட்டின் இயற்கைக்கு

அரண் செய்வதாகும். உற்ற வயதில் மக்கட்குப் போகப் புணர்விருத்தல் வேண்டும். அஃது உடல் வளத்துக்கும் அறிவு விளக்கத்துக்கும் துணை செய்வதாகும்.

"பொறையிலா வறிவு போகப்
புணர்விலா விளமை மேவத்
துறையிலா வனச வாவி
துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி
நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலுஞ்
சேயிலாச் செல்வ மன்றே"

—வளையாபதி.

திருமணத்தின் பின்னர் இருவர்க்குஞ் சொலற்கரிய இன்பநிகழ்ச்சி தொடங்குகிறது. சிலவாண்டு இன்பக் கலவியால் சில ஒழுங்குமுறைகள் பண்படுகின்றன. பண்பட்ட இன்ப நுகர்ச்சிக்குரிய பருவமுமுண்டு. அப்பருவத்தில் திருமணஞ் செய்யாது முன்னரே வன் செய்தல் வேண்டும் என்று சிலர் கருதலாம். முன்னரே திருமணம் நடந்தாலன்றி அப்பருவத்தில் பண்பட்ட இன்பம் நிகழாதென்க. குழந்தைப் பருவந் தொட்டு எழுத்துச் சொல் முதலியன பயி

லாது, வாளா கிடந்து, பின்னே திடீரெனத் தொல்காப்பியம் பயிலப் புகுந்தால் அவனது தொல்காப்பியப் பயிற்சி என்னாகும்? இன்ப நிகழ்ச்சிக்கு எழுத்துப் பயிற்சி போன்றது திருமணம். சில ஆண்டுகடந்து கூடும் இன்பநிகழ்ச்சி தொல்காப்பியப் பயிற்சி போன்றது.

அப்பருவம் எது? நமது நாட்டறிஞர் பெண் பருவத்தை ஏழு வகையாகப் பிரித்துப் போந்தனர். அதற்குரிய ஆண்டுகளையும் வரைப்படுத்தியுள்ளார். அவை வருமாறு :—

க. பேதை (ஒரு வயது முதல் ஏழு வயது வரை) உ. பெதும்பை (ஏழு - பதினொன்று) ௩. மங்கை (பதினொன்று - பதின்மூன்று) ச. மடந்தை (பதின்மூன்று - பத்தொன்பது) ரு. அரிவை (பத்தொன்பது - இருபத்தைந்து) சு. தெரிவை (இருபத்தைந்து-முப்பத்தொன்று) எ. பேரிளம் பெண் (முப்பத்தொன்று-நாற்பது) பிற இளமை கடந்த முதுமைக்குரியன. இவை நமது நாட்டுத் தட்ப வெப்ப நிலைக்கேற்ற வண்ணம் வகுக்கப்பட்டன. மேல் நாட்டில் இன்னுஞ் சில ஆண்டுகள் கடந்து முதுமையுறும். மேலே குறிப்பிட்டவாறு கால நிலை நோக்கி இம்முறையில் சில மாறுதல் நிகழ்த்திக் கொள்வது தவறாகாது.

இப்பருவங்களில் பழைய முறைப்படி நோக்குழித் திருமணத்துக்குரிய பருவம் மங்கைப்பருவமாகிறது. இப்பொழுது மடந்தைப் பருவம் வரை திருமண காலம் நீண்டிருக்கலாம். திருமணத்தினின்றும் இன்ப நிகழ்ச்சி செம்மை நிலைபெறச் சில ஆண்டுகளாகுமென்று மேலே சொல்லப்பட்டது. அவ்வின்ப நிகழ்ச்சிக்குரிய பருவம் அரிவைப் பருவமாகும். காலநிலைக்கேற்றவாறு அப்பருவத்துக்குரிய ஆண்டு நிலை ஒரு சிறிது மாறலாம். செம்மை இன்பத்துக்குரிய பருவம் அஃது என்பதே ஈண்டுக் கவனிக்கற்பாற்று. பெண்ணின்பமே முத்தி எனக்கொண்ட உலகாயதர் அவ்வின்பத்துக்குரிய பருவம் அரிவைப்பருவம் என்று குறித்திருக்கிறார். "அரிவையர் இன்பமுத்தி" என்னும் உரை காண்க. பண்பட்ட செம்மை இன்பத்துக்குரிய அப்பருவத்தில் திருமணஞ் செய்யப்புறப்படுவோர் இன்பத்தைப் பெறுதொழிவோராவர். ஆதலால் அப்பருவத்துக்கு முன்னரே மணவினை முடித்துக் கொள்ளல் அறிவுடைமை.

இதுபோழ்து நமது நாட்டில் பலப் பலவிதமாகத் திருமணங்கள் நடைபெறுகின்றன. திரு

மணத்திற்குரிய வயது முதலியவற்றின்மீது நமது நாட்டார் சிறிதுங் கவலை செலுத்துவதில்லை. பால் மணமருச் சிறு குழந்தைகள் கரத்தில் பழந் தந்து ஏமாற்றி மண வினை முடிக்க முந்தும் தாய் தந்தையர்கள் தாய் தந்தையர்களா என்று கேட்கிறேன். திருமணவியல் பொருள்நுட்பம் முதலியவற்றுள் ஒன்றுந் தெரியாத குழந்தைகட்கு மணவினை முடிக்கும் உரிமை மற்றவர்கட்கேது? பெண்மகள் பயிலவேண்டுவதைப் பயின்று, உணரவேண்டுவதை உணர்ந்து, இயற்கை வழி வளர்ந்துவரும் வேளையில், திருமண நிகழ்ச்சி அவள் உள்ளத்தில் கூடும்போது, அவள் தன் இயல்பு கல்வி முதலியவற்றிற்குத் தக்கவாறு ஒருவனைத் தெரிந்தெடுக்கும் உரிமை அவளுக்கன்றோ யிருத்தல் வேண்டும்? உலகம் இன்னதென்று தெரியாமுன்னம் குழந்தையை ஒருவனுக்கு மற்றவர் கொடுத்தல் பாவம்.

இளமை மணத்தால் நாடு ஒருபால் கெட்டு வருகிறது. கிழமணத்தாலும் நாடு மற்றொருபால் அழிந்துவருகிறது. வெள்ளிக்கம்பியென நரைமயிர் திரண்டு, கண்குழிவிழுந்து, பல் தேய்ந்து, நரப்புக்கட்டுக் குலைந்து, எலும்பு

உலுத்து, முதுகு வளைந்த தொண்டு கிழவன், மேகங் கட்டுக்கட்டாகத் தவழ்ந்தாலென அடர்ந்த மயிரும், பிறைத்திங்களும் வெஃகும் நுதலும், நீலக்கருவிழியும், முத்தன்ன வெண்ணகையும், பவள இதழும், குயில் குரலும், மயில் நடையு முடைய இளமையும் அழகும் ஒழுகி யூருங்கன்னியை மணக்குங்கொடுமை நமது நாட்டில் மலிந்து கிடக்கிறது. அந்தோ! பெண் தெய்வம் கல்லா? மண்ணா? இக்கொடுமை குறித்து எழுதக் கையும் ஓடவில்லை. பெண்கொலை பெண் கொலை என்று கூவிக்கூவி மேலே செல்கிறேன்.

நாயகி இறந்தால் என் செய்வது என்று சிலர் கேட்கிறார். நாயகன் இறந்தால் என்செய்வது என்று கேட்பாரில்லை. இரண்டாமுறை மணம் வேண்டுமேல் அவ்வுரிமை இருபாலார்க்கு மிருத்தல் வேண்டும். இரண்டா முறை மணம் வேண்டுவதில்லை என்றே யான் சொல்வேன். ஒருமுறை யொருத்தியுடன் காதல்கொண்டு மணஞ்செய்த பின்னை மற்றொரு பெண்ணை மணஞ் செய்வதெற்றுக்கு? காதல் ஒருவரிடம் நிகழுமே யன்றி மற்றவரிடம் நிகழாது. காதலால் ஒரு முறை வாய்க்கப்பெற்ற மனைவி இன்னுயிர் துறக்க

நேரினும் அவள் காதல் எங்ஙனம் நீங்கும்? ஆதலால் காதலால் விழுங்கப்பெற்ற ஒருவன் இறப்பினும் ஒருத்தி மறுமணஞ் செய்யவேண்டுவ தில்லை. அவ்வாறே ஒருத்தி இறப்பினும் ஒரு வன் மறுமணஞ்செய்ய வேண்டுவதில்லை. மனைவி யுயிருடன் இருக்க மேலும் மேலும் மணஞ் செய் வது பெருங்கொடுமை. அதைப்பற்றி ஈண்டு விரித்துக் கூறவேண்டுவதில்லை.

புறனடையாக இங்கு இரண்டொரு குறிப்புப் பொறிக்க விரும்புகிறேன். திருமணம் நடந்த உடன் அதாவது ஓராண்டு ஈராண்டுக்குள் மனைவி மரித்தால் பிள்ளைப்பேறு கருதி இன்னொருத் தியை மணக்கலாம். வயது முதிர்ந்த ஒருவன் மனைவியை யிழந்தபின் மனைவி நசையால் இடர்ப் படுவனேல், அவன்தன் வயதிற்கியைந்த ஒருத்தி யை அதாவது கணவனையிழந்த ஒருத்தியை - அவளும் விரும்பின் - மணந்து கொள்ளலாம். அங்ஙனஞ் செய்யாது கிழவன் கன்னியைக் கட்டு வது கூடாது. இருவர் எவ்வயதில் எந்நிலையில் மணஞ்செய்து கொள்ளினும், வயது வேற்றுமை நான்கு அல்லது ஐந்துக்கு மேலிருத்தல் கூடா தென்பது கவனிக்கத் தக்கது.

கொழுநன்

கொழுநன் என்பதற்குக் கொழுக் கொம்பு போன்றவன் என்பது பொருள். தான் சுற்றிக் கொள்ளவேண்டிய கொழுக்கொம்பு இஃது என்று கொடி தெரிந்து கொள்ளுதல்போலத் தன்னியல் புக்குரிய கொழுநன் இன்னனென ஒருவனைத் தெரிந்துகொள்ள வேண்டுவது பெண்ணின் முயற்சியா யிருத்தல் வேண்டும். பெண் பிறந்து வளர்ந்து கல்வி பயின்று தேர்ச்சி அடைவது எற்றுக்கு? ஒருவனுடன் வாழ்ந்து தாய்மைப் பேறு பெறுதற்கன்றோ? அப்பேற்றிற்குரிய வாழ்க்கைத் துணையைத் தேடுவதில் எத்தகைக் கவலை அவள் செலுத்தல் வேண்டும்? வாழ்க் கைக்கு நற்றுணையாகாத ஒருவன் நாயகனாக வாய்ப்பனேல், பெண்ணின் வாழ்வு குலைந்துபடு வது திண்ணம். அப்பெண் செல்வத்திற் சிறந்த சீமாட்டியா யிருந்தாலென்னை? கல்வியிற் சிறந்த கலைவாணியா யிருந்தாலென்னை? அழகிற் சிறந்த அணங்கா யிருந்தாலென்னை? நல்ல கணவன் வாய்த்தால் அவையெலாம் பயன்படும். வாய்க்க வில்லையேல் அவைகளால் ஆம் பயன் ஒன்று மில்லை. ஒருத்தியின் வாழ்வுச் செல்வம் அவளது நாயகனல்லனோ?

நாயகன் விளையாட்டல்லன்; பந்தரல்லன்; இன்றிருந்து நாளை யொழிவோனல்லன். அவன் என்றும் நீங்காது வாழ்விலொன்றி யிருப்பவன்; வாழ்க்கைத் துணையாயிருப்பவன். இத்தகைய ஒருவன் எல்லா வழியிலும் நாயகியுடன் இயைந்தவனாயிருத்தல் வேண்டுமென்றோ ?

அத்தகைய நாயகனைத் தெரிந்தெடுக்க வேண்டிய பொறுப்பு எவருக்கிருத்தல் வேண்டும் ? தாய் தந்தையர் பெண்ணுக்குரிய நன்னாயகனைத் தெரிந்தெடுப்பதில் துணை புரியலாம்; கவலை செலுத்தலாம். ஆந்தபொறுப்பு பெண்ணுடையதாகவே யிருத்தல்வேண்டும். இது நமதுநாட்டார் பலர்க்கு வியப்பூட்டும். "பெண்ணா புருஷனைத் தேடிக்கொள்வது" என்று அவர் எள்ளுவர்; நகையாடுவர். "புருஷனுடன் நாளை வாழப்போகின்றவர் யாவர்" என்று எள்ளுவோரையும் நகையாடுவோரையும் நோக்கிக் கேட்கிறேன். கேவலம் நகை புடவை வாங்குவதில் தாய்தந்தையர் மகளது விருப்பங் கேட்கிறார். இவைகட்குப் புதல்வியின் கருத்துத் தெரிந்து கொள்ள விரும்பும் பெற்றோர், அவள் வாழ்வினூடே நெடிதும் உயிராகக் கலந்து வாழத்தக்க நாயகனைப்

பற்றி தானே பெண்ணின் கருத்தைத் தெரிந்து கொள்வது இழிவு? பழைய களவு மணம் வழக்கில் இல்லா தொழிலினும், அதற்குரிய அக அறிவூற்றைத் தூர்ந்துபடினும், அதனுடைய போக்கையாதல் பற்றி யொழுகல் வேண்டும். திருமணத்துக்கு முன்னர்ப் பெண் நாயகனைப்பற்றிச் செவ்வனே தெரிந்து கொள்ளுமாறு மற்றவர் முயலல் வேண்டும். முன்பின் ஒன்றுந் தெரியாத ஒருவன் பக்கத்தில் பெண்ணைத் திடீரென அமர்த்துவது அறமன்று. பெண்ணைப்பெற்ற தாய்தந்தையர்க்குப் பொறுப்பில்லையோ எனில், பொறுப்பில்லை என்று யான் கூறேன். அப்பொறுப்புடன் பெண்ணின் விருப்புங் கூடல்வேண்டு மென்பது எனது உள்ளக்கிடக்கை.

சாதிக்கட்டுப்பாடு, சமயக்கட்டுப்பாடு, பொருள் வேட்கை முதலியவாற்றான் எத்துணையோ பொருந்தா மணங்கள் நடைபெறுகின்றன. கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு எத்துணை நாள் உயிர் வதை செய்துகொண்டிருப்பது! கட்டுப்பாடுகள் என்னென்ன செய்கின்றன! அந்தோ! விரிக்கிற்பெருகும். பெற்றோரும் பெண்ணும் விரும்பாத விடத்தில் மணம் நிகழுமாறு கட்டுப்

பாடு செய்கிறது. கட்டுப்பாட்டிற்கும் கண்மூடி வழக்கத்துக்கும் என்ன ஆற்றல்? என்ன பெருமை? அஞ்சாநெஞ்சுடன் கட்டுப்பாடுகளையும் கண்மூடி வழக்கங்களையும் உடைத்தெறிதல் வேண்டும்.

சில விடங்களில் மூடப்பெற்றோர்கள் விருப்புக்கிணங்கி எத்துணைப் பெண்மணிகள் கண்ணீர் உகுத்து மணஞ்செய்து கொள்கிறார்கள். பெண் மனங்கொள்ளா மணம் மணமா என்று வினவுகிறேன். திருமணமென்பது நகையா? இசையா? பந்தரா? மாலையா? கூட்டமா? விருந்தா? மனமொன்றா விடத்தில் மணமேது? மகிழ்வேது? நாயகி நாயகன் மனமொன்றுவதே மன்றல்மன்றலாகும். ஆதலால் பெண் தன் கருத்துக்கிசைந்த நாயகனை நண்ணலே பொருத்தம்.

களவு மணம் இறந்துபட்ட பின்னர்த் தாய்தந்தையர்கள் சோதிடத்தின்வழிப் பொருத்தங் கண்டு பிள்ளைகட்குத் திருமணஞ்செய்து வந்தார்கள். அஃது இன்னும் நடைபெற்று வருகிறது. சோதிட வழிக்குறிக்கப்பெறும் பொருத்தத்தை யான் குறைகூறவில்லை. சோதிடம் பிழையெனவும் யான் கூறேன். சோதிடன் பிழைபடலாமன்றோ? கணிதம் முதலியவற்றில் பிழைநிகழலாமன்றோ?

சோதிடத்துடன், பெற்றோர் ஆராய்ச்சியுடன், மற்றவர் உதவியுடன் பெண்ணின் விருப்புந் தேவை என்று யான் சொல்கிறேன். முடிவு பெண்ணின் விருப்பத்தை யொட்டி யிருத்தல் வேண்டுமென்பது எனது கருத்து.

கொழுநனைத் தெரிந்துகொள்வதில் பெண்ணுக்குப் பெரும் பொறுப்புண்டு. "மகன்" என்னுஞ் சொல்லுக்குரிய பொருளுடைய ஒருவனைப் பெண் தெரிந்துகொள்வது பொருத்தம். நீண்டநாள் தனக்குத் தெரிந்த ஒருவனையே பெண் கருத்திற் கொள்வது நலம். திடீரெனவரும் ஒருவனது செல்வம் கல்வி உடல்கட்டு முதலியவற்றைக் கண்டு பெண்மகள் மயங்கலாகாது. நாளடைவில் அவனது வழக்க ஒழுக்கம் முதலியவற்றைக் கவனித்து அவள் மனதில் தெளிவுபெறல் வேண்டும். தாய் தந்தையர் வாயிலாகவும், மற்றவர் வாயிலாகவும், ஒல்லும் வகை நேராகவும் அவனது செயலைப் பெண் கவனித்துவரல் வேண்டும். வெறுங் காமக் கிளர்ச்சிக்கு எளிவந்து திடீரென ஒருவனை ஒருத்தி கொள்வது பின்னைப் பிரிவிற்கும் பிற இடருக்குங் கால்கொள்வதாகும். பின்னை வாழ்வில் எத்தகை இடையூறும் நேராத வழியில் அவள்

வாழ்க்கைத்துணை தேடுவது அறிவுடைமை. இழிந்த காமச்சூட்டிற்கு அடிமைப்பட்டுப் பெண் சேற்றில் விழுவது அறியாமை.

நாயகன் என்றால் காமவேட்கை தணிப்பவன் என்றுமட்டுங் கொள்ளலாகாது; ஒருத்தியின் தாய்மை நிலைக்குத்துணை நிற்பவனும், நற்பிள்ளைப் பேற்றிற்குத் தந்தையா யிருப்பவனும் நாயகன் என்னுஞ் சொற்குரியவனென்க. பின்னுலகாக் குந் தந்தையாமாறு ஒருவனைத் தனக்குரிய கணவ ஞகக் கோடல் வேண்டுவது பெண்ணின் கடமை. தந்தையாகும் நீர்மை அவன் பாலிருக்கிறதா என்பது பெரிதுங் கவனிக்கற்பாற்று.

வயது ஒன்று தவிர பிறவற்றில் ஏறக்குறைய எல்லாக் கூறுகளிலும் பெண் தன்னை யொத்த ஒருவனை நாடுவது சிறப்பு. "ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியும் உடையராய்" "அன்பினானுங் குணத்தி னானுங் கல்வியினானும் உருவினானும் திருவினா னும் திரிவிலர் ஒருவர் ஒருவரின்" "எக்காலத் தும் எவ்விடத்தும் ஞானத்தானும் ஒழுக்கத் தானும் ஆள்வினையானும் பொருளினானும் பொரு விலன் தானே என்பது இவளும் அன்ன

ளெனவே, இருவரும் பொருவிறந்தா ரென்பத னைப் பயக்கும்'' என வரூஉங் களவியலுரை யாசிரியர் மொழிகளைக் காண்க.

இருபாலார்க்கும் முதலில் ஒத்த கல்வி வேண் டற்பாலது. ஒத்த கல்வியில்லாவிடத்துப் பிற ஒத்துவரல் அரிது. ஈண்டு ஒத்த கல்வி என்பது ஒத்த ஏட்டுக் கல்வியையுமன்று; ஒத்தப்பட்டக் கல்வியையுமன்று. பின்னை என்னை? கல்விக்குரிய பயனிலையை யென்க.

சில விடங்களில் நாயகி இசைக்கல்வியிற் சிறந்து விளங்குகிறாள். நாயகன் அக்கல்வியில் சூந்யமா யிருக்கிறான்; அதை வெறுப்பவனாயு மிருக்கிறான். நாயகனுக்கு அக்கல்வியில்லா தொழியினும், அதைச் செவிமடுத்துத் திளைக்கும் அறிவாதல் அவனுக்கிருத்தல் வேண்டும். இல்லையேல் பெருங் கவலையே. இசைப் புலமை நிரம்பப்பெற்ற ஒருத்தி அந்நல்லிசைப் புலமை சிறிதுமில்லா ஒருவனை மணத்தலால் மன ஒற்றுமை நிகழ்தல் அரு மை. புறனடையாகச் சில விடங்களில் சில போழ்து வேறு துறைகளால் அவ்வொற்றுமை நிகழலாம். இவ்வாறே பிற கல்வித்துறைகளிலும் இருபாலார்க்கும் ஒத்த புலமையிருத்தல் நலம்.

இந்நாளில் நாயகன்மாருள் பலர் கற்றவராயிருக்கிறார். நாயகிமாருக்கு எழுத்து வாசனையுங் கிடையாது. இவ்விருவர்க்கும் அறிவு ஒற்றுமை எங்ஙனம் நிகழும்? அறிவு மனம் உடல் என்னும் முத்திற ஒற்றுமை இருபாலார்க்கும் இருத்தல் வேண்டும். இவ்வொற்றுமைக்கு அடிப்படை ஒத்த கல்வியாகும்.

கல்வியறிவுடன் இருபாலார்க்கும் ஒத்த ஒழுக்கமிருத்தல் வேண்டும். ஒத்த ஒழுக்கமில்லாரிடத்து ஒத்த அன்பு நிகழாது. பொய்யனிடம் மெய்யள் சிக்கிக்கொள்வதும், கொலைஞனிடம் அருள் கனிந்த அகமுடையாள் அகப்படுவதும் மாறுபாடாக முடிதல் இயல்பு. ஆதலால் ஒத்த ஒழுக்கம் இருபாலார்க்கும் வேண்டற்பாலது.

நாயகன் நாயகியின்பால் எவ்வொழுக்கத்தை எதிர்நோக்குகிறானோ அவ்வொழுக்கம் அவன் பாலுமிருத்தல்வேண்டும். அவ்வாறே நாயகி நாயகன் பால் எதிர்நோக்கும் ஒழுக்கமும் அவள் பாலிருத்தல் வேண்டும். செல்வமும் பிறவும் ஒத்திருத்தல் பொருந்திய வாழ்வளிக்கும்.

சில விடங்களில் எல்லாம் ஒத்தும் உடல் நலன் ஒவ்வாமலிருக்கிறது. உடல் நலன் ஒவ்

வாமை பிற ஒத்த நிலைகளையுஞ் சிதைக்கும். அத்திருமணத்தால் மெய்ப்பயன் விளையாது. கட்டும் அழகுந்திரண்டு அமுதெனப் பொலியும் இளங் கன்னியை, உடல்நலன் பெறுத ஒரு தேரை மணந்தால் மன ஒற்றுமை நிகழுங்கொல்? மனவொற்றுமை யில்லாவிடத்து அறிவு ஒற்றுமை ஏது? உடல் மனம் அறிவு என்னும் ஒருமைப்பட்ட வாழ்வே அன்புக்குரிய இல்வாழ் வாகும். உடல்நலன் எல்லாவற்றிற்கும் ஊற்று என்று கூறல் மிகையாகாது.

உடல்நலன் பெரிதுங் கவனிக்கற்பாலது. நீறுபூத்த நெருப்புகள் சில உண்டு. சிலர் விலையுயர்ந்த நல்லாடையால் தன் புரை மறைத்து உலகை மயக்குவர்; அவர் ஏறுபோல் செயற்கை நடை நடந்துங்காட்டுவர்; அவர் கல்வியிலுஞ் செல்வத்திலும் பிறவற்றிலும் பெருக்குடையராயு மிருப்பர். இவ்வளவிருந்தும் அவருள் கனல் மூண்டு கொண்டிருக்கும். இந் நீறுபூத்த நெருப்புக்களிடை அணுகலாமா? அணுகின் என் செய்யும்? அணுகுவோரையும் அவர்வழித் தோன்றல்களையும் அக்கனல் எரிக்கும். ஆதலால் பெண்மகள் தன்னை மணஞ்

செய்ய விரும்பும் ஒருவனது உடல் நலனைப் பெரிதுங் கவனிப்பாளாக.

இந்நாளில் எத்துணையோ நோயாளிகள் செயற்கைப் புறக்கோலத்தால் தங்கள் புண்ணை மறைத்தும் பின் பெண்ணுலகை எரிக்கிறார்கள். இவர்கள் தாங்கள் கெட்டதுமன்றிப் பிறரையுங் கெடுக்கிறார்கள். இப்பாவிகட்கு இப்பொழுதுள்ள நரகக் குழிகள் போதுமோ? தொழுநோய் அல்லது குஷ்டரோகம், காசம் முதலிய நோயுடையார் திருமணஞ்செய்து கொள்ளாமலிருப்பது நலம். இந்நோயாளிகள் எத்துணைக்கல்வி செல்வமுடையவர்களாயினும் பெண்மக்கள் அவர்களைப் பொருட்படுத்தலாகாது. வெள்ளை கொறுக்கு மேகம் முதலிய நோயுடையாரிடத்தும் பெண்மக்கள் மிக எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும்; இவர்கள் பெரிய நீறுபூத்த நெருப்புகள். இவர்கள் நோய் இவர்களுடன் ஒழிவதில்லை. இவர்களை மணக்கும் மங்கை நல்லாரிடத்தும் அந்நோய் தொடர்கிறது. அஃது அவர்கள் அளவிலும் நில்லாது அவர்கள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளையும் பிடித்துக் கொள்கிறது. பின்னை அக் கொடுநோய் வழி வழிப்படர்ந்து போகிறது.

இப்பெரு நோய்களால் பீடிக்கப்பட்டோர்க்குப் பிள்ளைபெறல் அரிது. பிறப்பினும் பிள்ளை குருடாயும் வேறுபல ஊறு உடையதாகவும் பிறக்கும். இக்கொடுமைக்குக் காரணனாயுள்ள ஒருவனையா ஒருத்தி மணப்பது ?

நோய்த் தன்மையை அளந்தறியும் ஆற்றல் பெண்மகள் பெற்றிருத்தல் வேண்டும். பெண்ணோயால் பீடிக்கப்பட்டதும் கழுவாய் தேடிக்கொள்ளுஞ்சிலர் அக்கொள்ளையினின்றும் பிழைப்பதுண்டு. அவரையும் மருத்துவரைக் கொண்டு சோதித்து உண்மை தெளிய வேண்டுவது பெண்ணினத்தார் பெருங்கடன். யாண்டாயினும் நோயின் வெம்மையும் பூச்சும் மறைந்து ஒளித்துக் கொண்டிருக்கும். பெண் சேர்க்கை நேர்ந்ததும் மீண்டும் நோய் வெளிப்படும். ஆதலால் எக்காரணம் பற்றியும் நோயாளியைப் பெண் மணஞ்செய்யா தொழிவது நலன். எத்துணைக்கள்ளர்கள் நல்லுடையால் புண்ணை மூடிப் புகைப்பட மெடுத்தனுப்பிப் பெண்ணுலகை ஏமாற்றுகிறார்கள். புகைப்படக் காட்சியாலும் பெண்மகள் மோசம் போகலாகாது.

குடியர்களையும் மணஞ்செய்தல் தவறு. குடியால் தொடக்கத்தில் நரம்புக் கிளர்ச்சி யுண்டா

கும். அதனால் அவர்கள் பெண் விளையாட்டில் மூழ்குவார்கள். நாளடைவில் நரப்புக் கட்டுக் குலைந்து அவர்கள் திடீரென அகாலத்தில் நபுஞ்ச கர்களாவார்கள். புகையிலை அமிதமாக மெல்லு வோர் காப்பி தேயிலை கொக்கோ முதலியவற்றை அமிதமாக அருந்துவோர் முதலியவர் நிலையும் இவ் வண்ணமே முடியும்.

பெண்ணோய், குடிமுதலியவாற்றால் விளையுங் கேடு உயிர்களை வழி வழி யடர்ந்து தொடரு மென்று ஆராய்ச்சிக்காரர் கண்ட உண்மை பெரி தும் கவனிக்கத்தக்கது.

காமுகன், பக்கத்தாரை ஐயுறுவோன், முன்னரே ஒருத்தியை மணந்தவன், சோம்பேறி, முதல் வைத்துத் தின்பவன் இன்னோரன்ன பிறரும் திருமணத்துக்கு விலக்கானவரே. பெண்மையை விரும்பாது பொருட்காதல் கொண்டு " இவ்வளவு ஆயிரங் கொடுத்தால் பெண்ணைக் கொள்வேன் " என்று சொல்வோனும் விலக்கானவனே. என்னை? அவனது காதல், பொருளைப்பற்றிக் கிடக்கிறதே யன்றிப் பெண்ணைப்பற்றிக் கிடக்கவில்லை. அன் னான் பின்னும் பொருளின் பொருட்டு மற்றொரு பெண்ணை நண்ணுவன். இந்நாளில் இப்பொருள்

மணங்கள் பல நடக்கின்றன. இம்மணங்கள் அன பற்றனவென்க. பெண் வாழ்விற்கெனப் பெற்றோர் அன்பால் பொருள் கொடுக்கலாம். அது வேறு. பொருட்கு முதன்மை யளித்து "இவ்வளவுவேண் டும்" என்று வலியுறுத்தல் பெண்ணின் நுண்மை யுணர்ந்து மணஞ்செய்வதாகாது. ஆகவே அத் தகைய ஒருவனும் விலக்கிற் குரியனென்க.

கூர்த்தமதி யுடைய பெண்மணி ஒருவனது புறத்தோற்றங்கண்டு அவனது நிலையை அளந்து உணரலாம். கண் நா விரல்கள் முதலியன ஒருவ னது உடல் நிலையைச் செவ்வனே அறிவிக்கும். குடியருக்குக் கண் சிவந்திருக்கும்; நோயாளர்க்கு அது மஞ்சளாக விருக்கும். நாவிலும் விரலிலும் மஞ்சள் படர்ந்திருத்தல் நோய்க்கு அறிகுறி யாகும். உடல் நலனுடைய சிலர் நோய்வாய்ப்படும் வேளையில் இத்தோற்றம் பெறுதலுண்டு. இவர் களை மேற்போந்தவர் கூட்டத்தில் சேர்த்தல் கூடாது. என்றும் நோயுடையாரைப் பற்றியே எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும்.

இளமையில் ஒருபோது நமதுநாட்டுச் சிற்ப நூல்களில் இரண்டொன்று ஒருவர் வீட்டில் அடி யேன் பார்க்க நேர்ந்தது. அவைகளில் பாவைகள்

ஒசேதுக்கற்குரிய இயல்கள் சொல்லப்பட்டிருக்கின் றன. அவ்விடத்தில் பெண் ஆண் உடற்பொருத்தம் பேசியிருத்தல் கண்டேன். இப்பொழுது அஃது ஈண்டு நினைவிற்கு வருகிறது. அதுபற்றி இங்கு இரண்டோர் உரை பகர்கிறேன். பெண்ணின் கை கால் விரல்களின் அளவு, ஆணின் கை கால் விரல்களுக்கு ஒத்திருந்தால் உடற்பொருத்த மிருக்கும். சிறிது ஆண் மக்களுக்கு நீண்டிருக்க லாம். அதிகம் நீண்டிருத்தல் கூடாது. பெண் விரல்களைவிட ஆண்விரல்கள் அளவில் குறைந் திருக்குமேல் உடல்பொருத்த மிருத்தல் அரிது. இவ்வாறு அந்நூல்கள் கூறுகின்றன.

நமது நாட்டில் சாதிக்கட்டுப்பாடுகளால் சிலர் ஒருமை மனப்பட்டும் வெளிப்படையாக மணஞ் செய்ய மறுத்துக் காலங்கழிக்கிறார். இது பொருந்திய அன்பு மணமேயாகும். உலகச் சட் டங்களும் விதிகளும் பலவிருக்கின்றன வல் லவோ? அவைகட்கு இணங்கி நடந்தாலன்றிப் பிறக்கும் பிள்ளை நல்வாழ்வு பெறமாட்டாது. பிள்ளை நலன்கருதி அவ்விருவரும் எச்சமுகம் தங் கள் மனமிசைந்த மணத்துக்குச் சட்டப்படி இடந் தருகிறதோ அச்சமுகத்தில் சேர்ந்து மணவினை

முடிப்பது நலம். இங்ஙனஞ் செய்யாது சாதிக் கட்டுக்களுக்கடங்கி ஒதுங்கி வாழ்ந்து பிள்ளைகட்குக் கூத்திப்பிள்ளை என்னும் பழியை ஏன் சுமத்தல் வேண்டும்? பிள்ளைக்குப் பழியுண்டாகா முறையில் தாயுந் தந்தையும் நடந்துகொள்வது அறம்.

ஹிந்து மதத்தில் சாதிச் சமூகக் கட்டுப்பாடுகள் பலபடக் கிடக்கின்றன. அக்கட்டுப்பாடுகள் பல நன்மணங்களைக் கெடுக்கின்றன. மனம் ஒன்றப்பெறும் ஒருத்தியும் ஒருவனும் விருப்பவழி மணமுடித்தலைத் தடுக்கும் கட்டுப்பாடுகள் இயற்கைச் செந்நெறிக்கு அரண் செய்வனவாகா. அவைகளை உடைத்தெறிய வேண்டுவது அறிஞர் கடமை. தற்கால ஹிந்து மதத்திலுள்ள சில மூடக்கட்டுப்பாடுகளைத் தொலைக்கவே சில அறிஞர்கள் பிரம சமாஜம் ஆரிய சமாஜம் முதலியவற்றைக் கண்டார்கள். இது நிற்க.

பெண்மக்கட்கு ஓர் எச்சரிக்கை பகர்ந்து இப்பகுதியை இவ்வளவில் முடிக்கிறேன். எல்லா வழியிலும் ஒத்த ஒருவனாயினும் திருமணத்துக்கு முன்னர் அவனுடன் கூடுதலாகாது. அன்புப்

பெருக்கால் கூடுதல் நிகழ்த்த வல்ல குறிகள் தோன்றினும் பெண்மகள் அவைகளை அறிவால் அடக்க முயலல்வேண்டும். அடக்கலரிதாயிருக்கலாம். அரிதாயினும் சோதனைக்கு இடந்தரலாகாது. பண்டை நாளில் களவுமண காலத்தில் வாய்மை கடவுளாகக் கொள்ளப்பட்டது. பின்னைப் " பொய்யும் வழுவும் " புகலாயின. ஆதலால் கால நிலையுன்னி நடக்குமாறு பெண் தெய்வங்களைக் கேட்டுக்கொள்கிறேன். கூடிக்கலவி நிகழ்த்திய பின்னைத் திருமணங்கூடா தொழியுமேல் என் செய்வது? ஆண் மகன் மணம் நிகழ்த்துவான் என்பதற்கு என்ன உறுதி? இது குறித்துத் தற்காலப் பெண்மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை.

ஒருத்தி ஒருவனுடன் வாழ்தலாவது தனக்குரிய மற்றொரு பாதியைத் தன்னுடன் பொருத்துவதாகும். அவ்வொரு பாதி எத்தகைத்தாயிருத்தல் வேண்டும்? பலவழியிலும் பொருந்தியதாக விருத்தல் வேண்டும். அப்பொருந்திய பாதியைத் தேடிப் பிடித்தல் எளிதன்று. அரிதின் முயன்றேனும் பெண்மகள் தனக்குரிய ஒருவனைப்பெற முயல வேண்டுவது அவளது கடமை. உடல் மனம்

அறிவு என்னும் மூன்றும் பொருந்த நல்கும் இருபாதி அன்பால் பிணிக்கப்பட்டு இருமை கெட்டு ஒருமையின்பங் கூட்டி வாழ்தற்குக் கால் கொள்வது திருமணம். இத்திருமணம் ஓங்க.

“ பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார் ”

—இராமாயணம்.

அ. இன்ப வாழ்வு

"இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு"—**வன்றேண்டர்.**

திருமணத்தின் பின்னர் இருவர் கூட்டுற வால் வாழ்வு அரும்புகிறது. இளமையில் இரு வரும் வாழ்வு வாழ்வு என்று கற்றுங் கேட்டும் வந்ததை இப்பொழுது அவர் நிகழ்ச்சியில் காண் கிறார். இவ்வாழ்வை இருவரும் ஒழுங்குபட நடாத்திவரின், அன்னார் தம்பாலுள்ள பொறாமை அவா வெகுளி தன்னலம் முதலிய குற்றங்கள் படிப்படியாக நீங்கப்பெற்று, அவ்விடத்தில் பொறுமை அடக்கம் அன்பு அருள் தியாகம் முத லிய குணங்களுற்று, அந்தண நிலை யெய்துவர். ஆகவே திருமணங் கூட்டும் வாழ்வை நல்வழியில் நடாத்திப் பேறு பெறவேண்டுவது தலைவி தலை வர் கடமை.

தலைவியுந் தலைவனும் வாழ்வை நெறியல்லா நெறியில் நடாத்தினால் திருமண வாழ்வால் விளை யத்தக்க பயன் விளையாது. அன்னார் தீ நெறியில் வாழ்வு நடாத்தி இல்லறத்தைப் பழித்துப் பேசி அங்கும் இங்கும் அலைவது அறியாமை. ஒழுங்கு

பட்ட இல்லறம் வீடு பேற்றையளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வீடு

வீடு வீடு என்பது தனித்து ஓர் எல்லைக்குள் கட்டுப்பட்டுக் கிடக்கும் ஓரிடமன்று. அதைப் பற்றிய பேச்சே வேண்டுவதில்லை. திருவள்ளுவனார் முப்பால் கூறினாரேயன்றி நாற்பால் கூறினாரில்லை. வீடு இன்பத்திலும் அறத்திலும் நிலவுவது. வீட்டைத் தனியாகப் பிரித்து இடர்ப்படுவோர் படுக.

வீடு என்னுந் தமிழ்ச்சொல் விடு என்னும் வினையினடியாகப் பிறந்த தொழிற்பெயர். கட்டு (பந்தம்) விட்ட இடம் வீடு. அதாவது கட்டினின்றும் விடுதலை யடைவது வீடாகும்.

ஒருத்தியும் ஒருவனுங் கூடி வாழும் இடம் வீடு என்று உலக வழக்கில் சொல்லப்படுகிறது. இங்கு வீடு என்றால் என்னை? அதன் நுட்பம் ஓர்தல் வேண்டும். வீடு என்பது ஓர் எல்லையன்று; கட்டடமன்று; கூரையன்று; அஃதொரு பருப்பொருளன்று. பின்னை என்னை? கட்டு நீங்கி இன்பம் நிகழும் இடம் வீடாகும். ஒருத்தியும் ஒரு

வனும் அன்பால் விழுங்கப்பெற்று நுகரும் இன் பத்தில் கட்டேது? கட்டுள்ள இடத்தில் துன்ப மன்றோ விளையும்? கட்டில்லா இடத்திலேயே இன்பம் விளையும். கட்டினின்றும் விடுதலையடை யும்போது விளைவது இன்பம். அவ்வின்பமே வீடுபேறாகும்.

துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் உற்றவிட மெலாம் வீடேயாகும். இவ்வுலகில் துன்பமின்றி இன்பம் நிலவும் இடம் பெற்ற வீடு என்னும் வழக்கு, முழுத்துன்ப நீக்கமும் முழு இன்ப ஆக்கமுமுற்ற நிலையாய வீடு என்னும் முதன் மையினின்றும் பிறந்ததென்க.

பெண்ணின்பத்தை இன்பமென்று கூறுவது முழு உலகாயதக் கொள்கை என்று சிலர் கருதக் கூடும். ஈண்டு இன்பம் என்றது வெறுங் கலவியை மட்டுங் குறிப்பதன்று. அது கலவியுடன் பிறவும் சேர்ந்த ஒன்றென்க. தோன்றி மறையும் இன் பம் பெரிதுங் கலவியால் விளைவதாகும். அழியா இன்பம் பெண் ஆண் மெய்யுறு புணர்ச்சியால் மட்டும் விளைவதன்று. அது கடந்த ஒரு நிலை யில் அவ்வின்பங் கூடுமென்க. அவ்வின்ப வூற்றைத் திறக்குங் கருவி ஒருத்தி என்பது பெரி

துங் கவனிக்கத்தக்கது. இக்கருத்துப்பற்றியே உய்ய வந்த தேவநாயனார் என்னுந் தவஞானச் செல்வரும்,

“பெற்றசிற் றின்பமே
பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயை யென்றுந்தீபற

என்று அருளிப்போந்தார்.

அழியா இன்பப் பேற்றை யடையவே ஒருத்தி ஒருவனுடன் கூடி வாழ்கிறாள். அவள் வாழுமிடமும் வீடு வீடு என்று வழங்கப்படுகிறது. பெண் தெய்வ முறையும் இடம் வீடல்லாது பின்னை என்னாகும்? பெண்ணில்லா வீடு வீடா? அது காடு, சுடுகாடு; நரகம். வீட்டை இன்ப ஒளி வீசுமாறு செய்யும் தெய்வமணி விளக்கல்லளோ பெண்? அவ்விளக்கில்லா விடத்தில் துன்ப இருளன்றோ சூழ்ந்து கிடக்கும்? அத்தகைப் பெண்ணின் பெருமையை யென்னென்று பேசுவது?

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்”—**திருவள்ளுவர்.**

"மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பாய்
இழைவிளக்கு நின்றிமைப்பின் என்னும்-விழைதக்க
மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம்
காண்டற் கரியதோர் காடு"—**நாலடியார்.**

"* * * பாழொக்கும்
பண்புடையாள் இல்லா மனை"--**நான்மணிக்கடிகை.**

"இல்லாள் **அகத்**திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் **அவ்**வில்
புலிகிடந்த தூறாய் விடும்"—**ஔவையார்.**

எனவரூஉம் ஆன்றோர் உரைகளை நோக்குக.

ஒருத்தியும் ஒருவனும் வாழும் இடம் வீடாக வேண்டுமேல், அவர் வாழ்வு இன்பமாயிருத்தல் வேண்டும். இருவர் மாட்டும் பொய் பொறாமை முதலியன இருத்தலாகாது. இன்பநுகர்ச்சியைத் தகைவன பொய் பொறாமை முதலியன. அவை யிலா உளத்தில் இன்பம் ஊர்ந்துகொண்டேயிருக் கும். அவ்வின்பத்துடன் வாழ்வதே இறைகளோ டியைந்து வாழ்வது. இன்பம் வேறன்று; இறை வேறன்று. இக்கருத்துப்பற்றியே "இறை களோடிசைந்த இன்பம்" என்றார் நமது வன் றொண்டப் பெருந்தகையார். அவ்வின்பத்தோ

டிசைந்த வாழ்வே மக்கட்குரிய வாழ்வாகலான் "இன்பத்தோ டிசைந்த வாழ்வு" என்று அவர் பின்னுங் கூறினர். இத்தகை வாழ்வினர்க்குத் துன்பம் உண்டு கொல்? அவர்க்குத் துன்பமில்லை. "இன்பமே எந்நாளுந் துன்பமில்லை" என்றார் அப்பர் சுவாமிகளும்.

இறைவன் நிறைவையும் அவனோடிசைந்துள்ள இன்பத்தையும் காண வொண்ணாதவாறு தகைந்து நிற்பன பொறாமை முதலிய தடைகள் என்று அடிக்கடி இந்நூற்கண் நுவன்று வருகிறேன். அவைகளைப் போக்கி இறைகளோடியைந்த நிலை கூட்டுவது இல்வாழ்க்கை யென்று இந்நூலில் "இறைவழி"யிலும், "இயற்கையற"த்திலும் விரித்துக் கூறியுள்ளேன்.

காதல்

திருமணத்தால் பெறும் வாழ்க்கையை இறைகளோடிசைந்த இன்ப வாழ்வாக்குதல் எங்ஙனம்? அதற்குரிய முறைகள் என்னென்ன? அவைகளை ஈண்டு விரிக்கிற்பெருகும். விரிவஞ்சி மிகச்சுருக்கமாகச் சில பகர்ந்து மேலே செல்கிறேன்.

முதலாவது இருவர்பாலுங் காதல் நிலவல் வேண்டும். அக்காதல் பெருநிலை கூட்டும். காத

லாவது தலைவி தலைவர்க்குள் நிகழும் கடவுள் அன்பு. தலைவி தலைவனைக் கடவுளாகக் கோட லும், தலைவன் தலைவியைக் கடவுளாகக் கோட லுங் காதலாகும். கடவுளாவது எல்லாவற்றை யுங் கடந்து நிற்பது. தலைவியுந் தலைவனுந் தாம் விரும்பும் பொருள்களுள் தங்களோடு ஒப்பாக வாதல் உயர்வாகவாதல் தாங்களன்றிப் பிறி தொன்று காணாத ஒரு பெரும் நிலை காதல் நிலை. காதலால் விழுங்கப்பெற்ற தலைவிக்குத் தலை வனினுங் கடந்தபொருள் ஒன்று தோன்றாது. அவ்வாறே தலைவனுக்குந் தலைவியினுங் கடந்த பொருள் ஒன்று புலனாகாது. இந்நிலை பெறு வோர்க்குக் கூடா ஒழுக்கம் இயல்பில் நிகழாது. இக்காதல் நிலை யெய்தாதார் காமவாய்ப்பட்டு வாழ்வைக் குலைத்துக்கொள்வர். ஆகவே தலைவி தலைவர் வாழ்வு காதல் வழி இயங்குவதாயிருத் தல் வேண்டும். காமத்தின் வழி அவ்வாழ்வு இயங்குதலாகாது.

காதல் என்னை? காமமென்னை? இரண்டுக்கும் வேற்றுமையுண்டோ? உண்டு. காதல் ஓரிடத் தில் படிந்த வேட்கை. அத்தகை வேட்கை பிறி தொன்றில் நிகழாது. காமம் பல விடங்களில் தோன்றும் விருப்பம்.

காதல் மாறுதது; காமம் மாறுவது. காதல் கடவுள்; காமம் பேய். காதல் இன்பம்; காமம் துன்பம். காதல் அன்பெனுந் தண்மையினின்றும் பிறப்பது; காமம் அவாவெனும் வெம்மையினின்றும் பிறப்பது. காதல் உடலை வளர்க்கும்; காமம் உடலை எரிக்கும். காதல் உடல் மனம் அறிவு என்னும் மூன்றினும் ஊடுருவிப்பாய்ந்து நிலைத்து நிற்கும்; காமம் உடலளவில் எழுந்து வீழ்ந்துபடும். காதல் நாளுக்கு நாள் பெருகுந் தன்மையது; காமம் நாளுக்கு நாள் அருகுந்தன்மையது. காதல் தொல்காப்பியனார், இறையனார், திருவள்ளுவனார், நம்மாழ்வார், மாணிக்கவாசகனார் முதலிய அறிஞர்களால் போற்றப்பட்டிருக்கிறது. விரிவு அவர்கள் அருளிய நூல்களிற்காண்க. அவர்கள் வாய்மொழிகளுள் சில வருமாறு:—

" கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள "—**திருக்குறள்.**

" குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லைக் கூத்தனை யேத்தலர்போல், வருநாள் பிறவற்க வாழியரோ மற்றென் கண்மணிபோன், றொருநாள் பிரியா துயிரிற்பழகி யுடன்வளர்ந்த, வருநா ணழியவழல்சேர் மெழுகொத் தழிகின்றதே "—**திருக்கோவையார்.**

“ஆயுந் தொறுந்தொறு மின்பந் தருங்கல்வி யாங் கறிவு, மாயுந் தொறுந்தொறு மின்பந் தரும்வள்ளல் வார்கழல்கள், தேயுந் தொறுந்தொறு மின்பந் தருஞ் சந்து தேங்குழனில், தோயுந் தொறுந்தொறு நேராத வின்பஞ் சுரந்திடுமே”—**திருத்தணிகைப்புராணம்.**

“பெண்ண லத்தினைப் பெறாதவர் மகவினைப் பெறா தார், பெண்ண லத்தினைப் பெற்றவரே மகப் பெற்றார், பெணண லத்தினான் மகவுபெற் றிருமையும் பெறு வார், பெண்ண லத்தினா லன்றியோர் பெறும்பொரு ளுண்டோ”—**பிரமோத்தரகாண்டம்.**

காமம் அறிஞர்களால் தூற்றப்பட்டிருக்கிறது. அத்தூற்றல்களுள் சில வருமாறு :—

“மனைபுகு வார்கண் மனைவியை நாடிற்
சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங்
கனவது போலக் கசிந்தெழு மன்பை
நனவது போலவு நாடவொண் ணாதே”

—**திருமந்திரம்.**

“பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்”—**திருக்குறள்.**

“ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்”—**நாலடியார்.**

" சிறையு முண்டோ செழுப்புனல் மிக்குழீஇ
நிறையு முண்டோ காமங் காழ்கொளின் "

—மணிமேகலை.

" கொலையஞ்சார் பொய்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார்—பழியொடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார் "—நீதிநெறி விளக்கம்.

" உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற்
கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினாற்
கள்ளினுங் கொடியது காமத் தீயதே "

—கந்தபுராணம்.

"காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றான்"

—திருவிளையாடற்புராணம்.

சில விடங்களில் காமம் என்னுஞ் சொல் காதல் பொருள்பட ஆன்றோர்களால் ஆளப்பட்டிருக்கிறது. சொல்லைக்கண்டு எவரும் ஏமாறுதல் கூடாது. பொருளையே நோக்கல் வேண்டும். காமம் இன்பம் என்னும் பொருள்பற்றி வரும் போது அதைக் காதற்கும் ஆளுதல் உண்டு. திரு

வள்ளுவனார் காமக்கேட்டைப் "பெண் வழிச் சேற"லிலும், காதற்றிறத்தைக் "காமத்துப் பா"லிலும் ஓதியிருத்தல் காண்க.

'காதலென்ன காமமென்ன எல்லாங் கலவி தானே' என்று சொல்வோருமுளர். அன்னார் காதற் றன்மை யுணராதாரென்க. திருமணம் வெறும் பெண் ஆண் சேர்க்கையை மட்டுங் குறிக் கொண்டு நிற்பதன்று. அதனுடன் வேறு பல வாழ்வுத் துறைகளையும் அது குறிக்கொண்டு நிற் கிறது. அவைகளெல்லாஞ் சேர்ந்த ஒன்று காதல் வாழ்வு.

கலவிக்கென்றே பெண் படைக்கப்பட்டாள் என்று கருதுவது மடமை. தாய்மை என் னும் பெருவாழ்வு பெற்று எல்லா உயிர்களிடத் தும் அத்தாயன்பு செலுத்திக் கடவுள் நிலை பெறுதற்குப் பெண் பிறந்தாள். உயிர்நிலை உறுப் புக்கள் பிள்ளைப் பேற்றிற்கென அமைக்கப்பட் டன என்று கோடல்வேண்டுமே யன்றி வெறுங் கலவிக்கெனக் கோடல் படைப்பு நோக்கையுணர் வதாகாது. அப்பிள்ளைப் பேற்றிற்குக் கலவி ஒரு துணைக் கருவி போன்றது. அக்கலவியிலேயே பெண்வாழ்வு அடங்குகிறது என்று அக்குறியுடன்

பெண்ணை நோக்குவதும், அவளொடு வாழ்வதும் நரகக்குழியில் வீழ்வதாகும். அங்ஙனந் தன்னை நினைந்து கலவியிலேயே காலங்கழிக்கும் பெண்ணுந் தனது பிறவிப்பேற்றை யிழந்து துன்புறுவாள். இவ்வாண்பெண் கூட்டமே காமக்கூட்டமென்க. பெண் பிறவி ஒரு பெரும் விழுமிய நோக்குடையது. அந்நோக்கு காதல் வாழ்வால் நிறைவேறும்.

காதலில் கலவி இல்லையோ வெனில் உண்டு என்று சொல்லவேண்டுவதில்லை. காதல் வாழ்வில் கலவி ஒரு சிறுகூறு. காமவாழ்விலோ கலவியே யெல்லாம். அதற்குமேல் அது செல்வதில்லை. காதலிலோ, கலவி, பிள்ளைப்பேறு, கொலை களவு கள் காமம் பொய் முதலிய இழிவுகளினின்றும் விடுதலை யடைதல், யான் எனது என்னுஞ் செருக்கறல், தியாகம், அன்புடைமை, விருந்தோம்பல், எவ்வுயிரையுந் தன்னைப்போல் பார்த்தல், பயன் கருதாத்தொண்டு முதலிய அறத்துறைகள் பல அடங்கியிருக்கின்றன.

காதற்றலைவன், தலைவி நலன்நாடிவாழ்வன். அங்ஙனே காதற்றலைவியும், தலைவன் நலன் நாடி வாழ்வள். ஒருவர் நோயுறின் மற்றவரும் நோயுற்றுர்

போல வருந்துவர். இருவரும் ஓருயிர் ஈருடலென வாழ்வர். அவரது அன்பு, வாழ்வுடன் கலந்து நீண்டு வளர்ந்துகொண்டே போகும். காமத்தலைவனோ தன்னலனை நாடுவன். காமத்தலைவியும் தன்னலனை நாடி நிற்பள். உடல் நலனோ பொருள் வளனோ சுருங்கின் இவர்க்குள் பிரிவு நேரும். இத்தகை அன்பில்லாக் காமவாழ்விலா மக்கள் வீழ்வது? சிறுமை! சிறுமை!

உண்மைக்காதலி தன் காதலன் உடல் நலனோ பிறவோ குன்றினும் அவள் அவனை விட்டுப் பிரியாது, ஒன்றிய அன்பால் தொண்டு செய்வாள். தலைவன் உயிர் நீப்பினும் அவனை அவள் மறவாள். அவள் உள்ளத்துள்ளே அவனையன்றி வேறென்ன நிலவும்? உண்மைக் காதலன் இயல்பும் இத்தன்மைத்தே. காதல் என்பது வெறும் விளையாட்டன்று. காதல் தன்னலன் நாடாது பிறர் நலன் நாடி யுழைக்க எத்தகைத் தியாகத்துக்கும் உட்படத் துணிவு ஊட்டும். உண்மைக் காதலுக்கு அறிகுறி இதுவேயாகும். இக்காதல்வழி வளரும் இல்லறம் பின்னை எந்நிலை கூட்டும் என்று இயம்பவும் வேண்டுமோ? ஆதலால் மக்கள் காதலெனும் தண்மைப் பொழிலிடை வாழ்வு நடாத்த

முயலவேண்டுமா அல்லது காமமெனும் எரிவாய் வெம்மையிடை வீழ முயலவேண்டுமா என்பது உன்னற்பாற்று.

கலவி

காதல் வாழ்வு கூட்டும் தாய்மை முதலிய பேறு கட்குப் பிள்ளைப்பேறு அடிப்படை. அப்பிள்ளைப் பேற்றிற்குக் கலவி வேண்டற்பாலது. அக்கலவி யைப்பற்றிச் சில உரை பகரவேண்டுவதும் எனது கடன்.

உலகில் கல்வித் துறைகள் பல உண்டு. அவை களுள் ஒன்று கலவித் துறையும். இக்கல்வி இயற் கையில் உயிர்கள் மாட்டு நிகழ்வது. இதற்கெனத் தனிக்கல்லூரி பரீட்சை முதலியன வேண்டுவ தில்லை. ஆதலால் இது குறித்து விரித்துரைத்த லும் அநாவசியம்.

பல துறைகட்கு நூல்களிருப்பது போல இத் துறைக்கும் பல நூல்களுண்டு. அவைகளுள் சில கயவர்களால் எழுதப்பட்டன. அவை களைக் கையாலுந் தொடுதல் கூடாது. நன்மக்க ளால் எழுதப்பெற்ற நூல்கள் வாழ்விற்குத் துணை செய்யும். இளமையில் நேரிய முறையில்

வாழ்வைச் செலுத்தியவர்க்கு என்றாலும் வேண்டுவதில்லை. அன்னோரை இயற்கைத் தெய்வம் வழியே நடாத்திக்கொண்டு போகும்.

கலவி காமச்சூட்டால் நிகழலாகாது. காமச்சூட்டுக்கெளியராகிக் கலவி புரியாப்பயிற்சி ஆண்மக்கட்குத் தேவை. அச்சூட்டிற்கு ஆண்மக்கள் எளியராதல் போலப் பெண்மக்கள் எளியராதலில்லை. அத்தன்மை அவர்க்கு இயல்பில் அமைந்திருக்கிறது. நிறை என்பது பெரிதும் பெண்மக்கள் உறுதியில் உலகில் நிலவுகிறது என்று சொல்வது மிகையாகாது. அப்பெட்புடைய மகள் நாயகனையுங் காமத்துக்கு இரையாகாதவாறு காத்தல் வேண்டும்.

நாயகன் விரும்பும்போதெல்லாம் நாயகி இடந்தரலாகாது. இடந்தந்துவரின் ஆண்மகன் உடலுரங் குன்றி, அகாலத்தில் ஆண்தன்மையிழந்து, பலதிறநோய் வாய்ப்படுவன். ஒருவனை இவ்வாறு கெடுக்கவா ஒருத்தி மணஞ்செய்வது?

ஆடவன் மனைவியை அடிக்கடி கலவிக்கழைத்தல் பொருந்தவறு. இப்பயிற்சியால் ஆண்மகனே பெண் தெய்வத்தைப் பேயாக்குகிறான். ஒருவரையொருவர் வலியுறுத்தல்வழி நிகழுங் கலவி

ஒருதலைக் காமத்தின் பாற்படும். அதனால் உடல் நலன் குன்றும்.

நாயகன் விரும்பும்போதெல்லாம் நாயகி உடல் நலங்கருதி மறுத்துக்கொண்டே யிருத்தல் அறமாமோ எனில் அஃதும் அறமாகாது. இடையீடில்லா மறுப்பு வெறுப்பின் வழி நிகழ்வது. காதல் வாழ்வில் கட்டுப்பட்ட நாயகி இடையீடின்றி மறுத்துவாராள். இருவரும் ஓரளவில் கலவியில் கருத்துச் செலுத்தல் வேண்டும்.

கல்வி அறிவு ஒழுக்கம், நல்லாரிணக்கம், கடவுளிடத்தன்பு, உயிர்களிடத்தன்பு, தன்னிடத்தன்பு, பொருந்திய உணவு, பொருந்திய உடை, முதலியன காம எரி எழாதவாறு மக்களைக் காத்து வரும். பிள்ளைப் பேற்றிற்குக் கலவி என்னும் எண்ணம் இருவர் பாலும் பசுமரத்தாணிபோல் பதிந்து கிடப்பின், அவ்வெண்ணம் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தும்.

ஆண்மகனுக்கு உடல் கட்டு, நலன், வளன், உரன், அழகு முதலியவற்றை நல்குவது அவனது சுக்கிலம். அதை நினைத்தபோதெல்லாம் போக்கிக் கொண்டிருந்தால் உடல் கட்டு முதலியன குலையும். பின்னை நரம்புத்தளர்ச்சி யுண்டாகும்; நரம்

புத்ரஎளர்ச்சி யுற்றவனுல் காம உணர்ச்சியைச் சிறிதும் அடக்கமுடியாது. போதிய வலிமை யின்மையால் அவ்வெண்ணத்தை அவனுல் மாற்ற வும் முடியாது. பெண் நினைவுறினும், அவள் ஒலி பேச்சு முதலிய கேட்பினும், உடை முத லியவற்றைக் காணினும் காமச்சுடர் அவனை எரிக்கும். எரியால் தாக்குறும் அவனுல் ஆர்ந்த கலவியும் புரிய இயலாது. இயலாமையால் மன எரிவும் அவனுக்குத் தணிவதில்லை. அவ்வளவோடு சனி அத்தீயனை விடுமோ?

அச்சனி அவனது மூளையைக்கலக்கி நினைவழிக் கும்; கண்ணெளிபோக்கும்; காதடைக்கும்; பொறி புலன்களை யொடுக்கிப் பசிகுலைக்கும். இவைகளால் மகனுக்கு மலம் சிக்கும்; தலையிடிக்கும்; இருமல் வருத்தும்; பித்தேறும். அவன் கண்டதை யுளறுவன். உலகம் அவனுக்கு வெறுப்பாகத் தோன்றும்; அவனுக்கு அழகிடை அன்பு தோன்ருது; இசையில் இன்பந்தோன்ருது. அப் பாவி நிலையை இன்னுமா வருணிக்கவேண்டும்? அவன் வாழ்விழந்த பாவியாகிருன். இத்துணைக் கேட்டிற்குக் காரணமென்னை? இளமையில் இடையீடின்றித் தாதுவைச் செலவழித்ததே

யாகும். காமச்சூட்டுக் கிரையாகும் பெண்மகள் நிலையும் இவ்வாறே முடியும்.

தாதுவை வீணில் நினைந்தபோதெல்லாம் செல வழிப்பதால் விளையுந்தொல்லைகள் பலப்பல. எண்பது துளி இரத்தம் ஒருதுளி தாதுவாகிறது. இவ்வரிய தாதுவைச் சேமிக்கும் அளவினதாக உடல்வளன் அமையும். அடியோடு தாதுவைக் கட்டலுங்கூடாது. அதுபற்றி முன்னர்க் கூறி யிருக்கிறேன். அதனாலுஞ்சில கேடுகளுண்டு. ஓரளவினதாக அதுவும் பிள்ளைப்பேறு கருதி அன்பிடை அதைச் செலவு செயல் அறி வுடைமை.

திங்களுக்கிரண்டு முறை மனைவியோடு சேரு மாறு நமது நாட்டு நூல்கள் கூறுகின்றன. அதா வது மாதப் பூப்புக்கு முன்னொரு நாளும் சூத கம் நின்ற பின்னொரு நாளும் என்று சிலர் கூறுப. மாதப்பூப்பில் சூதக வடிவு நான்கு ஐந்து நாளில் நிற்கும். சிலருக்கு ஆறு ஏழு எட்டு நாளாகும். நல்லுடல் பெறாதார்க்கு இன்னுஞ் சின்னாள் நீடித்தலுமுண்டு. உடல்நிலைக்கேற்ற வண்ணம் சூதக ஒழுக்கு நிற்பது வழக்கம். அது நின்று ஒருவாரம்வரை கருத்தரிக்கும் நாட்களாகும்.

சில உடலுக்கு இன்னுஞ் சின்னாள் கூடுதலு முண்டு. பொதுவாக ஒருவாரங் குறிப்பிடலாம். அந்நாட்களில் இரண்டொரு நாள் கலவி புரிந்து மற்ற நாட்களில் அஃதொழித்து வாழ்வது அறிவுடைமை. இவ்வழக்குப்பற்றியே "மாதத்துக்கிரண்டுமுறை மங்கையரைப் புணர்தல்" என்னும் அநுபவமொழியு மெழுந்ததென்க.

திங்களுக் கொருமுறை சாலும் என்று பல அறிஞர் கூறியுள்ளார். மூன்று திங்களுக் கொருமுறை கூடல் மிகப் பொருத்தமென்பது சில கூர்த்த மதியினர் கொள்கை. மூன்றுமாதகாலந் தாதுகட்டி அன்பு வழியில் புரியுங் கலவியில் செம்மை இன்பம் நிகழும். அவ்வின்பம் கலவிக்குப் பின்னும் பன்னெடு நாள் மன அமிழ்தாய் நிலவிக்கொண்டிருக்கும். பிள்ளை பிறப்பின் மிக அழகியதாயிருக்கும்.

வாரத்துக்கிருமுறை மும்முறையும், சூதக மடங்கிய நாள்தொட்டு மறு சூதகம் உறும்வரை நாடோறும் மனைவியுடன் கலவி புரிவது அறியாமை. அக்கலவியில் இன்பமில்லை. ஆனால் பின்னைத் துன்பமிகும். கலவியில் அளவாயிருக்கப் பயிலும் பயிற்சியே சிறந்த பயிற்சி.

இடையிடையே காம எரி எழாதவாறு எங்ஙனங் காப்பது? மனைவி முகம் பாராமலிருப்பதா? மனைவியுடன் வாழல்வேண்டும்; ஆடல்வேண்டும்; பாடல்வேண்டும். ஆனால் சேர்தல் கூடாது. அவ்வாறு மனத்தைப் பயிற்சி செய்தல் வேண்டும். எப்படி, அதிலும் வெம்மை நாட்டில் எப்படி என்று சிலர் கருதலாம். அது குறித்து எவரும் மலைவுறல் வேண்டுவதில்லை. அம்முறையில் மேல் நாட்டறிஞர் செவ்விதிற் பயின்றிருக்கிறார். நமது நாட்டவரும் அவ்வழியில் பயில்வது நலம். அப்பயிற்சியில் நமது நாடு ஒருபோது தலை சிறந்து விளங்கியதுண்டு.

நாயகன் நாயகியுடன் பலதிற ஆடல்கள் ஆடலாம்; கைகால் படவும் ஆடலாம்; உடலுறவும விளையாடலாம்; எல்லாஞ் செய்யலாம். ஆனால் மனதில் மட்டுங் காமக்கிளர்ச்சிக்கு இடந்தரலாகாது. கிளர்ச்சி தோன்றினும் அதற்கு எளியராகாது ஒருமுறை இருமுறை மன உறுதியால் அடக்கியாளல் வேண்டும். பின்னர் நாளடைவில் அக்கிளர்ச்சி எவரையும் தன் வயப்படுத்த இயலாதொழியும்.

மனைவியைப் பாராமலும், தொடாமலும், பேசாமலும், அவளுடன் ஆடாமலும் பாடாமலு

யிருப்பின், மனதில் காமக்கனல் மூண்டு கொண்டே யிருக்கும். ஆதலால் மனைவியுடன் ஆடியும் பாடியும் வரின், மனமயலொழியும். மன வடக்கப் பயிற்சியால் விரும்பும்போது கலவிபுரி யும் பயிற்சி கைகூடும். இப்பயிற்சி யுடையாரே நல்வாழ்வு பெற்றவர்.

நாயகி விரும்பாத காலத்து நாயகன் வலிந்து கூடுவது கொடும் பாவம்; கொலைப்பாவம். அஃது இன்பக் கூடலுமாகாது. அக்கூடல் வலிந்துபுகும் ஆடவனுக்கே கேடு விளைக்கும். அது முஷ்டிமைதுனத்தை யொத்தது என்று "இயற்கை யற"த்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அஃறிணையுலகில் வலியுறுத்தல் கிடையாது. அவ் வுலகை நோக்கியேனும் உயர்திணை யுலகம் நல் லறிவு பெறுவதாக.

பறவைகளிற் சில தமது சிறகை விரித்துக்காட் டுவதால், காதல் குறிப்புணர்த்தும். சில பூச்சி கள் கூத்தாட்டால் தங்கள் நிலையுணர்த்தும், சில இனங்கள் சுழற்சியால் தங்கள் வேட்கையைப் புலப்படுத்தும். இவ்வழியில் இவைகள் தங்கள் பெண்ணினங்களை அன்பு வயப்படுத்துகின்றன. வலிந்து புணர்தல் அவ்வுயிர்களிடத்தில் காண்டல்

அரிது. வலிந்து கூடலும் இயற்கை நிகழ்ச்சி யாகாது. வலிந்து கூடும் மனிதர்கள் மாக்களி னும் இழிந்தவர்களென்க.

நாயகன் தனது காதல் அன்பெழுச்சியை இனிய முறையால் புலப்படுத்தப் புலப்படுத்த அது காணும் நாயகியும் அக்காதல் அன்பால் விழுங்கப் படுவாள். அவள் செயல்குன்றி யிருப்பதுபோல் கிடப்பாள். அதனைக் கண்ணால் உதட்டால் பிற மெய்ப்பாட்டால் நன்கு உணரக்கூடும். அந்நிலை யில் கலவி புரிதல் அறம். அதுவே மனங்கலந்த கலவியாகும். நாயகியுள்ளத்தில் விருப்பமில்லா வேளையில் கூடுதற்கும், விருப்பமுள்ள வேளையில் கூடுதற்கும் உள்ள வேற்றுமை காதல் நுட்பம் உணர்ந்த அறிஞர்க்குப் புலனாகும்.

தலைவி விரும்பா வேளையில் கூடும் தலைவனுக் குப் பல திறக்கேடுகளுண்டு. இவனது சுக்கிலம் அவள் பால் செல்கிறது. அதற்கீடாக அவளிட மிருந்து இவன் என்ன பெறுகிறான்? ஒன்று மில்லை. தலைவியும் விரும்பிய புணர்ச்சியாயின், அவள் உள்ளத்தூறும் அன்பால் கருக்குழிக்க ணுள்ள சினைகள் கிளர்ந்தெழும். அவ்வெழுச்சி யினின்றும் பிறக்கும் ஒருவித சத்து இவனுள்

நழையும். அதனால் இவன் உடல்நலன் கெடுவதில்லை. நாயகிவிரும்பாத வேளையில் புணர்வது மரத்துடன் புணர்வதை யொக்கும். அது முஷ்டிமைதுனத்தை யொத்தது என்று அறிஞர் கருதுகிறார். இதுபற்றிப் பின்னுங் கூறுவன். ஆதலால் எக்காரணம்பற்றியும் விரும்பாத காலத்து வலிந்து கூடுவது மூர்க்கச் செயலாகும். அதனால் இன்ப வாழ்வு கூடவே கூடாது.

இருவர்க்கும் படுக்கை அறை வேறாக இருத்தல் வேண்டும். அறை வேறே இல்லாதொழியினும் படுக்கையாதல் வேறே தனித்தனியாக இருப்பது நலம். ஒரே படுக்கையில் இருவர் உறங்குவது வெறுக்கத்தக்கது. அதில் சுகாதாரக் குறைவுமுண்டு.

வாழ்வில் கலவி ஒரு கூறாகலான், அதை வாணாள் முழுவதும் வைத்துக்கொள்ளுதல் தவறு. சில விடங்களில் மனைவியின் பூப்பு நிற்கு மட்டுங் கலவியை விடுக்கத் தலைவர்கட்கு மன மெழுவதில்லை. சிலர் மனைவியின் பூப்பு நின்ற பின்னர் வேறு ஒருத்தியை நச்சுகிறார். மருந்து தின்றேனுங் கிளர்ச்சி உண்டுபண்ணிக் கூடலில் சிலர் மூழ்குகிறார். இவர் அறியாமையிருந்தவா

றென்னே! என்னே! இவர் வாழ்வின் நோக்க முணராத கயமை விலங்கினத்தா ரென்க.

மனைவியின் பூப்பு நிற்பதற்கு முன்னரே அவளோடு மெய்யுறு புணர்தலை நிறுத்தி, அவள் உள்ளத்தில் வீற்றிருக்கும் அன்புக் கடவுளைக் காண முயலல்வேண்டும். மனைவி வெறுங் கலவிக்கு மட்டும் உரிய ஒருத்தியல்லள். அவள் தாயுமாவள்; உடன் பிறந்தவளுமாவள்; மகளுமாவள்; கடவுளுமாவள்; எல்லாம் அவள். அவளிடத்து எல்லா இயல்புகளு முள்ளன. இவையெலாஞ் சேர்ந்த ஒருத்தியே மனையில் வாழத்தக்கவளென்க.

“ வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவுங் கடந்த அரனுக்குத்
தாயும் மகளுநற் றாரமு மாமே ”

“ தாரமு மாகுவள் தத்துவ மாய்நிற்பள்
காரண காரிய மாகுங் கலப்பினள்
பூரண விந்து பொதிந்த புராதனி
பாரளை வாந்திசை பத்துடை யாளே ”—திருமூலர்.

“ மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்

தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்
　　தமயனெம் மையன் றாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
　　பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே''
—திருவாசகம்.

"அன்னை தயையும் அடியாள் பணியும்மலர்ப் [மெழில்
பொன்னின் அழகும் புவிப்பொறையும்-துன்னு
வேசி துயிலும் விறல்மந் திரிமதியும்
பேசில் இவை யுடையாள் பெண்''—நீதிவெண்பா.

"தாயோ டறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்-தாயவுடன்
வந்தோன் மரிக்கில் வலிபோம் மனையெனிலோ
அந்தோ இவையெலாம் போம்''—நீதிசாரம்.

எனவரூஉம் ஆன்றோர் மொழிகளின் உள்ளக் கிடக்கை யோர்க.

கடவுள் இயல் குறித்துச் சான்றோர் மொழிகளை உலகியலுக்கு எடுத்தாளல் பொருத்தமன்று என்று சிலர் கருதக்கூடும். உலகியல் நன்கு நடைபெறல் வேண்டி, அதற்கோர் இலக்கியமாகக் கடவுள்நிலை விளங்குகிறது. கடவுளியலை உலகவியலினின்றும் பிரித்துப் பேசுதல் கூடாது. கடவுளின்றி உலகமில்லை; உலகமின்றிக் கடவுளில்லை. உலகியலுக்குக் கடவுள்நிலை ஒரு வழி

காட்டு போன்றது. இறைவனுக்கு இறைவி ஒருபோது தாயாகவும், ஒருபோது உடன் பிறந்தவளாகவும், ஒருபோது மகளாகவும், ஒருபோது மனைவியாகவு மிருக்கிறாள் என்பது எதைக் காட்டுகிறது? உலகியலிலும் ஒருவன் ஒருத்தியை ஒருபோது தாயாகவும், ஒருபோது உடன்பிறந்தவளாகவும், ஒருபோது மகளாகவும், ஒருபோது மனைவியாகவுங் கொள்ளவேண்டு மென்பதை அறிவுறுத்துகிறது. இல்லற வாழ்வு இறையியலை நன்கு விளக்குவதென்க. இது நிற்க.

உலக வளர்ச்சி நாடிக்கடவுள் ஆணைவழி நின்று பிள்ளைப் பேற்றின் பொருட்டுச் சின்னாள் கலவித் தொழிலில் ஈடுபட்டுப் பின்னை அதை நிறுத்துவது வாழ்வின் நோக்கை நிறைவேற்றுவதாகும். "முப்பதாம் ஆண்டளவில் மூன்று அற்று" என்றார் ஔவையார். காலநிலை நோக்கி இப்பொழுது முப்பத்தைந்தாகப் பெருக்கிக் கொள்ளலாம். நமது நாட்டில் முப்பத்தைந்து வயதுக்குமேல் பெண்ணொடு கலத்தல் பொருந்தாததாகும். குளிர் நாட்டில் வதிவோர் இன்னுஞ் சிலவாண்டு கலவியில் போக்கலாம். அதற்கேற்ப நமது நாட்டுப் பெண்மகளும் முப்பதுக்குள் கலவியினின்றும்

விலக முயலல்வேண்டும். பூப்புள்ளபோதே அப் பயிற்சியில் தலைப்படல் வாழ்வை அறிவால் ஒழுங்கு படுத்துவதாகும். பூப்பு நிற்கும் வரை மெய்யுறு புணர்ச்சி நிகழ்த்தல் உடலுக்கு நலன் தேடுவதாகாது.

இருபது வயது முதல் முப்பத்தைந்துவரை அதாவது பதினைந்தாண்டு மெய்யுறு புணர்ச்சி நிகழ்த்தியது சாலாதா? அதற்குள் பிள்ளைப் பேறு முண்டாகிறது. பிள்ளைப் பேற்றிற்குப் பின்னை மேலும் மேலும் மெய்யுறு புணர்ச்சி எற்றுக்கு? பிள்ளைப் பேற்றின் பின்னை நாயகன் தந்தையாகிறான். நாயகி தாயாகிறாள். இப் பேற்றினின்றும் இறைமைப்பேறு பெற இருவரும் முயலல்வேண்டும். இவ்வுண்மையை,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே"

எனவரூஉம் தொல்காப்பியச் சூத்திரத்தால் உணர்க.

இது துறவொழுக்கங் கூறுஞ் சூத்திரமன்றோ என்று சிலர் நினைக்கலாம். தீய குணங்களினின்

றும் விடுதலை யடைவதே துறவொழுக்கமென் றும், பெண்ணை வெறுத்தல் துறவொழுக்கமன் றென்றும் இந்நூற்கண் பலவிடங்களில் சொல் லப்பட் டிருக்கின்றன. பிற்காலத்தில் நாட்டைக் கெடுக்க நுழைந்த போலித்துறவறத்தை இச் சூத்திரம் அறிவுறுத்துகிறதில்லை. பிள்ளைப் பேற்றின் பின்னை மெய்யுறு புணர்ச்சி நீத்து, உள் நோக்கால் இறைமை நிலை உணர்ந்து, உயிர்களிடத் தன்பு செலுத்தும் ஒருநிலை "சிறந்தது பயிற்றல்" என்பது.

இவ்வாறு மெய்யுறலை நீக்கும் நாயகன், நாயகி யைத் தன்னுடன் பிறந்த ஒருத்தியாகவும் தாயாக வும், நாயகி நாயகனைத் தன்னுடன் பிறந்த ஒருவனாகவுந் தந்தையாகவுங் கொள்ளப் பயி லல்வேண்டும். இருவரும் மெய்யுறு புணர்ச்சி நீத்த பின்னர் உடல் நிலை கடந்த உள்நிலையில் கருத்தைச் செலுத்தல் வேண்டும். உடம்பி னுள்ளே கோயில் கொண்டுள்ள அன்புக் கடவு ளோடு உறவு கொள்ளப் பயிலல்வேண்டும். இப்பயிற்சிக்குக் கால்கொள்வதே இளமை மெய் யுறு புணர்ச்சியின் நோக்கமாகும்.

மெய்யுறு புணர்ச்சி, மெய்யிலுள்ள அன்புக் கடவுள் காட்சிக்கு ஒருபடி போன்றது. அப்படியும்

பிள்ளைப்பேறெனும் உலக வளர்ச்சிக்குத் துணை நிற்பதாகிறது. அந்தப்படி, கடந்தால் தெய்வக் காட்சி காணலாம். பெண்ணின் பெருமை விளங்கு மிடம் அங்கே என்று இறுமாப்புடன் கூறுகிறேன். பொறாமை முதலிய பேய்கட்கு அங்கேயிடமில்லை என்க. அங்கே எல்லாம் அன்பு அன்பாகப் பொலி யும். இளமை தொட்டு வாழ்வை அவ்வப் போதைக்குரிய நேரிய வழியில் நடாத்துவோர் இந்நிலை எய்துவர்.

இந்நிலை எய்துவோர்க்குப் பெண்மக்கள் தெய் வங்களாகவே தோன்றுவார்கள். பெண்ணைத் தெய்வமாகக் காணும் ஒருவன் பிறவிக்கடல் கடந் தவனாவன். வாழ்வில் இத்துணைபுரியப்போந்த பெண்ணின் பெருமையை என்னென்று கூறு வேன்? இக்கருத்துப்பற்றியே பெண் தெய் வத்தை வாழ்க்கைத் துணை என்று நந்தமிழ்ப் பெரியார் கூறிப்போந்தார். உடல் வாழ்க்கைக்கும் உயிர் வாழ்க்கைக்குந் துணை புரிவோள் பெண் தெய்வம் என்பது உன்னற்பாலது.

பெண்ணின் பாலுள்ள தெய்வ இன்பத்தை நுகர்ந்த பெரியோர்கள் பலருளர். அவருள் தம்பி ரான் தோழர் என்னும் நம்பியாரூரை ஈண்டுச்

சிறப்பாகக் குறிக்கிறேன். அப்பெரியார் தமக்கும் தம் மனைவிமார்க்கும் ஏற்பட்டுள்ள பற்று கடவுள் பற்று என்று அருளுகிறார்.

" பண்மயத்த மொழிப் பரவை
சங்கி லிக்கும் எனக்கும்
பற்றாய பெரு மானே
மற்றாரை யுடையேன் "

என்று வன்றொண்டர் ஆண்டவனை வழுத்தியிருத்தல் காண்க.

தெய்வம் கண்ணுக்குப் புலனாகாதது. அஃது இயற்கையை வடிவாகக்கொண்டு காட்சியளிக்கிறது. இயற்கை வழியே இறைவனைக் காண்டல் வேண்டும். பெண்ணொடு மெய்புறல்நீத்து, உள்ளுறல் கொண்டு, இன்ப அன்பை நிகழ்ச்சியளவில் பருகிவரும்போது, அவ்வன்பெனும் ஆண்டவன் வடிவாகிய இயற்கை நுட்பங்களெல்லாம் இனிது விளங்கும். பெண் ஓர் இயற்கை வனம்போலக் காணப்படுவள். நீலவானமும், வெண் திங்களும், மாங்குயிலும், நீலமஞ்ஞையும், அழகிய மலரும், விரைக்கொடியும், அருவி கொழிக்கும் மணிகளும் பிறவும் ஒருங்கு திரண்டு பெண்ணெனப் பொலிதல் காணலாம். அவ்வழகொழுகும் இயற்கைப்

பெண், அவளது உள்ளேயுள்ள இன்ப அன்புக்கடலின் பருமையாவள். ஆகவே, பெண் இயற்கை வடிவான தெய்வமாகிறாள். இத்தெய்வத் தன்மையை ஆண்மகன் நினைந்து நினைந்து அப்பெண் தன்மை பெறுவானாக.

பெண் தன்மையாவது அருட்டன்மை; அதாவது எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் நிலை. இதுவே வாழ்வின் நோக்கம்.

இப்பெரு நிலைக்கு அடிப்படையாயுள்ள கலவியில் ஓரளவாகக் கருத்திருத்தல் வேண்டுவது தலைவி தலைவர் கடன்.

கலவியும் ஒரு கல்வி என்று மேலே சொல்லப்பட்டது. அக்கலவியை வழி துறையின்றிப் புரிவதாலும் உடலுக்குப் பலதிறக் கேடுகள் விளைதலுண்டு. வலிய ஆண்மக்களிடம் மெலிய பெண்மக்கள் மிக எச்சரிக்கையா யிருத்தல் வேண்டும். வழிதுறையில்லா விளையாட்டால் பெண்மக்களின் கருவுறுப்புக்களுக்கு ஊறு நிகழும்.

கால வேளை நாழி கவனியாது கலவி புரிவதால் பலச்சிக்கல் முதலிய பிணிகள் தோன்றுவதுண்டு. உணவு கொண்ட சில நேரத்துக்கெல்லாம் ஒருவரோடொருவர் கூடிக்களிப்பதால் அஜீரணம் முத

றிய நோய்கள் தோன்றிப் பின்னைப் பெருநோய்களை ஈனும். புணர்ச்சி காலத்தில் வயிறு நிரம்ப ஜீரணமாகாத வெவ்வுணவு நின்று கொண்டிருத்தலுங் கூடாது. இன்னும் விரிக்கிற் பெருகும்.

பொருந்தா நாயகன்

தனக்கினிய கொழுநனைத் தெரிந்தெடுப்பதில் பெண்மகள் பெருங் கவலை செலுத்தல் வேண்டுமென்று "திருமணம்" என்னுந் தலைப்பின் கீழ் வலியுறுத்தி யிருக்கிறேன். பெண்மகளின் கவலையினத்தாலோ வேறு எக்காரணத்தாலோ பொருந்தா நாயகன் வாய்க்கப் பெறுவனேல் என் செய்வது? பெண்மகள் அவனுடன் வாழ்வதா அல்லது வாழாது அவனை விடுத்துப் பிரிவதா? பிரிதல் வேண்டுமென்று சொல்ல இந்தியாவில் பிறந்த எனக்கு நாவெழவில்லை. எங்ஙனமாவது முயன்று அப்பொருந்தாத் தன்மையைப் போக்கவே பெண்மகள் முயலல்வேண்டும்.

பெண்மை என்பது தாய்மை என்றும், தாய்மை என்பது தொண்டு என்றும் மேலே சொல்லப்பட்டன. அத்தொண்டைப் பொருந்தா நாயகனை ஒழுங்கு படுத்துவதில் பெண்கள் நிகழ்த்தலா

மன்றோ? தொண்டில் விருப்புடைய பெண்ணிற்கு அஃதொரு வாய்ப்புமாகும். தனக்கு வாய்த்த நாயகனைப் பண்படுத்தப்புகுந் தொண்டினும் வேறு தொண்டு எற்றுக்கு? அத்தொண்டு வழியில் வாழ்வு செலுத்தும் பெண்மணி வாழ்க. அவள்பால் கடவுள் அருள் என்றும் நிலவுக.

பொருந்தாத் தன்மை எத்தகையது என்று முதல் முதல் காணல்வேண்டும். அத்தன்மைகள் பல திறத்தன. அவைகளுள் இரண்டொன்றை எடுத்துக்கொள்வோம்.

கொண்ட கணவன் அலியாயிருந்தால் என் செய்வது? பிறப்பில் பேடனாக உள்ள ஒருவன் ஒருத்தியை மணஞ்செய்துகொள்ளான். ஒருவேளை யறியாது கொள்வனேல் மனைவி என் செயல் வேண்டும்? மனைவி உயரிய மனங்கொண்டு மெய்யுறு புணர்ச்சி காய்ந்து கணவனுடன் வாழ்வதே சிறப்பு. வேறுவித ஆடல்பாடல், கல்வி ஆராய்ச்சி, கடவுள் வழிபாடு முதலியவற்றில் உட்கலந்து வாழ்வு நடாத்தி வரலாம். அப்பெண்மணி பிள்ளைப்பேறு விரும்பினால் வேறு ஒருவனை மணஞ் செய்து கொள்வது தவறாகாது.

நோயாளன் கணவனாக வாய்த்தால் மனைவி அவனது நோய் போக்கிக் கூடிவாழ உழைத்தல்

வேண்டும். கொடிய பெண்ணோயாளனாயின், எக் காரணம்பற்றியும் அந்நோய் தீரு மட்டும் அவ னுடன் நாயகி சேர்தல் கூடவே கூடாது. ஓராண் டோ ஈராண்டோ முயன்று அவனது நோய்போக் கிய பின்னரே சேர்க்கை வைத்துக்கொள்ளல் வேண்டும். தீராநோயாயின், சேர்க்கையைத் தொலைத்தே தீரல்வேண்டும். அவனுடன் சேர்ந்து அவனது நோயைத் தன்னுடலில் இறக்கிவருந் துவதோடு நோய்க்குழவிகளையும் குருட்டுக்குழவி களையும் ஏன் உலகில். பெருக்கல் வேண்டும்? அப்பிள்ளைகளின்வழி நோயை ஏன் உலகில் வளர்த்தல் வேண்டும்? உயிர்களிடத் திரக்க முடைய பெண் ஒருபோதும் உலகிற்குக் கேடு நினையாள்; செய்யாள்.

வேறு சில செயற்கை முறைகளால் சிறிது ஆண் தன்மை யிழந்த நாயகனாயின், மனைவி அவ னுடன் கலத்தலை முற்றும் நிறுத்தி, எவ்வழியிலா தல் முயன்று அக்குறை போக்கத் தொண்டு செய் வாளாக. குறை நீங்கிய பின்னர் அவனுடன் கலந்து வாழ்வு நடாத்தலாம்.

இத்தகைக் குறைகளின்றிக் குணத்திலோ செல்வத்திலோ கல்வியிலோ இவைபோன்ற பிற

வற்றிலோ குறைபாடுடைய ஒருவன் ஒருத்திக்கு நாயகனாகக்கிடைப்பனேல், அவ்வக்குறை களையப் பல்லாற்றானும் முயலவேண்டுவது நாயகியின் கடமை. குறையுடைய நாயகனை நிறையுடையனாக்கத் தொண்டு செய்வது சிறந்த கடவுள் தொண்டு என்று சொல்வேன். பெண்ணுக்குரிய பொறுமை அடக்கம் அன்பு முதலிய குண நலன்களெல்லாம் பயன்பட வேண்டிய இடமிதுவே.

நாயகன்பால் எக்குறையிருப்பினும் பிரிவுளங் கொள்ளாது அக்குறை போக்க மகிழ்ச்சியுடன் தொண்டின் வழி வாழ்வைக் கழிப்பது பிறவிப் பயனைப் பெறுவதாகும்.

பொருந்தா நாயகியைப் பெறும் நாயகனும் அவளை ஒழுங்குபடுத்திக் கூடிவாழவே முயலல் வேண்டும்.

வேறு சில

ஒருத்தியும் ஒருவனுங் கூடி இல்லறம் நடாத்தும் வேளையில் கவனிக்கப்படவேண்டிய வாழ்வுத் துறைகள் பலவுள. அவைகளுள் இன்றியமையாத சில கூறுகிறேன்.

செல்வநிலை கவனிக்கப் பெறல்வேண்டும். இல் லறத்துக்குப் பொருள் இன்றியமையாது வேண்

டற்பாலது. அப்பொருள் வருவாய்க்கேற்ற செலவு செய்யப்படின் வாழ்வில் இன்பத்தேன் பிலிற்றும். வருவாய்க்கு மேல் செலவு செய்யப்படின் வாழ்வைத் துன்பக் கைப்பு அரிக்கும். வருவாய்க்கேற்ற செலவு செய்யும் பொறுப்பு யாருடையது? வீட்டுக்கரசியாய், வாழ்க்கைத் துணை நலனாய் வந்த பெண்ணினுடையது என்று சொல்லவும் வேண்டுமோ?

"மனைத்தக்க மாண்புடை யளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்றார் திருவள்ளுவனார்.

வாழ்விற்கு வேண்டும் அளவு செலவு செய்வது அறிவுடைமை; அன்புடைமை. செல்வக்கள்ளாட்டயர்தல் அல்லது வறுமைக்குழியில் வீழ்தல் இரண்டும் நல்வாழ்வாகா. இரண்டிற்கும் இடைப்பட்ட எளிய இயற்கை வாழ்வு சாலும். இது குறித்துப் "பெண்ணின் வளர்ப்பி"லுங் கூறியிருக்கிறேன். எளிய இயற்கை வாழ்விற்குச் செலவாகிப் பொருள் எஞ்சிநிற்குமேல், அதை ஏழைகள், குருடர், முடவர், தீராப்பிணியாளர் முதலியவர்க்குச் சோறு கூறை கல்வி முதலிய வழங்கு

வதில் செலவழித்தல் வேண்டும். பொருள்வழி அருள் வளர்க்க முயல்வது அறிவுடைமை.

இல்வாழ்வின் நோக்கமென்னே? அன்பு அருள் ஒப்புரவு முதலியவற்றை ஓம்புதலன்றே?

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று திருவள்ளுவனார் இல்வாழ்வோர் தொண்டு குறித்தல் காண்க. தம்முயிர்போலப் பிறவுயிரைக் கருதற்குரிய செந்துறைகளிலெல்லா மிறங்கித் தொண்டாற்ற வேண்டுவது இல்லறத்தார் கடன். அக்கடனாற்ற வருவாய்க்குத் தக்க செலவு செய்யும் இயல்பு சிறப்பாக இல்லக் கிழத்தியார் மாட்டிருத்தல் வேண்டும். அத்தகை இல்லிலேயே இன்ப வாழ்விற்கு இடனுண்டு.

நாயகிக்கும் நாயகனுக்கும் இடையீடின்றி நாளுக்கு நாள் அன்பு வளரும் வழியில் அவர் வாழ்வு செலுத்துவது நலம். அதற்கு வாழ்வில் எல்லாவற்றிலும் ஓரளவிருத்தல் வேண்டும். எதிலும் வரம்புமீறி மீச்செயல் நிகழ்த்தல் கூடாது. ஆடல் பாடல்கூட ஓரளவினவாக இருத்தலே சால்பு. தொடக்கத்தில் வரம்பு மீறி ஆடிப் பாடிப் பின்னே விடுத்தால் அன்பிற்கு இடையூறு

நிகழும். சில விடங்களில் நாயகிமார் அன்பு அன்பு என்று நாயகன்மார்க்கு எல்லாப்பணிகளுஞ் செய்து அவரைச் சோம்பேறிகளாக்குகிறார் ; சில விடங்களில் பிணங்களாக்குகிறார். இச்செயல் நாளடைவில் இடர் விளைக்கும். பின்னை வெறுப்புளத்தோடு அப்பணிகளாற்ற நேரும். அட்டில் அமைத்தல் போன்ற வினைகளை நாயகியாற்றலாம். நாயகனுடைய துணி தோய்த்தல், கால் கழுவல், அவனுக்குப் பொட்டிடல் போன்றவினைகளை நாயகி ஆற்றுவது அநாவசியம்.

இருபாலாரும் வினையாற்றுவது நலன். ஒருவரோடொருவர் கலந்து பல வேலைகள் செய்யலாம். இளமையில் உடலுரமுள்ளபோது எல்லாப் பணிகளையுந் தானே செய்து நாயகனைப் பிணமாக்கினால், பின்னை வலி குன்றும்போது, நாயகன் எதிர்பார்க்கும் வேலை செய்ய இயலாது நாயகி விழிப்பாளாயின், அவன் மனம் மாறுபடும். ஆதலால் நாயகன்மாரைச் சோம்பேறிகளாக்காத வாழ்வை நாயகிமார் நடாத்துவாராக.

இளமையில் நாயகனுடன் அடிக்கடி வீண் பேச்சு, வெற்றுரை, பயனில் சொல் முதலியன வழங்கல் ஆகாது. அவை தொடக்கத்தில் விருப்

பூட்டுவது போலத் தோன்றும்; பின்னை நாளடை வில் வெறுப்பூட்டும்.

ஒருத்தியும் ஒருவனும் நடாத்தும் இல்வாழ்வு இன்ப வாழ்வாக வேண்டுமேல், இருவர் மாட்டும் நம்பிக்கையும் உண்மையுமிருத்தல் வேண்டும். ஒருவரை ஒருவர் ஐயுறல் கூடவே கூடாது. ஐயத் தால் பீடிக்கப்படும்வாழ்வு இன்ப வாழ்வாதலரிது. அதை நரக வாழ்வு என்று கூறலாம். ஒன்றிய அன்புத் தெய்வம் நிலவவேண்டிய விடத்தில் ஐயப்பேய் புகுந்தால் அது வாழ்வை அலைப்பது திண்ணம். ஐயத்தால் விளைந்த கேடுகள் பல; நிகழ்ந்த கொலைகள் பல. எக்காரணத்தாலோ ஐயந்தோன்றினால் உடனே கரவின்றி அதை வெளிப்படுத்தித் தெளிவு பெறல்வேண்டும். ஐயத்தை உளங்கொண்டு துப்பறிவார் போல ஒரு வரை ஒருவர் சோதிக்கப் புகுவது நரகத்தை வலிந்து விலைக்கு வாங்குவதாகும். "மருண்டவன் கண்ணுக்கு இருண்டனவெல்லாம் பேயா"கத் தோன்றுதல் போல ஒவ்வொரு செயலும் மருட்சியை வளர்த்து வளர்த்துப் பேரிடர் விளைக்கும். ஆதலால் நாயகியும் நாயகனும் தமதுளத்தில் ஐயப்பேய் நுழையாதவாறு தம்மைக் காத்து வருவாராக.

நாயகி தன் வாழ்வு நாயகன் பொருட்டென்றும், நாயகன் தன் வாழ்வு நாயகியின் பொருட்டென்றுந் தன்னலமில்லா வாழ்வு நடாத்திவரின், அவர் வாழும் இல்லம் இறையுறையும் வீடாகும்; வாழ்வும் இன்பஇறைவனோடியைந்த வாழ்வாகும்.

“ பண்டுநிகழ் பான்மையினால் பசுபதிதன் னருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினால்”

—**சேக்கிழார்.**

க௯. பிள்ளைப்பேறு

" கல்லா மழலைக் கனியுறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லா லுருக்கி அழுதோடித் தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமை என்னாம் "

—வில்லிபுத்தூரார்.

பெண்ணின் பெருமை மணத்துடன் நிற்கவில்லை; இன்பவாழ்வுடன் முடியவில்லை. மற்றுமொன்றில் அவள் பெருமை பிறங்குகிறது. அஃது எது? அது பிள்ளைப்பேறு.

பிள்ளைப் பேறில்லையேல் தாய்மை எது? பெண் பிறவியின் நோக்கம் தாய்மைப்பேறு பெறுவதன்றோ? வாழ்விற்குரிய தொண்டு தியாகம் அன்பு முதலியன நிலவுதற்கு நிலைக்களன் தாய்மை யன்றிப் பிறிதென்னை? அத்தாய்மை அளிப்பது பிள்ளைப்பேறு.

பிள்ளைப்பேறு தாய் தந்தையரை இயற்கை நெறியில் நிறுத்துகிறது; உலகவளர்ச்சிக்குத் துணை புரிகிறது; இறைவன் அருள் நோக்கத்தை நிறைவேற்றுகிறது. அஃது எல்லாவற்றிற்கும் மேலாகப் பெற்றோரது அன்புக் கண்ணைத் திறக்

கிறது; உயிர்களிடத்தன்பு கொண்டு தொண்டு செய்தற்கு வழிகாட்டியா யிருக்கிறது; வேறு பல வாழ்வுத் துறைகட்கும் உதவி செய்கிறது.

வாழ்வு இன்பமயமாக நடத்தல் வேண்டுமென்பது இயற்கையின் நோக்கம். தொடக்கத்தில் கல்வி வாயிலாக இன்பம் பிறக்கிறது; பின்னைத் திருமண வாயிலாக இன்பம் பிறக்கிறது; முடிவில் அவ்வின்பம் பிள்ளைப் பேறு வாயிலாக நிலை பெறுகிறது. கல்வியிலும் ஒருவனுக்குச் சோர்வு தோன்றலாம்; மனைவியின் மாட்டும் அச்சோர்வு தோன்றலாம். பிள்ளையின் பால் அச் சோர்வுந் தோன்றாது. வாழ்வில் சோர்வுதோன்றி இன்பம் மறையும் வேளையில், பிள்ளை பிறந்து சோர்வு போக்கி இன்பத்தை நிலை பெறுத்து கிறது. ஆதலால் இன்ப வாழ்விற்குப் பிள்ளைப் பேறு இன்றியமையாதது.

வாழ்வில் எல்லாமிருந்தும் பிள்ளைப்பேறொன் றில்லையேல் மற்றவைகளால் என்ன பயன்? எல்லாவற்றிலுமுள்ள இன்பத்தை நுகர்விப்பது பிள்ளைப்பேறு. ஒருத்தியும் ஒருவனுஞ் சேர்ந்த வாழ்வால் வீடு உண்டாகிறது. அவ்வீட்டில் இன்பமுண்டாக்குவது பிள்ளைப்பேறு. வாழ்வில்

இருள்போக்கும் மணி விளக்கு பெண்ணென்று மேலே சொன்னேன். அம்மணி விளக்கு உமிழுஞ் செங்கதிர் பிள்ளை என்று ஈண்டுச் சொல்கிறேன். "மணியிடைக் கதிர்வரு திறம்போல்" என்றார் கச்சியப்பர்.

பிள்ளைப்பேற்றின் பெருமையை, "மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன் - நன்கல நன்மக்கட் பேறு" என்று திருவள்ளுவனார் விளக்கியிருத்தல் காண்க.

பிள்ளையில்லா வீட்டில் வாழுந் தலைவியையுந் தலைவனையும் பிணியாளர் என்று கூறல் மிகையாகாது. புறத்தே பலதிறத் தொழில் செய்து வீடு சேரும் நாயகனும், அகத்தே பலதிறத் தொண்டாற்றி அமரும் நாயகியும் எத்துணை நாள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருப்பர்? எத்துணை நாள் அதையும் இதையும் பேசிக் கொண்டிருப்பர்? எத்துணை நாள் ஆடலிலும் பாடலிலுங் கழிப்பர்? திருமண வாழ்வின் தொடக்கத்தில் நோக்கும் பேச்சும் ஆடலும் பாடலும் இன்பூட்டிக் கொண்டிருக்கும். நாளடைவில் அவ்வூட்டங்குன்றும். நாயகன் வேறுகளியாடல்களுக்குச் சென்று உணவிற்கு வீட்டுக்கு

வருவன். நாயகி தன்னந்தனியளாய் எண்ணுதன எண்ணித் தூங்கிவிழுவள். குழந்தை யொன்றிருக்குமேல் இன்பூட்டம் பெருகும். புறத்தே வேலை செய்துவருந் தலைவனின் சோர்வையும், அகத்தே வேலை செய்து அயரும் தலைவியின் சோர்வையும் போக்கும் அமிழ்தம் குழந்தை யென்க. குழந்தையின் ஆடல் பாடல் கேட்குந் தாய் தந்தையரே தவமுடையார். அவர் வாழ்க.

குழந்தையின் ஆடலைக்காணவே கண்கள் படைக்கப்பட்டன. குழந்தையின் மழலைப்பாடலைக் கேட்கவே செவிகள் படைக்கப்பட்டன. குழந்தையின் கையூறல் பெறவே மெய்படைக்கப் பட்டது. "அவ்வாடல் இனியது; இப்பாடல் இனியது" என்று எவர் கூறுவர்? குழந்தையின் ஆடல் பாடலைக் காணுத கேளாத பாவிகள் அங்ஙனங் கூறுவார்கள். குழவி இன்பத்தைச் செவ்வனே நுகர்ந்த இயற்கை அறவோராய திருவள்ளுவனார் குழவியோசையாகிய ழகர ஓசை பொதுள "யாழினிது குழலினது என்பர் தம் மக்கள் - மழலைச்சொல் கேளா தவர்" என்று மொழிந்து, மேலும் "மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர் - சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு" என்று அருளியிருத்தல் காண்க.

நாயகனையும் நாயகியையும் பிணித்துள்ள அன்புக்கயிற்றுக்கு ஊறு நேராவண்ணம் காத்து வருவது பிள்ளைப்பேறு என்று கூறலாம். சில வேளைகளில் இருவர்க்கும் பிணக்கு நிகழலாம். அப்பிணக்கு பிள்ளையில்லா வீட்டில் வளரும். பிள்ளையுள்ள வீட்டிலோ அப்பிணக்கு ஞாயிறு முற்பட்ட பனிப்படலம் போல ஒழியும். அப்பெருமையுடையது பிள்ளைப்பேறு. குழந்தை விளையாடும் வீட்டில் துன்பமேது? அஃதில்லா வீட்டிலோ? அந்தோ?

பிள்ளைப்பேற்றால் வேறு பல நலன்களுமுண்டு. பிள்ளையை வளர்க்கத் தாய்தந்தையர்கள் எத்துணை அன்புத் தொண்டு செய்கிறார்கள்? பிள்ளைப்பேறில்லையேல் அத்தொண்டு அவர் மாட்டு அரும்புதலே அரிது. பயன் கருதிப் பெற்றோர் அத்தொண்டு ஆற்றுகிறாரோ? இல்லை. கைம்மாறு கருதாக்கடவுட் டொண்டு பெற்றோர்களிடம் வளர்ந்து வரப் பிள்ளைப்பேறு துணை செய்கிறது. ஒரு பிள்ளையை வளர்க்கப் பெற்றோர்கள் எவ்வளவு தியாகத்துக் குட்படுகிறார்கள்? மக்கள் பிறவியை உய்விக்கவல்லது தியாகம் என்று சொல்ல வேண்டுவதில்லை. அத்தியாகம் பிள்ளைப் பேற்றிலிருக்கிறது.

பிள்ளை நலன் கருதித் தாய் தந்தையர்கள் தங்கள் நலனெலாஞ் சுருக்கிக்கொள்கிறார்கள். பிள்ளைப்பேற்றால் தன்னலங்கெடுதலுங் காண்க. அன்புத்தொண்டு தியாகம் தன்னலமின்மை முதலியன பொறாமை வெகுளி அவாமுதலிய மனமாசுகளைத் துடைப்பன வல்லவோ? அம்மாசகன்றவிடத்தில் இன்பப்பேறுண்டாம். எனவே பிள்ளைப்பேறு இன்பவாழ்விற்கு இன்றியமையாதது என்பது கருதற்பாலது. பிள்ளைப் பேற்றின் பெற்றியுணர்ந்தே நம் முன்னோர்கள் பலபடப் பேசி யிருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைப் பேற்றைப் பற்றிக்கூறாத இடமேயில்லை.

வாழ்விற்குரிய இன்பப் பேற்றிற்கு உறுகருவியா யுள்ளது பிள்ளைப்பேறெனில், அதன்மீது தாய் தந்தையர்கள் எத்தகைக் கவலைசெலுத்த வேண்டுமென்று சொல்லவுந்தேவையோ? பிள்ளை எனில் எல்லாம் பிள்ளைகளாமோ? "பழி பிறங்காப்பண்புடை மக்கள்" என்றார் திருவள்ளுவனார். பண்புடை மக்களைப் பெறும் பொறுப்பு யாருடையது? தாய்தந்தையருடையது என்று எவருஞ் சொல்வர். நற்பிள்ளைப் பேறு தாய்தந்தையருடைய வாழ்வை யொட்டி நிற்கிறது.

உலகில் நற்பிள்ளைப் பேற்றையே தாய்தந்தையர் விரும்புதல் இயல்பு. வெறும் விருப்பத்தால் பயன்விளையாது. விரும்பியவாறு நடத்தல்வேண்டும். நற்பிள்ளைப் பேற்றிற்கு முதலாவது வேண்டற்பாலது உடல் நலன். உடல் நலனில்லாத் தாய் தந்தையர்க்கு நற்பிள்ளை பிறத்தல் அரிது. உடல் காப்பு "பெண்வளர்ப்பி"லுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

உடல் நலனுக்கு ஒழுக்கம் உயிர் போன்றது. அவ்வொழுக்கங்காக்க வேண்டுவது தாய்தந்தையரின் தலையாய கடன். ஒருத்தி ஒருவன் பாலும், ஒருவன் ஒருத்திபாலும் வாழ்தல் வேண்டும். கூடா ஒழுக்கத்தாலும் நிறை தவறுலாலும் மக்களுக்கு விளையுங்கேடுகள் பல. தீயொழுக்கமுடையார்க்குப் பிள்ளை பிறத்தல் அரிது. பிறப்பினுங் கருவினில் அழிவதாய், கான்முளையிலழிவதாய்த் தொலையும். அஃது ஒருவேளை பிழைத்து வளரினும் நோய்வாய்ப்பட்டுச் சூம்பி நிற்கும்; நோயில்லா தொழியினுங் குருடு செவிடாகப் பிறக்கும்; இக்குறையில்லா தொழியினுங் களியாய் மடியாய் உலகச்சுமையாய்க் கிடக்கும். பிள்ளை நாட்டின் உடைமையாகலான், அதைப்

பண்புடையதாகப் பெறுதற்குரிய வாழ்வை நடாத்தத் தாய்தந்தையர்கள் முயலல் வேண்டும்.

கூடாவொழுக்கமில்லாத சிலர்க்கும் நற்பிள்ளை பிறவாதிருத்தற்குக் காரணமென்னை என்று சிலர் கருதலாம். அன்னார் வேறு வழியில் தமது உடல் நலனுக்குக் கேடு சூழ்கிறார். காபி, தேயிலை, கொக்கோ முதலிய பானங்களை அளவிற்கு மீறிப் பருகுதல், கள் சாராயம் முதலியவற்றை அருந்தல், உடற்பயிற்சியின்றிச் சோம்பிக்கிடத்தல், அளவு கடந்த உழைப்பு, அகால உணவு, போதிய நேரம் உறங்காமை, புழுங்கிய இடத்தில் வதிதல், மிதூண் கொள்ளல், வரம்புமீறிப் பட்டினி கிடத்தல் முதலியன உடல் நலனைக் கெடுக்கும். இவைகளால் உறுப்புக்களில் வெம்மையெழும். அவ்வெம்மை, உறுப்புக்களின் சுறுசுறுப்பு ஊக்கம் எழுச்சி முதலியவற்றைப் போலியாகத் தொடக்கத்தில் கிளப்பிப் பின்னை அவைகளைக் குலைக்கும். பெண்மக்களின் கருவுறுப்புக்களோ மிக மெல்லியன. அவைகளில் வெம்மை ஏறினால் கருத்தங்கலும் அரிதாகும்; தங்கினும் அழியும். நற்பிள்ளைப்பேறு விரும்புந் தாய்தந்தையர் உணவு உறக்கம் முதலியவற்றில் அளவாயிருப்பாராக.

உணவு முதலியவற்றை ஒழுங்குபடுத்தி வாழ்வோர்க்குஞ் சில விடங்களில் நற்பிள்ளை பிறப்பதில்லை. இஃது எற்றுக்கு? ஒருத்தியும் ஒருவனும் இளமை தொட்டு உயிர் நிலைகளின் மீது கவலை செலுத்தி வந்ததைவிடத் திருமணத்தின் பின்னர் ஆயிரமடங்கு அதிகமாக அவைகளின் மீது கவலை செலுத்தல் வேண்டும். திருமணத்தின் பின்னர்க் காம எரிக்கு எளியராய் ஒருவரோடொருவர் புணர்தல் கூடாது. பிள்ளைப் பேறு நினைவின்றி வெறும் புணர்ச்சிமீது மட்டுங் கருத்தைப் பதித்து அடிக்கடி கூடலாகாது. போகத்தில் அளவாயிருத்தல் வேண்டும். இல்லையேல் சுக்கிலம் நீத்து நற்பிள்ளைப்பேற்றிற்கு இடர் செய்யும்.

திருமணஞ்செய்த சின்னஞ்சிறுவர்களுக்குள் பிள்ளை பெறுதலுமாகாது. கருவுறுப்புக்கள் உரம் பெறுதற்கு முன்னர்க் கருவுயிர்த்தல் கருவுறுப்புக்களை மெலிவிப்பதாகும். மெலிவுற்ற கருவினின்றும் பிறக்கும் பிள்ளை எங்ஙனமிருக்கும்? மூஞ்சூறு போலிருக்கும். வலிய திண்ணிய அழகிய அறிவுடைய பிள்ளைப்பேறே உலகிற்குப் பயனளிப்பதென்க. அதற்குரிய பெண் பருவம் அரிவைப் பருவமாகும். விரிவு இந்நூல் " திருமணத் "தில் பார்க்க.

நற்பிள்ளைப் பேற்றிற்குத் தாய்தந்தையரது ஒழுங்குபட்ட வாழ்வே காரணம். நல்வாழ்வில் தலைப்படாத தாய் தந்தையர்கள் சேர்க்கை தவிர்த்து வாழலே அறம். ஊனமும் ஈனமும் நிரம்பிய பிள்ளைகளால் நாட்டுக்கு என்ன பயன்? உலகிற்கு என்ன பயன்?

பெண் கருவுற்றிருக்கும்போது மிகத்திறம்பட வாழ்வு நடாத்தல்வேண்டும். கருவுற்றநாள் முதல் ஒன்றுஞ்செய்யாது வாளாவிருத்தல் கூடாது. வழக்கம்போல நிகழ்த்தி வந்த பயிற்சிகளெல் லாம் நிகழ்த்தி வரலாம். மனைவி கருவுற்ற வேளை யில் கணவன் பெரும் பொறுப்புடன் அவளைக் கவனித்து வரல்வேண்டும். அச்சம் ஐயம் கவலை பொறாமை வெகுளி முதலிய கனல்கள் மனைவி மனத்தில் மூளா வண்ணம் நாயகன் நடந்து வரல்வேண் டும். இக்கனல்கள் கருக்குழியை யெரிக்கும். கரு வுற்ற வேளையில் பெண்மகள் சிலபோழ்து காய்ந்து விழுவதுமுண்டு. நாயகன் பொறுமை யுடன் அக்காய்வை ஏற்றல்வேண்டும்.

மற்றுமொன்று ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். அது மனைவி கருவுற்றிருக்கும் போது மெய்யுறுபுணர்ச்சி நிகழ்த்தலாமா என்பது.

அது குறித்துப் பலதிறக்கருத்து வேற்றுமை களுண்டு.

உடற் கூற்றுக்கு ஏற்றவண்ணம் அது நிகழ்ந்து வருகிறது. சிலர் மூன்று ஐந்து ஏழு மாதம் வரை கூடிக்குலாவுவர்; சிலர் பிள்ளை பிறக்கும் வரை அவ்வினை நிகழ்த்துவர். கருவுற்ற வேளையில் பெண்மக்கட்கு இயல்பாகக் கிளர்ச்சிமிகும். அக் கிளர்ச்சி மேலீட்டான் சில பெண்மக்கள் நாயகன் பால் நெருங்குதலுண்டு. அவ்வேளையில் மனைவி வேண்டுதலுக்கு இரங்காது மறுக்குங் கணவன் மாரில்லாமலில்லை. மறுப்புக்குக் காரணம் மனைவி மீதும் வயிற்றிலுள்ள குழவியின் மீதுங் கொண்ட இரக்கமேயாகும். அவ்விரக்கம் இச் சையையும் அடிமைப்படுத்தும். மூன்று மாதங் கடந்ததும் மெய்யுறு புணர்ச்சியை நீப்பது நலன் என்பது சில அறிஞர் உள்ளக்கிடக்கை. மனைவி விருப்பந் தணிக்க ஒருவேளை கணவன் எண்ணுவ னேல் அவளுடலுக்கும் உட்கருவிக்கும் கேடு நிகழா முறையில் கூடுவானாக.

மனைவி விரும்பாத வேளையில் அவளுடன் வலிந்து சேர முயலும் கணவன் கணவனல்லன். அவன் அவளைக் கொல்லவந்த யமன் என்று கூற

லாம். கருவுற்றக் காலத்திலேயே வலிந்து புண ரல் கூடாது. கருவுற்றுள்ள வேளையில், அதுவும் மனைவி விரும்பாதபோது, வலியுறுத்திக் கூடு வோனை விலங்கென்றுஞ் சொல்ல முடியவில்லை. இத்துறையில் விலங்கினின்றும் மனித உலகமே பாடங் கற்கவேண்டி யிருக்கிறது. மக்காள்! விலங்குலகை நோக்குங்கள். அதன் பெண் ணினம் கருவுற்றிருக்கும்போது ஆணினம் நெரு ங்கி வலியுறுத்துகிறதா? இல்லையே. ஆறறிவுடைய மனிதனோ கருவுற்ற வேளையிலும் மனைவியிடஞ் செல்கிறான். அதிலும் அவ்வேளையில் வலிந்து சேருவோனை என்னென்று கூறுவது? மனைவி கருவுற்றுள்ள போழ்து அவளைச் சகோதரியாகக் கருதுவோனே மனிதன்.

மரம் பருவத்தில் காய்ப்பதுபோல உற்ற வய தில் பெண்மகளும் பிள்ளைபெறுவது இயற்கையோ டியைந்து வாழ்வதாகும். இப்பொழுது உலகில் சில விடங்களில் பெண்மக்களிற் சிலர் பிள்ளைப் பேற்றுக்கஞ்சித் திருமணவாழ்வு கொள்ளாதொழி கிறார்; சிலர் பிள்ளைப்பேறு உறாமுறையில் ஆண் கலப்புக்கொள்ள விரும்புகிறார்; சிலர் பிள்ளை கறைக்கும் வித்தை பயின்று வாழ்கிறார். இக்

கூட்டத்தார் தற்கால நாகரிகமென்னும் அறியாமையில் மூழ்கினவர். இந்நாகரிகத்தை நாகரிகமென்று எப்படி அழைப்பது? இச்செயற்கைத் துறைகளிலிறங்குவோர் பெரிதுங் கற்றவர்; பெரும் பட்டம் பெற்றவர். இவர் அறிவு இருந்தவாறென்னே! இவர் கற்றது கல்வியா?

திருமணவாழ்வையே வெறுத்து நிற்பவரைப் பற்றி "இயற்கை யற"த்தில் விரிவாகச்சொல்லப் பட்டிருக்கிறது. வாளா கிடத்தலாலும், முஷ்டிமைதுனம்போன்ற செயற்கைத் துறைகளாலும் விளையுங் கேடுகளும் ஆங்குச்சுருங்க ஓதப்பட்டிருக்கின்றன. ஆதலால் அவைகளைப்பற்றி ஈண்டு மீண்டுங் கூறவேண்டுவதில்லை.

காசநோய், தொழுநோய் (குஷ்டரோகம்), பித்து முதலிய நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் திருமண வாழ்வு கொள்ளாது வாளாகிடக்கலாம். திருமண வாழ்வு கொண்ட பின்னர் இந்நோய்கள் தொடரின், அப்பொழுதும் வாளாகிடக்கலாம். ஈண்டு வாளாகிடத்தல் பிள்ளைப்பேற்றை வெறுத்தலைக் குறிப்பதன்று. அப்பிள்ளைப் பேற்றால் உலகில் அந்நோய்கள் வளருமாதலின் வாளா கிடத்தலே அறம்.

ஓயாத குடியனை மணக்க நேர்ந்த பெண்மணி கலவி வெறுத்து வாழ்வது நியாயம். தீய பிள்ளைகளைப்பெற்று உலகைக் கெடுப்பதினும் தான் ஒருத்தி வருந்தி யொழிவதால் கேடு விளையாது. மேற்குறிப்பிட்ட நோய்கள், குடி, தொழு நோய், பெண்ணோய், பித்து, முதலியன கருவில் தாக்குற்றுப் பிள்ளைகளை அடர்தலுண்டு. இன்னோரன்ன அல்லாத பிற பிள்ளையைச் சாருமென்பது கிடையாது. இது குறித்து மேல்நாட்டார் ஆராய்ச்சி செய்து இதனை எவரும் ஒப்ப முடிந்த வழியில் உறுதிப்படுத்தி யிருக்கிறார். இது நிற்க.

சிலவிடங்களில் பொருட் செல்வமின்மை கருதிப் பிள்ளைப்பேற்றை ஒடுக்கிக் கொள்வதுண்டு. திருமண வாழ்வில் தலைப்படாது பிரமசரியங் காக்குமாறு நமது நாட்டார்க்கு மகாத்மாகாந்தி அறிவுறுத்துகிறார். காரணமென்னை? நாட்டின் வறிய நிலை நோக்கியென்க. இத்தகைக் காரணங்களால் பிள்ளைப் பேற்றை வெறுத்தல் ஏற்கப்பாலதே. இக்குறைகள் ஒன்றுமில்லா மக்கள் பிள்ளைப் பேற்றை வெறுப்பது அறமன்று.

பெண்மகள் ஆடவனுடன் புணரினும் கருத்தரியா முறைகள் மேல்நாட்டில் பல காணப்பட்டு

வருகின்றன. அம்முறைகளை அறிவுறுத்தும் நூல் பலவற்றை யான் படித்துப் பார்த்தேன். ஒன்றேனும் எனக்குப் பிடிக்கவில்லை. கருவைத் தகையக் காணப்பட்டுள்ள முறைகளாலும் கருவிகளாலும் பின்னை உறுப்புக்களுக்கு ஊறு விளையும் என்பதில் ஐயமில்லை. இத்துறையிலிறங்க ஒருப்படும் ஆடவனுக்குந் தீமையுண்டு; மகளிருக்குந் தீமையுண்டு. இவை யாவும் முஷ்டிமைதுனம்போன்ற செயற்கை முறைகளே யாவும். பிள்ளைப்பேற்றைத் தடுக்கக் கொள்ளப்படும் முறைகளும் கருவிகளும் நாளடைவில் மெல்லிய கரு வுறுப்புக்களின் ஆக்கங் குலைக்கும். அவ்வுயிர்நிலை உறுப்புக் குலைவால் பலதிற நோய்கள் பின்னே தோன்றும். ஆண் பெண் உறுப்புச் சேர்க்கையின்றிப் பிற இடைச்சேர்க்கைகள் யாவும் தீமை பயப்பன என்று சுருங்கச் சொல்லலாம்.

நமது நாட்டுப் பெண்மக்களில் மேல்நாட்டு முறைப்படி கல்வி பயின்று திரிவோர் சிலர் அறியாமையால் பிள்ளைப் பேற்றைத் தகையும் முறை கொண்டு வாழ்வு நடாத்துகிறாரென அறிகிறேன். இப்பெண்மக்கள் பெரும் பதவிகளிலும் வீற்றி

ருக்கிறார்கள். பெரும்பான்மையோர் ஆசிரியன்மாராக விருக்கிறார். அவர் கூட்டுறவு நேராதவாறு பெண் குழந்தைகளைக் காக்கவேண்டுவது பெற்றோர் கடன். இந்நூலில் இது குறித்து விரித்துரைக்க வேண்டுவதில்லை.

சில பெண்மக்கள் செயற்கைக் கருவிகளைச்செருகிக்கொள்ளாது ஆடவரோடு இன்பந் துய்க்கிறார்கள். ஆனால் அவர்கள் பிள்ளைப்பேற்றை விரும்புகிறார்களில்லை. கருவுற்ற குறி தோன்றியதும் அதைச் சிதைக்க முயல்கிறார். அதற்கென எவ்வளவு முயற்சி! எவ்வளவு உழைப்பு! கருச்சிதைக்க ஒருப்படும் மருத்துவர்கட்கு எந்நரகங் கடவுள் படைத்திருக்கிறானோ தெரியவில்லை. பாவங்களிற் சிறந்த பாவம் கருச்சிதைப்பதும் அதற்குத் துணை போவதுமாகும். பாவமென்றால் பாவத்துக்கு அஞ்சாதாருமுளர். அவர்க்கென்னுரைப்பது ?

இயற்கையில் அமையுங் கருவை மருந்தாலோ மற்றெதனாலோ அழிப்பின், கருக்குழிக்கும் அதனையொட்டிய சினையுறுப்புக்கும் ஊறு உண்டாகிறது. அதனால் உடல் வலிமை குன்றும். இவ்வாறு பலமுறை நிகழ்த்துவோர் கதியென்ன? இவ்வுலக வாழ்வை அகாலத்தில் நீப்பதேயாம்.

நற்குடியில் பிறந்து கூடாவொழுக்கத்தில் தலைப் படுவோரிடையுங் கருவழித்தல் நிகழ்கிறது. பிள்ளை பிறந்தால் மானம் போகுமென்று கருதி அன்னார் பெருங் கொலை செய்கிறார். தொடக்கத்தில் காமவேட்கை! பின்னை மானம்! என்செய்வது? குழந்தை கடவுள் கொடை; நாட்டின் செல்வம். இதை ஏன் அழித்தல் வேண்டும்? நமது நாட்டில் பொதுவாகப் பெண்மக்கட்கும் சிறப்பாகக் கைம்பெண்கட்கும் ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகள் உயிர்க்கொலையாய் முடிகின்றன. இளம் பெண்கள் வழுக்கி வீழ்கிறார்கள்; பின்னை விழிக்கிறார்கள்.

அவர்கள் கூடாவொழுக்கத்தில் தலைப்படாத நெறியில் வாழ்வு நடாத்தல் வேண்டும். நெறி தவறின் குழந்தையை ஈன்று வளர்க்கும் அஞ்சா நெஞ்சம் பெறல்வேண்டும். உலகப் பழிப்புக்கு அஞ்சிக் கருவழிப்பது பேரிழிவு. கருவழிப்பதால் உடல்நலன் குன்றி நோய்வாய்ப்பட்டு அகாலத்தில் மாள்வது ஒருதலை. அரிய வாழ்வை ஏனோ இடையில் தொலைத்தல் வேண்டும்?

கடவுள் நெறிக்கும், உலக வளர்ச்சிக்கும், நாட்டின் செல்வத்துக்கும், இன்ப வாழ்வுக்கும் உறு

கருவியாயுள்ள பிள்ளைப்பேற்றை விரும்பாத நெஞ்சம் ஈரமில்லா வன்னெஞ்சமாகும். அந்நெஞ்சம் பெண்ணுலகிற்குரியதன்று. பிள்ளைப்பேறு விரும்பாத பெண் பெண்ணால்லள் என்று சுருங்கச் சொல்லலாம்.

பெண் பிறவி தாங்கினோர் பிள்ளைப்பேறு பெற இளமை தொட்டு உடல்நலன் ஒழுக்கம முதலியவற்றைக் காத்துவரல் வேண்டும். அதற்குரியது பெண் பிறவி என்று கூறல் மிகையாகாது. ஆகவே ஒருத்தி ஒருவனுடன் வாழ்ந்து பிள்ளை பெற்று உலகோம்புவதே சிறப்பு.

தாய் தந்தை குழந்தை இம்மூன்றுஞ் சேர்ந்த ஒன்றே சோமாஸ்கந்த மூர்த்தமென்பது. உலகில் இம்மூன்றும் நிலைபெறல் இயற்கை என்பதை அறிவுறுத்தவே நம்முன்னோர்கள் கடவுளை அம்மூர்த்தமாகவுங் கொண்டு வழிபட்டார்கள். "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே" என்றார் மாணிக்கவாசகனார். தாய் தந்தையர் அன்பினின்றும் பிறக்கும் ஆரமுதங் குழந்தை யென்க.' அக்குழந்தை பெற முயல்வதே பெருந்தவம். பெண்ணின் பெருமைக்கு உறையுளாயுள்ள அத்தவம் யாண்டும் மலிக; என்றும் நிலைக்க.

" படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைபடக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே "

—பாண்டியன் அறிவுடை நம்பி.

௧௦. பெண்ணலன்

“ உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே ”

—திருமூலர்.

பிள்ளைப்பேறு முதலிய பெருமைகட்கு நிலைக்களனாயிருப்பது உடல் நலன். உடல் நலனைக் கெடுத்து நோய்வாய்ப்படும் ஒருத்தியின் ஊனம் அவளோடு ஒழிவதில்லை. அவள் வழி வழித் தோன்றும் உயிர்களையும் அவ்வூனம் தொடர்ந்து தொடர்ந்து பீடிக்கிறது. ஒரு நாட்டின் செழுமையுங் கொழுமையும் அந்நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் பொறுத்திருக்கின்றன.

நோயிலாப் பெண்மக்களையுடைய நாடே தவஞ் சிறந்த நாடு. ஒருநாடு எல்லாவளங்களையுங் கொழிக்கும் நாடாயினும், அந்நாட்டு மக்கள் கூடா ஒழுக்கத்தில் தோய்ந்து நோய்வாய்ப்படுவரேல், அவர்கட்குப் பிறக்கும் மூஞ்சூறுகளும், குருடுக[illegible], செவிடுகளும் அந்நாட்டின் வளங்களிலுள்ள நலன்களை எங்ஙனந் துய்க்கும்? இன்பநுகர்ச்சிக்கு நாட்டு

வளனோடு மக்கள் வளனும் பொருந்தியிருத்தல் வேண்டும். ஆதலால் நோயற்ற வாழ்வுடைய மக்கள் வதியும் நாடே சிறந்த தவநாடாகும். அத்தகை நாட்டைப் படைக்கவேண்டிய பொறுப்பு தாயுடையது என்று சொல்லவேண்டுவதில்லை.

தாய்மைக்குரிய பெண்மணி நோயின்றி நலம் பெற்று வாழவே முயலல்வேண்டும். நற்றாயாதற்குரிய வழியில் பெண்ணை இளமை தொட்டு வளர்க்கத் தாய் தந்தையர் பெரிதுங் கடமைப்பட்டிருக்கிறார். விரிவு இந்நூல் "பெண்வளர்ப்"பில் காண்க. ஆண்டு உடலோம்பு முறைகளுஞ் சில கூறப்பட்டிருக்கின்றன.

பெண்ணினல்லாள், உணவானும் ஒழுக்கத்தானும் தன்னுடல் நிலையைப் பாதுகாத்து வரல் வேண்டும். வெம்மை யூட்டும் உணவும், கூடா ஒழுக்கமும் பெண்ணின் மெல்லிய உறுப்புக்களை எரித்து அரித்துக்கல்லும். அம்வெம்மைக்கு அடிமையாகாது, இயற்கை வழி வாழ்வு நடாத்தும் பெண்ணின் வாழ்வே நல்வாழ்வாக மலர்ந்து மணம் வீசும்.

உடல் நலனுக்குரிய முறைகள் பல இந்நூற்கண் ஆங்காங்கே சொல்லப்பட்டிருக்கின்றன.

நூற்கண் வேறிடத்தில் சொல்லாத சிலவற்றை ஈண்டுச் சுருங்கக் குறிப்பிடுவது நலமெனத் தோன்றுகிறது.

செயற்கை முறை : இல்லறமென்னும் இயற்கை பறமேலாது, வேட்கையைச் செயற்கை முறையில் தணிக்கப்புகும் மக்கள் பின்னே அடையுங் கொடுமைகள் முன்னர் விளக்கப்பட்டிருக்கின்றன. முஷ்டிமைதுனம் போன்ற செயற்கைத் துறை களில் அறியாமையால் வீழ்ந்து இடர்ப்படும் மக் கள் நிலையும் ஆண்டுக் கூறப்பட்டிருக்கிறது. அச் செயற்கையாளர் மீண்டும் நலன் பெறலுண்டோ?

தொடக்க நிலையிலிருப்போர்க்குத் திருமணமே பொருந்திய மருந்தாகும். அந்நிலை கடந்து, முகம் வெளுத்து, கண்ணொளி மங்கி, ஈரல் இயக் கந்தளர்ந்து, பசி குன்றி, மலஞ்சிக்கலுற்று, உறக்க மிழந்து, இருக்கும்போதும் நிற்கும்போதும், கிடக்கும்போதும், எப்போதும் தீய எண்ணத் துக்கு அடிமையாய், சிறு நீர் அடிக்கடி சொட்டும் முதிர்ந்த நிலையடைந்த "முத்தர்கள்" உய்யும் வழி யில்லை என்றே மேல்நாட்டு மருத்துவ அறிஞர் பலர் எழுதியிருக்கிறார். உய்யும் வழியும் பெறாத அம்முத்தர்கள் நிலைபெரிதும் இரங்கத்தக்க தன்றோ ?

அத்தீயோர் அந்நிலை எய்தியதற்குக் காரண மென்னை? இயற்கை அன்னைக்கு அன்னார் மாறு பட்டு நடந்தமையாகும். அந்நடக்கை அளிக்கத் தக்க பயனை அளியாதொழியுமோ? தன் நியதிக்கு மாறுபட்டு நடப்போரைச் சிறிதும் இரக்கமின்றி ஒறுப்பது இயற்கை அன்னையின் இயல்பு. மேலும் மேலும் மருந்து முதலியன உண்டு, இயற்கை அன்னையை மறப்பது அவளுக்கு மேலும் மேலும் சினத்தை மூட்டுவதாகும்.

செயற்கைத் துறையில் முதிர்ந்த "முத்தர் கட்கு" உரியமருந்து இவ்வுலகிலில்லை. இல்லையேல் அவர்கள் கதி என்னை? குற்றத்திற்கு மன்னிப் பில்லையா? மன்னிப்புண்டு. எப்பொழுது? செய்த குற்றங்குறித்துக் கழிவிரக்கமும், மீண்டும் அக் குற்றஞ்செய்யா மன உறுதியுங் கொள்வோர்க்கு மன்னிப்புங் கிடைக்கும்; உய்வுமுண்டு. செயற் கைத்துறையில் ஆடியதன் பயனைத் துய்ப்போர் முதலாவது இயற்கையை மறந்தது தவறு என்று உணரல்வேண்டும். அவ்வுணர்வுடன் நிகழ்த்திய பிழைகுறித்து வருந்தல்வேண்டும். வருந்துவ துடன் மீண்டும் அக்குற்றம் நிகழ்த்தாத மன உறுதிபெறல்வேண்டும். செயற்கையாளர் இயற்கை

அன்னை பால் சரண் புகுந்து "அன்னாய்! அடைக்கலம்! காத்தல் வேண்டும்" என்று அழுதல் வேண்டும். சுருங்கக்கூறின் இயற்கை வழி வாழ்வு நடாத்த உறுதி கொள்ளல் வேண்டும்.

முதலாவது அந்நோயாளர்கள் உயிர் நிலையைக் கரத்தால் தொடுவதுங்கூடாது; மனதால் நினைப்பதுங்கூடாது. பழக்கம் மிகக்கொடியது. நீண்ட நாள் பழக்கம் அவர்களை விரைவில் விடுதலை செய்யாது. அப்பழக்கத்தைத் தவிர்க்க வல்லது மன உறுதி யொன்றே. உறுதி குலைந்து மீண்டும் இடையிடையே பழைய பழக்கத்துக்கு அடிமையானல் மாளவேண்டுவதே முடிவு. மன உறுதியால் பழக்கத்தைவென்று, இயற்கை அன்னையின் திருவருளாகிய நீரினுங் காற்றினும் ஞாயிற்றொளியினும் முறைப்படி படிந்து வர வர, இயற்கை அன்னை திருவருள் சுரப்பாள்.

வெம்மை நாட்டில் வதிவோர் நீண்டநேரம் ஞாயிற்றொளியில் நிற்றலாகாது. ஐந்து அல்லது பத்து நிமிடஞ்சாலும். ஞாயிற்றொளியில் மூழ்கும்போது தலையையும் அரையையும் துணியால் அல்லது பசுந்தழையால் மூடிக்கொள்ளல் வேண்டும். இல்லையேல் மூளைக்குப் பழுதுநேரும்.

இவ்வியற்கை சூழ்கலோடு இயற்கை உணவருந்தல் நலன். காய்கறிகளைப் பசுமையாக உண்பது சிறப்பு. இயலாதாயின் அவைகளைச் சிறிது அவித்துக் கொள்ளலாம். காரம்புளி சேர்க்கை கூடாது. பழம் நிரம்ப உண்ணலாம். பழமே உண்டும் வரலாம். காப்பி தேயிலை கொக்கோ ஓவல்டையன் முதலியன வீட்டில் தலை காட்டலாகாது. நீர் அடிக்கடி அருந்தலாம். முறைப்படி உடல் நிலைக்கேற்ற அளவில் விரத மிருப்பது எல்லாவற்றினுஞ் சிறந்தது.

இந்நோயாளர்கள் காடுகளிலாதல் காடடர்ந்த மலைகளிலாதல் வதிதல் நலன். இவர்கள் கட்டிடங்களில் அதிலுங் காற்று நுழையில்லாக் கட்டிடங்களில் பெரும்பொழுது போக்குதலாகாது; மரத்தடியில் பகல் பொழுது கழிப்பது சிறப்பளிக்கும். இயற்கையுடன் இயைந்து வாழல்வேண்டுமென்று சுருங்கச் சொல்லலாம். இவ்வாறு மனந் திரும்பினோர் ஓராண்டில் ஈராண்டில் இயற்கையன்னையின் திருவருள் ஓரோவழி பெற்று ஒருவாறு நலனுறக்கூடும்.

இடையில் உடல் நலனைக் கெடுத்துப் பின்னை ஏன் இடருறல் வேண்டும்? அவ்விடரினின்றும்

நீங்க ஏன் அங்கும் இங்கும் உழலல்வேண்டும்? இளமை தொட்டு இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தும் பெண்ணே சிறப்புடையாள். அவள் பெறற்கரிய இன்பத்தைப் பெறுகிறாள். ஆத லால் எக்காரணம் பற்றியுஞ் செயற்கைத் துறை களில் படியாது பெண்மக்கள் இயற்கை வாழ்வு நடாத்துவார்களாக.

எரிநோய் : மேற்குறிப்பிட்ட செயற்கைத்துறை களில் வீழாது, வேறுபல தீத்துறைகளிலும் வீழ்ந்து நோய் வாய்ப்பட்டு உடல் நலனைக்கெடுத் துக்கொள்ளும் பெண்மக்களுமுண்டு. இவ்வுலகில் வெறுக்கத்தக்க உயிர்கள் பன்றிகள் என்று சிலர் கூறுப. அவைகளினும் இழிந்தன இந்நோயுருவங் கள். உயர்திணைப் பெண் தெய்வங்களை அஃறிணை யுருவங்களென்று சொல்லவும் நேர்ந்தது.

பெண்பிறவி தாங்குவோர் அனைவரும் வாழ்வில் வெற்றிபெறுகிறாரில்லை. சில பெண்மக்கள் வழுக்கி வீழ்கிறார்கள். பெண்பிறவி தாங்குவது மட்டும் பெண்மை கூட்டாது. பிறவிக்கேற்ற நலனெ லாம் மலர நல்வழியில் வளர்ந்து தெய்வநிலை பெறுபவளே பெண்ணெனுஞ் சொற்பொரு ளாவள். ஒருவனுடன் வாழ்வு நடாத்திக் கடவுள்

படைப்புக்குத் துணைபுரிய வழங்கப்பட்ட இன்ப உறுப்புக்களைக் கூடா வொழுக்கத்தால் பலர் சேர்க்கையால் புண்படுத்தி எரியாக்கித் தான் இடர்ப்படுவதோடு, பிறரையும் பின்வரும் உலகை யும் இடர்ப்படுத்தும் ஒருத்தி எங்ஙனம் பெண்ணு வள்? அவள் தாய்மைக்குரிய பெண்மை யிழந்த பாவி யல்லளோ? அவளை அஃறிணையின்பாற் படுத்துவது தவறாகாது.

அப்பாவி யுருவிலும் உறுப்பிலும் வெம்மை கொழுந்து விட்டெரியும். அவ்வுருவை ஒரு நெருப்பு மரமென்று கூறலாம். அவ்வுருவைத் தொட்டாலும் போதும். நோய்த்தீ பற்றிக்கொள் ளும். ஐம்பூதத்துள் ஒன்றாகிய தீச்சுட்டால்நேரும் புண்ணுதல் ஆறிவிடும். இப்பெண் தீப்புண்ணுக்கு ஆறுதலில்லை. அந்நெருப்பிடை வீழ்ந்து வருந்து வோர் நிலை இரங்கத்தக்கது. உயிர் நிலையினின் றும் எழும்வெம்மை மூளையையுந்தாக்கி வேறுபல உறுப்புக்களையுங் கலக்கி இளகச்செய்யுங் கொடு மையை என்னென்று இயம்புவது? தண்மைப் பெண் வெம்மைப் பேயாளுள். பசியமருதம், பசுங்கள்ளியையும் எரிக்கும் பாலையாயிற்று.

இப்பெண் ஏன் பிறந்தாள்? ஊரை அழிக்கவா? இவள், தானும் வெம்மையில் வேகிறுள்; மற்ற

றவரையும் வேகவைக்கிறுள். இவள் கருவில் உயிர் முட்டை நிலவுங்கொல்! நிலவி வளருங்கொல்! அஃது எரிந்து கரிந்தன்றோ போகும்? ஒழுக்கங் காவாதொழிந்த மதியீனம் இப்பொழுது விளங்குகிறது. ஒருவனுடன் வாழும் ஒருத்தியே நலனுடையாள்.

ஒழுக்கந்தவறி வீழ்ந்த பெண்மக்கள் நலனுறுவது எங்ஙனம்? இவர்கள் விடுதலையடையக் கொள்ளும் பேராவலுக்கு அளவில்லை. இவர்கள் எவ்வழி முயன்றாலுங் கறந்த பாலாவப்போவதில்லை. ஆயினும் தக்ககழுவாய் தேடின் ஒரு வழியில் துன்பமின்றியாதல் வாழக்கூடும்.

வெள்ளை கொறுக்கு மேகம் முதலிய கொடு நோய்கள் தலைகாட்டும் போதே எச்சரிக்கையாயிருந்து இயற்கைவழி வாழ்வு நடாத்தினுல் ஒருவாறு எரி தணிக்கலாம். முதலாவது நோய் தலைகாட்டும்போதே பெண்மகள் பிறர் சேர்க்கையை அறவே முற்றுந் தொலைத்தல் வேண்டும். நோயுடையார்க்கு வெம்மைக் கிளர்ச்சி அதிகம். அத்தூண்டுதலுக்கு எக்காரணம் பற்றியும் எளியராதல் கூடாது. உள்ளத்தில் உறுதி கொண்டு உள்ளும் புறமும் பற்றியுள்ள வெம்மை

தணிக்க முயலல் வேண்டும். இதற்கு இருவழி யுண்டு. ஒன்று இயற்கைவழி; மற்றொன்று மருந்து வழி. இயற்கை வழியில் தலையாயது நோன்பு. அதாவது விரதமேற்பது. விரதங் கொண்டு, நீர் காற்று ஞாயிறொளி படிந்து, பொருந்திய உணவு கொண்டுவாழின், வெம்மை ஒருவாறு தணியும். இவ்வழி நிற்க இயலாதார் அநுபவத்திற் சிறந்த மருத்துவரிடம் போந்து மருந்துண்பாராக. மருந்தினும் இயற்கை முறையே சால்புடைத்து. நோய் நீங்கப்பெற்ற பின்னர் நல்வழியில் காலங் கழிப்பது பெண்மைக் கழகு. இப்பெண்ணை உலகிடை அருகு நாள் உலகம் விடுதலை யடையும் நாளாகும்.

மாதப்பூப்பு: செயற்கை நரகங்களில் வீழாமலும், வேறு பல கூடா ஒழுக்கத்தில் வீழாமலும் தன்னைக் காத்து இயற்கை யறத்தை நடாத்திப் பிள்ளைப்பேறு முதலிய பேறுகளை யடைய உடல் நலன் ஓம்பும் பெண்ணே பெண்ணினல்ல நங்கையாவள். உலகையீன்று வளர்க்குந் தாய் பெண்ணாகலான், உடல் நலனைப் பெரிதும் அவள் பேணுதல் வேண்டும்.

அவ்வாறு பேணிவரும் பெண் திங்கடோறும் ஒழுங்காகப் பூப்பெய்துவள். மாதப்பூப்பு, மாத

விடாய், மாதருது, வீட்டுத் தூரம், வீட்டு விலக்கு, தலைமுழுக்கு, தீட்டு முதலிய யாவும் ஒரு பொருட்கிளவிகள். திங்களுக் கொருமுறை நிகழும் சூதக வெளியீடு பூப்பெனப்படுவது. அவ்வெளியீடு இருபத்தெட்டு நாளுக் கொருமுறை நிகழல் இயல்பு. உடற்கூற்றுக் கேற்றவண்ணம் சிலருக்கு இருபத்தேழாம் நாளிலும், சிலருக்கு இருபத்தொன்பது முப்பதாம் நாளிலும் சூதகம் வெளிப்படுதலுண்டு. இவ்வேற்றுமை இயல்பு. அவரவர் உடல் நிலைக்கேற்றவாறு அவ்வக்கால வெல்லைக்குள் பூப்புறல்வேண்டும். அதில் மாற்றமும் பிறழ்ச்சியும் நிகழ்வது நல்லுடலுக்கு அறிகுறியாகாது. சூதகம் வடிதல் நான்கு ஐந்து நாளுக்குள் நிற்றல் நல்லது. அதற்கு மேற்பட்டு வடிதல் நல்லதன்று. உடற்கூற்றுக் கேற்ற வண்ணம் சில நாள் கூடலுங் குறைதலுமுண்டு. மாதவிடாயில் ஒழுங்கீனம் நிகழின் உடனே அதைப்போக்கி ஒழுங்கிற்குக்கொணர முயலவேண்டுவது பெண் மக்கள் கடன்.

பூப்பின் ஒழுங்கின்மைக்குக் கூறப்படுங் காரணங்கள் பலப்பல. ஒழுங்கின்மைத் திறங்களும் பற்பல. அவைகளை மருத்துவ நூல்களிற் காண்க.

இளமை தொட்டு ஒழுக்கங்காத்து, உணவு உறக்கம் முதலியவற்றில் ஏற்றமிறக்க மின்றி அளவாக்கொண்டு, உடற்பயிற்சி முறையாகச் செய்து, இயற்கைக்கு அரணுமாறு வாழ்ந்து வருவோர்க்கு மாதவிடாயில் தவறுதல் நிகழாது. மாதப்பூப்பின் ஒழுங்கு பெண்ணின் வாழ்வின் ஒழுங்காகும். ஆதலால் மாதவிடாயில் தவறுதல் நிகழ்ந்ததும் பெண்மணி, தக்க மருத்துவர் பால் சென்று, உற்ற குறைபாடுகளை முறையிட்டு, அவர் வழி நின்றொழுகி அதை ஒழுங்கு படுத்திக்கொள்ளல்வேண்டும்.

மரஞ்சுற்றல் மலையேறல் முதலிய வழக்கங்கள் நல்லன.

பிறழ்ச்சி: பெண்மக்கள் போதிய பயிற்சியின்றி ஒரேயிடத்தில் கிடத்தலானும், பல காரணங்களால் மலச்சிக்கல் உறுதலானும், வேறுபல காரணங்களானும் கரு உறுப்பு இடம் விடுத்துச் சரிதல் ஏறல் தாழ்தல் நிகழ்வதுண்டு. இதற்குச் சிறந்த காரணம் உடலுரமின்மையே யாகும். தக்க மருத்துவரைக் கொண்டு உடனே கரு உறுப்பு நிலையை யொழுங்குபடுத்தல் வேண்டும். ஒழுங்கு பட்டதும் உடற்பயிற்சியானும் நல்லுணவானும்

பிற இயற்கை முறைகளானும் உடலை நலனுறச் செய்தல் அறிவுடைமை.

கரு உறுப்புப் பிறழ்ச்சியுணராது வாளா கிடந்தால் பின்னர்ப் பலதிற இன்னல்கள் விளையும். சிலபோழ்து சத்திரஞ்செய்யவும் நேரும். கருப்பையின் பிறழ்ச்சி யுணராது "பிள்ளைப்பே றில்லையே" என்று வருந்தி வருந்திச் சிலர் அழுவது முண்டு. சில நாயகன்மார் மறுமணஞ் செய்கிறார். இயந்திரகாலத்தில் வாழும் தற்காலப் பெண்ணுலகிற்குக் கருப்பை பிறழ்ச்சி மிக இயல்பாகி விட்டது. ஓரேயிடத்தில் கிடந்து எந்நேரமுந் தின்று, போகந் துய்த்துக் கொண்டிருந்தால் கருப்பையும் நெகிழும்; பிற உறுப்புக்களும் தளரும். எல்லா நலன்களுக்கும் உடற்பயிற்சி, நீராடல், காற்றில் உலவல், ஞாயிற்றொளியில் நிற்றல், பொருந்திய உணவருந்திப் போகத்தில் அளவாயிருத்தல் முதலியன வேண்டற்பாலன.

மலச்சிக்கல்: மலச்சிக்கலைப்பற்றி இந்நூற்கண் பலவிடங்களில் ஒவ்வொரு முறையில் குறிப்பிட்டு வருகிறேன். ஈண்டுஞ் சில உரை பகர்கிறேன். உறங்கி எழுந்ததும் அன்றாடம் மலங்கழித்தல் வேண்டும். மலம் முற்றுங் கழியாது, சிக்குற்

றுத் தங்குமேல் அது நஞ்சாகிப் பலதிற நோய் களை யுண்டுபண்ணும். ஏறக்குறைய எல்லா நோய் களையும் பிறப்பிப்பது மலச்சிக்கல் என்பதை ஆராய்ச்சியிற் காணலாம். ஆதலால் மலச்சிக் கலைப்போக்க முயல்வது நோய் வரவொண்ணு தவாறு தடுக்க முயல்வதாகும். உடற்பயிற்சி யில் கவலை செலுத்தாது சோம்பிக் கிடத்தல், பொருந்தா உணவருந்தல், மீதூண் கொள்ளல், கண் விழித்தல், அடிக்கடி மருந்துண்ணல் முத லியவாற்ருன் மலச்சிக்கலுறுகிறது. அளவு மீறிய போகத்தாலும் மலச்சிக்கல் விளைவதுண்டு. மலச் சிக்கலைப்போக்க அன்றாட உணவு உறக்கம் பழக்க வழக்கம் முதலியவற்றை ஒழுங்குபடுத்திக்கொள் ளல்வேண்டும். உடற்பயிற்சி இன்றியமையாதது. பழவுணவு மலச்சிக்கலைப் போக்கும். போதிய அளவு நீர் அருந்தல் மலச்சிக்கலுக்குப் பெரு மருந்து. கத்திரிப்பிஞ்சு, வண்டைப்பிஞ்சு, வெங் காயம், தக்காளி முதலியன உண்டுவரின் மல மிறங்கும். எம்முயற்சியானும் மலங்கழியா தொழியுமேல் எனிமாவால் அதைக் கழித்தல் வேண்டும். காலையில் நறு நீராடல் வேண்டும். நீராடலைப்பற்றி முன்னருஞ் சொல்லப்பட்டிருக்

கிறது. ஆற்று நீர் ஊற்று நீரில்லாத விடங்களில் தொட்டியில் நீர் நிரப்பி அதில் சிறிது நேரம் ஐந்து அல்லது பத்து நிமிடம் காலும் தலையும் நீரில் தோயாதவாறு அமர்ந்து பின்னர்த் தலை முழுகலாம். இது கூன் என்பார் கொண்டமுறை. இது குடருக்கு வலிமை யூட்டி, குருதி பெருக்கி, மலக்கழிவை ஒழுங்குபடுத்தும்.

வியர்வை: அன்றாடம் வியர்வை இறங்குதல் உடல் நலனைக் காப்பதாகும். வியர்வை இறங்காமல் உள்ளே தங்குவது உடலில் நஞ்சை இருத்துவதை யொக்கும். உழைப்பானும், உடற்பயிற்சியானும் வியர்வை கழிக்கலாம். வியர்வை எளிதில் இறங்காவிடின் வேதி அதாவது நீராவி பிடித்தல் நலம். சிலர் தலைநோயால் பிடிக்கப்பட்டிருக்கும் போது வேதி பிடித்ததும் அந்நோய் நீங்கப்பெறுகிறார். நீக்கத்தக்குக் காரணமென்னை? வெளியே வராது உள்ளே தங்கிக்கொண்டிருந்த நச்சு நீர் வெளி வந்தமையாகும். வியர்வை கசியா இடங்களில் குருதியோட்டங் குறைவதுண்டு. நாளடைவில் அவ்விடம் மரத்தும்போகும். வேதி பிடித்தலால் நச்சை இறக்கி நலம்பெறலாம். வியர்வை சொட்ட வேலைசெய்வது சிறப்பு. உறக்கத்துக்குப்

போம்போதும், உறக்கத்தினின்று எழும்போதும் உடலை நன்றாகத் தேய்த்துக் கொள்வது நலம். தூய நீராடி மேலழுக்குகளைப் போக்கல் வேண்டும்.

பிராணயாமம் : பிராணயாமம் அட்டாங்க யோகங்களுள் ஒன்று. பண்டைக்காலத்தில் நமது நாட்டார் ஒவ்வொருவரும் பிராணயாமத்தை ஐந்தாம் ஆண்டில் தொடங்கிப் பதினாறும் ஆண்டில் முற்றுறச்செய்து தேர்ச்சிபெறுவர். இப்பொழுது பிராணயாமம் ஏட்டில் பாட்டில் மட்டுங் கிடக்கிறது. இலட்சத்தொருவர் பிராணயாமஞ் செய்வதும் அரிதாயிற்று. உடலோம்பு முறைகளில் பிராணயாமம் உயிர் போன்றது. பிராணயாமத்தில் தேர்ச்சிபெற்ற ஒருத்தியையோ ஒருவனையோ நோயென் செய்யும்? பிணி என் செய்யும்? யமன்தான் என் செய்வன்? அப்பயிற்சியை நமது நாடு இழந்துவிட்டது. பெரிய உயர்செல்வத்தை நாடு இழந்தது.

இப்பொழுது பிராணயாமத்தை முறையாகச் செய்வோர் அரியர். ஏடுகளில் படித்து இரேசக பூரக கும்பகத்தி லிறங்குவது தவறு. பிராணயாமம் பிழைபடச் செய்தால் பல கேடுகள் விளை

யும். தக்கார் மாட்டுக் கேட்டுப் பிராணாயாமத்தில் தலைப்படுவதே அறிவுடைமை. பிராணாயாமத்தின் ஒரு கூறாகிய தூய நறுங்காற்றை மூக்கின்வழி நன்றாக ஈர்த்து, நுரை ஈரற் குழல்களில் நிரப்பிச் சுழற்றி, வெளிவிடுவதை (Breathing Exercise) ப்பயின்று வந்தால் போதும். நாடோறும் இதைச் செய்து வருவோர்க்கு நோயணுகாது ; ஆயுள் பெருகும்.

“ புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கு முரோமங் கருக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே ”

எனவரூஉந் திருமூலர் திருவாக்கையோர்க. இப்பயிற்சியை நகரங்களில் சாக்கடை மல அறை முதலிய தீ நாற்றம் வீசும் இடங்களில் செய்தல் கூடாது. நச்சுக் காற்று வீசாத இடங்களில் அமர்ந்து செய்வது நலம். கடலோரம், மலையுச்சி, பரந்தவெளி, காடு முதலிய விடங்கள் இப்பயிற்சிக் குரியன.

நமது நாட்டுப் பெண் மக்கள் பெரிதும் காற்றுள்ள விடங்களில் வாழ்வதில்லை. அவர்கள் புழுங்கிய அறைகளில் வாழ்கிறார்கள் ; கரிவாயு செறிந்த

அடுப்பங்கரையில் உறங்குகிறார்கள். கிராமத்தில் வயல்களில் வேலை செய்யும் பெண் மக்கள் உடல் நிலையையும், நகரங்களில் மாடியில் ஏறி நிற்கும் பெண் மக்கள் உடல் நிலையையும் உற்று நோக்கினால் வேற்றுமை காணலாம். முன்னவர்களிடத்தில் அழகுத் தெய்வம் ஆனந்தத் தாண்டவம் புரிகிறது. பின்னவர் உடலில் பிணியெனும் பேய் உறங்கிக் கொண்டிருக்கிறது. காரணமென்னை? அவர்கள் நறுங்காற்று வீசும் வெளியில் வேலை செய்கிறார்கள்; நறுங்காற்றை நன்றாக முகர்கிறார்கள். இவர்கட்கு அவ்வுணவேது? காப்பி உப்புமா என்னும் நஞ்சல்லவோ இவர்கள் உணவு? அவர்கள் இயற்கைச் செல்வத்தில் புரள்கிறார்கள்; இவர்கள் செயற்கைச் செல்வத்தில் கிடக்கிறார்கள். முன்னையது வீடுபேறு; பின்னையது நரகம். இது நிற்க.

பெண்மகள் புழுங்கிய அறையில் சிறைப்பட்டுக் கிடப்பதும், அடுப்பங்கரையில் அடைபட்டுக் கிடப்பதுந் தொலைதல் வேண்டும். பெண்மகள், காற்றும் ஒளியும் வீசும் இடங்களில் உலவியும் உறங்கியும் பொழுது போக்குவாளாக; காற்றை நன்றாக மூக்கின் வழி முகர்ந்து முகர்ந்து விடுவா

ளாக. அஃது உடலிலுள்ள ஊறுகளைப்போக்கி நலஞ்செய்யும்.

சிறு நீர் : சிறு நீர் என்பது மூத்திரம். பெண் மக்களிற்பலர் காலத்தில் மலசலங் கழியாது அடக்குதலுண்டு. அதனால் மலச்சிக்கலும், நீர் கட்டும் நேர்கின்றன. நீர் அடைப்பால் குண்டிக் காய்க்கு ஊறு நிகழும். குண்டிக்கா யெனும் மூத்திரப் பையைத் தூய்மையாக வைத்திருத் தல்வேண்டும். சிறு நீரடக்கும் பயிற்சி மிகக் கொடிது; கொடிது. நாடோறும் போதிய நீர் பருகி வேளைக்குவேளை சிறு நீர் பெய்துகொண் டிருந்தால் நோயணுகாது. பெண்மக்கள் மல சலத்தை அவ்வப்போது கழித்து வருவாராக.

பித்தம் : பித்தச் சுரப்பிற்குப் பிறப்பிடம் ஈரல் (Liver). அவ்வுறுப்பின் இயக்கத்துக்கு எவ்வித இடையூறும் நிகழா முறையில் வாழ்வு நடாத்தல் வேண்டும். அதன் இயக்கங் குன்றினால் முழு உடலுக்குங் கேடு நிகழும். ஒருவரது உடல் நிலை அவரது ஈரல் நிலையைப் பொறுத்து நிற்கிறது. பித்தச்சுரப்புக் குன்றினால் உண்ணும் உணவு சரிப்படுதெப்படி? சரியாமல் உணவு கிடப்ப தால் விளைவதென்னை? குருதியோட்டங் குன்றி

மற்றக் கருவிகளின் இயக்கமுங் குலையும். ஆத லால் ஈரல் நிலைமீது பெருங் கவலை செலுத்த வேண்டுவது மக்கள் கடமை. காபி தேயிலை கொக்கோ முதலிய பொருந்தாப் பானங்கள், கள் சாராயம் முதலிய குடிகள், உறக்கமின்மை, புலால் உணவு முதலியன ஈரல் இயக்கத்தைக் கெடுக்கும்; ஈரலை மலரச்செய்யும்; இடம் விடுத் துப் பெயர்ப்பிக்கும். இவைகளைக் கனவிலும் மறந் துங் கருதலுங் கூடாது.

நோன்பு: நோன்பைப்பற்றி இந்நூற்கண் சில விடங்களில் சுட்டிச் சுட்டி வருகிறேன். நோன்பு கொள்ளும் முறையை யாண்டுஞ் சுட்டிக் குறிப் பிட்டேனில்லை. ஆதலால் அது குறித்து ஈண்டுச் சிறிது சொல்கிறேன்.

நோன்பெனினும் விரதமெனினும் ஒக்கும். உலகிலுள்ள எல்லா நாடுகளினும் நமது நாடு விரதத்தில் பேர்பெற்றது. விரத மாண்பு கூறாத புராணங்களில்லை என்று கூறலாம். பண்டை மக் கள் நோன்பின் பெற்றியைச் செவ்வனே யுணர்ந்து வாழ்ந்தார்கள். பெரிதும் பெண்மக்கள் நோன்பில் ஈடுபட்டு வந்தார்கள் என்று சொல்ல வேண்டுவதில்லை. இன்னும் அது பெண்மக்க ளிடையே நிலவிக்கொண்டிருத்தல் கண்கூடு.

பெண்மக்கள் கடைப்பிடித்தொழுகும் இந்நாளைய விரதம் வெறும் பெயர் அளவினதன்றிப் பொருள் அளவினதன்று. "விரதம் விரதம்" என்று காலையும் இரவும் விலாப்புடைக்கப் பலகாரங்களைத் தின்று, பகல் வயிறு கிழிய அறுசுவை உணவுகொண்டு கழிப்பது, விரதத்துக்கு முற்றும் மாறுபட்ட தொன்றென்பதைப் பெண்மக்கள் உணர்வார்களாக.

விரதம் எற்றுக்கிருப்பது? உடலில் சேரும் பிணியைப் போக்குதற்கு விரதமிருப்பது வழக்கம். விரதத்தால் உள்ளுறுப்புக்கள் சுமை நீங்கப்பெற்று, விடுதலை யடைந்து, தத்தங் கடன்களை மகிழ்ச்சியுடன் நிகழ்த்தும். அன்றாடம் உண்ணும் உணவில் சரியாமல் எஞ்சி நிற்கும் நஞ்சையும், பிறவற்றையும் வெளியாக்கும் ஆற்றல் விரதத்துக்குண்டு. அவை வெளியாகாமல் உள்ளே கிடக்குமேல் பலதிற நோய்கள் தோன்றும். அந்நோய்கள் மருந்துண்பதால் சிறிது விடுதலை நிகழும். மீண்டும் பழையபடியே நோய்காணும். பொருந்தா மருந்துகள் வேறு கேடுகளையும் நிகழ்த்தும். ஆதலால் மருந்துண்பதினும் விரதத்தால் உறுப்புக்களுக் குற்றுள்ள பிணி போக்கி நோய் கழிப்பது நலன்.

அவரவர் உடல் நிலைக்கேற்ற வண்ணம், வாரத்திலோ, மாதத்திலோ, ஒரு நாளோ இருநாளோ, இன்னுஞ் சில நாளோ கணித்துக்கொண்டு விரதமிருக்க முயலல் வேண்டும். விரதத்துக்கு முன்னாள் பகல் உண்டு கழித்த பின்னர் அன்றிரவு எவ்வித உணவும் உண்ணலாகாது. நீர் அருந்துவது நலம். அடுத்தநாள் வைகறைத் துயிலெழுந்து காலைக்கடனை முடித்துக் கொள்ளல் வேண்டும். காலைக்கடனில் மலஞ் செவ்வனே கழியா தொழியுமேல்,எனிமாவால், மலத்தை முற்றும் போக்கல் வேண்டும். பின்னர் நீராடி அமைதியும், காற்றும், ஞாயிற்றொளியும் நிலவிப் படரத்தக்க ஓரிடத்தில் அமர்ந்து, அன்பு வடிவான கடவுளை நினைந்திருத்தல் வேண்டும். அடிக்கடி நெஞ்சு வறட்சியுண்டாகும் போதெல்லாம், ஒருவித சிறு மயக்கம் இளைப்பு களைப்பு தோன்றும்போதெல்லாம் நீர் சிறிது சிறிதாக அருந்திக் கொண்டிருத்தல்வேண்டும். நீரருந்தாது விரதமிருப்போர்க்கு வெஞ்சுரம், இரத்தக் கழிவு முதலியன தோன்றும். உள்ளுறுப்புக்கள் வறண்டுபோகும். பலதிற இன்னல் விளையும். ஆதலால் நீரருந்துதல் பெரிதுங் கவனிக்கப்படல் வேண்டும்.

விரத காலத்தில் எவருடனும் பேசுதலாகாது; உள்ளத்தில் பொறாமை வெகுளி முதலிய எரிகள் எக்காரணம் பற்றியும் உறுதல் கூடாது. அவை யுறுத்தும் எதன் கண்ணும் நோன்பினர் ஈடுபடுத லாகாது. அவ்வெரி விரதத்தைக் குலைத்து, உடலுக்கும் ஊறு செய்யும்.

நாள் முழுவதும் நீர் அருந்தி, நோன்பிருந்து, மறுநாள் காலை யெழுந்து, வழக்கம்போலக் கடன் களை முடித்தல் வேண்டும். முன்னாள் உணவு கொள்ளாமையால் மலம் வாராமை கண்டு வாளா இருத்தல் கூடாது. எனிமா உபயோகித்தால் அழுக்குகள் வந்து விழுவது காணலாம்.

நோயாளர்கள் இந்நோன்பை இம்முறைப்படி பலநாள் தொடர்ந்து கடைப்பிடித் தொழுக லாம். நோயிலார் வாரத்துக் கொருநாள் அல்லது திங்கட் கொருநாள் நோன்பிருத்தல் சாலும்.

நோன்பு கழித்து உணவுகொள்ளப் புகும் போது, மிக எச்சரிக்கையா யிருத்தல் வேண்டும். திடீரெனக் கடினமான உணவுகொள்வது மடமை. நோன்பு கண்ட உறுப்புக்களில் திடீரெனச் சோறும், காய் கறிகளும், கிழங்குகளும் விழுதல் உறுப்புகளின் கடமைகளைக் கட்டுப்படுத்தி நோய்

செய்யும். ஆதலால் படிப்படியாக உணவைப் பெருக்கல் நலன். நீர் அருந்திப் பின்னைப் பழ ரசமருந்தி, பின்னை நீர்மோர் அருந்தி, பின்னை நீர் கலந்த பாலருந்தி, பின்னைக் கஞ்சிபோன்ற உணவருந்தி, வழக்க உணவு கொள்வது பொருத்தம்.

நோன்பு வாயிலாக உடலைச் செம்மை வழியில் ஓம்பி வரலாம். நோன்பிற்குப் போதகாசிரியர் வேண்டுவதில்லை. இரண்டொரு முறை பயிற்சி செய்வோர்க்கு இயற்கை அன்னையே வழிகாட்டுங் குருவாகிறாள். இஃது அநுபவத்தில் உணரக் கிடப்பது.

நல்வழியில் உடலோம்பி நலனுற்று வாழ்வதே பெண்மக்களுக்கழகு.) நோயிலா ஒன்றே பெண் மை யென்பது. பெண்மையில் நோய் நுழைவது பெண்மைக்குரிய தாய்மையைக் கெடுப்பதாகும். பெண்மக்கள் கருவுயிர்க்கும் பேறுடையராக லின், அவர்கள் ஆண்மக்களினும் உடல் நல னைப் பெரிதுங் கருதல் வேண்டும். ஆண் மக் களும் பெண்மக்கள் உடல் நலன்மீது கருத்தை யிருத்தல் வேண்டும். கருவுற்றுள்ளபோதும் கருவுயிர்க்கும் போதும் எவ்வளவோ ஜீவ சத்துக்

கள் குறைகின்றன. அவைகளுக்கு ஈடு செய்யும் முறையில் பெண்ணுடல் ஓம்பப்பட்டு வரல்வேண் டும். "கர்ப்பந்தான் மங்கையர்க்கழகு குன்றும்" என்று நம்மவர்கள் சொல்வது வழக்கம். அவ் வழக்கைப் பொய்ப்படுத்தல் வேண்டும். கரு வுயிர்த்த பின்னரும் பெண்மக்கள் கன்னிக்காட்சி யையே வழங்கும் நிலையில் இயற்கை வாழ்வு நடாத்தல் வேண்டும். அழகு என்னுந் தெய்வம் பெண்மக்களை விடுத்து என்றும் அகலலாகாது. அவர்கள் மார்பு திரட்சி அவர்கள் உடல் நல னுக்கு அறிகுறி. அது கெடாதவாறு பெண் வாழ்வு உலகில் நடப்பதாக.

"உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"

—திருமூலர்.

கக. பதியிலார்

“ புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்
விதுப்பற நாடின் வேறல்ல—புதுப்புனலு
மாரி யறவே யறுமே யவரன்பும்
வாரி யறவே யறும் ”—**நாலடியார்.**

பெண்ணுலகம் ஒரு தெய்விக உலகம். அதனை கண்ணும் ஒரு கறைபடிந்திருக்கிறது. அக்கறை யொழியும்நாள் எந்நாளோ தெரியவில்லை. ஆணுலகந் தூய்மையுறுநாளே அந்நன்னாளென்க.

பெண்ணுலகில் படிந்துள்ள அக்கறையாது? அக்கறை பதியிலார் கூட்டமென்பது. பதியிலார் யாவர்? பதியில்லாத அனைவரையும் பதியிலார் என்று உலகம் அழைக்கிறதோ? இல்லை. நோயாளர் பலர், பேடிகள், படைப்பில் சில குறைபாடுடையபலர் முதலியோர் பதியின்றி வாழ்கின்றார். அவரைப் பதியிலார் என்று உலகம் உரைப்பதில்லை. பின்னை எவர்க்கு உலகம் பதியிலார் என்னும் பட்டஞ் சூட்டியிருக்கிறது? குறிப்பிட்ட பதி அதாவது நாயகன் இன்றிப் பலருடன் கூடிப் போதுபோக்கும் பெண்ணினத்தார்க்கு உலகம் அப்பட்டஞ் சூட்டியிருக்கிறது. பதியிலார்க்குப் பொதுமகளிர், வரைவின் மகளிர், கணிகையர்,

வேசையர் முதலிய பெயர்களும் வழங்கி வரு கின்றன.

வயிற்றுப் பிழைப்புக்கென மானம் விற்கும் பதியிலாக் கூட்டம்போக, வேறு பதியிலாக் கூட்டங்களுமுண்டு. அக்கூட்டத்தார் நற்குடியிற் பிறந்தவராகவும், செல்வமுடையவராகவும், கல்வியுடையவராகவும், உயர் பதவியிலுள்ளவராகவுமிருக்கிறார். அன்னார் தற்கால நாகரிகக்கள்ளுண்ட மயக்கால் பதியிலாராகிறார். சில பெண்மக்கள் பல காரணம் பற்றித் திருமண வாழ்வு ஏலாது, வேட்கை மீதூரும்போது, சிலருடன் கூடி விளையாடிக் களிக்கிறார்கள். ஒருவேளை கருவுறின்மேல் சிறிதும் இரக்கமின்றி அவர்கள் அக்கருவைச் சிதைக்கிறார்கள். அக்கூட்டத்தாரும் அவரையபிறரும் பதியிலார் இனத்திற் சேர்ந்தவரேயாவர்.

இப்பதியிலாக் கூட்டம் உலகில் யாண்டுமிருக்கிறது. இக்கூட்டமில்லா இடமேயில்லை. எந்நாட்டிலும் எவ்வூரிலும் இச்சேனைகளைக் காணலாம்; எல்லா வகுப்பிலும் இக்குழுவின ரிருக்கிறார்; நமது நாட்டிலும் இக்கூட்டத்தாருளர்.

அங்ஙனமாக நமது நாட்டில் ஒரு சாதியார்க்கு மட்டும் பதியிலார் என்னும் பெயர் வழங்கப்பட்டு

வருகிறது. நமது நாட்டில் பிறப்பை யொட்டிச் சாதிகள் வகுக்கப் பட்டமையான், இவ்விழி தொழிலுக்கும் பிறப்பை யொட்டி ஒரு சாதி வகுக்கப்பட்டதுபோலும்! என்ன கொடுமை!

நீண்ட காலப்பழக்கத்தால் அச்சாதியாரும் தமது இழிவை யுணராது வாழ்கிறார். வேசைத் தொழிலும் வழி வழியாக நடந்து வருகிறது. வேளாளன் பிள்ளை வேளாளனாகக் கொள்ளப்படு வது போல, வேசியின் பெண்ணும் வேசியாகவே கொள்ளப்படுகிறாள். இது நாட்டின் சிறுமையைப் புலப்படுத்துகிறது. பிறப்புவழிச் சாதி கொள் ளும் முறை என்றோ தொலையும்?

இச்சாதிப் பதியிலாரைப் பற்றிப் பலப் பல கதைகள் புராணங்களில் சொல்லப்படுகின்றன. சரித்திரமுறையிலுஞ் சில வரலாறுகள் சொல்லப் படுகின்றன. மற்றக்குலத்தார்க்கு வரலாறுகள் புனையப்பட்டதுபோல இக்குலத்தார்க்குஞ் சில வரலாறுகள் புனையப்பட்டன போலும்! இவை யாவும் சாத்திரம் புராணம் கலை என்னும் பெயர் களால் நாட்டிடை உலவிக்கொண்டிருக்கின்றன.

புராணங்களில் சாதிப்பதியிலார்க்குத் தோற்று வாய் கூறப்பட்டிருக்கிறது. அன்னார் தெய்வத்

தோற்றுவா யுடையாரென்றும், அவ்வினத்தார் ஒவ்வொரு குடும்பத்தினின்றும் ஒவ்வொரு பெண்ணைக் கடவுள் பணிக்கென அர்ப்பணஞ் செய்ய வேண்டுமெனும் வரமுடையாரென்றும், அப் பெண்மக்கள் கடவுள் ஒருவரையே பதியாக் கொண்டு ஏனையோரைப் பதியாக் கொள்ளாமையால் அவர்கள் பதியிலார் என்று அழைக்கப்பட்டார்களென்றும், நாளடைவில் அவர்களிடைக் கூடா ஒழுக்கம் நுழைந்துவிட்டது என்றுஞ் சொல்லப்படுகின்றன.

கிரீஸ் தேசத்தில் கோயில்களிலும், அரண்மனைகளிலும் பதியிலாப் பெண்மக்கள் முறையே பணியாளர்களாகவும் தோழிமார்களாவும் தொண்டு செய்து வந்தார்களென்றும், அவர்களிற் சிலர் இந்திய மன்னர்களால் வரவழைக்கப் பட்டனர் என்றும், அவர் வழித்தோன்றிய கூட்டத்தாரே பதியிலார் என்றுஞ் சரித்திரக்காரர் சிலர் சொல்கிறார்.

பதியிலார் வரலாற்றைப்பற்றிய ஆராய்ச்சி ஈண்டு வேண்டுவதில்லை. பதியிலார் என்றொரு கூட்டம் நாட்டிலிருத்தல் உண்மை. அன்னார் இன்னும் கோயில் பணி செய்துகொண்டும், இழி

தொழில் நிகழ்த்திக்கொண்டு மிருத்தல் கண்டும், மேற்போந்த கதைக்குறிப்புக் கொண்டும் அவர் வரலாற்றை ஒருவாறு ஊகஞ்செய்யலாம்.

ஒரு காலத்தில் திருமண வாழ்விற்கு உரிய ரல்லாத சில பெண்மக்கள் அரண்மனைகளில் தொண்டு செய்து காலங்கழித்து வந்ததாகத் தெரிகிறது. பண்டை நூல்களில் வேலைக்காரிக்குக் கூனி என்னும் ஒரு பெயர் வழங்கி யிருத்தல் காண்கிறோம். அரண்மனைவேலை விரும்பாத வேறு சிலர் ஆண்டவன் கோயில்களில் தொண்டாற்றப் புகுந்திருப்பர். அவருடன் வேறு சில ஊன மிலாப் பெண்மணிகளுஞ் சேர்ந்து ஆண்டவன் அருள்பெறப் பணியாற்றியிருப்பர். இப்பழக்கத்தால் கோயிலில் சில தொண்டுகள் பெண்மக்களுக்கென ஏற்பட்டிருக்கும். அத்தொண்டாற்றி வந்த பெண்மக்கள் தேவடியாள் தாசி என்று அழைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்று அச்சொற்களின் ஆட்சியால் நன்கு தெரிகிறது. தேவனுக்குப் பணி செய்யும் ஆடவன் தேவடியான் தாசன் ஆகிறான்; அப்பணி புரியும் மகளிர் தேவடியாள் தாசி ஆகிறாள். ஆண்டவன் பணிக்கென வாழ்வு நடாத்திவந்த பெண்ணன்பர்கள் கோயில் அர்ச்ச

கர், தர்மகர்த்தர் முதலியவர்களோடு பழகல் நேர்ந்தது. இப்பழக்கம் நாளடைவில் கூடா ஒழுக்கத்தைக் கூட்டலாயிற்று. அன்று கோயில் தலைவர்களாக விருந்த ஆண்மக்கள் நிகழ்த்திய அடாச செயல் இன்று பெண்ணுலகையே கறைப்படுத்தியிருக்கிறது. தேவனுக்கு அடிமை பூண்டோர் மற்றவர்க்கும் அடிமை பூண நேர்ந்தமையால் தேவடியாள் தாசி என்னும் பெயர்கள் இழிபொருள் ஏற்கலாயின. இப்பொழுது அச்சொற்கள் குலமகளிரில் கடவுள் அடியவர்க்கு வழங்குவதில்லை. அவை விலை மகளிர்க்கே வழங்கிவருகின்றன. தொன்று தொட்டு வரூஉம் வழக்கத்தால் அவ்வினத்தார் ஆண்டவன் பெயரால் பொட்டுக்கட்டி மானம் விற்கும் விலைமகளிராகின்றனர். இப்பழக்கம் நாட்டை விடுத் தகலல்வேண்டும்.

இவ்விலைமகளிர்கள் தேவடியாள் என்னும் பெயரால் இழிதொழிலுக்கெனப் பட்டாடை சுற்றி அலங்கோல அணியணிந்து ஆடும் ஆட்டமும் பாடும்பாட்டும் வெறுக்கத்தக்கன. ஒழுக்கத்துக்கு நிலைக்களனா யிருக்கவேண்டிய திருக்கோயில் கூடா ஒழுக்கத்துக்கு நிலைக்களனாய் ஊரைக் கெடுப்பதாய் விட்டது. தாய்மை எனும் பேறு

பெற்றுத் தெய்வ நிலை எய்தற்குப் போந்த பெண் வடிவம், தீச்சேர்க்கையால் தன்னிலை மறந்து, மானம் விற்றுப் பொருளீட்டுங் குறிக்கொண்டு ஆடுகிறது; பாடுகிறது. அக்காட்சி கண்டுகளிக்கும் மக்கள் மக்களா? நாட்டிற் பிறந்தவர்களா? அவர்கள் பெண்ணுடன் பிறக்கவில்லையா? பெண்ணுடன் வாழவில்லையா? அவர்கள் உள்ளத்தில், " ஆடுகின்றவள் பெண்; பாடுகின்றவள் பெண்; இவள் எற்றுக்கு இக்கோலத்தோடு ஆடுகிருள்? பாடுகிருள்? நமது பேதைப் பொருள் பறிக்க வேண்டும் என்னும் நோக்குடன் அன்றே? நமது வீட்டுச் சகோதரிக்கும் இவளுக்கும் என்ன வேற்றுமை?" என்னும் எண்ணம் உறல்வேண்டாமா? உற்ருல் அவள் நல்வழிப்படுவாள். பாரத நாட்டிற் பிறந்த ஆண்மக்களே! மானம் விற்றலுக்கெனப் பிறப்பில் ஒரு சாதி நமது நாட்டில் ஏற்பட்டுள்ள இழிவை நினையுங்கள்; கோயில்களில் கூடா ஒழுக்கம் பெருகுவதை நோக்குங்கள்; தீயொழுக்கத்தால் நாட்டுக்கு நாசமுண்டு என்பதை உன்னுங்கள்; கூடா ஒழுக்கத்தால் பின் வரும் உலகம் மெலிவதை எண்ணுங்கள்; பெண் பிறவி நோக்கம் மானம் விற்றுப்பிழைப்பதா?

நமது நாட்டிற் பிறந்த சகோதரிகள் வயிற்றுக்கு மானத்தையா விற்றல்வேண்டும்? இழிவு! இழிவு! விலங்குகளும் வயிற்றுக்கென மானம் விற்பதில்லையே; நமது நாட்டிற் பிறந்த பெண் தெய்வங்கள் பிழைப்புக்கென மானம் விற்றல் என்ன இழிவு! இழிவு!

இழிவு யாருடையது? நாட்டிற் பிறந்த ஆண் மக்களுடைய தன்றோ? நீண்டநாள் பழக்கத் தால் அறியாமையால் அப்பெண்மணிகள் அவ் விழி தொழிலில் இறங்குகிறார்கள்; அதற்கு ஆண்மக்கள் ஏன் உடன்படல் வேண்டும்? ஆண் மக்களிடை ஒழுக்கநிலை காக்கப்படுமேல், பெண் ணுலகில் இழிவேது? ஆதலால் ஆண்மக்களே! பெண்ணுலகை இழிவுபடுத்த முன்னோதேயுங் கள்; பதியிலாப் பெண்மக்கட்குப் பெண்மையின் நோக்கத்தை அறிவுறுத்துங்கள்; கூடா ஒழுக் கத்தால் விளையுங் கேடுகளை அவர்கட்கு உணர்த் துங்கள்; உண்மை விளங்கப் பெறுவரேல் அவர் கள் பதியிலாராக வாழ மனங்கொள்ளார்கள்; அவர்களைப் பதியுடையராகச் செய்யுங்கள்; இதனி னுஞ் சிறந்த ஒரு தொண்டு உண்டு கொல்! இது பெருந்தேசத்தொண்டு; தெய்வத்தொண்டு; இத்தொண்டாற்ற முந்துங்கள்.

நாட்டிற் பிறந்த குலப்பெண்டிர்காள்! ஆடுகிற வர் யார்? பாடுகிறவர் யார்? பதியின்றி வாழ்வோர் யார்? உங்கள் இனத்தவரல்லவா? உங்கள் நாட்டிற் பிறந்த சகோதரிகளல்லவா? உங்கள் உலகு எனில் அவ்வுலகில் அவர்கள் அடங்கவில்லையா? அக்கறை உங்கள் உலகையுங் கெடுக்கவில்லையா? அவர்களை நல்வழியில் திருப்பவேண்டுவது உங்கள் கடமை யன்றோ? தாயாகிய நீங்களல்லவா நாட்டைத் தூய் மைப்படுத்தல் வேண்டும்? பதியிலார் உள்ளமட் டும் உங்கள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகள் எங் ஙனந் தூயராவார்கள்? பெற்ற பிள்ளைகளை நல்ல வர்களாக்க நாட்டில் பதியிலாரை ஒழுங்குபடுத்த வேண்டுமல்லவா? சகோதர உரிமைகொண்டு- இன உரிமை கொண்டு-வழுக்கி வீழ்ந்த சகோ தரிகளைத் தூக்கிவிடுங்கள்.

பதியிலார் என்னுங் குலத்தவர் மட்டும் இப் பொழுது விலைமகளிராகிறாரில்லை. வேறு பல குலத்தினின்றும் பல காரணங்களால் ஒதுக்கப் பட்ட சகோதரிகளும் விலைமகளிராகிறார்கள். நாளுக்கு நாள் விலைமகளிர் கூட்டம் பெருகு கிறது. அத்தொழிற்கென வீடுகள்; விடுதி கள்; வாணிபங்கள்; தரகுகள் முதலியன ஏற்

பட்டிருக்கின்றன. இதற்கு வறுமை ஒரு காரணம்; பொதுவாக நாட்டில், சிறப்பாக ஹிந்து மதத்தில் பெண்ணுலகிற்கு ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றொரு காரணம்; தற்கால நாகரிகம் இன்னொரு காரணம். வேறு சில காரணங்களுமுண்டு.

கூடா ஒழுக்கத்தால் விளையுங் கேடுகளைப்பற்றி இந்நூலில் பல விடங்களில் பேசி வருகிறேன். அது குறித்து ஈண்டுஞ் சில மொழி பகர்கிறேன்.

முதலாவது கூடாவொழுக்கத்தால் உடலுக்குக் கேடு உண்டு என்பது உன்னற்பாலது.

உற்ற வயதில் ஒருத்தியும் ஒருவனுஞ் சேர்ந்து வாழல் வேண்டுமென்பதற்குச் சொல்லப்படுங் காரணங்களுள் உடல் நலன் பேணுவதும் ஒன்று. விபசாரத்தால் அந்நலன் நேர்வதில்லை. நலனுக்குப் பதிலாகக் கேடு நிகழ்கிறது.

உடல் நலனுக்கு ஊற்றாயிருப்பது இன்பம். அவ்வின்பம் அன்புள்ள இடத்தில் பிறக்கும். பொருட்பெண்டிரிடத்தில் அன்பு உண்டா? அவர் கருத்துப் பொருளிலேயே பதிந்து கிடக்கிறது. பொருளுக்கு மானம் விற்றலை அன்னார் தொழிலாக்கொண்டிருக்கிறார். பொருளில் படியுங் கருத்து அன்பில் எங்ஙனம் படியும்?

அன்பில்லாரிடத்தில் கூடுவது செயற்கைமுறை யென்று முன்னர் ஈரிடத்தில் குறிக்கப் பெற்றி ருக்கிறது. ஈண்டு மீண்டும் அதனை வலியுறுத்து கிறேன்.

ஒருவன் ஒருத்தியுடன் கூடும்போது அதன் பயனாக அவனது சுக்கிலம் அவள் கருவில் நுழை கிறது. அச்சுக்கிலச் செலவை ஈடு செய்ய அவ ளிடத்திருந்து ஏதாயினும் ஒன்று அவனுள் நுழைதல் வேண்டும். அப்படி யொன்றுண்டா? உண்டு. அஃதென்னை? அஃது உடலை யோம்பும் ஒருவித சத்து. அச்சத்து எல்லாரிடத்தும் எப் பொழுதும் கூடும்போதெல்லாந் தோன்றாது. ஈருயிரை ஒன்று படுத்திப் பிணித்துள்ள அன்பு காரணமாக அச்சத்துப் பிறக்கும். அன்பில்லா விடத்தில் அது பிறவாது.

விலை மகளிருள்ளம் பொருளில் படிந்து கிடக்கு மா? அல்லது அன்பில் படிந்துகிடக்குமா? சொல்ல வேண்டுவதில்லை. ஒருத்தியின் உள்ளத்தூறும் அன்பு, கலவியின் போது, கருப்பையின் இன்பச் சினை யுறுப்புக்களின் நுனிகளைக் கிளந்தெழுப்பும். அவ்வெழுச்சியினின்றும் பிறப்பது அச்சத்து. அஃது உடலை வளர்க்கும் அமிழ்தம் போன்றது.

அச்சத்து, பொருட் பெண்டிரிடத்தில் தோன்றுது. அதனால் கலந்த கலப்பு இயற்கையின் பாற்பட்டதாகாது. அது செயற்கையின் பாற்பட்டதாகிறது. அதற்கும் *முஷ்டி மைதுனப் போன்ற செயற்கை முறைகட்கும் என்ன வேற்றுமை? ஒரு வேற்றுமையுமில்லை. இந்நுட்பமுணர்ந்தே ஆசிரியர் திருவள்ளுவனார்,

---

* "They must understand that the life-giving fluid called the semen, which is produced in the creative organs of the man, is of great value in the upbuilding of his own body. It is only within comparatively recent times that the marvellous power of this creative fluid in building up and making over the body of the individual has been thoroughly understood. In sexual intimacies there is a discharge of this creative fluid from the body of the man, but where there is a full response on the part of the wife, there seems to be an exchange of magnetism or energy which makes up for the loss. If, however, his desire alone is active and she is simply fulfilling a supposed wifely duty, she gives nothing to him, and he, therefore, suffers a definite loss in vitality. It is claimed by some that such one-sided intimacies are almost as harmful to the man as masturbation. Frequent indulgence upon this basis must result in a loss of vital energy which will deprive the man of the strength and vigor needed for the performance of his life tasks."—*B. Macfadden.*

“ பொருட்பெண்டிர்பொய்ம்மைமுயக்கமிருட்டறையில்
ஏதில்பிணந்தழீஇ யற்று ”

என்றும்,

“ வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு ”

என்றும் உலகிற்கு அறிவுறுத்தியிருத்தல் காண்க.

பொருட் பெண்டிர் கலவியால் உடல் நலனில்லை என்பது கருதற்பாலது. இந்நலக்கேடு பெண்டிர்க்குமுண்டோ எனில் உண்டு என்க. கலவியில் அமிழ்தச் சத்துப் பிறவாமையால் அவளுக்கு உறுப்புக்களில் வெம்மை எழுந்து நாளடைவில் அவளை நோய்வாய்ப்படுத்தும். ஆதலால் அவளுக்குங் கேடு உண்டென்க.

பொருட்பெண்டிர் கூட்டுறவால் உடல் நலன் கூடாதொழியினும் வேறு பல கேடுகள் விளையாமலிருந்தால் போதும். இயற்கைக்கு மாறுபட்ட விபசாரத்தால் கேடு இல்லாமல் எங்ஙனமிருக்கமுடியும்? கோணிய வழியில் புகுவோரை இயற்கை அன்னை வாளாவிடுவளோ? விடாள்! விடாள்! ஒறுத்தே தீர்வள். உடலோம்பும் அமிழ்தம்போன்ற சத்துக்குப் பதிலாக வெம்மை எழுகிறது என்று மேலே சொல்லப்பட்டது.

அவ்வெம்மை காமவெறியனுள் நுழைகிறது. அவ்வெம்மை முதிர்ந்து முதிர்ந்து எரியாய் வெள்ளையாய்க் கொறுக்காய் மேகரணமாய் ஐயனை அரிக்கத் தொடங்குகிறது. பொருட்பெண்டிர் இன்பம் அப்பொழுது ஐயனுக்குப் புலனாகிறது. அவனுக்கும் நாளடைவில் நோய்த்துயர்மிகும். பதியிலார் கதி இவ்வாறாக முடிகிறது!

இன்னுஞ் சில கேடுகளுமுண்டு. இருவர்க்கும் மன அமைதி கிடையாது. பதியிலா ஒருத்திமீது எத்துணை பேர் கருத்துப் பதியும்? ஒவ்வொருவருந் தத்தங் கருத்து முற்றுறப்போதரும் போழ்து எத்துணைப் பொறாமை போர் பிணக்கு முதலியன நிகழ்கின்றன. கொலைகளுந் தற்கொலைகளும் நிகழ்கின்றன. சிலமூர்க்கர்கள் பதியிலாப் பெண்டிரை எவ்வெவ்வழியில் அலைக்கிறார்கள்! இவ்வளவு துன்பம் எற்றுக்கு? ஒருவனுடன் வாழும் வாழ்க்கையில் இத்துன்ப முண்டோ? திருமணஞ்செய்து ஒருவனுடன் வாழும் ஒருத்தியின் மீது மற்ற ஆடவர் மனம் பெரிதுஞ் செல்வதில்லை. பதியிலாப் பெண்ணின்மீது பலர் நாட்டங் கொள்கிறார். பதியின்றி வாழ்தல் பலதிற இடுக்கண்களுக்குக் காரணமாக இருக்கிறது.

விபசாரத்தில் மூழ்குவோர் உடலுரம் இழக்கின்றமையால் அடிக்கடி போகம் விரும்புவர். அப்போகத்துக்கு உடலுர மின்மையால் போலி எழுச்சி பெற வேண்டி மதுபானஞ் செய்ய நேர்கிறது; புளிகார மிகுந்த புலால் உண்ணநேர்கிறது. கொடிய மருந்துண்ண நேர்கிறது.

முடிவில் பொருளெலாம்போய், ஆண்டன்மையுமிழந்து, நோயெரியால் வெந்து, நரகத்துன்பம் அடைகிறான் ஐயன் பாவம். பதியிலாப் பெண்டிர் நிலையும் இவ்வாறே முடிகிறது. இவ்வாறு சாதலா பிறவி நோக்கம்?

விபசாரக்காரர் முடிவு இவ்வளவில் தொலைவதில்லை. இவர்கள் நோயும் பிறவும் இவர்கள் வழி வழி உலகிடைப் பரவிவளரும். பதியிலா வாழ்வால் உலகிற்கு எவ்வளவு கேடு!

கூடாவொழுக்கத்தார்க்குப் பிறக்கும் பிள்ளைகள் தங்கள் தாய் தந்தையர்கள் பெயர்களையுஞ் சொல்லக் கூசுகிறார்கள். தாய் தந்தையர்கள் மதியீனம் மைந்தர் மதிப்பையும் போக்குகிறது. தாய்தந்யர் அறியாமைக்கு மைந்தர் என் செய்வார்?

பதியிலாக்குலத்தில் சில நல்லோரிருக்கிறார். அவர் ஒருவனுடன் காலங்கழிக்கிறார். அவ்வொரு

வன் வேறொரு மனைவியில்லாதவனா யிருத்தல் வேண்டும். அப்பொழுது அவன் அவளுக்குக் காதல் தலைவனாகிறான். அவனுடன் வாழும் ஒருத்தியைப் பதியிலார் உலகில் சேர்ப்பது அறியாமை. சாதிப் பேய்கள் அவளை என்ன கூறினுங் கூறுக. அவள் இயற்கைச் செந்நெறியில் நின்று வாழ்வு நடாத்தும் நங்கையாகிறாள். உலகின் பொருட்டு அவ்விருவரும் வெளிப்படையாகத் திருமணஞ் செய்துகொள்வது நலம். அதற்குரிய அஞ்சா நெஞ்சம் ஆண் மகனுக்குத் தேவை. சாதிப் பேயை யோட்டுதற்குரிய வழிகளுள் இஃதொன்று.

பதியிலார் குலத்திற் பிறந்த சிலர் முன்னோர் உரிமைப் பொருளுடையவரா யிருக்கிறார்; சிலர் இசை பாடியும் நாட்டியம் ஆடியும் பெரும் பொருளீட்டுகிறார். இவர்கள் பொருள் கருதிப் பிறரிடம் இழிதொழிலில் இறங்குகிறார்களில்லை. இன்பத்துக்கென இவர் ஒவ்வொருவர் ஒவ்வொருவனுடன் கலக்கிறார். அவனையன்றி மற்றவரைக் கனவிலும் இவர் கருதுவதில்லை. இது போற்றற்குரியதாயினும் இச்செயலிலும் ஒரு குறை பாடுளது. இன்ப நாயகனுக்கென மணஞ் செய்த

மனைவி மற்றொருத்தி யிருக்கிறாள். மனைவியுடைய ஒருவனுடன் கூடி வாழ்வதால் இவர்கட்குப் பதி யிலார் பெயர் ஒழியாமலிருக்கிறது. அவனும் இவர்களை "வைப்பாட்டி" என்றே சொல்லிக்கொள் வான். ஆதலால் இவர்கள் பதியிலார் என்னும் பழிபோக்க மனைவியுடன் வாழும் ஒருவனுட னும் கூடுதலையொழித்து வேறு எவரையும்மணம் புரியாத ஒருவனை மணஞ்செய்து கொள்வதே அறம். மனைவியுடன் வாழும் ஒருவனது சேர்க் கையை இவர்கள் விரும்புதலாகாது.

பெண்ணுலகில் பதியிலார் என்றொரு கூட்ட மிருத்தல் இழுக்கு. அதினும் அதற்கென ஒரு சாதியார் ஒதுக்கப்பட்டிருத்தல் பேரிழுக்கு. இவ் விழுக்கைப் போக்க அறிஞர் முயலல்வேண்டும்.

இழிதொழிலுக்கெனக் குறிக்கப்படுஞ் சாதி வழக்கு முதலாவது தொலைதல் வேண்டும். தொலைப்பதெப்படி? அப்பெண்மக்களிடைத் திரு மணப் பழக்கம் பரவல்வேண்டும். அவர்கள் வழித்தோன்றும் பெண்மணிகளைத் திருமணஞ் செய்துகொள்ளும் அஞ்சா நெஞ்சம் ஆணுல கம் பெறுதல் வேண்டும். பதியிலார் குலத் தில் பெண் கொள்வது இழிவு என்னும் எண்

ணம் உதித்தல் கூடாது. பதியிலார் குல மென்றொரு குலம் நாட்டிலிருத்தல் நாட்டுக் கெவ்வளவிழிவு? எவ்வளவு கேடு? அவ்விழிவையும் கேட்டையும் போக்க வேண்டுவது எவர் கடமை? தேசத்தார் கடமையன்றோ? அவ்விழிவையும் கேட்டையும் எப்படிப் போக்குவது? வாய்ப் பேச்சாலா? எழுத்தாலா? செயலில் போக்குதல் வேண்டும். அதற்குத் திருமணமன்றி வேறு வழியென்னை?

பதியிலாருள் ஒரு பெண்ணை மணப்பது இழிவெனக் கருதலாகாது. அங்ஙனங் கருதுபவன் தன்னலத்தனவன். அன்னோன் நாட்டின் நலத்தை நாடுபவனல்லன். அவ்வினையில் இழிவு மில்லை. அதன்கண் பெருமையே உண்டு. இழிவாகக்கொள்ளினும் நாட்டின் இழிவைப்போக்க ஒருவன் இழிவு மேற்கொண்டாலென்னை? அஞ்சா நெஞ்சமும், நாட்டினிடத்து மெய்யன்பும், தியாகவுணர்வும் வேண்டற்பாலன. திருமணஞ் செய்துகொள்ள வெள்கும் மனம் பதியிலார் மாட்டுத் துயில் நீத்து வரவெள்குவதில்லை போலும்! வெட்கம்! வெட்கம்! விபசாரத்துக்குச் சாதியில்லை; மதமில்லை. வெளிப்படையாகத் திருமணஞ் செய்ய மட்டும் சாதியும் மதமும் குறுக்கிடுகின்றன போலும்!

பெண்ணுலகில் பதியிலார் கூட்டமொன்று நில வுதற்குக் காரணமா யிருப்பது ஆணுலகென்று அடிக்கடி சொல்கிறேன். ஒருத்தியுடன் வாழும் நோன்பு ஆணுலகில் நிலவினால் பதியிலார் கூட்ட மேது? ஆண்மக்கள் காமவெறி பதியிலார் கூட்ட மாகப் பரிணமித்திருக்கிறது. பதியிலார் கூட்டத் தால் நேரும் இழிவு பழி பாவங்கட்கெல்லாம் பொறுப்புடையார் ஆண்மக்களே யாவர். இது குறித்து மகாத்மா காந்தி உலகிற் கறிவுறுத்தி யுள்ள பொன்னுரைகளுள் சில வருமாறு :—

"பெண்மக்கள் தூய்மைக்கு நாம் காரணராயிருத் தல் வேண்டும்"

"மனிதன்பாலுள்ள விலங்கு பெண் மக்களைப் பொருட் பெண்டிராக்குகிறது"

"காமவேட்கைக்கென ஒரு பெண்மகளை அர்ப் பணஞ் செய்யுங் குணம் நம்பாலுள்ளவரை ஆண்மக்க ளாய நாமனைவரும் வெட்கத்தால் தலைகுனிய வேண்டியவரே. கடவுளின் உயரிய படைப்பாகிய பெண்மக்களை நமது காமவேட்கைக்கு இரையாக்கி விலங்காவதைப் பார்க்கிலும் மனிதக் கூட்டமே அழிந்து விடுவது சாலவும் நன்று"

"மானமுள்ள இந்தியாவில் ஒவ்வோராண்மகனும் தன்னுடைய சகோதரிபோல் (மற்றப் பெண்மணி

களைப்) பாவித்தால் பெண்மகள் நல்லொழுக்கங் காக்கப்படும்"

"இந்திய மக்களை ஒவ்வொருவரும் தமது சகோதரர் அல்லது சகோதரி என்று கொள்ளும் பேராண்மையே சுயராஜ்யம்."

பிறப்பால் பதியிலார் என்று சொல்லப்படுங் கூட்டத்தின் குறைபாடுகளை நிறைவு செய்தல் அரிதன்று. உலகில் பொதுவாகவுள்ள பதியிலா விபசாரக் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவது மிக அரிது. இக்கூட்டம் பெருகுதற்குக் காரணம் வறுமையாயிருத்தலால், அறவோர் ஆங்காங்கே விடுதிச்சாலைகள் அமைத்து, அப்பெண்மணிகட்குச் சோறுகூறையுதவி, கல்விகற்பித்து, கைத்தொழில் போதித்து, விரும்புவோர்க்கு மணஞ்செய்துவைப்பது நலம். நாட்டில் செல்வர் பலரில்லாமலில்லை. அன்னார் மனம் இத்துறையில் திரும்புதல்வேண்டும். ஏழைப் பெண்மக்கட்கென ஓர் அறச்சாலை அமைப்பது எத்துணையோ வேறுபல அறச்சாலைகள் நிறுவிய பயனை நல்கும். செல்வர்கள் தங்கள் செல்வத்தை இவ்வறத் துறையில் பயன்படுத்துவார்களாக.

உலகில் செல்வர்களே பல கேட்டிற்குக் காரணர்களாயிருத்தல் கண்கூடு. ஏழைத் தொழிலாளர்

கள் உழைப்பால் பெறுஞ் செல்வத்தை முதலாளி கள் பலதிறக் களியாடல்கட்குச் செலவு செய்தல் பெருந்தவறு. அக்களியாடல்களுள் பல பெண்மக் களைக் கற்பழிக்குங் களியாடல் தலையாயது. இச் செல்வர்கட்குப் பெண் வடிவங்கள் என்னவாகத் தோன்றுகின்றனவோ தெரியவில்லை.

பெண் ஒரு களிப்பொருள் என்பது அன்னார் கருத்துப்போலும்! இச்செல்வர்கள் பொருட்டுப் பதியிலாப் பெண்மக்கள் தங்கள் நிலை மறந்து, தங்களை யொருவிலைப் பொருளாகக் கருதி வாழ் கிறார்கள். செல்வர்கள் கொடுமையால் பெண்மக் கள் தெய்விகமும் கரந்து நிற்கிறது. தெய்வப் பெண்களைப் பேயாக்குஞ் செல்வர்கள் ஆண்ட வனைக் காணும் நாளும் உண்டோ? பெண்ணைத் தெய்வமாகப் போற்றும் ஒரு நிலை பெறுவோன் கடவுளைக் காணும் அன்பன்; அருளாளன்.

உலகில் பதியிலார் கூட்டம் என்றொன்று இல் லாதவாறு ஒழிக்க ஆங்காங்கே அன்பும் அறிவும் வாய்ந்த பெரியோர்கள் முயல்வார்களாக. அவர் கள் முயற்சிக்கு இயற்கையும் இறையுந் துணைசெய் யும். இயற்கையின் நோக்கமும் இறையின் நோக்க மும் பெண்ணுலகில் பதியிலார் இருத்தல்

வேண்டு மென்பதன்று. அச்செயற்கை யொழிய இயற்கை இறையும் துணைபுரியும். உலகில் பதியிலாக் கூட்டம் ஒழிக; ஒழிக. பெண்ணுலகின் கறை அழிக; அழிக. பெண்ணுலகு ஓங்குக; ஓங்குக.

"அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொ லிழுக்குத் தரும்"

கஉ. கைம்மை

"திருமணஞ் செய்துகொண்ட ஒருத்தி, தன் கொழுநனைப்பற்றிய ஒரு செய்தியும் பெறுதொழிவளேல், அல்லது அவள் தலைவன் கொலையுண்டானுயினும் அல்லது இறந்துபட்டானுயினும், அவள் கன்னியா யிருப்பாளாயின், அவளுக்கு மறுமணஞ் செய்துகொள்ளும் உரிமையுண்டு"—**போதாயனர்.**

கைம்மை என்னுந் தலைப்பிடும்போதே யான் பிறந்த நாட்டின் மீது நாட்டஞ் செல்கிறது. கைம்மை நிலை பெண்ணுலகிற்கும் ஆணுலகிற்கும் பொதுவானது. அந்நிலை வாழ்வில் இருபாலாருள் எவர்க்கேனும் ஒருவர்க்கு உறுமற்போகாது. உலகில் பல விடங்களில் ஆண் கைம்மையரைப் போலவே பெண் கைம்மையரும் வாழ்ந்து வருகிறுர். சில விடங்களில் சிறப்பாக நமது நாட்டில் கைம்மை யெய்தும் பெண்மக்கட்குப் பல திறச் சிறுமைகளுண்டு. நமது நாட்டிற் பொதுவாகப் பெண்ணுலகிற்கே சிறுமை அதிகம். அதிலும் கைம்பெண்களுக்குள்ள சிறுமைகள் சொல்லற்பாலனவல்ல. அச்சிறுமைகள் நினைவிலுறும் போது என்பு நெக்குவிடுகிறது; உள்ளங் குழை

கிறது; "இப்பாழும் நாட்டில் ஏன் பிறந்தோம்" என்று நினைந்து நினைந்து இரங்கவும் நேர்கிறது.

பெண் கைம்மை யெய்தினால் என்ன? ஆண் மகன் அந்நிலை யெய்துவதில்லையோ? பெண் மகள் கைம்மை யெய்தியதும் அவள்பாலுள்ள இயற்கை உணர்வு ஓடி விடுகிறதோ? உயிர்போய் விடுகிறதோ? கடவுள் மறைந்து விடுகிறாரோ? படைப்பில் என்ன குறைவு ஏற்படுகிறது? அவள் எதிரில் வரக்கூடாதாம்! கூட்டங்களில் போகக் கூடாதாம்! நல்வினைகளில் தலைகாட்டக் கூடா தாம்! உடையுணவையும் வெறுத்தல் வேண்டு மாம்! அப்பெண் மூதேவியாய் விட்டனளாம்! கைம்மை எய்திய ஆண் மகனோ எல்லாவற்றிலுங் கலந்துகொள்ளலாம்; அவன் பல்விழுந்த முதியவ வனாயினும் பதினாறு வயது கட்டழகியை மணஞ் செய்துகொள்ளலாம்! என்ன வேற்றுமை! இவ் வேற்றுமை இயற்கையிலுள்ளதா? கடவுள் கண் டதா? இஃது இரக்கமிலா வன்கணர்கள் இடைக் காலத்தில் விதித்த கொடுமை! கொடுமை!

நமது நாட்டவரின் அநியாயமென்ன? சிறு குழந்தை - ஓராண்டு குழந்தை - அதற்கு மண மென்ன தெரியும்? அப் பச்சிளங்குழவிக்குப்

பெண் ஆண்பால் வேற்றுமையாதல் தெரியுமா? அக்குழந்தைக்குத் திருமணம்! அது கைம்மை யெய்தினால் அதற்குங் கட்டுப்பாடு! அக்குழவி உலகை யறிந்ததா? இல்லையே. அது தாய்மை என்னுஞ் சீரிய நிலை அடையாமலன்றோ ஒழிகிறது! இது கடவுள் கருத்தாகுமா? நமது நாட்டில் எத்துணைப் பெண்மக்கள் பால்மணமறா இளங்குழந்தைப் பருவத்தில் கைம்மையெய்தி வருந்திக் கொண்டிருக்கின்றன!

நமது நாட்டின் ஜனகணிதம் (Census Report) நாட்டிலுள்ள கைம்பெண்கள் தொகையைத் தெரிவிக்கிறது. 1921-ம் ஆண்டின் கணக்கையொட்டிக் கைம்மையெய்திய பெண்மக்கள் மீது சிறிது கருத்துச் செலுத்துவோம்.

அப்புள்ளிகளை உற்று நோக்குழிப் பொதுவாக இந்தியப் பெண்மணிகளினதும், சிறப்பாக ஹிந்து பெண்மக்களினதும் நிலை இனிது புலனாகும். தற்கால ஹிந்துமதத்தைப் பெண்கொலைமதம் என்று கூறல் மிகையாகாது. இந்தியாவிலுள்ள மற்றக் கைம் பெண்களின் தொகையினும் ஹிந்து கைம் பெண்கள் தொகை மேம்பட்டிருத்தல் கருதற்பாற்று. இந்தியாவின் மொத்த கைம்பெண்

1921	ஜனத் தொகை	பெண் மக்கள்	கைம்பெண்	கைம்பெண் 1 வயதுக்கு 15 „ வரை	திருமண மிலார்	திருமண மிலாருள் 30 வயதுக்கு மேற்பட்டவர்
இந்தியா (எல்லாரும்)	318,942,480	154,946,926	26,834,838	396,556	54,841,195	783,136
ஹிந்துக்கள் மட்டும்	216,734,586	105,829,124	20,218,780	329,076	35,063,817	446,056

ஒரு வயது முதல் பதினைந்து வயதுவரை—கைம்பெண்—விவரம்

வயது	0—1	1—2	2—3	3—4	4—5	5—10	10—15
இந்தியா	759	612	1,600	3,475	8,693	1,02,293	2,79,124
ஹிந்து..	597	494	1,257	2,837	6,707	85,037	2,32,147

தொகை 26,834,838. ஹிந்து கைம்பெண் தொகை 20,218,780. எஞ்சியுள்ள தொகை மிகச் சிறியது. அதுவும் முஸ்லீம் கிறிஸ்து பௌத்தர் முதலியோரிலுள்ள கைம்பெண்கள் அடங்கிய தொகை.

ஒரு வயது முதல் பதினைந்து வயதுவரை கைம்மை யெய்தியுள்ள இந்தியப் பெண்குழந்தைகள் தொகை 396,556. ஹிந்து பெண்குழந்தைகள் தொகை 329,076. இவ்வநியாயத்தை உற்று நோக்குங்கள். இவ்வளவு பால்மணமறா இளங் கைம்பெண்கள்! இக்கொலைக்குப் பொறுப்பு யாது? ஹிந்துமதமன்றோ? மற்ற மதங்களிலுள்ளவர்கள் மீண்டுந் திருமணஞ்செய்யும் உரிமை பெற்றிருக் கிறார்கள். மேலும் அவர்கள் ஜனகணிதம் எடுத்த வேளையில் கைம்மை யெய்தி யிருந்தவர்கள். அவர்களுள் எத்துணையோ பேர் பின்னைமணஞ் செய்திருப்பார்கள். ஹிந்து குழந்தைகளின் நிலையோ நிலையோ என்று அழ வேண்டுவதே.

நமது நாட்டில் இலட்சக்கணக்கான சிறு குழந்தைகள் கைம் பெண்களாயிருக்கிறார்கள். இவர்கள் கதி என்னை? திருமணம் இன்ன தென்றுணரா முன்னர் ஏன் சிறுமியர்களைத் திரு

மணஞ் செய்து கொடுத்தல் வேண்டும்? கைம்மை யெய்த நேர்ந்தால் அவர்களை ஏன் கூட்டிலடைத்து வருத்தல் வேண்டும்? அவர்கள் வழுக்கி வீழ்வரேல் அவர்களை அடிக்கிறது; ஊரைவிட்டு ஓட்டுகிறது; சமயம் நேர்ந்தால் கொல்கிறது. இப்பாவங்களை நிகழ்த்திவரும் நாட்டுக்கு உய்வுண்டா? உரிமையுண்டா? நாயகனுடன் ஒரு பொழுதேனுங் கூடி யின்பநுகராத பெண்மகள் கைம்மை நிலை யெய்தினால் மீண்டும் மணஞ் செய்து கொள்ளலாகாதா? மணம் என்பதுயாது? பந்தரா? கோயிலா? மந்திரமா? மாலையா? ஒருத்தி ஒருவனுடன் கூடி இன்ப நுகரு நாள் திருமண முடிந்த நாளாகும். இளமை மணத்தையும் விலக்காது மறுமணத்தையுந் தடுப்பது அறமாகாது.

உற்றவயதடைந்து பலவாண்டு தலைவனுடன் கூடிக் குலாவிப் பிள்ளைப் பேறு பெற்ற ஒருத்தி கைம்பெண் ஆவளேல் அவள் மறுமணஞ் செய்யாமலிருக்கலாம். அவள் விருப்பப்படி நடக்கும் உரிமை அவட்குமிருத்தல் வேண்டும். அவள் விரும்பினால் மறுமணஞ் செய்து கொள்ளலாம். விபசாரம் செய்து கெட்டழிவதினும் ஒருவனை

மணந்து அவனுடன் வாழுதல் சிறப்பாகும். மணம் விரும்புங் கைம் பெண்ணைத் தடுத்தலுங் கூடாது; விரும்பாதவளை வலியுறுத்தலுங்கூடாது. பொறுப்புப் பெண்ணுடையதாயிருத்தல் வேண்டும்.

சிலவாண்டு நாயகனுடன் வாழ்ந்து இன்ப நுகர்ந்து கைம்மையெய்துவோர் மீண்டும் மற்றொருவனை நச்சவேண்டுவதில்லை. அப்பெண்மணிகள் வேறுபல அறத்துறைகளிலிறங்கி வாழ்வு நடாத்தல் நலன்.

பால் மணமறு இளங் கைம்பெண்கள் உற்ற வயதடைந்து மறுமணஞ் செய்துகொள்வது அறமேயாகும். அதற்கு அறிஞர் துணை செய்தே தீரல் வேண்டும். சாத்திரம் கர்மம் இவைகள் மீது வீண்பழி சுமத்துவது அறியாமை.

சாத்திரமெது? இயற்கை நெறிக்கு மாறுபட்டு எழுதப்பட்டனவெல்லாஞ் சாத்திரங்கள் போலும்! சாத்திரம் என்பதன் பொருளென்னை? "இதைச் செய். இதைச்செய்யற்க" என்பது. இயற்கைக்குரியதைச் செய்தல் வேண்டும்; இயற்கைக்கு மாறுபட்டதைச் செய்தலாகாது. இதை மனச்சான்று அவ்வப்போது உணர்த்தி வரும். இதுவே சாத்திரம். தின்று கொழுத்துப் பிறரை

அடக்கியாள இயற்கைக்கு முற்றும் அரண் செய்யாத பொருள் பொதியச் சில முரடர்கள் எழுதிய ஏடுகள் யாவுஞ்சாத்திரங்களாகா. இயற்கையே பெரிய சாத்திரம். அதன் நியதிகள் விதிகள். அவ் விதிகள் வழி மன்பதை நடாத்தல் வேண்டும்.

கைம்மை யெய்திய பெண் மீண்டும் மணஞ் செய்யலாகாதென்று இயற்கையில் ஏதாயினும் நியதியுண்டா? பெண் கைம்மை யெய்தியதும் அவள்பாலுள்ள இயற்கை வேட்கை அவளை விடுத்து நீத்து ஓடுகிறதா? சாத்திரம் சாத்திரம் என்று இருட்டறையில் விபசாரஞ் செய்து கருச் சிதைக்கலாம் போலும்! இங்கே கடவுள் பாவம் கர்மம் ஒன்றுமில்லை போலும்! வெளிப் படையாக ஒருவனை மணஞ் செய்துகொள்வது மட்டும் பாவம் போலும்! என்ன அறியாமை! இயற்கைக்கு மாறுபட்ட கண்மூடி வழக்கமும் கோழைத்தன்மையும் நாத்திகத்தின் பாற்பட்டனவாமென்க.

கர்மத்தின் மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். கர்மம் உண்டு; இல்லை என்று சொல்லவில்லை. தெருவே போகும் ஒரு பிள்ளையின் கால் வண்டியில் அகப்பட்டு நசுங்கிவிடுகிறது. அது

கண்டு கர்மம் என்று வாளாகிடப்பது அறிவுடைமையாமோ? உலகம் அங்ஙனம் வாளாகிடக்கிறதா? உடனே அக்காலுக்கு வேண்டிய சிகிச்சை செய்யவே மக்கள் புறப்படுகிறார்கள். அறியாமையால் கர்மம் இயல்பாக நிகழும். அதற்குக் கழுவாயும் இயற்கையிலிருக்கிறது. குழந்தை கர்மத்தின்படி கைம்மை எய்தியிருக்கலாம். அதற்குக் கழுவாயென்னை? உற்றவயதில் அதன் இயற்கை வேட்கை தணிக்க மணஞ் செய்வதே கழுவாயாகும்.

கர்மத்தின் பேராலும் கடவுள் பேராலும் நமது நாட்டில் பல கொடுமைகள் நிகழ்த்தப்படுகின்றன. அவைகளுள் ஒன்று இளங்கைம்பெண்களைத் துன்புறுத்துவது. அத்துன்பம் நாட்டைவிடுத் தகலல் வேண்டும். இளங்கைம்பெண்கள் துயர்கண்டு மனமிரங்காதவரிலர். அவர்கள் துயர் களைதல் பெருங்கடன் என்று நினைப்போருமுளர். ஆனால் அந்நினைவைச் செயலில் கொணர மனமெழுவதில்லை. காரணமென்னை? நீண்ட நாள் வழக்க ஒழுக்கப் பேய்களும், அக்கம்பக்கத்தின் கூக்குரல், சாதிப்பழக்கம் முதலிய பூதங்களும் குறுக்கிடுகின்றன. இப்பேய் பூதங்கட்கா அடிமையா

வது ? மனச்சான்றெனுங் கடவுள் வழியன்றோ நிற்றல் வேண்டும் ? அக்கடவுள் வழிபாட்டிற்கு உண்மையில் உறுதியும், அஞ்சாநெஞ்சமும் வேண்டற் பாலன.

கைம்பெண்கள் வீடுகளிற் படுந்துயருக்கோர் அளவுமுண்டோ ? சில வேளைகளில் ஈன்ற தாய் தந்தையரும் அவர்களைக் காய்கிறார் ; அண்ணன் தம்பிமார் வெறுக்கிறார் ; மற்றவர்களும் குறை கூறுகிறார்கள். அக்காய்வும் வெறுப்பும் பொறாது எத்துணைச் சகோதரிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்; எத்துணைச் சகோதரிகள் வீட்டை விடுத்து ஓடி அலைகிறார்கள் ; எத்துணை பேர் எவர் உதவியும் நாடாது இலை தைத்தும், பழம் விற்றும், அப்பஞ்சுட்டும், கூலிவேலை செய்தும் கால் வயிறுண்டு மரணத்தை எதிர்நோக்கி வாழ்கிறார். நமது நாட்டுக் கைம்பெண்கள் துயரை என்னென்று சொல்வேன் ! எவ்வெழுத்தால் எழுதுவேன் ! இந்நூலில் அதுபற்றி விரித்துக்கூறலும் அநாவசியம்.

கைம்பெண்கள் துயர்களைய நாட்டிற் பிறந்த ஒவ்வொருவர்க்கும் ஊக்க மிருத்தல் வேண்டும். அதற்குரிய முறைகள் சில கொள்ளப்படல் வேண்டும்.

(க) சாத்திரக் குப்பைகளைக் கட்டி அழலா காது. இயற்கைச் சாத்திரவழி நிற்கப் பயிலல் வேண்டும்.

(உ) இளமை மணம் நிறுத்தப் படல் வேண்டும்.

(௩) நாயகனுடன் ஒரு பொழுதேனுங் கூடி வாழ்ந்து இன்பநுகராது கைம்மை யெய்திய பெண்மக்கள் திருமணஞ் செய்து கொள்ளத் தக்க வழியில் வாழ்வு முறைகளைச் சீர்திருத்தஞ் செய்துகொள்ளல் வேண்டும்.

(ச) நாயகனுடன் கூடிக்குலாவிய பின்னைக் கைம்மை யெய்துவோர்க்குப் பலதிற அறச் சாலை கல்விச்சாலை தொழிற்சாலைகள் அமைக்கப் படல் வேண்டும்.

இளங் கைம்பெண்கள் சிறுமையால் பெண்ணுலகின் பெருமைக்குரிய தாய்மைக்கும் பிறவற்றிற்கும் பெருங்கேடு நிகழ்கிறது. ஒன்றும் அறியாத வயதில் திருமணமென்னும் பெயரால் வெறுமணஞ்செய்து பின்னைக் கைம்பெண்ணுய்க் கிடப்பதா பெண் பிறவியின் நோக்கம்? பெண் அடைய வேண்டிய பெரும் பேற்றுக்குக்கைம்மை நிலை பெருந்தடையாகவும் நிற்கிறது. கைம்பெண்

களால் ஆணுலகிற்கும் பலதிறக்கேடுகளுண்டு. ஆதலால் கைம்பெண்களும் பெண்ணுலகில் சேர்ந்தவர்களாகலான், அவர்களும் தங்களினத்தவருக்குரிய விழுப்பம் பெற எவரும் இடையூறாக நிற்றலாகாது. இடையூறாக நிற்றல் தாய்க்கொலை செய்த பாவமாக முடியும். கைம்பெண்கள் சிறுமை நோய் நீக்கம் பெண்ணுலகின் முன்னேற்றத்துக்குப் பெரும் வழி திறக்கும். பெண்ணுலகிலுள்ள அக்குறை நீங்க எல்லாம் வல்ல ஆண்டவன் நாட்டவர்க்கு நல்லறிவு கொளுத்துவானாக.

"திருமணஞ் செய்து, கன்னி வாழ்வு நடாத்தும் பெண் தன் கணவனை இழக்கப் பெறுவளேல், மீண்டும் மறுமணஞ் செய்து கொள்ளலாம்"

"வாக்குறுதி கொடுத்த பின்னரோ - நீர் வார்த்துத் தத்தஞ்செய்த பின்னரோ - மெய்யுறல் நிகழா முன்னர்க் கொழுநன் இவ்வுலக வாழ்வு நீப்பனேல், பெண் மறுமணஞ் செய்துகொள்ளலாம்"

"உறுதி மொழியும், மந்திர மொழியும் ஒருத்தியின் பிரமசரிய விரதத்தைக் குலைப்பனவாகா. அவள் மற்றவனுக்குக் கொடுக்கப் படலாம்"—**வசிஷ்டர்.**

"Hinduism is the only religion which presents the sad anamolous of thousands of child widow"

—*Ganga Ram.*

௧௩. பெண்மை தாய்மை இறைமை

“செம்மைநல மறியாத
சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து
முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி
நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா
றார்பெறுவா ரச்சோவே.”

—வாதவூரடிகள்.

பெண்மை என்பது அநாதியாக முழுமுதற் பொருளின் ஒரு கூறாயிருப்பது. அப்பெண்மை தண்மைச் சத்தியாய்த் தனக்குரிய கடனை ஆற்றி வருகிறது. அச்சத்தியின் கூறே பெண்ணுலகென்பது. பெண், மகளாகப் பிறந்து, பின்னை மனைவியாகி, பின்னைத் தாயாகி, முடிவில் இறையாகிறாள். பெண்ணினிடத்து இத்துணை நிலைகள் இருத்தல் இந்நூற்கண் விளக்கப்பட்டிருக்கிறது.

பெண்மை என்பது கட்புலனாயதோர் அமைதித்தன்மை. அமைதி நிலையே சிறந்த கடவுள் நிலை என்று மறை முழங்குகிறது. கடவுளையாண்டும் “சாந்தம்” “சாந்தம்” என்றே வேதாந்தம்

போற்றுகிறது. அவ்வமைதி பெண் வடிவாகக் கண்ணுக்குக் காட்சியளிக்கிறது; காட்சியளிப்ப தோடு நில்லாது, உலக வாழ்வில் தலைப்பட்டுக் கடவுளாதற்குரிய நெறி காட்டுகிறது; அந்நெறி யால் இறைமைக் காட்சி வழங்குகிறது. பெண் மைக்கணுள்ள இந்நுட்பங்களையெல்லாம் உலகம் உணர்வதாக.

பெண்மைக்குள்ள பெருமை யாது? பெண்மை யின் மாட்டு உலக வளர்ச்சிக்குரியதும் தொண்டுக் குரியதுமாய தாய்மை பொலிதலான், அது பெரு மையுடையதாகிறது. பெண்மைக்குள்ள பெருமை யெல்லாம் தாய்மையாலென்க.

தாய்மையில் நிலவுவது இறைமை. அவ் விறைமை பெண்மையின் முடிந்த நிலையாகும்.

இறை எது? சமய நூல்கள் பலவாறு கூறும். அக்கூற்றுக்களை ஈண்டு ஆராயவேண்டுவதில்லை. பொய் பொறாமை அவா சீற்றம் தன்னலம் முத லியவற்றைக் கடந்த ஒன்று இறை என்பது. ஒருவர் உள்ளத்தில் அன்பு நிகழும்போது இப் பொய் பொறாமை முதலியன நிலவுமோ? பொய் பொறாமை அவாவால் எரியும் ஒருவன் உள்ளத் தில் அன்பு ஒதுங்கி நிற்றல் ஒவ்வொருவர் அறு

பவத்தால் உணரக்கூடியது. அன்பு என்பது பொய் பொறாமை முதலியவற்றைக் கடந்து நிற்பது என்று தெரிகிறது. பொய் பொறாமை முதலியவற்றைக் கடந்து நிற்கும் ஒன்றே இறை என்றுஞ் சொல்லப்படுகிறது. ஆகவே இறையே அன்பு அன்பே இறையாதல் காண்க.

“ அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே. ” —திருமூலர்.

பெண், பிள்ளை பெற்றதுந் தாயாகிறாள். அத் தாய் பிள்ளையை வளர்க்கப் புகுங்கால் அவள் உள்ளத்தில் இறைமைக்குரிய நீர்மைகளெல்லாம் பதிகின்றன. தொண்டு, தியாகம், தன்னல மறுப்பு அவள் மாட்டு அரும்புகின்றன. கைம்மாறு கருதிக் குழந்தைக்குத் தொண்டு தாய் செய்வதில்லை. தனக்குள்ள எல்லாவற்றையும் சமயம் நேரின் உயிரையும் பிள்ளை நலத்துக்குக் கொடுக்கத் தாய்விரைந்து நிற்கிறாள். தன்னலங்கருதிக் குழந்தையை வருத்துந் தாய் யாண்டுமிராள். பயன் கருதாத்தொண்டு, தியாகம், தன்னலமறுப்பு முதலியன சேர்ந்த ஒன்றே

தாய்மை என்க. இந்நீர்மைகள் உள்ள விடத்தில் பொறாமை அவா முதலியன இரும்புண்ட நீர் போல ஒடுங்கிப்போகின்றன. இந்நிலை பெற்ற தாயுள்ளத்தில் என்ன நிலவும்? அன்பாய இறை யன்றோ நிலவும்? தாயுள்ளத்தில் அன்பே ஊர்ந்து கொண்டிருத்தலால் அன்புக்கு எடுத்துக் காட் டாகத் தாயன்பையே கொள்வது ஆன்றோர் வழக்கம். தாய் எனினும் அன்பெனினும் ஒக்கும்.

இன்னும் இரண்டொரு பிள்ளைகளைப் பெறுந் தாயன்பு சொலற்பாலதன்று. அவ்வன்பு கூடப் பெற்ற தாய் மற்றப் பிள்ளைகளையுந் தன் பிள்ளை களைப்போற் கருதும் ஒருநிலை யெய்துகிறாள். அந்நிலை எவ்வுயிரையுந் தன்னுயிர் போல் பார்க் கும் பெருநிலை கூட்டுகிறது. அப்பெருநிலைக்குத் தாய்மை நிலைக்களனாயிருக்கிறது. பொய் பொ றாமை கடந்த அன்பே தாய்மை யாகலின், தாய்மை இறைமையாகிறது.

பொய் பொறாமைகளைத் தவிர்க்குந் தொண்டு தியாகம் தன்னல மின்மை முதலியன படியும் உள் ளமே அன்புக் கடவுளுக்குரிய கோயில். அன்புக் கடவுள் நிலைபேறுகத் தாயாகிய பெண்மகளிடத் தில் ஒளிர்கிறது. பெண்மையில் தாய்மையும்,

தாய்மையில் இறைமையும் பொலிவது கருதத் தக்கது.

பெண்மை என்பது அமைதித்தன்மை என்று மேலே சொல்லப்பட்டது. அமைதிநிலை இறைமை என்பது. அவ்விறைமையுடைய தாயை வெறும் பெண்ணென்று கூறுவது? கூடாது. அவளைப் பெண் தெய்வமென்று போற்றுதல்வேண்டும். பெண்தெய்வம்; பெண்தெய்வம் ; பெண்தெய்வம்.

முழுமுதற் பொருள் தண்மை வெம்மையெனும் இரண்டு சக்திகளாக உலகை இயக்குகிறது என்று நூல் தொடக்கத்தில் குறிக்கப் பட்டிருக் கிறது. அத்தண்மையின் கூறு பெண்ணுலகு. பெண், பிறந்து, உலகவளர்ச்சிக்குத் துணைபுரிந்து, மீண்டும் அத்தண்மைத்தெய்வமாகிறாள்.

பெண், மகளாகத் தோன்றினாள் ; மனைவியாக வாழ்ந்தாள் ; தாயாகத் தொண்டு செய்தாள். இப் பொழுது தெய்வமாகக் காட்சியளிக்கிறாள். உல கீர் ! அக்காட்சி காணுங்கள். தெய்வம் தெய்வ மென்று எங்கு ஓடுகிறீர் ? நூற்களை ஏன் ஆராய்கிறீர் ? இதோ தெய்வம்; பெண் தெய்வம் : காணுங்கள் ; கண்டு வழிபடுங்கள். பெண்மை என்பு தோல் போர்த்த உடலன்று. அவ்வுட

“பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா
தண்மை இன்பநற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் சதியென்ற நாமமும். (௧)

அன்பு வாழ்கென் றமைதியி லாடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்
துன்பந் தீர்வது பெண்மையி னாலடா
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம். (௨)

வலிமை சேர்ப்பது தாயமுலைப் பாலடா
மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்
கலி யழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்துநின் றாடுவோம். (௩)

பெண்ண றத்தினை யாண்மக்கள் வீரந்தான்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை
கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா. (௪)

சக்தி யென்ற மதுவையுண் போமடா
தாளங் கொட்டித் திசைக ளதிரவே
ஒத்தி யல்வதொர் பாட்டுங் குழல்களும்
ஊர் வியக்கக் களித்துநின் றாடுவோம். (௫)

உயிரைக் காக்கும் ; உயிரினைச் சேர்த்திடும் ;
உயிரினுக் குயிரா யின்ப மாகிடும்

உயிரி னும்மிந்தப் பெண்மை யினிதடா
    ஊது கொம்புகள்! ஆடு களிகொண்டே. (௬)

"போற்றி தாய்" என்று தோள் கொட்டியாடுவீர்
    புகழ்ச்சி கூறுவிர் காதற் கிளிகட்கே
நூற்றிரண்டு மலை களைச் சாடுவோம்
    நுண்ணிடைப் பெண் ணொருத்தி பணியிலே. (௭)

"போற்றி தாய்" என்று தாளங்கள் கொட்டடா!
    "போற்றி தாய்" என்று பொற்குழ லூதடா
காற்றி லேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
    காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே. (௮)

அன்ன மூட்டிய தெய்வமணிக் கையின்
    ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத் தேமுத்தங் கொண்டு களிப்பினும்
    கையைத் தள்ளும் பொற் கைகளைப்பாடுவோம்"

(பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா.)

—பாரதியார்.

மனிதவாழ்க்கையும் - -
- - காந்தியடிகளும்

"நவசக்தி" ஆசிரியர்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றியது

[இரண்டாம் பதிப்பு]

மிக விரிவாக எழுதப்பட்டது

௫௧௨ - 512 பக்கங்கொண்டது

இந்நூல் காந்தியடிகள் வரலாற்றைக் கூறுவதன்று. இஃது அவர் வரலாற்றிலுள்ள நுட்பங்கள் மனித வாழ்க்கையோடியைந்து நிற்கும் முறையைக் குறிப்பது; அதாவது காந்தீயத்தை அறிவுறுத்துவது. இந்நூற்கண் விளங்கும் பொருள் மூன்று. (க) மனிதப் பிறவியின் விழுப்பமும் மனிதன் எவன் என்பது (உ) ஒருவன் மனிதனாக எத்தகை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பது (ங) மனித வாழ்க்கைக்கு இலக்கியர் மகாத்மா காந்தி என்பது.

இந்நூற்கண் பெண்மக்கட்குரிய பொருள், ஆண்மக்கட்குரிய பொருள், அரசியலுக்குரிய பொருள், சத்தியாக்கிரகப் பொருள், சமயப் பொருள் முதலிய பல பொருள்கள் காணலாம். இல்லறம், தியாகம், அஹிம்சை, சுயராஜ்யம், சத்தியாக்கிரகம், சமயவாழ்வு முதலியன வாசிப்போர்க் கின்பூட்டுவன. சமய வாழ்வில் சமரச சன்மார்க்க நுட்பம் மிக விளக்கமாக ஓதப்பட்டிருக்கிறது.

அடிகள் அறவுரைகளைத் திரட்டி ஒவ்வொரு தலைப்பின் கீழும் அவைகளை முறைப்படுத்தியுள்ள ஒழுங்கும் பொருளும் வாசிப்போர்க்கு இன்பூட்டுவதோடு நேரிய வாழ்வு நடாத்துமாறு அவரை அவைகள் தூண்டும். சன்மார்க்கத்துறைகள் பல இந்நூற்கண் காணலாம்.

விலை ரூபா 2—0—0

சைவத்தின் சமரசம்

"நவசக்தி" ஆசிரியர்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றியது

[இரண்டாம் பதிப்பு]

இந்நூற்கண் சமயத்தின் இயல்பு இஃது என்பதும், எல்லாச்சமயங்களும் ஒரு கடவுளையே பல பெயரால் பல வழியில் போற்றுகின்றன என்பதும், சமயங்கள் பல வாய்க்கிடப்பினும் அவைகள் யாவும் சமரசத்தையே குறிக்கொண்டு நிற்கின்றனஎன்பதும், அச்சமரசமே சைவமென்பதும், பிறப்பையொட்டி உயர்வு தாழ்வு பாராட்டாமை, கைம்மாறற்ற பணி, பிறர் குற்றம்பொறுத்தல், பாவ மன்னிப்பு முதலியன சைவசமயத்தில் சிறப்பாக விருக்கின்றன என்பதும்; அருள்-கருணை - இரக்கம் - தயை உள்ள விடங்களிலெல்லாம் சைவம் மிளிரும் என்பதும், சைவம் ஒரு சமயம் அன்றென்பதும் பிறவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 8.

***

என் கடன்

பணிசெய்து கிடப்பதே

இப்பெயர் வாய்ந்த நூல் "நவசக்தி" ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. இந்நூலில் பணியின் பெருமை விரிவாக ஓதப்பட்டிருக்கிறது. கடவுள் பணி, சராசரப்பணி, சிறப்பாகத் தேசப்பணி ஆகிய இப்பணிகளை இந்நூலில் காணலாம். இஃதொரு கருமயோக நூல்; காலத்துக்கேற்றது. இரண்டாம் பதிப்பு விலை அணா 8.

கந்தபுராணச் சுருக்கம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது; பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடனே எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்க அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது; 496 பக்கங்கொண்டது. கலிகோ பயிண்டு விலை ரூ. 3.

***

முருகவேள்

பனுவல் திரட்டு

சுப்பிரமணியபக்தர்கள் பாராயணஞ் செய்தற்குரிய

சிறந்த நூல்

இதில், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப் படை, முத்துக் குமாரசாமிபிள்ளைத் தமிழ், திருப்போரூர் சந்நிதிமுறை, திருத்தணிகைசந்நிதிமுறை, கந்தபுராணம், தணிகைப்புராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலிய நூல்கள் அடங்கியிருக்கின்றன. கலிகோ பயிண்டு ரூ. 1

***

விநாயகர் பனுவல் திரட்டு

விநாயகக் கடவுள் சம்பந்தமாக ஆன்றோர் அருளிச் செய்துள்ள பல நூல்களினின்றும் திரட்டப்பட்டது. பூஜா காலங்களில் ஓதுதற்குரிய சிறந்த நூல். நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. விலை அணு 6.

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை.